7. **Minister for Public Works**	: **The Hon. Thiru Duraimurugan:** Public Works, Irrigation including Minor Irrigation and Programme Works.
8. **Minister for Transport**	: **The Hon. Dr. K. Ponmudi:** Transport, Nationalised Transport, Motor Vehicles Act and Chennai Metropolitan Development Authority.
9. **Minister for Highways**	: **The Hon. Thiru Pasumpon Tha. Kiruttinan:** Highways and Ports.
10. **Minister for Tamil Official Language, Tamil Culture and Hindu Religious and Charitable Endowments**	: **The Hon. Dr. M. Thamizhkudimagan:** Tamil Official Language, Tamil Culture and Hindu Religious and Charitable Endowments.
11. **Minister for Food, Public Distribution System and Co-operation**	: **The Hon. Thiru K.N. Nehru:** Food, Price Control and Civil Supplies, Public Distribution System, Co-operation and Statistics.
12. **Minister for Milk**	: **The Hon. Thiru K. Sundaram:** Milk and Dairy Development, Slum Clearance and Accommodation Control.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

13. **Minister for Labour** : **The Hon. Thiru A. Rahman Khan:** Labour, Census, Employment and Training, Iron and Steel Control, Newsprint Control and Wakf.

14. **Minister for Law** : **The Hon. Thiru Aladi Aruna:** Law, Courts, Prisons, Legislation on Weights and Measures, Registration of Companies, Debt Relief including Legislation on Money Lending and Legislation on Chits.

15. **Minister for Handlooms** : **The Hon. Thiru N.K.K. Periasamy:** Handlooms, Textiles and Environmental Pollution Control.

16. **Minister for Backward Classes** : **The Hon. Thiru M.R.K. Panneer-selvam:** Backward Classes, Most Backward Classes and Denotified Communities, Indians Overseas, Refugees and Evacuees.

17. **Minister for Forest and Printing** : **The Hon. Thiru Pongalur N. Palanisamy:** Forest, Cinchona, Stationery and Printing and Government Press.

18. **Minister for Housing** : **The Hon. Thiru K. Pitchandi:** Housing, Rural Housing Development, Town Planning and Urban Development.

19. **Minister for Rural Industries and Registration** : **The Hon. Thiru I. Periasamy:** Rural Industries including Village and Cottage Industries, Registration and Stamp Act and Nutritious Meals.

20. **Minister for Information and Publicity** : **The Hon. Thiru V. Mullaivendan:** Information and Publicity, Film Technology and Cinematography Act.

21. **Minister for Animal Husbandry**	:	**The Hon. Pulavar P.M. Senguttuvan:** Animal Husbandry.
22. **Minister for Social Welfare**	:	**The Hon. Tmt. S.P. Sarkunapandian:** Social Welfare including Women's and Children's Welfare, Beggars Home, Orphanages and Correctional Administration and Integrated Child Development Services Scheme.
23. **Minister for Adi-Dravidar and Tribal Welfare**	:	**The Hon. Thiru Samayanallur S. Selvarasu:** Adi-Dravidar Welfare, Hill Tribes and Bonded Labour.
24. **Minister for Tourism**	:	**The Hon. Thiru N. Suresh Rajan:** Tourism and Tourism Development Corporation.
25. **Minister for Khadi**	:	**The Hon. Thiru Andhiyur P. Selvarasu:** Khadi Board, Bhoodan and Gramdan.
26. **Minister for Fisheries**	:	**The Hon. Tmt. S. Jenefer Chandran:** Fisheries and Fisheries Development Corporation.

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

பேரவைத் தலைவர்

மாண்புமிகு திரு. பி.டி.ஆர். பழனிவேல் ராஜன்

பேரவைத் துணைத் தலைவர்

மாண்புமிகு திரு. பரிதி இளம்வழுதி

மாற்றுத் தலைவர்கள் பட்டியல்

திரு. ரா. சேதுநாதன்

திரு. கு. மனோகரன்

திரு. வ. வேலுசாமி

திரு. சி. ஞானசேகரன்

திரு. நா. பெரியசாமி

திரு. முகம்மது கோதர் மைதீன்

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

செயலாளர்

திரு. டி. சாலமன் ஜெயபால்

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY

வாய்மையே வெல்லும்

TRUTH ALONE TRIUMPHS

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் முக்கிய அலுவலர்கள் பட்டியல்

1.	திரு. வெ. இராசாராமன், பி.எஸ்சி., பி.எல்.	..	கூடுதல் செயலாளர்
2.	திரு. செ.ஏ. துரைபாண்டியன், பி.ஏ., பி.எல்.	..	இணைச் செயலாளர் (பதிப்பாளர்)
3.	திருமதி பானுமதி ஆனந்தராஜன், பி.எஸ்சி., பி.ஜி.எல்.	..	இணைச் செயலாளர்
4.	திரு. கா.ப. இராஜன், டி.ஆர்.எஸ்., பி.ஜி.எல்.	..	இணைச் செயலாளர்
5.	திரு. இரா. வெங்கடேசன், எம்.ஏ., எல்.எல்.பி.	..	இணைச் செயலாளர் (பதிப்பாளர்)
6.	திரு. கி. சாயிநாதன், பி.ஏ., பி.ஜி.எல்.	..	துணைச் செயலாளர்
7.	திருமதி வீ.நா. உமா, பி.ஏ.	..	குழு அலுவலர்
8.	திருமதி பவானி சுப்பையா, பி.ஏ., பி.ஜி.எல்.	..	துணைச் செயலாளர்
9.	திரு. சா. கணேசன், பி.ஏ., பி.ஜி.எல்.	..	துணைச் செயலாளர்
10.	திரு. தி. திருமாவளவன், பி.எஸ்சி., பி.எல்.	..	துணைச் செயலாளர்
11.	திரு. வே. இராமகிருஷ்ணன், எம்.ஏ., பி.எல்.	..	பேரவைத் தலைவரின் சிறப்புத் தனிச் செயலர்
12.	திரு. மு. ஆறுமுகப்பெருமாள், எம்.ஏ., பி.லிட்.	..	துணைச் செயலாளர் (பதிப்பாளர்)
13.	திரு. சு. ராஜகுரு	..	குழு அலுவலர்
14.	திரு. சௌரி அய்யாத்துரை	..	பேரவைத் தலைவரின் சிறப்பு நேர்முக உதவியாளர்
15.	திரு. க. சம்பத்ராஜன், பி.ஏ., பி.ஜி.எல்.	..	துணைச் செயலாளர்
16.	திரு. கோ. ஸ்ரீராமன், பி.காம்.	..	துணைச் செயலாளர் (பதிப்பாளர்)

17. திரு. எம். ஜோபாய், பி.காம்., பி.ஜி.எல். .. துணைச் செயலாளர்

18. திரு. இரா. முருகானந்தம், பி.எஸ்சி., பி.எல். .. துணைச் செயலாளர்

19. திரு. இல. மாரியப்பன், பி.ஏ. .. துணைச் செயலாளர் (பதிப்பாளர்)

20. திரு. கோ. ஞானப்பிரகாசம், எம்.ஏ., பி.எல். .. சார்புச் செயலாளர்

21. திரு. ஜி. அனீஸ் அகமத், எம்.ஏ., பி.ஜி.எல். .. சார்புச் செயலாளர்

22. திரு. மா. செல்வராஜ், பி.எஸ்சி., பி.எல். .. சார்புச் செயலாளர்

23. திரு. வெ.சி. சுப்பிரமணியன், எம்.ஏ., பி.எல். .. சார்புச் செயலாளர்

24. திரு. சு. பாலச்சந்தர், பி.ஏ., பி.எல். .. சார்புச் செயலாளர்

25. திருமதி என். துளசிபாய், பி.ஏ. .. சார்புச் செயலாளர்

26. திரு. கோ. ரவீந்திரன், எம்.ஏ., பி.ஜி.எல். .. சார்புச் செயலாளர்

27. திரு. ஊ.கு. சுப்பிரமணியன், எம்.ஏ. .. சார்புச் செயலாளர்

28. திரு. டி. கோவிந்தராஜு, எம்.ஏ., பி.எல். .. சார்புச் செயலாளர்

29. திரு. ஏ.எம்.பி. ஜமாலுதீன், எம்.எஸ்சி., பி.எல். .. சார்புச் செயலாளர்

30. திரு. ம. பிலிப், எம்.ஏ., பி.ஜி.எல். .. தலைமை நிருபர்

31. திருமதி சீ. கனகவல்லி, டி.சி.பி. .. தலைமை நிருபர்

32. திரு. வெ. வெங்கடேசன், எம்.ஏ. .. தலைமை நிருபர்

33. திரு. ச. பாலகிருஷ்ணன், பி.எஸ்சி., பி.எல். .. சார்புச் செயலாளர்

34. திருமதி இரா. அமிர்தவல்லி, எம்.ஏ., பி.எல். .. சார்புச் செயலாளர்

35. திருமதி கி. இந்திரா, பி.ஏ., பி.ஜி.எல். .. சார்புச் செயலாளர்

36. திரு. நா. நடராஜன், பி.ஏ. .. தலைமை நிருபர்

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை
உறுப்பினர்கள் பட்டியல் (அகர வரிசைப்படி)

பெயர்களும் தொகுதிகளும்

1.	அசோகன், திரு. அ.	..	திருவாரூர் (செ.வ.)
2.	அந்தியூர் ப. செல்வராசு, திரு.	..	அந்தியூர் (செ.வ.)
3.	அபுல்ஹசன், திரு. எம்.எம்.எஸ்.	..	மயிலாடுதுறை
4.	அப்துல் நாசர், திரு. அ.வ.	..	புவனகிரி
5.	அப்துல் லத்திப், திரு. ம.	..	வாணியம்பாடி
6.	அப்பாவு, திரு. மு.	..	ராதாபுரம்
7.	அமரமூர்த்தி, திரு. டி.	..	அரியலூர்
8.	அய்யலுசாமி, திரு. லி.	..	கோவில்பட்டி
9.	அருண்குமார், திரு. பா.	..	மேட்டுப்பாளையம்
10.	அழகராஜா, திரு. என்.ஆர்.	..	தேனி
11.	அழகிரி, திரு. ச.	..	சிதம்பரம்
12.	அழகுவேலு, திரு. ச.	..	கண்டமங்கலம் (செ.வ.)
13.	அன்பழகன், திரு. வ.	..	செய்யார்
14.	அன்பழகன், பேராசிரியர் க.	..	துறைமுகம்
15.	அன்பில் பொய்யாமொழி, திரு.	..	திருச்சிராப்பள்ளி-2
16.	ஆசையன், திரு. பெ.	..	ஆண்டிப்பட்டி
17.	ஆண்டமுத்து, திரு. வெ.அ.	..	பவானிசாகர்
18.	ஆண்டி அம்பலம், திரு. எம்.	..	நத்தம்
19.	ஆருண் ரஷீத், திரு. ஜே.எம்.	..	வில்லிவாக்கம்
20.	ஆலடி அருணா, திரு.	..	ஆலங்குளம்

21.	ஆல்பன், டாக்டர் வே.	திருவட்டாறு
22.	ஆவுடையப்பன், திரு. இரா.	அம்பாசமுத்திரம்
23.	ஆறுமுகம், திரு. தி.ப.	திருச்செங்கோடு
24.	ஆற்காடு நா. வீராசாமி, திரு.	அண்ணா நகர்
25.	ஆனந்தன், திரு. பால்.	வந்தவாசி (செ.வ.)
26.	இரகுமான்கான், திரு. அ.	இராமநாதபுரம்
27.	இராசமாணிக்கம், திரு. க.வெ.வீ.	மேலூர்
28.	இராசமாணிக்கம், திரு. பி.	ஒரத்தநாடு
29.	இராசன், திரு. வி.பி.	ராஜபாளையம் (செ.வ.)
30.	இராசேந்திரன் என்கிற தீரன், திரு. ஆ.	ஆண்டிமடம்
31.	இராமசாமி, டாக்டர் வை.	பண்ருட்டி
32.	இராமசாமி, திரு. கே.ஆர்.	திருவாடனை
33.	இராமச்சந்திரன், திரு. ஓ.ஆர்.	கம்பம்
34.	இராமச்சந்திரன், திரு. சி.இரா.	தொண்டாமுத்தூர்
35.	இராமச்சந்திரன், திரு. மா.	திருவோணம்
36.	இராமலிங்கம், திரு. ஏ.	காட்டுமன்னார்கோவில் (செ.வ.)
37.	இராமலிங்கம், திரு. செ.	திருவிடைமருதூர்
38.	இராமன், டாக்டர் இ.எஸ்.எஸ்.	பள்ளிப்பட்டு
39.	இராமஜெயம், திரு. ந.பூ.	மயிலாப்பூர்
40.	இராஜரெட்டி, திரு. ச.	தளி
41.	இராஜேந்தர், திரு. டி.	பூங்கா நகர்
42.	இளங்கோ, திரு. கோ.	அவினாசி (செ.வ.)
43.	ஈஸ்வரன், திரு. ரா.	வாசுதேவநல்லூர் (செ.வ.)

44.	உதயசூரியன், திரு. தா.	..	சங்கராபுரம்
45.	உபயதுல்லா, திரு. எஸ்.என்.எம்.	..	தஞ்சாவூர்
46.	கணேசன், திரு. ஐ.	..	எடப்பாடி
47.	கணேசன், திரு. கே. சி.	..	ஜெயங்கொண்டம்
48.	கருணாநிதி, கலைஞர் மு.	..	சேப்பாக்கம்
49.	கருப்பசாமி, திரு. சொ.	..	சங்கரநயினார்கோவில் (செ.வ.)
50.	கருப்பண்ண உடையார், திரு. ந.	..	பாபநாசம்
51.	கருப்புசாமி, திரு. டி.	..	உப்பிலியாபுரம் (ஆ.வா.)
52.	கன்னையன், திரு. க.	..	தொட்டியம்
53.	காஞ்சனா கமலநாதன், டாக்டர்	..	கிருஷ்ணகிரி
54.	காந்தி, திரு. ஆர்.	..	இராணிப்பேட்டை
55.	கிருஷ்ணசாமி, டாக்டர் க.	..	ஒட்டப்பிடாரம் (செ.வ.)
56.	கிருஷ்ணன், திரு. எஸ்.வி.	..	நாங்குநேரி
57.	கிருஷ்ணன், திரு. சி.வெ.	..	வேடசந்தூர்
58.	குண்டன், திரு. டி.	..	உதகமண்டலம்
59.	குத்தாலம் பி. கல்யாணம், திரு.	..	குத்தாலம்
60.	குமாரதாஸ், டாக்டர் தே.	..	கிள்ளியூர்
61.	குழந்தை தமிழரசன், திரு.	..	விருத்தாசலம்
62.	கோதண்டம், திரு. ஏ.	..	ஸ்ரீபெரும்புதூர் (செ.வ.)
63.	கோபால், திரு. பா.	..	மேட்டூர்
64.	கோபு, திரு. சி.	..	அணைக்கட்டு
65.	கோமதி சீனிவாசன், திருமதி	..	வலங்கைமான் (செ.வ.)
66.	கோவிந்தன், திரு. ப.	..	தாரமங்கலம்

67. கோவிந்தன், திரு. வெ.	..	பேரணாம்பட்டு (செ.வ.)
68. சக்ரபாணி, திரு. ஆர்.	..	ஒட்டன்சத்திரம்
69. சண்முகம், திரு. கோ.	..	திருப்பத்தூர்
70. சண்முகம், திரு. சி.	..	ஆலந்தூர்
71. சண்முகம், திரு. ம.	..	கிணத்துக்கடவு
72. சந்தானம், திரு. வா.	..	சோழவந்தான்
73. சந்திரசேகரன், திரு. சி.	..	சேந்தமங்கலம் (ஆ.வா.)
74. சந்திரசேகரன், திரு. துரை.	..	திருவையாறு
75. சமயநல்லூர் எஸ். செல்வராசு, திரு.	..	சமயநல்லூர் (செ.வ.)
76. சம்பத், திரு. ஏ.ஜி.	..	முகையூர்
77. சரஸ்வதி, திருமதி ஆர்.	..	தாராபுரம் (செ.வ.)
78. சற்குணபாண்டியன், திருமதி எஸ்.பி.	..	டாக்டர் இராதாகிருஷ்ணன் நகர்
79. சாமிநாதன், திரு. மு.பெ.	..	வெள்ளக்கோவில்
80. சிங்காரவேலு, திரு. வி.பி.	..	வால்பாறை (செ.வ.)
81. சிவபுண்ணியம், திரு. வை.	..	மன்னார்குடி
82. சிவராமன், திரு. ஆர்.	..	திருப்பத்தூர்
83. சிவராஜ், திரு. சு.	..	ரிஷிவந்தியம்
84. சிவலிங்கம், திரு. எஸ்.ஆர்.	..	பனமரத்துப்பட்டி
85. சிவானந்தம், திரு. ஆர்.	..	ஆரணி
86. சிவாஜி, திரு. இ.ஏ.பி.	..	திருத்தணி
87. சின்னய்யா, திரு. வெ.	..	திருமயம்
88. சீனிவாசன், திரு. ஏ.ஆர்.ஆர்.	..	விருதுநகர்

89. சுகவனம், திரு. இ.ஜி.	..	பர்கூர்
90. சுடலைமுத்து, திரு. அ.	..	போடிநாயக்கனூர்
91. சுதர்சனம், திரு. டி.	..	பூந்தமல்லி
92. சுந்தரம், திரு. க.	..	பொன்னேரி (செ.வ.)
93. சுந்தரம், திரு. ந.	..	காரைக்குடி
94. சுந்தரம், திரு. பி.ஆர்.	..	ராசிபுரம்
95. சுந்தர், திரு. கே.	..	உத்திரமேரூர்
96. சுப்பராயன், திரு. கே.	..	திருப்பூர்
97. சுப்பிரமணி என்கிற சி.சு. மணி, திரு. சி.	..	திருவள்ளூர்
98. சுப்பிரமணி, திரு. பி.என்.	..	ஆற்காடு
99. சுப்பிரமணியன், திரு. அ.லெ.	..	திருநெல்வேலி
100. சுப்புலட்சுமி செகதீசன், திருமதி	..	மொடக்குறிச்சி
101. சுரேஷ் ராஜன், திரு. என்.	..	கன்னியாகுமரி
102. செங்குட்டுவன், புலவர் பூ.ம.	..	மருங்காபுரி
103. செங்கை சிவம், திரு.	..	பெரம்பூர் (செ.வ.)
104. செல்லக்குமார், டாக்டர் அ.	..	தியாகராயநகர்
105. செல்வம், திரு. ரெ.	..	குளித்தலை
106. செல்வராஜ் என்கிற கவிதைப்பித்தன், திரு.	..	கொளத்தூர் (செ.வ.)
107. செல்வராஜ், திரு. து.	..	உடுமலைப்பேட்டை
108. சேகரன், திரு. ஆர்.ஆர்.	..	ஓமலூர்
109. சேதுநாதன், திரு. ரா.	..	திண்டிவனம்
110. சைதை கா. கிட்டு, திரு.	..	சைதாப்பேட்டை

சட்டமன்ற TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

111. சொக்கர், திரு. ஆர். .. சிவகாசி
112. சொக்கலிங்கம், திரு. ஜி. .. திருப்போரூர் (செ.வ.)
113. ஞானசேகரன், டாக்டர் ஆ. .. மேல்மலையனூர்
114. ஞானசேகரன், திரு. சி. .. வேலூர்
115. டேவிட் செல்வின், திரு. எஸ். .. ஸ்ரீவைகுண்டம்
116. தங்கமணி, திரு. கே. .. மானாமதுரை (செ.வ.)
117. தங்கம் தென்னரசு, திரு. .. அருப்புக்கோட்டை
118. தங்கவேலன், திரு. சுப. .. கடலாடி
119. தங்கவேல், திரு. அ.ல. .. சேலம்-2
120. தண்டபாணி, திரு. சி.டி. .. கோயம்புத்தூர் மேற்கு
121. தமிழ்க்குடிமகன், முனைவர் மு. .. இளையான்குடி
122. தமிழ்ச்செல்வன், திரு. ஆர். .. அரக்கோணம் (செ.வ.)
123. தமிழ்மணி, திரு. வீ. .. செங்கல்பட்டு
124. தளபதி, திரு. கோ. .. சேடப்பட்டி
125. தனபாலன், திரு. கு.ர.கோ. .. சேலம்-1
126. தனபால், திரு. வி.ஜி. .. குடியாத்தம்
127. தாமரைக்கனி, திரு. இரா. .. ஸ்ரீவில்லிபுத்தூர்
128. திசைவீரன், திரு. உ. .. பரமக்குடி (செ.வ.)
129. திருஞானசம்பந்தம், திரு. எஸ்.வி. .. பேராவூரணி
130. திருநாவுக்கரசு, திரு. எஸ். .. அறந்தாங்கி
131. திருவேங்கடம், திரு. பெ.சு. .. கலசப்பாக்கம்
132. துரைசாமி, திரு. பா. .. வரகூர் (செ.வ.)
133. துரை, திரு. கே. .. திருவெறும்பூர்
134. துரைமுருகன், திரு. .. காட்பாடி

135. தெய்வநாயகம், திரு. எ.	..	மதுரை மத்தி
136. தேவராஜன், டாக்டர் மு.	..	பெரம்பலூர் (செ.வ.)
137. நடராசன், திரு. ஆ.	..	பேரூர்
138. நடராஜன், திரு. த.	..	செஞ்சி
139. நயினா முகமது, திரு. கோ.	..	கடையநல்லூர்
140. நன்னன், திரு. கொ.வீ.	..	செங்கம் (செ.வ.)
141. நாகரத்தினம், திரு. ச.	..	கிருஷ்ணராயபுரம் (செ.வ.)
142. நாஞ்சில் கி. மனோகரன், திரு.	..	திருவல்லிக்கேணி
143. நிஜாமுதீன், திரு. ஜி.	..	நாகப்பட்டினம்
144. நெல்லிக்குப்பம் அ. மணி, திரு.	..	நெல்லிக்குப்பம்
145. நேரு, திரு. கா.நா.	..	லால்குடி
146. பசும்பொன் தா. கிருட்டிணன், திரு.	..	சிவகங்கை
147. பத்மா, டாக்டர்	..	நன்னிலம் (செ.வ.)
148. பரணிகுமார், திரு. பா.	..	திருச்சிராப்பள்ளி-1
149. பரிதி இளம்வழுதி, திரு.	..	எழும்பூர் (செ.வ.)
150. பழனிசாமி, திரு. ஜி.	..	திருத்துறைப்பூண்டி (செ.வ.)
151. பழனிவேல் ராஜன், திரு. பி.டி.ஆர்.	..	மதுரை மேற்கு
152. பன்னீர்செல்வம், திரு. எம்.ஆர்.கே.	..	குறிஞ்சிப்பாடி
153. பன்னீர்செல்வம், திரு. மு.	..	சீர்காழி (செ.வ.)
154. பாண்டுரங்கன், திரு. ந.	..	பெரணமல்லூர்
155. பாலகிருஷ்ணன், திரு. சோ.	..	முதுகுளத்தூர்
156. பாலசுப்பிரமணியன், திரு. எஸ்.என்.	..	பவானி
157. பாலசுப்பிரமணியன், திரு. ப.	..	பட்டுக்கோட்டை

158. பிச்சாண்டி, திரு. கு. .. திருவண்ணாமலை

159. புகழேந்தி, திரு. இ. .. கடலூர்

160 புரட்சிமணி, திரு. ச. .. மங்களூர் (செ.வ.)

161. பூவேந்தன், திரு. த. .. பழனி (செ.வ.)

162. பெரியசாமி, திரு. இ. .. ஆத்தூர்

163. பெரியசாமி, திரு. என். .. தூத்துக்குடி

164. பெரியசாமி, திரு. என்.கே.கே. .. ஈரோடு

165. பெரியசாமி, திரு. நா. .. பெருந்துறை

166. பெருமாள், திரு. வி. .. ஏற்காடு (ஆ.வா)

167. பெர்னார்டு, திரு. இரா. .. குளச்சல்

168. பொங்கலூர் நா. பழனிசாமி, திரு. .. சிங்காநல்லூர்

169. பொன்முடி, டாக்டர் க. .. விழுப்புரம்

170. பொன்முடி, திரு. எஸ்.எஸ். .. பல்லடம்

171. பொன்னம்மாள், திருமதி ஏ.எஸ். .. நிலக்கோட்டை (செ.வ.)

172. மகேந்திரன், திரு. இரா. .. நாட்ராம்பள்ளி

173. மணிக்கண்ணன், திரு. ஆ.செ. .. திருநாவலூர்

174. மணி, டாக்டர் அ. .. உளுந்தூர்பேட்டை (செ.வ.)

175. மணி, திரு. கோ.சி. .. கும்பகோணம்

176. மணி, திரு. டி. .. விளவங்கோடு

177. மணி, திரு. ஜி.கே. .. பெண்ணாகரம்

178. மணி நாடார், திரு. எஸ்.எஸ். .. சாத்தான்குளம்

179. மணிமாறன், திரு. இரா. .. திண்டுக்கல்

180. மணிவர்மா, திரு. க.	..	தண்டராம்பட்டு
181. மதிவாணன், திரு. இரா.	..	இராயபுரம்
182. மதிவாணன், திரு. செ.	..	அச்சரப்பாக்கம் (செ.வ.)
183. மனோகரன், திரு. கு.	..	தர்மபுரி
184. மாயவன், திரு. தி.ப.	..	ஸ்ரீரங்கம்
185. மாரி அய்யா, திரு. பே.	..	புதுக்கோட்டை
186. மாரிமுத்து, திரு. அ.	..	வானூர் (செ.வ.)
187. முகம்மது இஸ்மாயில், திரு. எஸ்.எஸ்.	..	அரவக்குறிச்சி
188. முகம்மது கோதர் மைதீன், திரு.	..	பாளையங்கோட்டை
189. முத்து, திரு. வி.	..	சங்கரி (செ.வ.)
190. முத்துராமலிங்கம், திரு. ம.	..	திருமங்கலம்
191. முபாரக், திரு. பா.மு.	..	கூடலூர்
192. முருகேசன், திரு. பொ.	..	காஞ்சிபுரம்
193. முல்லைவேந்தன், திரு. வ.	..	மொரப்பூர்
194. முனிரத்தினம், திரு. ஆ.மு.	..	சோளிங்கர்
195. மூக்கப்பன், திரு. இரா.	..	சின்னசேலம்
196. மூக்கையா, திரு. எல்.	..	பெரியகுளம்
197. மோகனதாசன், திரு. கோ.	..	பூம்புகார்
198. மோகன் கந்தசாமி, திரு. ப.	..	பொங்கலூர்
199. மோசஸ், டாக்டர் எம்.	..	நாகர்கோவில்
200. ரங்கநாதன், திரு. எம்.	..	குன்னூர் (செ.வ.)
201. ரங்கநாதன், திரு. ப.	..	புரசைவாக்கம்
202. ரவி அருணன், திரு. கே.	..	தென்காசி

203. ரவிசங்கர், திரு. கு. .. விளாத்திகுளம்

204. ராசேந்திரன், திரு. ஏ. .. போளூர்

205. ராணி, செல்வி க. .. தலைவாசல் (செ.வ.)

206. ராமசாமி, திரு. ஏ.எம். .. ஆத்தூர்

207. ராமச்சந்திரன், திரு. செ. .. திருப்பரங்குன்றம்

208. ராஜு, திரு. எஸ். .. பொள்ளாச்சி

209. ராஜேந்திரன், திரு. எஸ்.கே. .. சத்தியமங்கலம்

210. ராஜ்குமார் மன்றாடியார், திரு. என்.எஸ். .. காங்கேயம்

211. லட்சுமணன், திரு. வி.கே. .. கோயம்புத்தூர் கிழக்கு

212. வல்லரசு, திரு. பி.என். .. உசிலம்பட்டி

213. வாசுகி முருகேசன், திருமதி .. கரூர்

214. விஜயகுமார், திரு. கே.எம். .. சாத்தூர்

215. விஜயன், திரு. டி.சி. .. திருவொற்றியூர்

216. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், திரு. .. வீரபாண்டி

217. வீரப்பன், திரு. கே.கே. .. கபிலர்மலை

218. வெங்கடசாமி, திரு. பி. .. ஓசூர்

219. வெங்கடாசலம், திரு. அ. .. ஆலங்குடி

220. வெங்கடாசலம், திரு. ஜி.எல். .. பாலக்கோடு

221. வெங்கடேசன், திரு. ச.க. .. மதுராந்தகம்

222. வெங்கடேசன், திரு. பி.வி.எஸ். .. காவேரிப்பட்டினம்

223. வெங்கிடு, திரு. ஜி.பி. .. கோபிச்செட்டிப் பாளையம்

224. வேடம்மாள், திருமதி ஏ.ஆர். .. அரூர் (செ.வ.)

225. வேணு, திரு. கி.	..	கும்மிடிப்பூண்டி
226. வேதரத்தினம், திரு. எஸ்.கே.	..	வேதாரண்யம்
227. வேலாயுதன், திரு. சி.	..	பத்மநாபபுரம்
228. வேலுசாமி, திரு. வ.	..	மதுரை கிழக்கு
229. வேல்சாமி, திரு. க.	..	நாமக்கல் (செ.வ.)
230. வேல்துரை, திரு. பா.	..	சேரன்மகாதேவி
231. வைதியலிங்கம், திரு. மீ.அ.	..	தாம்பரம்
232. ஜெனிபர் சந்திரன், திருமதி எஸ்.	..	திருச்செந்தூர்
233. ஜோதிகண்ணன், திரு. மு.ந.	..	முசிறி
234. ஸ்டாலின், திரு. மு.க.	..	ஆயிரம் விளக்கு
235. ஆன் டி' மான்டி, திருமதி	..	நியமனம்

பேரவை நடவடிக்கைகளில் பங்குகொள்ள உரிமை பெற்றவர்

திரு. கே.வி. வெங்கடபதி .. அரசு தலைமை வழக்கறிஞர்

TRUTH ALONE TRIUMPHS

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

சித்திரை 16, வெகுதான்ய–திருவள்ளுவர் ஆண்டு 2029
1998 ஏப்ரல் 29, புதன்கிழமை

மாண்புமிகு பேரவைத் தலைவர் **திரு. பி.டி.ஆர். பழனிவேல் ராஜன்** அவர்கள் தலைமையில் காலை 9-30 மணியளவில் பேரவை கூடியது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்:

"பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும் சிறப்பொவ்வா
செய்தொழில் வேற்றுமை யான்"

பிறப்பினால் அனைவரும் சமம். செய்யும் தொழிலில் காட்டுகிற திறமையில் மட்டுமே வேறுபாடு காண முடியும்.

1. வினாக்கள்-விடைகள்

உடுக்குறியிட்ட வினாக்கள்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள்—விடைகள். வினா எண் 361, திரு. ஆர். சக்ரபாணி, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

361—

சத்திரப்பட்டி காவல் நிலையம்

***8133—திரு. ஆர். சக்ரபாணி:**

மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஒட்டன்சத்திரம் ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட சத்திரப்பட்டி காவல் நிலையத்தை ஒட்டன்சத்திரம் காவல் துறை உட்கோட்டத்தில் இணைக்க நடவடிக்கை எடுக்கப்படுமா?

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

சத்திரப்பட்டி காவல் நிலையத்தை ஒட்டன்சத்திரம் காவல் துறை உட்கோட்டத்திலே இணைக்கும் அவசியம் இல்லை.

[1998 ஏப்ரல் 29

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. ஆர். சக்ரபாணி இருக்கையில் இல்லை திரு. நா. பெரியசாமி.

திரு. நா. பெரியசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஈரோடு மாவட்டம், பெருந்துறை வருவாய் வட்டம், ஈரோடு வருவாய்க் கோட்டத்திற்கு உட்பட்டதாக இருப்பதால், அதிலுள்ள திங்களூர் மற்றும் குன்னத்தூர் காவல் நிலையங்களை ஈரோடு ஊரகக் காவல் துறைக் கோட்டத்தோடு இணைக்க மாண்புமிகு முதல்வர் அவர்கள் ஆவன செய்வார்களா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சத்திரப்பட்டி காவல் நிலையத்திற்கான இந்தக் கேள்வியில் ஈரோடு வருவதற்கு இயலாது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. திருவோணம் இராமச்சந்திரன்.

திரு. மா. இராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பெரிய உட்கோட்டமாக இருப்பதை இரண்டாகப் பிரிக்கிற சூழ்நிலை தமிழகத்தில் இருந்தது. பேராவூரணி, ஒரத்தநாடு மற்றும் பட்டுக்கோட்டை எல்லாம் சேர்ந்து இருக்கிற பெரிய உட்கோட்டமாக இருப்பதை இரண்டாகப் பிரித்து அமைக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி: தலைவர் அவர்களே, அதுபற்றிய விசாரணை நடைபெற்று, இப்படிப் பிரிக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டால், பிரிப்பதற்கு அரசு முன்வரும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. எம்.எம்.எஸ். அபுல்ஹசன்.

திரு. எம்.எம்.எஸ். அபுல்ஹசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மயிலாடுதுறையில் சில ஆண்டுகளுக்கு முன்பு மூன்று காவல் நிலையங்கள் இருந்தன. ஒன்றாக மாற்றிவிட்டார்கள். ஆனால், அங்கே இருக்கிற மக்கள் தொகையைப் பார்த்தால், நகரத்திலே 1,75,000 பேரும், கிராமங்களில் 90,000 பேரும் இருக்கிறார்கள். எனவே, மேற்கொண்டு ஒரு காவல் நிலையம் அமைப்பதற்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறிய இந்தக்

1998 ஏப்ரல் 29]

கூற்றினை ஆய்வு செய்து அதற்குப் பிறகுதான் முடிவு செய்ய முடியும். மூன்று காவல் நிலையங்களை ஒரு காவல் நிலையமாக ஆக்கிவிட்டார்கள் என்று குறிப்பிட்டார்கள். மாண்புமிகு உறுப்பினர் அவர்களைப் போன்ற நல்லவர்கள் அங்கே பெருகி வருகிற காரணத்தால், மூன்று என்பது ஒன்றாகக் குறைந்திருக்கக்கூடும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. ப. ரங்கநாதன்.

திரு. ப. ரங்கநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மூல வினாவிற்குத் தொடர்பு இல்லாத வினா இது என்றாலும், இது ஒரு முக்கியமான பிரச்சினை என்ற காரணத்தால், தங்கள் அனுமதியோடு இந்தக் கேள்வியை எழுப்புகிறேன். மகாராஷ்டிரா மாநிலத்தில் சில நாட்களுக்கு முன்பு டாக்டர் அம்பேத்கர் சிலை சம்பந்தமாக ஒரு பிரச்சினை உருவாகி, அதன் காரணமாக அரசு ஒரு உத்தரவு போட்டிருப்பதாகத் தகவல் வந்திருக்கிறது. 10 ஆயிரம் சிலைகள் இந்த மாநிலத்தில் இருக்கிற காரணத்தால், இனிமேல் காவல் துறை இத்தகைய சிலைகளுக்குப் பாதுகாப்பு தருகிற முடிவு இல்லை; சிலையை யார் நிறுவினார்களோ அவர்கள்தான் சிலைகளைப் பாதுகாத்துக் கொள்ள வேண்டுமென்று அந்த அரசு உத்தரவு போட்டுள்ளதாகத் தகவல் வந்திருக்கிறது. தேசத் தந்தை காந்தியடிகள், பெருந்தலைவர் காமராஜர், டாக்டர் அம்பேத்கர், இன்னும் பல்வேறு தலைவர்களின் சிலைகள் ஆங்காங்கே நிறுவப்படுகின்ற சூழ்நிலை எல்லா இடங்களிலும் இருக்கிறது. மாண்புமிகு முதல்வர்கூட இன்று ஒரு சிலைக்கு மாலை அணிவித்துவிட்டு வந்திருக்கிறார்கள். நேற்றுகூட ஒரு சிலைக்கு மாலை அணிவித்தார்கள். இப்படி ஒரு சூழ்நிலை உருவாகியிருக்கிறது. தமிழ்நாட்டில் பலதரப்பட்ட சிலைகள் இருக்கிற காரணத்தால், இந்தச் சிலைகளைப் பாதுகாக்கிற சூழ்நிலை அரசுக்கு ஏற்படுகிறது. சிலைகளைப் பாதுகாப்பது என்றால், ஒவ்வொரு சிலைக்கும் மூன்று ஷிப்டுகளில் இரண்டு காவலர்கள் வீதம் நியமித்தாலும்...

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இதுதான் துணை வினாவா? கருத்தைச் சொல்லிவிட்டீர்கள், உட்காருங்கள். (குறுக்கீடு) சிலைகளுக்குப் பாதுகாப்பு வேண்டுமென்றால் அவரவர்கள் பாதுகாப்புக் கொடுத்துக்கொள்ள வேண்டுமென்று சொல்கிறார்கள். இதில் வேறு என்ன புதிதாக சொல்லப் போகிறீர்கள்? அதற்கு முதலமைச்சர் அவர்கள் பதில் சொல்வார்கள், உட்காருங்கள்.

TRUTH ALONE TRIUMPHS

முற்பகல் 9-35

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிட்டதைப்போல மராட்டிய மாநிலத்திலே அப்படியொரு முடிவு எடுக்கப்பட்டிருந்தால் அது நல்ல முடிவுதான். அதைப்பற்றி விசாரித்து தமிழகமும் அதைப் பின்பற்றலாமா என்பது பற்றி யோசிக்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 362, திரு. ரா. சேதுநாதன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

362—

சர்க்கரை ஆலை அமைத்தல்

***9984—திரு. ரா. சேதுநாதன்:**

மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திண்டிவனம் தொகுதியில் சர்க்கரை ஆலை அமைக்க யாரேனும் உரிமம் கோரி மனு செய்துள்ளனரா?

(ஆ) இல்லை எனில், அங்கு கூட்டுறவுத் துறையில் சர்க்கரை ஆலை நிறுவ அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம், திண்டிவனம் தொகுதியில் சர்க்கரை ஆலை அமைக்க எட்டு விண்ணப்பதாரர்கள் மனு செய்துள்ளார்கள்.

(ஆ) கேள்விக்கு இடமில்லை.

திரு. ரா. சேதுநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தனியார் சர்க்கரை ஆலை அமைப்பதற்கு யார் யார் முன் வந்திருக்கிறார்கள் என்று இன்னும் தெரியவில்லை. 8 பேர் முன் வந்திருப்பதாக மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள். அதற்கு நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். ஒருவேளை அவர்கள் ஏதோ காரணம் காட்டி, தண்ணீர் இல்லை, இடம் இல்லை என்று ஏதாவது

1998 ஏப்ரல் 29]

காரணம் காட்டி ஒதுக்கினால், கூட்டுறவுச் சர்க்கரை ஆலையாவது அமைத்து, வேலையில்லாமல் இருக்கக்கூடிய என்னுடைய தொகுதி இளைஞர்களுக்கு வேலை கொடுக்க கூட்டுறவுத் துறையில் ஒரு ஆலை அமைக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விண்ணப்பம் செய்தவர்கள் 8 பேர் என்று சொன்னேன். பெயர்களைக் கேட்டார்கள். (1) சவுத் இந்தியா சுகர்ஸ், சென்னை, (2) தமிழ்நாடு ஆதிதிராவிடர் வீட்டு வசதிக் கழகம், சென்னை, (3) தரணி சுகர்ஸ் மற்றும் கெமிக்கல்ஸ் லிட்., சென்னை, (4) அருணா சுகர்ஸ் மற்றும் எண்டர்பிரைசஸ், (5) எண்ணூர் சுகர்ஸ், சென்னை, (6) ஏ.கே.கே. சுகர்ஸ், சென்னை, (7) மஞ்சு சுகர்ஸ், மதுரை மற்றும் (8) அனுசூயா சுகர்ஸ், இத்தகைய பெயர்களில் 8 பேர் மனு செய்திருந்தார்கள். அதிலே 2 பேருக்குத்தான் தரப்பட்டிருக்கிறது. (1) சவுத் இந்தியா சுகர்ஸ், (2) தரணி சுகர்ஸ் ஆகிய இந்த இரண்டு பேருக்கும்தான் தரப்பட்டிருக்கிறது. இதிலேகூட இந்த 2 பேருக்கும் தருவதற்கான முதல் அறிவிப்பு கடந்த ஆட்சிக் காலத்திலே கொடுக்கப் பெற்று இருக்கிறது. அதிலே ஒன்றுக்கு, சவுத் இந்தியா சுகர்ஸ்க்கு கடந்த ஆட்சிக் காலத்திலும், இரண்டாவது, தரணி சுகர்ஸ்க்கு இந்த ஆட்சிக் காலத்திலும், இறுதியாக அதற்கான அனுமதிகள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. அங்கே தண்ணீர் இல்லாத காரணத்தினால் தனியார் ஆலை அமைக்க முன் வரவில்லை என்று மாண்புமிகு உறுப்பினர் சொன்னார். அதைச் சொல்லிவிட்டு, அப்படிப்பட்ட நிலை வந்தால், கூட்டுறவு சர்க்கரை ஆலை அமைக்கப்படுமா என்றும் கேட்டிருக்கிறார். தனியாருக்கு வராத தண்ணீர் கூட்டுறவுத் துறைக்கும் வராது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. லா. சந்தானம்.

திரு. லா. சந்தானம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் கேள்வி சர்க்கரை ஆலை நிறுவுவது சம்பந்தமாக இருந்தாலும் கூட, இன்றைக்கு நடப்பில் இருக்கின்ற சர்க்கரை ஆலைகளுக்கு கரும்பு கொடுக்கின்ற விவசாயிகளுடைய முக்கிய கோரிக்கையாக இருக்கின்ற காரணத்தினாலே, மாண்புமிகு முதல்வர் அவர்கள் இதற்கு நல்லதொரு பதிலைத் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். என்னுடைய தொகுதியிலே 2 கூட்டுறவு சர்க்கரை ஆலைகள்

TRUTH ALONE TRIUMPHS

[1998 ஏப்ரல் 29

இருக்கின்றன. அதிலே, கரும்பு கொடுத்தவர்களுக்கு மூன்றில் இரண்டு பங்குத் தொகைதான் கொடுக்கப்படுகிறது. ஒரு பங்குத் தொகை சர்க்கரை விற்கப்படாத காரணத்தினால் நிலுவையில் இருக்கிறது. இன்றைக்குக்கூட மத்திய அரசு இறக்குமதிக் கொள்கையிலே ஒரு நல்ல முடிவினை எடுத்து, இறக்குமதி சர்க்கரைக்கெல்லாம் வரி விதித்திருக்கிறார்கள். இப்படிப்பட்ட சூழ்நிலையிலே நமது சர்க்கரையை விற்பதற்கும், நிலுவையிலுள்ள தொகையை அந்த ஆலைகளுக்கு ஏதாவது கடன் மூலமாகப் பணம் பெற்றுத் தந்து திரும்பப் பெறுவதற்கும், உடனடியாக விவசாயிகளுக்கு அந்தப் பணத்தைப் பட்டுவாடா செய்வதற்கும் அரசு முன் வருமா என்று அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முதலில் இருந்த சூழ்நிலை மாறி இப்போது நல்ல சூழ்நிலை ஏற்பட்டிருப்பதாக இவ்வினாவை எழுப்பிய மாண்புமிகு உறுப்பினர் அவர்களே குறிப்பிட்டிருக்கிறார்கள். அந்த நல்ல சூழ்நிலையைப் பயன்படுத்திக்கொண்டு, அந்த ஆலைகள் எஞ்சியுள்ள தொகையையும் கரும்பு விவசாயிகளுக்குத் தர முன்வருவார்கள் என்று எண்ணுகின்றேன். அப்படி முன்வருமாறு அரசு அவர்களுக்கு எடுத்துக் கூறும். அரசு அதற்காகக் கடன் தருவது என்பது இப்போது இயலாத காரியம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. கே. ரவி அருணன்.

திரு. கே. ரவி அருணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அம்பாசமுத்திரம் பகுதியிலே கூட்டுறவுத் துறையிலே சர்க்கரை ஆலை நிறுவப்படும் என்று 2 வருடங்களுக்கு முன்பாக மானியக் கோரிக்கையில் தெரிவிக்கப்பட்டது. அங்கே கூட்டுறவுத் துறையின் மூலம் சர்க்கரை ஆலை அமைக்கும் பணி எந்த நிலையில் உள்ளது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தனிக் கேள்வி கேட்டால் அதற்குரிய விளக்கம் தரப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. வை. சிவபுண்ணியம்.

திரு. வை. சிவபுண்ணியம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சர்க்கரை ஆலை அமைப்பதற்கான கோரிக்கைகள்

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

1998 ஏப்ரல் 29]

மாநிலத்தின் பல்வேறு இடங்களிலிருந்தும் வைக்கப்பட்டிருக்கும் என்று கருதுகிறேன். அதுபோல, திருவாரூர் மாவட்டத்திலும் அப்படிப்பட்ட கோரிக்கை வைக்கப்பட்டிருக்கிறதா? குறிப்பாக, ஏற்கெனவே இயங்கி வந்த வடபாதிமங்கலம் சர்க்கரை ஆலை இடம் மாற்றம் செய்யப்பட்டுவிட்டது. அந்த இடத்திலே மீண்டும் அமைப்பதற்கான கோரிக்கை வந்திருக்கிறதா? அதுபற்றி அரசு பரிசீலனை செய்து அமைப்பதற்கான முன் முயற்சிகளை மேற்கொள்ளுமா என அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 9-40

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோரிக்கை ஏதுமில்லை. ஆனால், வடபாதிமங்கலம் சர்க்கரை ஆலையை இடம் மாற்றுவதற்கான முயற்சிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. இடம் மாற்றக்கூடாது என்ற கோரிக்கையும் அந்த வட்டாரத்திலே இருந்து எழுந்து வருகின்றது. இதற்கிடையிலே அரசு அதுபற்றி அந்த உரிமையாளர்களிடத்திலே பேசிக்கொண்டிருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. ஐ. கணேசன்.

திரு. ஐ. கணேசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய உறுப்பினர் திரு. சந்தானம் அவர்கள் குறிப்பிட்டதுபோல, சேலம் மோகனூர் கூட்டுறவுச் சர்க்கரை ஆலையில் மூன்றில் 2 பங்கு பணத்தை மட்டும் கொடுத்துவிட்டு, இன்னும் பல இலட்சம் ரூபாய் விவசாயிகளுக்குப் பட்டுவாடா செய்யப்படாமல் இருக்கிறது. இதை அரசு அறியுமா? உடனடியாக அந்த ஏழை விவசாயிகளுக்கு அந்தப் பணத்தைக் கொடுக்க அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே பதில் சொல்லியிருக்கின்றேன். அரசே இந்தப் பணத்தைக் கொடுக்க முன்வர இயலாது என்பதை மீண்டும் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். சேலம் கூட்டுறவுச் சர்க்கரை ஆலையில், திரு. சந்தானம் அவர்கள் குறிப்பிட்டதைப்போல two-third என்கின்ற அளவுக்கு விவசாயிகளுக்குப் பணம் கொடுத்திருப்பதாக திரு. கணேசன் அவர்கள் குறிப்பிட்டு இருக்கின்றார்கள். அந்த two-third கொடுத்திருப்பதற்காக மகிழ்ச்சி அடைய வேண்டும். அந்த one-third கொடுப்பதற்கு அரசு தானே பொறுப்பேற்றுக்கொள்ள

முடியாது. சர்க்கரை ஆலைகளிடத்திலே பேசி முடிவு செய்யும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. சி. ஞானசேகரன்.

திரு. சி. ஞானசேகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே பல ஆண்டுகளாக நம்முடைய தமிழகத்திலே இயங்கி வருகின்ற கூட்டுறவுச் சர்க்கரை ஆலைகளிலே பணியாற்றி வருகின்ற பணியாளர்கள், அரசு ஊழியர்களுக்கு இணையான ஊதியத்தைக் கேட்டு போராட்டம்கூட நடத்தினார்கள். அவர்கள் மிகவும் குறைந்த சம்பளத்திலே இருக்கக்கூடிய காரணத்தினாலே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், இருக்கக்கூடிய கூட்டுறவுச் சர்க்கரை ஆலைகளை செம்மைப்படுத்துவதற்காக, அவர்களுடைய பணித் திறனை இன்னும் மேம்படுத்துவதற்காக அரசு ஊழியர்களுக்கு இணையான ஊதியத்தை கூட்டுறவுச் சர்க்கரை ஆலை ஊழியர்களுக்கும் வழங்குவார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குறிப்பாக, இப்போது சர்க்கரை ஆலைகள், அதிலும் குறிப்பாக கூட்டுறவுச் சர்க்கரை ஆலைகள் நஷ்டத்திலேதான் இயங்குகின்ற நிலைமையிருக்கிறது. அந்நிலையில் அவர்களை அரசு ஊழியர்களாக்கி அந்தச் சம்பளமும் கொடுத்தால் பிறகு சர்க்கரை ஆலைகளை எப்போது திறக்கப் போகிறீர்கள் என்கின்ற கோரிக்கை மாண்புமிகு உறுப்பினர் அவர்களால் எழுப்பப்படக்கூடிய சூழ்நிலை உருவாகிவிடும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. ஜி. பழனிசாமி.

திரு. ஜி. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருவாரூர் மாவட்டம், வடபாதிமங்கலம் பகுதியில் சர்க்கரை ஆலையை நடத்துவதற்குக்கூட அந்த நிறுவனங்கள் இப்போது தயாராக இருக்கின்றன. ஆனால், கரும்பு உற்பத்தி செய்யக்கூடிய இடத்தை அவர்களுக்குத் தர வேண்டும் என்றவொரு கோரிக்கையை வைத்திருக்கிறார்கள். அப்படியென்றால், அதற்கான அந்த இடத்தை, கரும்பு உற்பத்தி செய்வதற்கான இடத்தை, அரசு survey செய்து அறிவிக்குமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி: மாண்புமிகு பேரவைத்

1998 ஏப்ரல் 29]

தலைவரவர்களே, அவர்கள் ஏற்கெனவே வேறு சர்க்கரை ஆலைகளுக்காக புதிய இடத்தைப் பெற்றிருக்கிறார்கள். இந்த இடத்தை எல்லாம் தேவையில்லை என்று கூறிவிட்டுத்தான் வேறு புதிய இடத்தைப் பெற்றிருக்கிறார்கள். இப்போது மீண்டும் தஞ்சை மாவட்டத்திலே பல ஆலைகளை அவர்களே இயக்க வேண்டும் என்ற சூழ்நிலையில், புதிதாக ஓர் இடத்தை அவர்கள் ஆலை அமைக்கப் பெற்றிருந்தாலும்கூட, வடபாதிமங்கலம் இடத்தையும் தாங்கள் வைத்துக்கொள்ள வேண்டும் என்று அவர்கள் கருதுவதற்கு ஏற்ப, மாண்புமிகு உறுப்பினர் போன்றவர்கள் எல்லாம் அவர்களுக்கு இன்றைக்கு மறைமுகமாக உதவி செய்து கொண்டிருப்பதாக நான் கருதுகின்றேன். இருந்தாலும்கூட, எவ்வளவு இடம் அவர்களுக்குத் தேவை, எந்த அளவிற்குக் கரும்பு விளைச்சல் அவர்களுக்குக் கிடைக்கும் என்ற நிலைமைகளையெல்லாம் ஆராய்ந்து பார்த்துததான் எந்த முடிவையும் எடுக்க முடியும். ஏனென்றால் ஏற்கெனவே இப்போது அங்கே அரவை மிகக் குறைவாக இருக்கிறது என்பதையும் நாம் மறந்துவிடக்கூடாது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 363, திரு. ச. நாகரத்தினம், மாண்புமிகு கல்வி அமைச்சர்.

363—

கிருஷ்ணராயபுரம் தொகுதியில் கல்லூரி அமைத்தல்

***7435— திரு. ச. நாகரத்தினம்:**

மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கரூர் மாவட்டம், கிருஷ்ணராயபுரம் தொகுதியில் புதிய கல்லூரி அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், வரும் கல்வி ஆண்டில் அமைக்கப்படுமா?

மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே,

(அ) மற்றும் (ஆ): செயற்குறிப்பு எதுவும் அரசின் பரிசீலனையில் தற்போது இல்லை.

[1998 ஏப்ரல் 29

திரு. ச. நாகரத்தினம்: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, என்னுடைய கிருஷ்ணராயபுரம் தொகுதி உள்ளிட்ட, அருகில் இருக்கின்ற குளித்தலை தொகுதியில் அடங்கிய இரண்டு தொகுதிகளிலும் மாணவர்களுடைய கல்வி வளர்ச்சித் திறன் அதிகமாக இருக்கின்ற காரணத்தால், சேர்க்கை நிலை எண்ணிக்கை அதிகமாக இருக்கின்ற காரணத்தால் அங்கேயிருக்கின்ற மாணவர்களும், மாணவிகளும் திருச்சிக்குச் செல்ல வேண்டிய சூழ்நிலையில் இருக்கிறார்கள். அருகில் கரூர் மாவட்டத்திலே ஒரு அரசுக் கலைக் கல்லூரி இருக்கிறது. அங்கே மாணவர்களுடைய சேர்க்கை எண்ணிக்கை அதிகமாக இருக்கின்ற காரணத்தால், குளித்தலை தொகுதியையும், கிருஷ்ணராயபுரம் தொகுதியையும் மையமாக வைத்து ஒரு கல்லூரி அமைத்தால் ஏதுவாக இருக்கும் என்று இந்த நேரத்திலே கூறக் கடமைப்பட்டிருக்கிறேன். அப்படி இல்லை என்றால், குறைந்தபட்சம் ஒரு தொழில்நுட்பக் கல்லூரியையாவது அந்தப் பகுதியிலே அமைப்பதற்கு அரசு ஆவன செய்யுமா என்பதை உங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 9-45

மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் எடுத்துச்சொன்ன அதே வகையான நிலைமை தமிழ்நாட்டிலே பல்வேறு மாவட்டங்களிலேகூட இருக்கின்றது. அதேநேரத்தில் அரசுக் கல்லூரி தொடங்காவிட்டாலும்கூட தனியார் கல்லூரிகள், சுயநிதிக் கல்லூரிகள் ஏற்படுவதற்கு, எந்தெந்த வகையிலே வாய்ப்பு அமையுமானாலும், அதை அரசு ஏற்றுக்கொண்டு, அவர்களுக்குப் பல்கலைக்கழகத்தினுடைய இணைப்பும் கிடைத்து, அப்படிப்பட்ட கல்வி நிலையங்கள் நடைபெறுகின்றன. இந்த மாவட்டத்தில் கரூரில் ஓர் அரசு கலைக் கல்லூரியும், சாரதா நிகேதன் பெண்கள் கல்லூரி ஒன்றும்—சுயநிதிக் கல்லூரியாக—நடைபெற்று வருகின்றன. எனவே, அந்த வகையில் சுயநிதிக் கல்லூரிகளைக் கொண்டுதான், அங்கே உள்ள சமூகத் தேவையை அல்லது மாணவர்களுடைய தேவையை நிறைவு செய்யக்கூடிய நிலைமை இப்போது இருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. ஜி. கே. மணி.

1998 ஏப்ரல் 29]

திரு. ஜி.கே. மணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது கல்லூரியைப் பொறுத்த ஒரு கேள்வியாக இல்லை என்று சொன்னாலும்கூட மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வருவதற்காக ஒரு முக்கியமான வினாவை உங்கள் மேலான அனுமதியோடு கேட்க விரும்புகிறேன். தமிழ்நாடு வேலையில்லாப் பட்டதாரி ஆசிரியர்கள் சங்கத்தின் சார்பிலே நியமனம் செய்யக் கோரி, இன்று உண்ணாவிரதத்தை மேற்கொண்டு இருக்கிறார்கள். 1989-லே வெளியிடப்பட்ட அரசு ஆணை 373-ன்படி, நடுநிலைப் பள்ளிகளில், தமிழ் ஆசிரியர்கள், ஆங்கில ஆசிரியர்களை எல்லாம் நியமனம் செய்வதாக அரசு ஆணை வழங்கப்பட்டு இருக்கிறது. கல்வி மானியக் கோரிக்கையில் கூட, மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் பெருமனதோடு கணிதம், அறிவியல் படித்த ஆசிரியர்கள் நியமனம் செய்யப்படுவார்கள் என்று அறிவிப்பு கொடுத்திருக்கிறார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: சீக்கிரம் வினாவைக் கேட்டு முடியுங்கள். நீங்கள் ஏதோ பேசிக் கொண்டிருக்கிறீர்கள்.

திரு. ஜி.கே. மணி: ஆகவே, இதிலே வரலாறு, வணிகவியல் பொருளியல் போன்ற பட்டப் படிப்பு படித்த B.Ed., ஆசிரியர்களை எல்லாம் நியமனம் செய்வதற்கு, எப்படி இப்போது இடைநிலை ஆசிரியர்களை சீனியாரிட்டி அடிப்படையிலே நியமனம் செய்கிறீர்களோ, அப்படிப் பட்டதாரி ஆசிரியர்களை எல்லாம்...

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மூலக்கேள்வி கல்லூரி பற்றியது. நீங்கள் வேறு எதையோ பேசிக்கொண்டிருக்கிறீர்கள். சீக்கிரம் பேசி முடியுங்கள்.

திரு. ஜி.கே. மணி: ஆகவே, கல்லூரி ஆசிரியர்களை நியமிப்பதைப் போல, இடைநிலை ஆசிரியர்களை நியமிப்பதைப் போல, இவர்களையும் ஆசிரியர்கள் தேர்வு வாரியம் இல்லாமல், Seniority அடிப்படையிலே நியமனம் செய்வதற்கு ஆவன செய்வார்களா என்பதைத் தங்கள் மூலமாக அறிய விரும்புவதோடு, Guest Lecturers. . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: எட்டு கேள்விகளை ஒரே சமயத்தில் கேட்கக்கூடாது. மாண்புமிகு கல்வி அமைச்சர்.

மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மூலக் கேள்வியோடு தொடர்பு இல்லாத ஒரு

கேள்வியை மாண்புமிகு உறுப்பினர் திரு. மணி அவர்கள் எழுப்பியிருக்கிறார். மூலக் கேள்வி கல்லூரி தேவை என்பது ஆகும். ஆனால், திரு. மணி அவர்கள் எழுப்பிய கேள்வியிலிருந்து கல்லூரிகளிலே படித்தாலும் வேலை கிடைக்கும் வாய்ப்பு இல்லை என்ற உண்மையை அவர்கள் மிக விளக்கமாக எடுத்துச் சொன்னதற்காக நான் நன்றி தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 364, திரு. கே. சுப்பராயன், மாண்புமிகு கல்வி அமைச்சர்.

364—

பாடச் சுமையைக் குறைக்கும் ஆய்வு

***12812— திரு. கே. சுப்பராயன்:**

மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மாணவர்களின் பாடச்சுமையைக் குறைக்க அறிவியல் பூர்வமாக ஆய்வு செய்யும் கருத்துரு அரசிடம் இருக்கிறதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) மாணவர்களின் பாடச் சுமை குறித்து ஆராய்ந்து பாடச்சுமையைக் குறைப்பது பற்றி அறிக்கை பெற ஒரு உயர்மட்டக் குழு கடந்த ஆண்டு அமைக்கப்பட்டது. இந்த விடையோடு சேர்த்து ஒன்றிரண்டு செய்திகளையும் நான் இந்த அவைக்குத் தெரிவிப்பது முறையாகும். முன்னாள் இயக்குநர் திரு. சிவஞானம் தலைமையில் கல்வியாளர்களைக் கொண்ட குழு ஒன்று அமைக்கப்பட்டு, 1994-வது ஆண்டு, அரசு ஏற்றுக்கொண்டு, மத்திய அரசினுடைய ஆலோசனையின்படி அமைக்கப்பட்ட குழுவால் உருவாக்கப்பட்ட பாடப் புத்தகங்களினுடைய சுமை, பாடத்தினுடைய தகுதி மிகுதியாக

1998 ஏப்ரல் 29]

இருக்கிறது என்ற அடிப்படையிலே ஒரு ஆய்வு நடத்தச் செய்து, அந்த அறிக்கை இந்த ஆண்டு ஜனவரி 28 அன்று அரசுக்குக் கிடைத்திருக்கிறது. சில குறைபாடுகளை உடனடியாகக் களையவேண்டும் என்று வழங்கிய ஆலோசனையை ஏற்று இந்த ஆண்டு புத்தகங்கள் அச்சிடுகிறபோது, சில குறைகள் நீக்கப்பட்டிருக்கின்றன. ஆனால், இந்த ஆய்வு அறிக்கையின் அடிப்படையில் வருகிற ஆண்டில் புத்தகங்கள் மறுபடியும் தயாரிக்கப்படுகிறபோது, அந்தச் சீர்திருத்தம் இடம் பெறும் என்று நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

முற்பகல் 9-50

திரு. கே. சுப்பராயன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆய்வு செய்யப்பட்டு அரசுக்குக் கொடுக்கப்பட்டிருக்கிற அந்த அறிக்கை, அவையின்முன் வைக்கப்படுமா என்பதை அறிய விரும்புவதோடு மாணவர்களின் பயிற்சி பெறுகிற திறனைத் தொடர்ந்து மதிப்பீடு செய்வதற்காக 'continuous evaluation' என்ற முறையை அரசு பின்பற்ற முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த அறிக்கை எல்லோரும் படித்துப்பார்த்து தெரிந்துகொள்ள வேண்டிய ஒரு இயல்பான அடிப்படையைக் கொண்டதல்ல. இருந்தாலும், நூலகத்திலே இந்த அறிக்கையை வைப்பதற்கு நான் ஏற்பாடு செய்வேன். மாண்புமிகு உறுப்பினர்கள் இந்த அறிக்கையைப் பார்த்துக்கொள்ளலாம். மற்றும் ஒன்று, 'continuous evaluation' என்ற முறையில் ஆசிரியர்கள் மாணவர்களுடைய தகுதி வளர்ச்சியைத் தொடர்ந்து கண்காணித்து வருகிற முறை நல்ல முறை என்றாலும்கூட, நடைமுறையில் ஆசிரியர்கள் அந்த அளவு அந்தக் கடமையை நிறைவேற்றக்கூடிய ஆர்வத்தோடு இப்போது இல்லை. எதிர்காலத்தில் அதை ஏற்றுக்கொள்ளச் செய்ய முயற்சிக்கலாம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 365, திரு. இரா. மதிவாணன், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்.

365—

காற்றாலை மூலம் மின் உற்பத்தி

***9366—திரு. இரா. மதிவாணன்:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கன்னியாகுமரி மாவட்டம், முட்டம் கடற்கரை கிராமத்தில் முட்டம் தேரி என்ற இடத்தில் காற்றாலை மூலம் மின் உற்பத்தி செய்யும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. இரா. மதிவாணன், இருக்கையில் இல்லை. திரு. நா. பெரியசாமி.

திரு. நா. பெரியசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது தமிழ்நாட்டிலே மொத்தம் எத்தனை காற்றாலைகள் இயங்குகின்றன, அந்தக் காற்றாலைகள் மூலமாக எவ்வளவு மின்சாரம் கிடைக்கிறது, தனியார் மூலமாக எவ்வளவு மெகாவாட் மின்சாரம் உற்பத்தி செய்யப்படுகிறது, அரசு மூலமாக எவ்வளவு மின்சாரம் உற்பத்தி செய்யப்படுகிறது என்ற விவரங்களை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தியாவிலேயே தமிழகத்தில்தான் அதிகமான காற்றாலைகள் இயங்கி வருகின்றன. 2,522 காற்றாலைகள் 31-3-1998 முடிய நிறுவப்பட்டிருக்கின்றன. அதில் 702 மெகாவாட் அளவிற்கு மின்சாரம் தயார் ஆகலாம். அதில் 682 மெகாவாட்டிற்கான காற்றாலைகள் தனியார் மூலமாகவும், 20 மெகாவாட்டிற்கான காற்றாலைகள் அரசு மூலமாகவும் நிறுவப்பட்டிருக்கின்றன.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. சி.டி. தண்டபாணி.

1998 ஏப்ரல் 29]

திரு. சி.டி. தண்டபாணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காற்றாலை மூலமாக மின்சாரம் தயார் பண்ணுகிற திட்டம் விறுவிறுப்போடு ஒரு சந்தர்ப்பத்திலே வந்திருந்தாலும்கூட, கோவை மாவட்டம் போன்ற இடங்களில் துவக்கத்தில் தொழிற்சாலைகள் நிரம்ப அதிலே முதலீடு செய்தன. இப்போது, அதிலே தொய்வு ஏற்பட்டிருக்கிறது. அந்தத் தொய்வு ஏற்பட்டிருப்பதன் அடிப்படைக் காரணத்தை அரசு அறிந்ததா? அறிந்தது என்றால் அதனுடைய விவரம் என்ன? அப்படி அறியவில்லை என்றால் இப்போது அது சம்பந்தமாக விவரமான ஆய்வை செய்யுமா?

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொதுவாக காற்றாலைகள் அமைக்கும்போது 18 கிலோமீட்டரிலிருந்து 24 கிலோமீட்டர் வேகத்திலே காற்று வீசினால்தான், நிறுவப்படுகின்ற காற்றாலைகள் அவர்கள் போடுகின்ற முதலீட்டுக்கேற்ப கட்டுப்படியாகும். ஆனால், இப்போது கோயம்புத்தூர், கன்னியாகுமரி, திருநெல்வேலி மற்றும் தூத்துக்குடி ஆகிய மாவட்டங்களில் 18 கிலோமீட்டர் முதல் 24 கிலோமீட்டர்வரை காற்றின் வேகம் வீசிக்கொண்டிருக்கிறது. ஆனால், ஆண்டு முழுவதும் இந்தக் காற்றின் வேகம் இந்த அளவுக்கு இல்லாத காரணத்தினாலே முதலிலே வேகமாக இதிலே அக்கறை செலுத்திய தனியார்கள் இப்போது அவர்கள் போடுகின்ற முதலீட்டிற்கு ஏற்றாற்போல் இலாபம் கிடைக்கவில்லை என்பதினாலே அவர்களுடைய முயற்சி குறைந்திருக்கிறது. இந்தக் காற்றாலைகள் அமைவதினுடைய உண்மையான நோக்கமே மத்திய அரசு இதற்கு வருமான வரி விலக்கு அளிக்கிறது. இரண்டாவது, அவர்கள் உற்பத்தி செய்கின்ற மின்சாரத்திற்குப் பதிலாக அவர்களுடைய சொந்த ஆலைகள் தமிழகத்திலே இருக்குமேயானால் அவர்களுக்குத் தேவைப்படுகின்ற நேரத்திலே அவர்கள் மற்றப் பகுதியிலே மின்சாரத்தைப் பயன்படுத்திக்கொள்வதற்கு மின்சார வாரியம் அனுமதிக்கிறது. அந்த அடிப்படையில்தான், இந்தியாவிலேயே அதிகமான காற்றாலைகள் தமிழகத்திலே நிறுவப்பட்டிருக்கின்றன. எதிர்காலத்திலே இன்னமும் காற்றாலைகள் வரும் என்று அரசு எதிர்பார்க்கிறது.

முற்பகல் 9-55

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. இரா. பொன்னார்டு.

[1998 ஏப்ரல் 29

திரு. இரா. பெர்னார்டு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கன்னியாகுமரி மாவட்டம் முட்டம் கடற்கரையைத் தொட்டு இருக்கின்ற காரணத்தால் காற்றினுடைய வேகம் 24 அல்லது 30 கிலோ மீட்டர் அளவுக்கு உள்ளது. ஆகவே அந்த முட்டம் பகுதி இதுபோன்ற காற்றாலைகள் அமைப்பதற்கு மிகச் சிறந்த பகுதி. ஆரல்வாய்மொழியில் இருப்பதைவிட சிறப்பான சூழ்நிலை இருப்பதால் அங்கே காற்றாலை மூலம் மின் உற்பத்தி செய்ய அரசு முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடற்கரை இருக்கின்ற பகுதிகளிலே எல்லாம் காற்று வேகமாக வீசுகிறது என்று நாம் எடுத்துக்கொள்ள முடியாது. கன்னியாகுமரி மாவட்டத்திலே, முட்டம் பகுதி கடற்கரை ஓரத்திலேதான் இருக்கிறது. அங்கே 17-7-1994 அன்று காற்று அளவிடும் நிலையம் ஒன்று நிறுவப்பட்டு 3 ஆண்டுகள்வரை அந்தப் பகுதியிலே வீசும் காற்றின் அளவு, வீசும் திசை, அதன் வேகம் ஆகியவை கண்டறியப்பட்டது. அங்கே காற்றினுடைய வேகம் சுமார் 17.11 கிலோ மீட்டர் அளவுக்கு மட்டுமே இருக்கின்ற காரணத்தினால் அங்கே காற்றாலை அமைப்பது சாத்தியம் இல்லை என்று அரசு முடிவு செய்து இந்த நிலையம் 4-7-1997 முதல் மூடப்பட்டுவிட்டது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. லி. அய்யலுசாமி.

திரு. லி. அய்யலுசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது தமிழ்நாட்டிலே இருக்கின்ற சூழ்நிலையில் மின்சாரம் தட்டுப்பாடு அதிகமாக இருக்கிறது. முன்னாலே எல்லாம் காற்றாலை அமைப்பதற்கு மானியம் கொடுத்ததாகச் சொல்கிறார்கள். இப்போது மானியம் நிறுத்தப்பட்டதினால் என்னுடைய ஒட்டப்பிடாரம் தொகுதியிலே ஓணமாங்குளத்திலே தனியார் நிலங்கள் எல்லாம் வாங்கிப் போட்டு மானியம் இல்லாததால் அது நிறைவேற்றப்படாமல் இருக்கிறது. அங்கே காற்று அதிகமாக இருக்கிறது. காற்றாலை இலாபகரமாக இருக்கிறது. அந்த மானியம் மீண்டும் கொடுக்கப்படுமா என்று தங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி: தலைவர் அவர்களே, இதிலே மானியம் முக்கியமான பிரச்சினை அல்ல. எந்தப் பகுதியிலே காற்றாலை அமைப்பதாக இருந்தாலும் அங்கே காற்றினுடைய வேகம்

1998 ஏப்ரல் 29]

மிக முக்கியம். 18 கிலோ மீட்டர் முதல் 24 கிலோ மீட்டர் வேகத்திலே காற்று வீசினால்தான் அங்கே போடுகின்ற முதலீட்டிற்கு ஏற்றாற்போல் இலாபம் கிடைக்கும். அதுமட்டுமல்ல., ஆண்டு முழுவதும் இந்தக் காற்றின் வேகம் ஒரே மாதிரியாக இருப்பதில்லை. இப்போது கோடைக்காலம். இப்போது காற்றே வீசுவது இல்லை. எனவே காற்றாலைகள் அவ்வளவும் மின்சாரம் உற்பத்தி செய்ய முடியாத சூழ்நிலையிலே இருக்கின்றன. 2,522 மின்சார காற்றாலைகளில் இருந்து 702 மெகாவாட் மின்சாரம் கிடைப்பதற்கு மாறாக கோடைக்காலத்தில் 40 மெகாவாட் மின்சாரம்தான் கிடைக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. தி.ப. ஆறுமுகம்.

திரு. தி.ப. ஆறுமுகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் காற்றாலையை இயக்குவதிலே எனக்கு நேரடியான அனுபவம் உண்டு. எங்களது நூற்பாலைக்கு 2 காற்றாலைகள் முச்சனேந்தல் என்ற இடத்திலே அமைக்கப்பட்டிருக்கின்றன. ஆரல்வாய் கணவாய் மூலமாகத்தான் ஓரளவிற்குக் காற்று வீசுகிறது. அதுவும்கூட Income-Tax exemption மற்றும் மானியம் வந்த காரணத்தினாலே நாங்கள் போட்டோம் இப்போது கட்டுப்படியாகாத சூழ்நிலையில் இருக்கிறது என்பதைத் தகவலுக்காக அமைச்சர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி: தலைவர் அவர்களே, புதிதாக முதலீடு செய்கின்றவர்கள் வராததற்குக் காரணம் என்ன என்பதை நான் ஏற்கெனவே குறிப்பிட்டேன். அதைத்தான் மாண்புமிகு உறுப்பினர் அவர்களும் உறுதி செய்கிறார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. டி. மணி.

திரு. டி. மணி: தலைவர் அவர்களே, ஆரல்வாய்மொழியில் நூற்றுக்கணக்கான காற்றாலைகள் செயல்பட்டு வந்தன. சமீபத்தில் 6 மாதங்களாக பல காற்றாலைகள் செயல் இழந்த நிலையில் உள்ளன. அது காற்றினுடைய வேகத் தன்மை குறைவானதன் காரணத்தினாலா அல்லது அதில் நஷ்டம் என்ற காரணத்தினாலா என்பதை அறிய விரும்புகிறேன்.

[1998 ஏப்ரல் 29

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி: தலைவர் அவர்களே, எப்படி அரசியல் காற்று ஒரே மாதிரி வீசாமல் இருக்கிறதோ அப்படி இயற்கையிலேயும் காற்று வீசாமல் இருக்கின்ற காரணத்தினாலே அந்தப் பகுதியிலே கடந்த 6 ஆண்டுகளாகக் காற்றாலைகள் இயங்குகின்ற தன்மை குறைந்திருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 366, திரு. கே. ரவி அருணன், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்.

366—

தென்காசி மருத்துவமனையில் சிறப்புப் பிரிவுகள்

***12026— திரு. கே. ரவி அருணன்:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தென்காசி அரசு தலைமை மருத்துவமனையில் காது, மூக்கு, தொண்டை சிறப்புப் பிரிவு ஏற்படுத்த அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ): தற்போது கருத்துரு ஏதும் ஆய்வில் இல்லை.

திரு. கே. ரவி அருணன்: பேரவைத் தலைவர் அவர்களே, தென்காசி அரசு மாவட்டத் தலைமை மருத்துவமனையில் காது, மூக்கு, தொண்டை சிறப்புப் பிரிவு இல்லாததால் அந்தப் பகுதியிலே உள்ள பொதுமக்கள் எல்லாம் ஏறக்குறைய 60 கிலோமீட்டருக்கு அப்பாலுள்ள திருநெல்வேலி சென்று சிகிச்சை பெற வேண்டிய ஒரு சூழ்நிலை இருக்கிறது. ஆகையினால் அந்தப் பிரிவைத் தொடங்க அரசு மறுபரிசீலனை செய்யுமா என்பதையும், தென்காசி அரசு தலைமை மருத்துவமனையில் உள் நோயாளிகள் சிகிச்சைப் பிரிவில் மின் விசிறிகள் எதுவும் இல்லாததால், நோயாளிகள், குறிப்பாக இந்தக் கோடை காலத்தில்

மிகவும் பாதிப்புக்கு உள்ளாகின்றனர். ஆகவே, உள் நோயாளிகள் சிகிச்சைப் பிரிவில் மின்விசிறிகள் அமைத்துக் கொடுக்க அரசு ஆவன செய்யுமா எனவும் அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10-00

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தென்காசி அரசு மருத்துவமனையில், அதிலும் தலைமை அரசு மருத்துவமனையில் இருக்கின்ற படுக்கைகள் போதாது என்று இந்த அரசும் கருதுகிறது. ஏனென்றால், மாவட்டத் தலைமை மருத்துவமனைகள் என்றால் குறைந்தது 150 படுக்கைகள் இருக்க வேண்டும் என்று அரசு ஏற்கெனவே முடிவு செய்து, தமிழ்நாட்டில் உள்ள எல்லா மாவட்ட அரசு தலைமை மருத்துவமனைகளிலும் 150-க்கு மேற்பட்ட படுக்கைகள் இருக்கின்றன. ஆனால், தென்காசி தலைமை மருத்துவமனையில் 88 படுக்கைகள்தான் இருக்கின்றன. இந்த ஆண்டு படுக்கைகளினுடைய எண்ணிக்கையை இன்னும் உயர்த்தலாமா என்று அரசு பரிசீலித்துக்கொண்டிருக்கிறது. அப்போது மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்ட அந்தப் பிரிவுகள் அங்கே இடம் பெறும். அங்கே மின்விசிறிகள் அமைப்பது பற்றிச் சொன்னார்கள். தமிழ்நாட்டில் பல மருத்துவமனைகளில் இப்படி சில மின்விசிறிகள் பொருத்த வேண்டியிருக்கிறது. ஆனால், தனியார்கள், சில அமைப்புகள், அவர்களே மின்விசிறிகள் வாங்கிக் கொடுக்கிறார்கள். அதுபோல மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு ஒதுக்கப்பட்டுள்ள தொகுதி மேம்பாட்டுத் திட்ட நிதியிலிருந்து 20 அல்லது 25 மின்விசிறிகள் வாங்கித் தருவார்களானால் அது அரசுக்கும் நன்றாக இருக்கும், மாண்புமிகு உறுப்பினருக்கும் நல்ல பெயர் கிடைக்கும்.

திரு. கே. ரவி அருணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சட்டமன்ற உறுப்பினர்கள் வளர்ச்சி நிதியிலிருந்து மின்விசிறிகள் போன்ற பொருட்கள் வாங்கக் கூடாது என்று விதி இருப்பதால் அந்தத் திட்டத்தில் இந்தக் கோரிக்கையை நிறைவேற்ற முடியவில்லை. ஆகவே, அரசு அந்த மின்விசிறியைப் பொருத்த நிதி ஒதுக்கீடு செய்யுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அப்படி எந்த விதியும் இங்கே இந்த அரசால்

[1998 ஏப்ரல் 29

பிறப்பிக்கப்படவில்லை. முதல் ஆண்டு இன்னின்ன பணிகளுக்குத்தான் இந்தப் பணத்தைப் பயன்படுத்த வேண்டுமென்று அரசு ஒரு உத்தரவு பிறப்பித்தது. அதற்குப் பிறகு சட்டமன்ற உறுப்பினர்கள் விரும்புகின்ற பணிகளுக்கு அந்தப் பணத்தைப் பயன்படுத்தலாம், பொதுப் பணிகளுக்குப் பயன்படுத்தலாம் என்று அரசு உத்தரவு பிறப்பித்து இருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் திரு. சொக்கர் போன்றவர்கள் எல்லாம் அரசு மருத்துவமனைகளுக்கு விசிறிகளை ஏற்கனவே வாங்கிக் கொடுத்திருக்கிறார்கள். எனவே மின் விசிறிகளின் எண்ணிக்கையை உயர்த்த மாண்புமிகு உறுப்பினர்கள் ஆதரவு தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 367, திரு. த. பூவேந்தன், மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்.

367—

பேருந்து நிலையத்தை விரிவுபடுத்துதல்

***7071—திரு. த. பூவேந்தன்:**

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பழனி மத்திய பேருந்து நிலையத்தை விரிவுபடுத்த அல்லது வேறு இடத்திற்கு மாற்ற அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) இவ்வினா எழவில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. த. பூவேந்தன், இருக்கையில் இல்லை.

வினா எண் 368, திரு. அ. வெங்கடாசலம், மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

1998 ஏப்ரல் 29]
368—

கீரமங்கலத்தை ஊராட்சி ஒன்றியமாக்குதல்

***7508—திரு. அ. வெங்கடாசலம்:**

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புதுக்கோட்டை மாவட்டம், ஆலங்குடி தொகுதி, கீரமங்கலத்தை ஊராட்சி ஒன்றியமாக அறிவிக்கும் செயற்குறிப்பு அரசின் ஆய்வில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில் எப்போது?

மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) புதுக்கோட்டை மாவட்டம், ஆலங்குடி தொகுதி, கீரமங்கலத்தை ஊராட்சி ஒன்றியமாக அறிவிக்கும் செயற்குறிப்பு எதுவும் தற்போது அரசின் பரிசிலனையில் இல்லை.

(ஆ) இவ்வினாவிற்கு இடமில்லை.

திரு. அ. வெங்கடாசலம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருவரங்குளம் ஒன்றியம், ஆலங்குடி, கீரமங்கலம் ஆகிய 2 பேரூராட்சிகள் மற்றும் 50 ஊராட்சி மன்றங்களை உள்ளடக்கியதாக இருக்கிறது. ஆகவே, திருவரங்குளத்தை இரண்டாகப் பிரித்து கீரமங்கலத்தைத் தலைமையிடமாகக் கொண்டு ஓர் ஒன்றியமாக அறிவிக்க வேண்டுமென்று கடந்த 1993-94 ஆம் ஆண்டு, அந்த ஒன்றியத்தைப் பிரிப்பதற்கான கருத்துரு அரசுக்கு அனுப்பப்பட்டு அது நிறைவேற்றப்படாமல் இருக்கிறது. ஆகவே, கிட்டத்தட்ட ஒரு லட்சத்து 25 ஆயிரம் வாக்காளர்களைக் கொண்ட அந்த ஒன்றியத்தை இரண்டாகப் பிரிக்க கருத்துரு அனுப்பப்பட்டிருக்கிற காரணத்தால் பொதுமக்கள் நலனைக் கருதி கீரமங்கலத்தைத் தனி ஒன்றியமாக அறிவிக்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நடவடிக்கையை இனிமேலாவது எடுப்பார்களா எனத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

[1998 ஏப்ரல் 29

மாண்புமிகு திரு. கோ.சி. மணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே ஒரு சட்ட விதி மூலம் (1/241), ஊரக வளர்ச்சி துறையின் மூலம், 11-11-1993-ல் உத்தரவு போடப்பட்டிருக்கிறது. அதிலே, 58 வரை தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம் நீட்டிக்கப்பட்டு புதிய ஊராட்சிகள் சட்டம் உருவாக்கப்படும் வரை ஊராட்சி அமைப்புகளுக்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் பொறுப்பு ஏற்ற பிறகுதான் செய்யலாம் என்று ஆணை வெளியிடப்பட்டுள்ளது. அவ்வாறு 1994-ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம் புதிதாக உருவாக்கப்பட்டு, 1996-ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் ஊராட்சிகளுக்கான தேர்தல் நடந்து 25-10-1996 அன்றுதான் முறைப்படி அவர்கள் பொறுப்பு ஏற்று இருக்கிறார்கள். அப்படி உள்ளாட்சி மன்றங்களிலிருந்து தீர்மானம் நிறைவேற்றி அனுப்பப்படுமானால் அதைப்பற்றி பிறகு பரிசீலிக்கலாம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 369, திரு. இரா. தாமரைக்கனி, மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர்.

369—

பம்பை-அச்சன்கோவில் ஆற்று நீரை தமிழகத்திற்குக் கொண்டு வருதல்

*5767—**திரு. இரா. தாமரைக்கனி:**

மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கேரள மாநிலத்திலுள்ள பம்பை-அச்சன்கோவில் ஆற்றுத் தண்ணீரைத் தமிழகத்திற்குத் திருப்பிவிடும் திட்டம் எந்நிலையில் உள்ளது?

(ஆ) திட்டத்தின் விவரம் யாது?

மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப்பணித் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) பம்பை-அச்சன்கோவில்-வைப்பார் இணைப்புத் திட்டத்திற்கு கேரள அரசு ஒப்புதல் தரவேண்டும்.

TRUTH ALONE TRIUMPHS

1998 ஏப்ரல் 29]

(ஆ) பம்பை-அச்சன்கோவில்-வைப்பார் இணைப்புத் திட்டத்தின்படி சுமார் 22 டி.எம்.சி. அளவு உபரி நீரை பம்பை மற்றும் அச்சன்கோவில் ஆறுகளிலிருந்து தமிழகத்திலுள்ள வைப்பார் படுகைக்கு திருப்பிப் பாசன வசதியளிக்கலாம். இதனால், விருதுநகர், நெல்லை, சிவகங்கை மாவட்டங்களில் சுமார் ஒரு லட்சம் ஹெக்டேர் நிலம் பாசன வசதி பெறும். பம்பை மற்றும் அச்சன்கோவில் ஆறுகளின் குறுக்கே நீர்த்தேக்கங்கள் அமைத்து, உபரிநீரை அங்கே திருப்பி அதனைச் சுமார் ஒன்பது கிலோமீட்டர் நீளமுள்ள குகைப்பாதை வழியாக மேற்குத்தொடர்ச்சி மலைக்குக் கிழக்கே கொண்டு வந்து சுமார் 50 கிலோமீட்டர் நீளமுள்ள கால்வாய் வழியாக வைப்பார் ஆறுவரைக்கும் கொண்டு வந்து பயன்படுத்தப்படும்.

முற்பகல் 10-05

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. ஆர். சொக்கர்.

திரு. ஆர். சொக்கர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தென் மாவட்டங்களில், குறிப்பாக விருதுநகர் மாவட்டத்தில் இது மிகமிக முக்கிய பிரச்சினையாகக் கருதப்பட்டு வருகின்றது. பம்பை, அச்சன்கோவில் ஆறுகளில் வருஷத்திற்கு 200, 250 டி.எம்.சி. தண்ணீர் வீணாகச் சென்று கடலிலே கலக்கிறது. இந்தத் திட்டத்தை நிறைவேற்றுவதன் மூலமாகக் கேரளாவிற்கும் 500 மெகாவாட் நீர் மின் நிலையம் அமைக்கக்கூடிய ஒரு வாய்ப்பும் இருக்கிறது. இந்தத் திட்டத்திற்கு ஆகக்கூடிய மொத்தச் செலவோ 1400 கோடி ரூபாய்தான். ஆக, மிகக்குறைந்த முதலீட்டில் நிறைந்த பலனைக் கேரள அரசுக்கும், தமிழகத்திற்கும் தரக்கூடிய இந்தத் திட்டத்தினுடைய நன்மைகளைக் கேரள அரசிடம் பொதுப்பணித் துறை அமைச்சரவர்களும், முதலமைச்சரவர்களும் நேரிலே எடுத்துச் சொல்லி இந்தத் திட்டத்தை நிறைவேற்ற அனைத்து முயற்சிகளையும் எடுக்கவேண்டும். ஒருவேளை அவர்கள் விவசாயத்திற்காகத் தண்ணீர் கொடுக்கவில்லையென்றாலும்கூட, அங்கே குடிப்பதற்குக்கூடத் தண்ணீர் இல்லாமல் மக்கள் கஷ்டப்பட்டுக்கொண்டிருக்கிறார்கள். ஆகவே, 22 டி.எம்.சி விவசாயத்திற்குக் கேட்பதற்குப் பதிலாகக் கூட, முதலிலே 3 டி.எம்.சி. தண்ணீராவது குடிப்பதற்காகக் கொடுங்கள் என்று கேட்கக்கூடிய முயற்சியை அரசு மேற்கொள்ளுமா என்று அறிந்துகொள்ள விரும்புகின்றேன்.

[1998 ஏப்ரல் 29

மாண்புமிகு திரு. துரைமுருகன்: தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் சொக்கர் அவர்கள் தெரிவித்த அந்தக் கருத்து எங்களுக்கு ஏற்புடையதுதான். ஆனால், ஏற்க மறுப்பது கேரள அரசுதான். எனவே, அதுகுறித்து மீண்டும் மீண்டும் கேரள அரசை நாங்கள் வற்புறுத்திக் கொண்டிருக்கிறோம். இப்பொழுது அவர்கள், கலைஞருடைய ஆட்சி இம்மாநிலத்திலே அமைக்கப்பட்ட பிறகு, 28-11-1996-இல் இங்கே ஒரு கூட்டத்தைக் கூட்டி, கேரள நீர்ப்பாசனத் துறை அமைச்சரை அழைத்து அது குறித்துப் பேசினோம். ஆனால், அவர்கள் என்ன சொன்னார்கள் என்றால், இன்னும் நாங்கள் எவ்வளவு தண்ணீர் எங்களுக்குக் கிடைக்கிறது என்பதைப்பற்றிக் கணக்கெடுக்கவில்லை. அதற்கு 3 ஆண்டுக் காலம் ஆகும் என்று அவர்கள் தெரிவித்தார்கள். இரண்டாவது, எங்களுக்கு அந்தத் தண்ணீரைக் கிழக்கே திருப்பி அனுப்பிவிட்டால் வெம்பநாடு பகுதியிலே இருக்கிற ஏரிகளிலே உப்புத் தண்ணீர் புகுந்துவிடும்; அதைக் காப்பாற்றுவதற்கு எங்களுக்குத் தண்ணீர் தேவை என்று சொல்லிக்கொண்டு இருந்தார்கள். பிறகு இதுகுறித்து மத்திய அரசு தொடர்ந்து வலியுறுத்திக்கொண்டு, National Water Development Agency வற்புறுத்தியன் விளைவாக, சமீபத்திலேதான் 21-7-1997 அன்று 26-வது Technical Advisory Committee Meting டெல்லியிலே நடந்தது. அந்தக் கூட்டத்தில் இதுபற்றி விவாதிக்கிறபொழுது, கேரள அரசாங்கம் இதுகுறித்து மவுனம் சாதிக்கிறதே என்பதற்காக விவாதித்த பொழுது, அந்த மாநிலத்தின் சார்பிலே கலந்துகொண்ட ஒரு பிரதிநிதி, பிற மாநிலங்கள் இந்த இணைப்புத் திட்டத்தால் பயனடையும் என்றால் கேரள அரசுக்கு மறுப்பேதும் இல்லை என்று அவர் சொன்னதாகக் கருத்து வந்தது. அதைப் பயன்படுத்திக்கொண்டு, நம்முடைய அரசு சென்ற 21-3-1998 அன்று மீண்டும் கேரள அரசுக்கு ஒரு கடிதம் எழுதியிருக்கிறது. பதிலை எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறோம்.

இரண்டாவது, அவர் தெரிவித்த காரணம், குடிநீருக்கு என்று கேட்கக் கூடாதா என்று கேட்டார்கள். குடிநீருக்குக் கேட்கலாம். அது தவறு இல்லை. நானேகூட அப்படித்தான் கேட்டிருக்கிறேன். ஐக்கிய முன்னணியினுடைய அரசு இருந்த காலத்தில், மத்திய நீர்ப்பாசனத் துறை அமைச்சரைச் சந்தித்து அப்படிக் கேட்டேன். ஆனால், பிரச்சினை என்னவென்றால், அது குடிநீருக்காகக் கொண்டு வர வேண்டுமென்றாலும், பாசனத்திற்காகக் கொண்டு வர வேண்டுமென்றாலும், பம்பை, அச்சன்கோவில், கல்லாறுகளிலிருந்து திருப்பிக் கொண்டு வருவது, இதற்கு என்ன செலவாகிறதோ அதே செலவுதான் அதற்கும்

ஆகும். ஏனென்று கேட்டால் பம்பை, கல்லாறிலே ஒரு அணை கட்டி, அச்சன்கோவில், கல்லாறிலே இன்னொரு அணை கட்டி, மூன்றாவது அணை அச்சன்கோவிலிலே கட்டி, இதிலிருந்து Pump பண்ணி, அந்த இரண்டு அணைகளுக்குக் கொண்டுபோய், அங்கிருந்து 8 கிலோமீட்டர் இன்னுமொரு 9 கிலோமீட்டர் Tunnel அமைத்து, பிறகு 56 கிலோமீட்டர் கால்வாயை வெட்டித்தான் கொண்டுவர வேண்டும். ஆக, குடிநீருக்கு என்றாலும், பாசனத்திற்கு என்றாலும், ஆகிற செலவு ஒன்றுதான். எனவே, கேட்கிறது எப்படிக் கேட்டாலும், செய்யப்போகிற செலவு ஒரு செலவு என்பதை நாம் மறந்துவிடக்கூடாது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. கே. சுப்பராயன்.

திரு. கே. சுப்பராயன்: பேரவைத் தலைவரவர்களே, கேரளத்தைப் பொறுத்தவரையிலும் அவர்களுடைய உணவுத் தேவையில் 50 சதமான அரிசிதான் அங்கே விளைகிறது. மீதி 50 சதமானத்திற்கு வேறு பல மாநிலங்களை எதிர்பார்த்துக் காத்துக்கிடக்கின்ற ஒரு நிலைமை கேரளத்தில் நிலவுகிறது. எனவே, நம்முடைய மாநில அரசு கேரளத்தோடு பேச்சுவார்த்தை நடத்தி, தமிழகத்தின் தென் மாவட்டங்களுக்கும், கோவை மாவட்டத்திற்குமாகச் சேர்த்து, 84 டி.எம்.சி. தண்ணீர் கொண்டு வரப்படுமானால், பேசி ஓர் ஒப்பந்தத்திற்குக் கொண்டு வரப்படுமானால், நம்முடைய உணவு உற்பத்தியும் அதிகரிக்கும்; அதன்மூலம் கேரளத்திற்கும் உதவ முடியும் என்கிற இந்தக் கண்ணோட்டத்தோடு கேரள அரசிடம் மீண்டும் பேச்சுவார்த்தை நடத்த மாநில அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10-10

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கேரளத்தோடு பலமுறை பேசிய சூழ்நிலையில், நீங்கள் தண்ணீர் கொடுங்கள், அதன் காரணமாக இங்கே விளைகின்ற உணவுப் பொருட்களை உங்களுக்குப் போதுமான அளவிற்கு நாங்களும் பகிர்ந்து அளிக்கிறோம் என்று பலமுறை பேசப்பட்டிருக்கிறது. திரு. இ.எம்.எஸ். காலத்திலிருந்து பேசப்பட்டு வருகிறது. ஆனாலும், அவர்கள் செவி மடுக்கவில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 370, திரு. கே. தங்கமணி, மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர்.

370—

நகரப் பேருந்து இயக்குதல்

*8689—திரு. கே. தங்கமணி:

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சிவகங்கை மாவட்டம், திருப்புவனத்திலிருந்து மணலூர், அகரம் வழியாக இதுவரை பேருந்து வசதியே இல்லாத சாரிபுதுக்கோட்டைக்கு நகரப் பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ): கோரிக்கை வழித்தடத்தில் சாலைகள் பேருந்து இயக்கத்திற்கு ஏற்றதாக இல்லாததால் நகரப் பேருந்துகளை இயக்குகின்ற நிலை இல்லை.

திரு. கே. தங்கமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மானாமதுரை தொகுதியில் இருக்கக்கூடிய சாரிபுதுக்கோட்டை என்பது இதுவரை பஸ் வசதியே இல்லாத கிராமமாகும். மதுரை பகுதியிலேயிருந்து அந்தக் கிராமத்திற்குச் செல்வதற்கு திருபுவனம், கொந்தலை, கட்டம்மன்கோட்டை வழியாகச் செல்லக்கூடிய அளவிற்குச் சாலை வசதி இருக்கிறது. அந்தப் பகுதியிலே போக்குவரத்தை இயக்கினாலும் சரி, அல்லது மதுரை பெரியார் பஸ் நிலையத்திலிருந்து சாரிபுதுக்கோட்டைக்கு பஸ் வசதி செய்து கொடுத்தாலும் சரி, இவ்வாறு செய்து கொடுப்பதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருபுவனத்திலிருந்து மணலூர், அகரம், கொந்தலை, கட்டம்மன்கோட்டை, காஞ்சரம்குளம் வழியாகப் பேருந்துகளை இயக்குவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டது. காஞ்சரம்குளத்திலிருந்து வலையங்குளம், சாரிபுதுக்கோட்டை வழியாகச் செல்லக்கூடிய சாலை வண்டிப்பாதையாக இருக்கிற காரணத்தால்

1998 ஏப்ரல் 29]

பேருந்துகளை இயக்க முடியவில்லை என்று அதிகாரிகள் பதில் கொடுத்திருக்கிறார்கள். மேலும், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்டதைப்போல் மதுரை பெரியார் பேருந்து நிலையத்திலேயிருந்து அவனியாபுரம், வலையங்குளம், சோளங்குடி வழியாகப் பேருந்துகளை இயக்குவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டு, அதுவும் சாலை சரியில்லையென்று அவர்கள் குறிப்பிட்டிருக்கிறார்கள். அதற்காக நெடுஞ்சாலைத் துறைக்குக் கடிதம் எழுதியிருக்கிறோம். அந்தச் சாலையைச் செப்பனிட்டு உடனடியாகக் கொடுக்குமாறு கேட்டிருக்கிறோம். மாண்புமிகு உறுப்பினர் அவர்களே அதற்கான நடவடிக்கைகளைத் தொடர்ந்து செய்து, அந்தச் சாலை செப்பனிடப்பட்டதாக அறிவிப்பார்கள் என்று சொன்னால் உடனடியாகப் பேருந்துகள் விடப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 371, திரு. கோ. தளபதி, மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர்.

371—

மதுரையில் ஆட்டோ ரிக்ஷாக்களில் மீட்டர் பொருத்துதல்

***11237—திரு. கோ. தளபதி:**

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மதுரை நகரில் ஆட்டோ ரிக்ஷாக்களில் மீட்டர் பொருத்தும் முறையினை கட்டாயமாக்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

மதுரை நகரில் மட்டுமின்றி தமிழ்நாட்டில் ஆட்டோ ஓடும் அனைத்து பகுதிகளிலும் ஆட்டோக்களில் கண்டிப்பாக மீட்டர் பொருத்த நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

திரு. கோ. தளபதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மதுரை, திருச்சி போன்ற மிகப்பெரிய நகரங்களிலே ஆட்டோ ரிக்ஷாக்களில் மீட்டர் என்பது போடுவதே கிடையாது. ஒரு இடத்திற்குப்

போக வேண்டுமென்றால் 20 ரூபாய், 40 ரூபாய் என்று பேரம் பேச வேண்டியிருக்கிறது. அதனால் சில சந்தர்ப்பங்களிலே ஓட்டுநர்களுக்கும் பயணிகளுக்கும் இடையே சண்டைகூட நடந்து விடுகிறது. இதையெல்லாம் எண்ணிப் பார்த்து, மதுரை போன்ற மிகப் பெரிய நகரங்களிலே வர்த்தகர் சங்கம் போன்ற அமைப்புக்களை வைத்து அல்லது அதிகாரிகளை வைத்து ஆட்டோ ஓட்டுநர்களுடன் பேச்சுவார்த்தை நடத்தி அதன்மூலம் இந்தப் பிரச்சினையைத் தீர்த்துவைக்கவும், அத்தோடு 40 சதம், 50 சதம் என்று பல வெளி மாநிலங்களிலே கொடுப்பதைப் போல ஒரு தொகையை நிர்ணயம் செய்து அறிவிக்க அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆட்டோ ஓடுகிறபோது 1 கிலோமீட்டருக்கு எவ்வளவு வசூலிக்க வேண்டும் என்று அரசு நிர்ணயம் செய்திருக்கிறது. அந்தத் தொகையை வசூலிப்பதற்குத் தான் அரசு அனுமதி அளித்திருக்கிறது. அதற்கு மேல் வசூல் செய்பவர்கள் மீது நடவடிக்கை எடுக்கவும் சட்டத்தில் இடமுள்ளது. மாண்புமிகு உறுப்பினர் அவர்களும் மற்ற ஆட்டோ ஓட்டுநர்கள் சங்கத்தைக்கூட அழைத்துப்பேசி, இதுபோன்ற முயற்சிகளிலே அவர்கள் ஒத்துழைத்தால்தான் இதை நடைமுறைப்படுத்த முடியும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 372, திரு. பா. வேல்துரை, மாண்புமிகு உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்.

372—

குடும்ப அடையாள அட்டை வழங்குதல்

***1442—திரு பா. வேல்துரை:**

மாண்புமிகு உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருநெல்வேலி மாவட்டம், சேரன்மகாதேவி தொகுதியில் குடும்ப அடையாள அட்டை கேட்டு நிலுவையிலுள்ள மனுக்கள் மீது

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY

1998 ஏப்ரல் 29]

நடவடிக்கை மேற்கொண்டு குடும்ப அட்டை வழங்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. கா.நா. நேரு, உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

ஒன்று, அரசின் புதிய கொள்கை முடிவின்படி தமிழகத்தில் அரிசியும் ஏனைய அத்தியாவசியப் பண்டங்களும் பொது விநியோக முறையில் பெற விரும்பும் குடும்பங்களுக்கு இளஞ்சிவப்பு வண்ண குடும்ப அட்டையும், அரிசி வேண்டாதவர்களுக்கு மஞ்சள் அட்டையும் வழங்கும் பணி 1-5-1998 முதல் தொடங்கப்பட்டு 31-7-1998-க்குள் முடிக்கப்படும். மஞ்சள் அட்டைதாரர்கள் அரிசிக்குப் பதிலாக 3 கிலோ சர்க்கரை அல்லது 5 லிட்டர் மண்ணெண்ணெய் போன்ற ஏனைய பொருட்களைப் பெறலாம். இரண்டாவது, இதுவரை குடும்ப அட்டை இல்லாதவர்கள் புதிய குடும்ப அட்டை கோரி 1-4-1998 முதல் 30-4-1998 வரை விண்ணப்பிக்கலாம் என முக்கிய பத்திரிகைகளில் ஏற்கெனவே விளம்பரங்கள் வெளியிடப்பட்டுள்ளன. சேரன்மகாதேவி தொகுதியில் இருப்பவர்களும் புதிய அட்டைக்கு விண்ணப்பிக்கலாம். அவர்களது மனுவும் கள ஆய்வு செய்யப்பட்டு 31-7-1998-க்குள் தகுதியான அனைவருக்கும் புதிய குடும்ப அட்டைகள் வழங்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10-15

திரு. பா. வேல்துரை: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இரண்டு ஆண்டுகளாகக் குடும்ப அட்டைகள் வழங்கப்படாததால் இப்பொழுதாவது குடும்ப அட்டைகள் உடனடியாக வழங்குவார்களா என்று சந்தேகம் மக்கள் மத்தியில் ஏற்பட்டிருக்கிறது. மனுக்களை வாங்கி அலுவலகத்தில் வைத்திருக்கிறார்கள். எனவே, மக்களுடைய குறையைப் போக்குகின்ற வகையிலே, இப்பொழுது பெறப்பட்டிருக்கின்ற மனுக்களை உடனடியாகப் பரிசீலனை செய்து, இந்தத் தேதியிலிருந்து இந்தத் தேதி வரை கிராமங்களுக்கும் உடனடியாக கார்டுகள் வழங்கப்படும் என்ற ஒரு காலக்குறியீட்டை அரசு அறிவிக்குமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கா.நா. நேரு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நேற்றையதினம் என்னுடைய மானியக் கோரிக்கையிலே

[1998 ஏப்ரல் 29

கூட அறிவித்திருக்கிறேன். புதிதாக விண்ணப்பித்து இருக்கின்றவர்களுக்கும் சேர்த்து 31-7-1998-க்குள் அனைத்துக் குடும்பங்களுக்கும் குடும்ப அட்டைகள் வழங்கப்பட்டு விடும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. சைதை கா. கிட்டு.

திரு. சைதை கா. கிட்டு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புதிதாக வழங்கப்படவிருக்கின்ற அந்த அட்டையை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் உறுப்பினர்களுக்குக் காண்பிப்பார்களா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: சட்டமன்றத்தில் காண்பிக்க முடியாது. அவர் அறையிலே போய்ப் பார்க்கலாம். (சிரிப்பு)

மாண்புமிகு திரு. கா.நா. நேரு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்னும் ஐந்து நிமிடத்தில் அந்தக் கார்டுகள் காண்பிக்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. வை. சிவபுண்ணியம்.

திரு. வை. சிவபுண்ணியம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குடும்ப அட்டைகளை வழங்குவதற்கான தேதி, 1ஆம் தேதி என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நேற்றையதினம் மானியக் கோரிக்கையிலே அறிவித்தார்கள். குறிப்பாக, அந்த கார்டுகளைப் பெற்றுக்கொள்வதற்கு கார்டுதாரர்கள் ரூ.5/- செலுத்திவிட்டு கார்டுகளைப் பெற்றுக் கொள்ள வேண்டுமென்றும் நேற்றையதினம் அமைச்சர் அவர்கள் அறிவித்தார்கள். அதற்குரிய செலவு சுமார் ரூ.20/- என்ற அளவுக்கு இருந்தாலும்கூட, பொதுமக்கள் அந்த அட்டையைப் பெறுவதற்கு ரூ. 5/- செலுத்திவிட்டுப் பெற்றுக் கொள்ள வேண்டும் என்ற உத்தரவை மாண்புமிகு முதல்வர் அவர்கள் மறுபரிசீலனை செய்து, அதை இலவசமாக வழங்குவதற்கு முன்வருவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்பொழுதே ஓர் அட்டை ஏறத்தாழ ரூ. 15/- அடக்கமாகிறது. ஏனென்றால், ஒவ்வொருவரிடமிருந்தும் படம் பெற்று, அந்தப் படத்தை அதிலே ஒட்டவேண்டியிருக்கிறது. அதுமாத்திரம்

1998 ஏப்ரல் 29]

இல்லாமல், ஐந்தாண்டுகளுக்கு அது நீடித்து இருக்கக்கூடிய அளவிற்கு அந்த அட்டைகள் தயாரிக்கப்படுகின்றன. எனவே, இப்பொழுதே ரூ.10/- மானியம் கொடுத்துதான் அந்த அட்டைகள் வழங்கப்படவிருக்கின்றன. இனாமாக வழங்க வேண்டுமென்றால், மாண்புமிகு உறுப்பினர் போன்றவர்கள் நன்கொடை ஏதாவது வழங்கினால் யோசிக்கலாம். (சிரிப்பு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. ஐ. கணேசன்.

திரு. ஐ. கணேசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஓமலூர், மேச்சேரி, எடப்பாடி போன்ற பகுதிகளிலுள்ள ஏழைகள் கல் உடைப்பதற்கு பெங்களூர் சென்று 4 அல்லது 5 மாதங்கள் அங்கிருந்து வேலை செய்துவிட்டுத் திரும்புகிறார்கள். அதுபோல் விவசாயத் தொழிலாளர்களும் கூலி வேலைக்கு கேரளாவுக்குப் பல மாதங்கள் சென்றுவிட்டுத் திரும்புகிறார்கள். திரும்பி வந்து குடும்ப அட்டையைக் கொண்டு சென்று ரேஷன் கடைகளில் உணவுப் பொருட்களைக் கேட்டால், நீங்கள் 3 மாதங்களாக எதுவும் வாங்கவில்லை, உங்களுக்கு எந்தப் பொருளும் வழங்கப்பட மாட்டாது என்று சொல்கிறார்கள். மீண்டும் அதைப் புதுப்பித்துக் கொள்ள அந்த ஏழைகள், கூலியாட்கள், படிப்பறிவு அற்றவர்கள் மிகவும் சிரமப்படுகிறார்கள். இது குறித்து அரசு அறியுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கா. நா. நேரு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே அரசு அறிவித்திருந்தபடி, தொடர்ந்து 3 மாத காலங்கள் ஓர் அட்டைக்கு எந்தப் பொருளும் வாங்கவில்லையென்றால், அவர் வேறு ஓர் இடத்திற்கு மாறியிருக்கலாம் என்று கருதி அதற்குத் தருகின்ற பொருட்களை நிறுத்துவது வழக்கம். மாண்புமிகு உறுப்பினர் திரு. ஐ. கணேசன் அவர்கள் சொல்வதைப் போல, 6 மாதங்கள், 7 மாதங்கள் வெளிமாநிலங்களுக்குத் தொழிலாளர்கள் சென்று மீண்டும் அந்தப் பகுதிக்குத் திரும்பி வந்து, அவர்கள் பொருட்கள் வேண்டுமென்று சொன்னால், குறிப்பிட்ட பகுதியைச் சொன்னால், அவர்களுக்கு வழங்குவதற்கு ஏற்பாடு செய்யப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. சி. ஞானசேகரன்.

[1998 ஏப்ரல் 29

திரு. சி. ஞானசேகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே இப்பொழுது இரத்து செய்யப்பட்டுள்ள கார்டுகளை restore செய்து, புதிய கார்டுகள் வழங்கும் வரை - இந்த மாதம், வருகின்ற மாதம் அல்லது ஜுன், ஜுலை மாதங்களில் கார்டுகள் கொடுக்கப்பட்டாலும் - இந்த 3 மாத காலத்திற்கு அவர்கள் பொருட்களைப் பெறுவதற்கு உதவியாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அங்கிருக்கக்கூடிய D.S.O. போன்றவர்களுக்கு ஆணையிட்டு, இரத்து செய்யப்பட்டிருக்கக்கூடிய கார்டுகளை restore செய்து கொடுப்பதற்கு உத்தரவிடுவார்களா என்று தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கா.நா. நேரு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் எதை cancel செய்திருக்கிறார் என்று சரியாக விளக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். பொதுவாக, நாம் தல ஆய்வுக்குச் சென்று வருகின்றபோது, ஒரு கடைக்கு 800 அட்டைகள் புதுப்பிக்கத் தருகின்றபோது, 700 forms திரும்பி வருகின்றபோது, 100 forms ஒரு மாதம் கழித்து திரும்பி வரவில்லையென்றால், அந்த 100 கார்டுகளுக்குப் பொருட்களை நிறுத்தி வைக்கிறோம். அதிலேகூட உண்மையானவர்கள். 'நாங்கள் இரண்டு, மூன்று மாதம் வரவில்லை' என்று குறிப்பிட்டுச் சொல்வார்களேயானால், புதுப்பித்துத் தருவதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்படும்.

முற்பகல் 10-20

திரு. சி. ஞானசேகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ...

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. சி. ஞானசேகரன், நீங்கள் உட்காருங்கள். நேற்றைக்கே இதே கேள்வியைக் கேட்டீர்கள். இன்றைக்கும் கேட்டாகிவிட்டது. உங்களுக்குப் பதில் திருப்தியாக இல்லையென்றால், நேரடியாகப் போய் அமைச்சரைப் பார்த்து விளக்கம் கேளுங்கள். 3 தடவை ஒரே கேள்வியைக் கேட்க, நான் அனுமதி கொடுக்க முடியாது.

திரு. சி. ஞானசேகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'Door locked' என்பதைப் பற்றி மட்டும் கேட்டு விடுகிறேன்.

1998 ஏப்ரல் 29]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அதற்கு விளக்கம் இப்போது கிடையாது. நீங்கள் நேரடியாகப் போய் அமைச்சரைப் பாருங்கள். (குறுக்கீடு) நீங்கள் இப்படி உட்கார்ந்து கொண்டே பேசக் கூடாது.

வினா எண் 373, திரு. கொ.வீ. நன்னன், மாண்புமிகு உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்.

373—

கூட்டுறவு மூலம் சிறு தொழில்கள்

***8708—திரு. கொ.வீ. நன்னன்:**

மாண்புமிகு உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) செங்கம் தொகுதியில் கூட்டுறவு மூலம் சிறு தொழில்கள் ஆரம்பிக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. கா.நா. நேரு, உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ): கூட்டுறவு மூலம் சிறு தொழில்கள் ஆரம்பிக்க சாத்தியக்கூறுகள் இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. கொ.வீ. நன்னன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தொழிற்சாலைகளையே பார்த்தறியாத எனது தொகுதி மக்கள், தொழில் மூலம் முன்னேற்றம் அடைய, கூட்டுறவுச் சங்கத்தின் மூலம் சிறு தொழில் கூடங்கள் ஆரம்பிக்க அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கா.நா. நேரு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கூட்டுறவுச் சங்கங்கள் மூலமாக, சிறு தொழில்கள் தொடங்கக்கூடிய எண்ணம் இப்போது இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 374, திரு. ஆர்.ஆர். சேகரன், மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர்.

374—

தொழிற் பயிற்சி மையம் அமைத்தல்

***12472— திரு. ஆர்.ஆர். சேகரன்:**

மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஓமலூர் பகுதியில், அரசு தொழிற் பயிற்சி மையம் அமைக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. அ. இரகுமான்கான், தொழிலாளர் நலத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

ஓமலூர் பகுதியில் ஏற்கெனவே, தொழிற் பயிற்சி நிலையங்கள் உள்ளதால், புதிதாக அரசினர் தொழிற் பயிற்சி நிலையம் துவங்க அரசுக்கு யோசனை தற்போது இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 375, திரு. வ. வேலுசாமி, மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர்.

375—

நீதிமன்ற நூலகத்திற்கு நிதி ஒதுக்கீடு

***8219—திரு. வ. வேலுசாமி:**

மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுரையில் நீதிமன்றங்களும், வழக்கறிஞர்களும் இருந்தும் அவர்களுக்குத் தகுந்த நூலகம் இல்லாதது அரசுக்குத் தெரியுமா?

1998 ஏப்ரல் 29]

(ஆ) ஆம் எனில், நூலகத்திற்கென்று தனியாக நிதி ஒதுக்கீடு செய்ய அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. ஆலடி அருணா, சட்டத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மதுரையில் உள்ள மாவட்ட நீதிமன்றம், கூடுதல் மாவட்ட நீதிமன்றம் மற்றும் முதன்மைக் குற்றவியல் நீதிமன்றம் ஆகியவற்றில் மட்டுமே நூலகங்கள் செயல்பட்டு வருகின்றன. இத்துடன் மதுரை மாவட்ட வழக்கறிஞர் சங்கத்தில், அதனுடைய நூலகம் ஒன்றும் செயல்பட்டு வருகிறது.

(ஆ) இந்நூலகத்திற்குத் தேவையான சட்டப் புத்தகங்கள் மற்றும் சட்ட நடவடிக்கைக் குறிப்பேடுகள்/செய்தி இதழ்கள் வழங்குவதற்கு அவ்வப்போது அரசு போதிய நிதி அனுமதித்து வருகிறது. கடந்த ஆண்டு, தமிழக அரசு 31 இலட்சத்து 60 ஆயிரம் ரூபாயை வழங்கியிருக்கிறது. அதில், ஒரு இலட்சம் ரூபாய், மதுரையிலே நூலகங்களுக்கு வழங்கப்பட்டிருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. கோ. தளபதி, இது மதுரையைப் பற்றிய கேள்வி.

திரு. கோ. தளபதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மதுரையிலுள்ள நீதிமன்றங்கள் இருக்கக்கூடிய பகுதியின் சட்டமன்ற உறுப்பினராக மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் இருப்பதால், அவர் ஒரு முன்னாள் வழக்கறிஞராகவும் பணியாற்றிய காரணத்தினால், சட்டமன்ற உறுப்பினர் நிதியிலிருந்து, அந்த நூலகத்திற்குப் பணம் ஒதுக்கீடு செய்வார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இந்தக் கேள்வி அமைச்சருக்கா எனக்கா?

திரு. கோ. தளபதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் மூலமாக, உங்களிடமிருந்து இதை நான் அறிய விரும்புகிறேன். (சிரிப்பு)

மாண்புமிகு திரு. ஆலடி அருணா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதுகுறித்து அவர் தங்களிடத்திலே தனியாகப் பேசி, நல்ல முடிவைப் பெற்றுக்கொள்ளலாம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 376, திரு. எஸ். டேவிட் செல்வின், மாண்புமிகு கைத்தறித் துறை அமைச்சர்.

376—

கூட்டுறவு நூற்பாலை தொடங்குதல்

***11740—திரு. எஸ். டேவிட் செல்வின்:**

மாண்புமிகு கைத்தறித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தூத்துக்குடி மாவட்டம், முடிவைதானேந்தல், செக்காரக்குடி, பொட்டலூரணி, வர்த்தகரெட்டிபட்டி ஆகிய ஊர்களின் அருகில், கூட்டுறவு நூற்பாலை தொடங்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திரு. என்.கே.கே. பெரியசாமி, கைத்தறித் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இதுகுறித்த திட்டம் எதுவும் அரசின் பரிசீலனையில் தற்போது இல்லை.

(ஆ) இவ்வினாவிற்கு இடமில்லை.

திரு. எஸ். டேவிட் செல்வின்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வினாவில் குறிப்பிடப்பட்டுள்ள கிராமங்களும், அதனுடைய மையப் பகுதியான புதுக்கோட்டை மற்றும் அதைச் சுற்றியுள்ள பல்வேறு கிராமங்களான கூட்டாமணி, மறவன்மடம், சேர்வைகாரன்மடம், தட்டப்பாளை போன்ற பகுதிகளும், தொழிலாளர்கள் நிறைந்த பகுதிகளாகும். விவசாயமே கிடையாது. வேறு தொழில் வாய்ப்பும், வேலைவாய்ப்புக்கான வழியும் இல்லை. தூத்துக்குடியிலுள்ள தனியார் நூற்பாலைகளுக்குக்கூட, இந்தப் பகுதிகளிலிருந்துதான் பெருமளவில் தொழிலாளர்கள் செல்கிறார்கள். எனவே, மாண்புமிகு அமைச்சர்

அவர்கள் மறுபரிசீலனை செய்து, இந்தப் பகுதிகளின் மையப் பகுதியான புதுக்கோட்டையில் ஒரு கூட்டுறவு நூற்பாலை அமைக்க ஆவன செய்வார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. என்.கே.கே. பெரியசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களே குறிப்பிட்டிருக்கிறார்கள். தூத்துக்குடியைப் பொறுத்தவரையிலே 2 கூட்டுறவு நூற்பாலைகள் அங்கே ஏற்கெனவே இருக்கின்றன. ஒன்று, நாசரேத்திலேயும் இன்னொன்று, எட்டையபுரத்திலேயும் இப்போது சிறப்பாகப் பணி செய்து வருகின்றன. மேலும், நம்முடைய கொள்கையிலே, எதிர்காலத்திலே புதிய கூட்டுறவு நூற்பாலைகளை அமைப்பதற்கு வாய்ப்பு இல்லாத சூழ்நிலை இருக்கிறது. ஆகவே, வாய்ப்பில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 377, திருமதி ஏ.எஸ். பொன்னம்மாள், மாண்புமிகு வீட்டுவசதித் துறை அமைச்சர்.

377—

நிலக்கோட்டையில் வீட்டுவசதித் துறையின் வீடுகள்

***7459—திருமதி ஏ.எஸ். பொன்னம்மாள்:**

மாண்புமிகு வீட்டுவசதித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

நிலக்கோட்டையில் வீட்டுவசதித் துறையின் மூலம் வீடுகள் கட்ட அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. கு. பிச்சாண்டி, வீட்டுவசதித் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே.

தற்போது திட்டம் இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 378, திரு. ஜே.எம். ஆரூண் ரஷீத், மாண்புமிகு கால்நடைப் பராமரிப்புத் துறை அமைச்சர்.

378—

முட்டை ஏற்றுமதி மையம்

***8727—திரு. ஜே.எம். ஆரூண் ரஷீத்:**

மாண்புமிகு கால்நடைப் பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

நாமக்கல்லில் முட்டை ஏற்றுமதி மையம் ஒன்று அமைக்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு புலவர் பூ.ம. செங்குட்டுவன், கால்நடைப் பராமரிப்புத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

நாமக்கல்லில் முட்டை ஏற்றுமதி மையம் அமைப்பதற்குச் சாத்தியக்கூறுகள் ஏதும் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10-25

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 379, திரு. மு. பன்னீர்செல்வம், மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர்.

379—

ஓய்வூதியம் பெற வயது வரம்பினைக் குறைத்தல்

***8635—திரு. மு. பன்னீர்செல்வம்:**

மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

உடல் ஊனமுற்றோர்கள் ஓய்வூதியத் தொகை பெற குறைந்தபட்சம் 40 வயது என்று இருப்பதை 20 வயதாக மாற்றியமைக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திருமதி எஸ்.பி. சற்குணபாண்டியன், சமூக நலத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

ஊனத்தின் மிகைத் தன்மையைக் கருத்தில் கொண்டு வயது வரம்பின்றி உடல் ஊனமுற்றோருக்கான உதவித் தொகை வழங்கும்

1998 ஏப்ரல் 29]

திட்டம் அரசாணை எண் 964, சமூகநலத் துறை, நாள் 19-12-1980-லிருந்து நடைமுறையில் உள்ளது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. மு. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1980-ல் ஜி.ஓ. வெளியிடப்பட்டுள்ளதாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கூறுகிறார்கள். அதிகாரிகள் மிகைத் தன்மை என்ற வார்த்தையைப் பயன்படுத்திக் கொண்டு ஊனமுற்றவர்கள் மனு போடுகிறபோது 40 வயது முடிந்தால்தான் ஓய்வூதியத் தொகை வழங்கப்படும் என்று அந்த மனுவை நிராகரிக்கிறார்கள். எனவே மிகைத் தன்மை என்ற அந்த வார்த்தையை அடியோடு நீக்கம் செய்து அவர்களுக்கு ஓய்வூதியத் தொகை வழங்க அரசு பரிசீலனை செய்யுமா என்பதைத் தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி எஸ்.பி. சற்குணபாண்டியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உடல் ஊனம் 50 சதவிகிதம் அளவும் அதற்கு மேலும் உள்ள ஆதரவற்ற உடல் ஊனமுற்றவர்களுக்கு 55 வயதிலிருந்து அந்த உதவித் தொகை வழங்குவதாக 1974ஆம் ஆண்டு அரசாணையில் இருந்தது. அதற்குப் பிறகு அந்த ஆணையில் 1975ஆம் ஆண்டிலே சிறிது மாற்றம் செய்யப்பட்டு 55 வயது என்பது 45 வயதாகக் குறைக்கப்பட்டது. இப்போது வயது வரம்பில்லாமல்தான் உடல் ஊனத்தின் தன்மையை அனுசரித்து ஊனமுற்றவர்களுக்கான ஓய்வூதியத் தொகை வழங்கப்பட்டு வருகிறது. குறிப்பாக, கண் பார்வையற்றவர்களுக்கு இந்த வயது வரம்பு இல்லை என்பதை நான் இந்த நேரத்திலே குறிப்பிட்டுச் சொல்ல விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. எஸ்.எஸ். பொன்முடி.

திரு. எஸ்.எஸ். பொன்முடி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வயதானவர்களுக்கு ஓய்வூதியம் வழங்குவதில் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மானியக் கோரிக்கை விவாதத்தின்போது மருத்துவர்கள் பார்வை மதிப்பிலே சான்றிதழ் வழங்கினால் போதும் என்று கூறினார்கள். வயதானவர்கள் சான்றிதழ் பெறுவதற்கு அலைந்து திரிவதைத் தவிர்ப்பதற்கு சட்டமன்ற உறுப்பினர்களே பார்வை மதிப்பில் சான்றிதழ் வழங்கலாமா? மருத்துவர்கள் சான்றிதழ் அவசியமா என்பதைத் தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

[1998 ஏப்ரல் 29

மாண்புமிகு திருமதி எஸ்.பி. சற்குணபாண்டியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஊனத்தின் தன்மையை அறிந்துகொள்வதற்கு மருத்துவரின் சான்றிதழ் அவசியம் தேவை. ஆனால், பார்வையிலேயே ஊனமுற்றோர்கள், அதிகமான ஊனமுற்றவர்கள் என்று அறிகிறபட்சத்தில் அந்தச் சான்றிதழ் தேவையில்லை என்று ஏற்கெனவே அறிவித்திருக்கிறோம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவர்.

திரு. சோ. பாலகிருஷ்ணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நேற்று காலையில் உடல் ஊனமுற்றவர்கள் எல்லோரும் சேர்ந்து நம்முடைய அரசுக்கு ஒரு கோரிக்கை வைத்து உண்ணாவிரதம் இருந்தார்கள். அந்த உண்ணாவிரதத்தை நானே சென்று தொடங்கி வைத்தேன். அவர்களுடைய கோரிக்கைகள், பல இருந்தாலும், ஒரு கோரிக்கை, எங்களுக்கு நாடு முழுவதும் சென்று வருவதற்கு இலவச பஸ் பாஸ் வேண்டுமென்று கேட்டிருக்கிறார்கள். அந்த இலவச பஸ் பாஸ் என்பது ஆந்திரா, கர்நாடகா, கேரளா போன்ற மாநிலங்களில் எல்லாம் கொடுக்கப்பட்டிருக்கிறது. ஆகவே, எங்களுக்கும் கொடுக்க வேண்டும் என்று அவர்கள் கேட்டிருக்கிறார்கள். அந்தக் கோரிக்கை நியாயமான கோரிக்கையாக இருந்த காரணத்தினால், ஒரு 10 இலட்சம் பேர் உடல் ஊனமுற்றவர்கள் இருந்தாலும்கூட, அதில் ஒரு 1,000 பேர்தான் அதைப் பயன்படுத்துவார்கள் என்கிற வகையில் நம்முடைய அரசு கனிவோடு கவனித்து இந்த உடல் ஊனமுற்றவர்களுக்கு தமிழகம் முழுவதும் செல்வதற்கு இலவச பஸ் பாஸ் வழங்க முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது மாவட்டத்திற்குள் 100 கிலோ மீட்டர் இலவசமாகப் பயணம் செய்ய ஊனமுற்றவர்கள் அனுமதிக்கப்படுகிறார்கள். அவர்கள் மாநிலம் முழுவதும் அவ்வாறு பயணம் செய்ய வேண்டுமென்று கோரிக்கை வைத்திருக்கிறார்கள். அந்தக் கோரிக்கையைக்கூட உண்ணாவிரதப் பந்தலில்தான் வைத்திருக்கிறார்கள். இதுபோன்ற கோரிக்கைகளை அரசிடம் முதலிலேயே எழுப்பி ஆகுமா, ஆகாதா என்கிற முடிவைப் பெற்ற பிறகு இதுபோன்ற உண்ணாவிரதத்திலே ஈடுபடலாம். என்ன செய்வது. ஊனமுற்றவர்கள்கூட உண்ணாவிரதப் போராட்டம் நடத்தித்தான்

1998 ஏப்ரல் 29]

அரசின் கவனத்திற்குக் கொண்டுவர வேண்டும் என்கிற ஓர் எண்ணம் தமிழ்நாட்டில் உருவாகியிருப்பது உள்ளபடியே வருத்தத்திற்குரியது. அவர்கள் இந்தக் கோரிக்கையை நம்முடைய எதிர்க்கட்சித் தலைவர் மூலமாகக்கூட வைத்திருக்கலாம். அதற்கு ஒரு போராட்டம் தேவையில்லை. இருந்தாலும், மாவட்டத்திற்கு வெளியிலேயும் செல்ல வேண்டுமென்று விரும்புகின்ற ஊனமுற்றவர்கள் தனித்தனியே அதுபற்றிய கோரிக்கைகளை அவ்வப்போது எழுப்புவார்களேயானால் அரசு நிச்சயமாக அதைப் பரிசீலிக்கும்.

திரு. சோ. பாலகிருஷ்ணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த உடல் ஊனமுற்றவர்கள் சங்கத்தினுடைய தலைவர் நேற்று அங்கே முதன்முதலாக தலைமையுரை ஆற்றுகின்றபோது நம்முடைய முதலமைச்சர் அவர்கள்தான் இந்தியாவிலேயே முதன்முதலிலே உடல் ஊனமுற்றவர்களுக்கு வண்டி கொடுத்து உதவினார்கள் (மேசையைத் தட்டும் ஒலி) என்று கூறி, ஆகவே, இந்தக் கோரிக்கையையும் அவர் செய்வார் என்று மிகுந்த நம்பிக்கையோடு சொன்னார்கள். ஆகவே, இதை ஒரு போராட்டமாக தயவுசெய்து நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கருத வேண்டாம் என்று கேட்டுக்கொண்டு, துணிவோடு அத்தனை பேருக்கும் இலவச பஸ் பாஸ் தமிழகம் முழுவதும் பயணம் செய்யும் வகையில் கொடுக்கப்படுமா என்று நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது கூட இந்த 100 கிலோமீட்டர் என்பதைப் பயன்படுத்திக்கொண்டு அவர்கள் மாவட்டத்திற்கு வெளியிலேயும்கூட பயணம் செய்து கொண்டிருக்கிறார்கள். இந்தக் கோரிக்கையைப் பற்றி அவர்கள் விண்ணப்பம் தருவார்களானால் அதைப்பற்றி அரசு பரிசீலித்து நல்ல முடிவையே வெளியிடும்.

முற்பகல் 10-30

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவையின் முன் அனுமதியோடு வினாக்கள்-விடைகள் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

வினா எண் 380, திரு. ப. ரங்கநாதன், மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சர்.

380—

மீனவர் மேம்பாட்டு வாரியம் அமைத்தல்

***9590—திரு ப. ரங்கநாதன்:**

மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மீனவர்கள் நலன் காக்க 'மீனவர் மேம்பாட்டு வாரியம்' அமைக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திருமதி எஸ். ஜெனிபர் சந்திரன், மீன்வளத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

திரு. ப. ரங்கநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தாழ்த்தப்பட்டவர்களுக்கு தாட்கோ வாரியம் இருக்கிறது. அதேபோல பிற்படுத்தப்பட்டவர்கள், மிகவும் பிற்படுத்தப்பட்டவர்களுக்கு என்று நிதி உதவி அளிப்பதற்காக மற்றும் பலவேறு சலுகைகள் அளிப்பதற்காக ஒரு வாரியம் இருக்கிறது. அதுபோல, மீனவர்களுக்கு என்று தனி வாரியம் இருந்தால் அந்தச் சமுதாய மக்கள் பயன் பெறுவதற்கு வசதியாக இருக்கும். ஆகவே, அரசு மீண்டும் பரிசீலனை செய்து வாரியத்தை ஏற்படுத்துமா என்று நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி எஸ். ஜெனிபர் சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் மீனவர்களின் நலனைக் காப்பதற்காக ஏற்கெனவே மீன்வளத் துறையும், தமிழ்நாடு மாநில மீனவ முதன்மைக் கூட்டுறவு இணையமும் செயல்பட்டு வருகின்றன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு:-ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரி பார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்]

(2) விதி 110-ன் கீழ் அமைச்சரின் அறிக்கை

கொளத்தூர் நீரேற்று நிலைய ஒப்பந்தப்புள்ளி மற்றும் சென்னைப் பெருநகர குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீர் அகற்று வாரியம் பொருட்கள் வாங்கியது பற்றி மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சரின் அறிக்கை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவை விதி 110-ன்கீழ் மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் ஓர் அறிக்கையை பேரவையில் சமர்ப்பிக்க அனுமதி கேட்டிருக்கிறார்கள். அவர்களுக்கு அனுமதி வழங்கப்படுகிறது. மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. கோ.சி. மணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 27-4-1998 அன்று ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை மானியக் கோரிக்கையின் மீதான விவாதத்தின்போது தியாகராய நகர் சட்டமன்றத் தொகுதி உறுப்பினர் டாக்டர் அ. செல்லக்குமார் அவர்கள் இம்மாமன்றத்தில் கொளத்தூர் நீரேற்று நிலைய ஒப்பந்தப் புள்ளியில் தவறு இருப்பதாகவும், சென்னைப் பெருநகர குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீர் அகற்று வாரியம் பொருட்களை வாங்கியதில் சில குறைபாடுகள் உள்ளதாகவும் தெரிவித்தார்கள். அதற்குத் தக்க விளக்கத்தை மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள் அப்போதே அவையில் தெரிவித்தார்கள். அதன் தொடர்ச்சியாக நான் இப்போது ஓர் அறிக்கையை இங்கே படிக்கிறேன்.

கொளத்தூர் நீரேற்று நிலையம் கட்டுவதற்காக உலக வங்கித் திட்டத்தின்கீழ் சென்னைக் குடிநீர் வாரியம் 1997-ம் ஆண்டு ஜூலை மாதத்தில் ஒப்பந்தப்புள்ளிகள் கோரியது. ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்படும்போது ஒப்பந்தப்புள்ளிகள் அளிக்கும் நிறுவனங்கள் 6 மில்லியன் லிட்டர் கொள்ளளவு உள்ள கீழ்நிலைத் தொட்டிக்கான ஒரு பணியை ஒரே ஒப்பந்தத்தில் நிறைவேற்றி முடிக்கப்பட்டிருக்க வேண்டுமென்று குறிப்பிடப்பட்டிருந்தது. இந்த நிபந்தனை உலக வங்கியின் அறிவுரையின்பேரில் சேர்க்கப்பட்டது. ஒப்பந்தப்புள்ளிகள் அளித்த நிறுவனங்களில் திருவாளர்கள் கிர்லோஸ்கர் மிகவும் குறைந்த விலைப்புள்ளியையும் அதற்கு அடுத்ததாக சதர்ன் ஸ்ட்ரக்சுரல்ஸ்

நிறுவனமும் (மாநில அரசின் பொதுத் துறை நிறுவனம்), மூன்றாவதாக ஐ.வி.ஆர். கன்ஸ்ட்ரக்ஷன்ஸ் என்ற நிறுவனமும் இருந்தன. இவை பரிசீலிக்கப்படும்போது திருவாளர்கள் கிர்லோஸ்கர் மற்றும் சதர்ன் ஸ்ட்ரக்சுரல்ஸ் ஆகிய இரு நிறுவனங்களுமே கீழ்நிலை தொட்டி கட்டியதற்கான நிபந்தனையைப் பூர்த்தி செய்யவில்லை என்று தெரிய வந்ததால் மூன்றாவதாக வந்த திருவாளர்கள் ஐ.வி.ஆர். கன்ஸ்ட்ரஷசன்ஸ், நிபந்தனையைப் பூர்த்தி செய்ததால் அவர்களுக்குப் பணிக்கான உத்தரவு அளிக்க முடிவு செய்து இதற்கான உலக வங்கியின் ஒப்புதலும் பெறப்பட்டது. ஆனாலும் பணிக்கான உத்தரவு திருவாளர்கள் கிர்லோஸ்கர் அவர்களால் கொடுக்கப்பட்ட குறைந்த விலையைவிடச் சற்றுக் குறைந்த விலையில்தான் கொடுக்கப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது. அதாவது, கிர்லோஸ்கர் நிறுவனம் ரூ.10,36,46,306 என்ற விலைக்கு ஒப்பந்தப்புள்ளிகள் அளித்திருக்க, பணிக்கான உத்தரவு ஐ.வி.ஆர். நிறுவனத்திற்கு அளிக்கப்படும்போது ரூ.10,36,29,739 .90என்ற விலையில் சுமார் ரூ.17,000 அளவில் விலை குறைவாகத்தான் வழங்கப்பட்டுள்ளது.

மேலும் சொல்லப்போனால், கொளத்தூர் பணியைப் பொறுத்தவரையில் மறு ஒப்பந்தப்புள்ளி கோரலாம் எனத்தான் வாரியம் உலக வங்கியிடம் கேட்டது. ஆனால் உலக வங்கி மறு ஒப்பந்தப் புள்ளி கோரத் தேவையில்லை எனவும் ஐ.வி.ஆர். நிறுவனத்திற்குதான் பணி ஒப்படைக்கப்பட வேண்டுமென்றும் அறிவுறுத்தியது.

தற்போது கண்ணப்பர் திடலில் நடைபெற்றுவரும் இதேபோன்ற நீரேற்று நிலையம் கட்டும் பணி சதர்ன் ஸ்ட்ரக்சுரல்ஸ் நிறுவனத்தால் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இந்தத் திட்டத்திற்கான நிதி ஹட்கோ நிறுவனத்திடமிருந்து பெறப்பட்டுள்ளது.

இதற்கான ஒப்பந்தப்புள்ளிகள் கோரும்போது ரூ.1.00 கோடி மதிப்புள்ள கீழ்நிலைத் தொட்டி கட்டிய அனுபவம் ஒப்பந்தப்புள்ளி அளிக்கும் நிறுவனம் பெற்றிருக்க வேண்டுமென மட்டும் குறிப்பிடப்பட்டிருந்தது. கண்ணப்பர் திடல் ஒப்பந்தப்புள்ளியில் குறிப்பிட்டிருந்த நிபந்தனைக்கும், கொளத்தூர் ஒப்பந்தப்புள்ளியில் குறிப்பிட்டிருந்த நிபந்தனைக்கும் வேறுபாடு உள்ளது. கண்ணப்பர் திடல் ஒப்பந்தத்தில் கீழ்நிலைத் தொட்டியின் கொள்ளளவு எவ்வளவு இருக்க வேண்டுமென்றோ அல்லது கீழ்நிலைத் தொட்டி ஒரே ஒப்பந்தத்தில் நிறைவேற்றி முடிக்கப்பட்டிருக்க வேண்டுமென்றோ

1998 ஏப்ரல் 29] [திரு. கோ.சி. மணி]

கொளத்தூர் ஒப்பந்தத்தில் குறிப்பிட்டுள்ளதுபோல், குறிப்பிடப் படவில்லை. திருவாளர்கள் சதர்ன் ஸ்ட்ரக்சுரல்ஸ் நிறுவனம், கண்ணப்பர் திடல் ஒப்பந்தத்தில் குறிப்பிட்ட நிபந்தனையைப் பூர்த்தி செய்ததாலும், அவர்கள் அளித்திருந்த ஒப்பந்தப்புள்ளி மிகவும் குறைந்ததாக இருந்ததாலும் அவர்களுக்குப் பணிக்கான ஆணை வழங்கப்பட்டது.

முற்பகல் 10-35

கழிவு நீர்க் குழாய்களில் ஏற்படும் அடைப்புகளை நீக்க ஜெட்ராடிங் இயந்திரங்கள் சென்னைக் குடிநீர் வாரியத்தால் வாங்கப்பட்டுள்ளன. இதற்கான திறந்தமுறை ஒப்பந்தப்புள்ளிகள், மூன்று இயந்திரங்கள் வாங்க 1996-97-ல் கோரப்பட்டன. ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்படும்போது Preferably வோமோ (ஜெர்மனி) பம்பு இயந்திரத்தில் பொருத்தியிருக்கப்பட வேண்டுமென்று குறிப்பிடப்பட்டிருந்தது. குறைந்த விலை அளித்த நிறுவனமான ஐபிடபிள்யூடி என்ற நிறுவனம் வோமோ பம்புடன் இயந்திரத்தை அளிப்பதாக விலைப்புள்ளி கொடுத்திருந்தது. குறைந்த விலைப்புள்ளிகள் ஏற்கப்பட்டு மூன்று வோமோ பம்புகளுடனான இயந்திரங்களுக்கு ஆணைகள் வழங்கப்பட்டன. ஆணை வழங்கப்பட்ட பின் அந்த நிறுவனம் வோமோ பம்புகளுக்குப் பதிலாக மேயர் (அமெரிக்கன்) பம்புடன் உள்ள இயந்திரங்களை அளிக்க அனுமதி கேட்டு "Preferably வோமோ என நிபந்தனை இருந்ததால் இந்த அனுமதி அளிக்கப்பட்டது. மூன்று இயந்திரங்களும் 1997-98-ல் தான் வாரியத்தால் பெறப்பட்டன. இவை இயக்கப்பட்டபோது, பம்புகள் சரிவர வேலை செய்தன என்ற போதிலும் குழாய்கள் (Hose) இரண்டாயிரம் பிஎஸ்ஐ. அழுத்தத்துடன் இயங்கவில்லை எனத் தெரிய வந்ததால், நிறுவனத்திற்குக் கொடுக்க வேண்டிய ரூ.47,29,000-ல் ரூ.6,00,000 நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது. இந்நிறுவனம் குழாய்கள் மாற்றும் பணியில் தற்போது ஈடுபட்டுள்ளது. நிறுவனத்திற்கு அளிக்கப்பட்ட பகுதித் தொகையும் வல்லுநர்கள் குழு இந்த இயந்திரங்களின் செயல்பாட்டை பார்வையிட்டு பரிந்துரைத்ததின் அடிப்படையில்தான் கொடுக்கப்பட்டது என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

இரண்டாவது முறையாக வாரியத்தால் 1997-98-ல் இது போன்ற மேலும் 10 இயந்திரங்கள் வாங்க ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டன. அத்தருணத்தில் மேலே குறிப்பிட்ட 3 இயந்திரங்கள் செயல்திறன் ஆய்வு செய்யப்பட்டிருக்கவில்லை. இரண்டாவது முறையும் அதே

[திரு. கோ.சி. மணி] [1998 ஏப்ரல் 29

நிறுவனமான ஐ.பி.டபிள்யூ.டி. என்ற நிறுவனமே குறைந்த விலைப்புள்ளிகள் கொடுத்ததால் அவர்களுக்கே இவற்றிற்கான உத்தரவு அளிக்கப்பட்டது. இந்நிறுவனம் அளித்த ஒப்பந்தப்புள்ளியின்படி 10 இயந்திரங்களுக்கான விலை ரூ.2,65,94,737 என்று இருக்க இரண்டாவதாக வந்த நிறுவனம் அளித்த விலைப்புள்ளி ரூ.2,67,04,605 என இருந்தது. உத்தரவு அளிக்கப்படும்போது, தேவையான அளவு நிபந்தனைகளும் முன் எச்சரிக்கையாக சேர்க்கப்பட்டுள்ளன என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

3. தகவல் கோரல்

தமிழக மின் தொழிலாளர்கள் கடப்பா மாவட்டத்தில் மின்சார வேலைகள் செய்யச் சென்றிருப்பதாக 'இந்து' பத்திரிகையில் வந்துள்ள செய்தி

***திரு. நா. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆந்திர மாநிலத்தில் மின்சாரத் தொழிலாளர்கள் பல்வேறு கோரிக்கைகளுக்காக போராட்டத்திலே ஈடுபட்டு இருக்கின்றார்கள். இந்த நிலையில் தமிழ்நாட்டிலிருந்து, கடப்பா மாவட்டத்தில் மின்சார வேலைகள் செய்வதற்காக 1500 மின் தொழிலாளர்கள் சென்றிருப்பதாக 28-4-1998 அன்று இந்து பத்திரிகையிலே செய்தி வந்திருக்கின்றது. தொழிலாளர் நலனில் அக்கறை காட்டி வருகின்ற இந்த அரசு தொழிலாளர்கள் போராட்டத்தில் இருக்கின்றபோது அங்கு தொழிலாளர்களை அனுப்பியிருப்பதாக வந்திருக்கின்ற செய்தியானது தொழிலாளர் சமூகத்திலே அதிர்ச்சியை ஏற்படுத்தியிருக்கின்றது. குறிப்பாக மின்சார வாரியத் தொழிலாளர்களிடத்திலே குழப்பத்தை ஏற்படுத்தி இருக்கிறது. இது குறித்து அமைச்சர் அவர்கள் விளக்குவாரா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நேற்றையதினம் இந்து பத்திரிகையில் வந்த செய்தியை மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும் படித்தார்கள். நானும் பார்த்தேன். தமிழகத்திலிருந்து எந்த ஒரு தொழிலாளியும் ஆந்திர மாநிலத்தில் இன்றையதினம் நடைபெற்று வருகின்ற வேலை நிறுத்தத்திற்குப் பதிலாக அனுப்பப்படவும் இல்லை, ஆந்திர மாநில அரசு தமிழக அரசிடம் அப்படிப்பட்ட ஒரு கோரிக்கையையும் வைக்கவில்லை. தமிழ்நாடு மின்சார வாரியத்திலிருந்தும் அப்படிப்பட்ட

1998 ஏப்ரல் 29] [திரு. ஆற்காடு நா. வீராசாமி]

கோரிக்கை வரவில்லை என்று தெரிந்த காரணத்தினால் அந்தச் செய்தி தவறானதாகும். எனவே, இது பற்றி இந்த அரசு எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்கவில்லை.

4. கவன ஈர்ப்பு

(அ) யானைக்கால் நோய்த் தடுப்பு மாத்திரை சாப்பிட்டவர்கள் குடியாத்தத்தில் இறந்துள்ளது

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவை விதி 55-ன் கீழ் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வு குறித்து, மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. வேலாயுதன் அவர்கள், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருவார்கள். திரு. சி. வேலாயுதன் அவர்கள் அவையிலே இல்லை. மருத்துவமனையிலே இருக்கிறார்கள். இதே தீர்மானத்தை மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. ஞானசேகரன் அவர்களும் கொடுத்திருக்கிறார்கள். ஆகவே, தீர்மானத்தை மட்டும் படிக்கும்படி அவருக்கு அனுமதி அளிக்கின்றேன்.

திரு. சி. ஞானசேகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"குடியாத்தத்தில் யானைக்கால் நோய்த் தடுப்பு மாத்திரை சாப்பிட்டவர்கள் இறந்தது குறித்து" அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கை அவை முன் வைக்கப்பட்டுள்ளது.

விவர அறிக்கை

யானைக்கால் நோயைக் கட்டுப்படுத்த ஒட்டுமொத்த ஒரு நாள் டி.இ.சி. மாத்திரைகள் வழங்கும் திட்டத்தின்கீழ் வேலூர் மாவட்டத்தில் கர்ப்பிணிப் பெண்கள், இளங்குழந்தைகள் நீங்கலாக 33.33 லட்சம்

[திரு. ஆற்காடு நா. வீராசாமி] [1998 ஏப்ரல் 29

மக்களுக்கு டி.இ.சி. மாத்திரைகள் இந்த ஆண்டு மார்ச் 14 முதல் நான்கு நாட்களுக்கு வழங்கப்பட்டுள்ளன. குடியாத்தம் நகராட்சிப் பகுதியில் 93,793 நபர்களுக்கு டி.இ.சி. மாத்திரைகள் வழங்கப்பட்டுள்ளன. குடியாத்தம் பகுதியில் யானைக்கால் நோய்த் தடுப்பு மாத்திரைகள் (டி.இ.சி.) 14-3-1998 அன்று மக்களுக்கு வழங்கப்பட்டது.

குடியாத்தம் வட்டம், ராமாபுரம் கிராமத்தைச் சேர்ந்த செல்வன் லோகேஷ் என்ற 13 வயது சிறுவனுக்கு 18-3-98 அன்று டி.இ.சி. மாத்திரைகள் வழங்கப்பட்டுள்ளன. அந்த மாத்திரைகளை அவன் 19-3-1998 அன்று உட்கொண்டுள்ளான். அதன் பிறகு எந்தவித பக்க விளைவுகளும் ஏற்படவில்லை. 21-3-1998 அன்று இந்தச் சிறுவனுக்கு வாந்தி பேதி ஏற்பட்டு இறந்துவிட்டான். வரதபாளையத்தைச் சேர்ந்த 38 வயதுள்ள திருமதி சன்மாபீ என்பவருக்கு 14-3-1998 அன்று டி.இ.சி. மாத்திரைகள் வழங்கப்பட்டுள்ளன. அந்த மாத்திரைகள் உட்கொண்ட பின்பு எந்தவித பக்க விளைவுகளும் ஏற்படவில்லை. 21-3-1998 அன்று இவர் வாந்தி பேதி ஏற்பட்டு இறந்துள்ளார். இந்தப் பகுதிகளிலிருந்து வாந்தி பேதியின் காரணமாக 60 நபர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர்.

செல்வன் லோகேஷ் மற்றும் திருமதி சன்மாபீ ஆகிய இருவரின் இறப்பிற்குக் காரணம் வாந்தி பேதியாகும். தவிர டி.இ.சி. மாத்திரைகள் சாப்பிட்டதால் இறப்பு நேரிடவில்லை.

தமிழ்நாட்டில் இந்த ஆண்டு யானைக்கால் நோய் பரவியுள்ள மாவட்டங்களாகிய திருவள்ளூர், காஞ்சிபுரம், வேலூர், திருவண்ணாமலை, விழுப்புரம், கடலூர், நாகப்பட்டினம், திருவாரூர், தஞ்சாவூர், புதுக்கோட்டை, திருச்சி, கன்னியாகுமரி ஆகிய மாவட்டங்களில் 256.16 லட்சம் மக்களுக்கு டி.இ.சி. மாத்திரைகள் வழங்கப்பட்டுள்ளன. இந்த மாத்திரைகள் உட்கொண்டதால் மக்களுக்குப் பாதிப்பும் ஏற்படவில்லை என்ற விவரமும் தெரிவிக்கப்படுகிறது.

திரு. சி. ஞானசேகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குடியாத்தம் தாலுகாவிலே, ராமாபுரம் கிராமத்தில் லோகேஷ் என்கின்ற 13 வயது சிறுவனும் அதேபோல வரதபாளையத்தைச் சேர்ந்த திருமதி சன்மாபீ என்ற 38 வயது பெண்மணியும் ஹெட்ரசான் என்ற

1998 ஏப்ரல் 29] [திரு. சி. ஞானசேகரன்]

யானைக்கால் மாத்திரையைச் சாப்பிட்டு 21-3-1998-ந் தேதி இறந்துவிட்டார்கள்.

முற்பகல் 10-40

இது குறித்து இங்கே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் விவர அறிக்கையிலே சொல்லுகிறபோது, அவர்கள் யானைக்கால் நோய்க்கு 'ஹெட்ரசான்' மாத்திரை சாப்பிட்டதால் இறக்கவில்லை என்றும், வாந்தி பேதி வந்துதான் இறந்திருக்கிறார்கள் என்றும் குறிப்பிட்டிருக்கிறார்கள். வாந்தி பேதியால்தான் அந்த இருவர் மட்டும் இந்தப் பகுதியில் இறக்கவில்லை. இதே அறிக்கையிலேகூட, இந்தப் பகுதியிலே வாந்தி பேதியின் காரணமாக 60 நபர்கள் பாதிக்கப்பட்டுள்ளார்கள் என்றும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டிருக்கிறார்கள்.

இதுபோன்று, அந்த 'ஹெட்ரசான்' மாத்திரையை வேலூர், திருவண்ணாமலை, விழுப்புரம், கடலூர், நாகப்பட்டினம், திருவாரூர், தஞ்சாவூர், புதுக்கோட்டை, திருச்சி, கன்னியாகுமரி ஆகிய மாவட்டங்களில் உள்ளவர்களும் உட்கொண்டிருக்கிறார்கள். அவர்கள் நன்றாகவும் இருக்கிறார்கள். இதற்கான விழாவை நடத்தியபோது நானும் அந்த 'ஹெட்ரசான்' மாத்திரையைச் சாப்பிட்டேன். எனக்கு ஒன்றும் ஆகவில்லை. வாந்தி பேதி வரவில்லை. ஆனால், என்னுடைய மாவட்டத்திலே பல பேர்களுக்கு வாந்தி பேதி ஏற்பட்டிருக்கிறது. காரணம், நிலத்தடி நீர் 200 அடி ஆழத்திற்குக் கெட்டுவிட்ட காரணத்தினால் . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: உங்களுக்கு யானைக்கால் இருக்கிறதா? (சிரிப்பு)

திரு. சி. ஞானசேகரன்: பேரவைத் தலைவர் அவர்களே, எனக்கு யானைக்கால் இல்லை. யானைக்கால் நோய் வரக்கூடாது என்பதற்காக அரசு ஏற்கெனவே என்னுடைய மாவட்டத்தில் 30 இலட்சம் பேர்களுக்கு அந்த மாத்திரையைக் கொடுக்க ஏற்பாடு செய்திருக்கிறது. யானைக்கால் யாருக்கும் வரக்கூடாது என்பதற்காக—சிறு குழந்தைகள், கர்ப்பிணித் தாய்மார்கள் தவிர, மற்றவர்கள் அதை உட்கொள்ள வேண்டும், அப்போதுதான் யானைக்கால் நோய் வராமல், தடுத்துக் காப்பாற்ற முடியும் என்பதற்காக—அரசு நடவடிக்கை எடுத்து, ஏற்கெனவே 2½

கோடி மக்களுக்கு வழங்கியிருக்கிறார்கள். அந்த முறையில்தான் நானும் அதைச் சாப்பிட்டேன் எனக்கு ஒன்றும் பிரச்சினை வரவில்லை. ஆனால், என்னுடைய மாவட்டத்தில் மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்குத் தெரியும், அங்கே நிலத்தடி நீர் ஏற்கெனவே மாசுபட்டு, 200 அடி ஆழத்திற்குக் கெட்டுப் போய்விட்டிருக்கிற காரணத்தினாலே, பாதுகாக்கப்படாத குடி நீரை அருந்தியதால் அவர்களுக்கு வாந்தி பேதி வந்ததா? ஏனென்றால், 60 பேர்கள் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். வாந்தி பேதியைத் தடுப்பதற்கும் இந்தத் துறைதான் நடவடிக்கை எடுக்க வேண்டும். இதே அமைச்சரின் கட்டுப்பாட்டில்தான் அதுவும் வருகிறது. ஆகவே, அப்படியிருக்கிறபோது, எந்தக் காரணத்தினால் அங்கே வாந்தி பேதி வந்தது? எப்படி அந்த இருவர் அங்கே இறந்தார்கள் என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முழுமையாக ஆய்வு செய்தார்களா என்பதைத் தங்கள் மூலமாக அறிந்து கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, டிஇசி மாத்திரையைச் சாப்பிடுகின்ற காரணத்தால் இதுவரையிலே யாரும் தமிழகத்தில் இறக்கவில்லை. ஏறக்குறைய, 2,56,16,000 பேர்கள் இந்த மாத்திரையைக் கடந்த ஆண்டு சாப்பிட்டிருக்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினரும் சாப்பிட்டதாகச் சொன்னார்கள். இந்த மாத்திரையைச் சாப்பிடுவதால் யாரும் உயிர் இழப்பது இல்லை. ஆனால், வட ஆற்காடு மாவட்டம், குடியாத்தம் பகுதியில் குடிதண்ணீர் மூலமாகத்தான் காலரா நோய் பரவி, அதன் மூலம் 60 நபர்கள் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள் என்றும், இரண்டு நபர்கள் இறந்திருக்கிறார்கள் என்றும் அரசுக்குத் தகவல் வந்திருக்கிறது. வட ஆற்காடு மாவட்டத்தில், காட்பாடி பகுதியிலும், குடியாத்தம் பகுதியிலும், இன்னும் வேறு சில பகுதிகளிலும், கடந்த ஆண்டு குடிதண்ணீரால் பாதிக்கப்பட்டு, ஏறக்குறைய 300 பேர்கள் மருத்துவமனையிலே சேர்க்கப்பட்டு, அரசு எடுத்த தீவிர நடவடிக்கையின் காரணமாக அவர்கள் எல்லோரும் காப்பாற்றப்பட்டு இருக்கிறார்கள். ஆனால், இந்த இரண்டு பேர்களையும் காப்பாற்ற முடியாத நிலைமையில் அவர்கள் இறந்து போய்விட்டார்கள். அதற்குக் காரணம், அவர்கள் குறிப்பிட்ட நேரத்திலே மருத்துவமனையிலே சேர்க்கப்படவில்லை. அப்படிச் சேர்க்கப்பட்டிருப்பார்களேயானால், அவர்களையும் காப்பாற்றி இருக்க முடியும். எனவே, அவர்களைக் காப்பாற்ற முடியாததற்கு, அவர்கள் உரிய நேரத்தில் மருத்துவமனையில் சேர்க்கப்படவில்லை என்பதைத் தவிர, குடி தண்ணீரினால்தான் அந்த இருவரும்

1998 ஏப்ரல் 29] [திரு. ஆற்காடு நா. வீராசாமி]

இறந்திருக்கிறார்கள் என்றும், மாத்திரை சாப்பிட்டதால் இறக்கவில்லை என்றும் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. சி. ஞானசேகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்கள் மாவட்டத்தில் குடி தண்ணீரால் . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. சி. ஞானசேகரன், நீங்களாகவே உரிமை எடுத்துக்கொண்டு பேசுகிறீர்கள். திரும்பத் திரும்ப கேட்டதையே கேட்கிறீர்கள். உங்களுடைய மூல வினாவிற்கும் இதற்கும் தொடர்பே இல்லை. 'ஹெட்ரசான்' மாத்திரை சாப்பிட்டதால் இருவர் இறந்து போனார்கள் என்பது, குறித்து விதி 55-ன்கீழ் கவன ஈர்ப்பு அறிவிப்புக் கொடுத்து அதற்குரிய விவரத்தை அமைச்சரிடமிருந்து பெற்று விட்டீர்கள். இப்போது, நீங்கள் அந்தப் பிரச்சினையைவிட்டு, குடி தண்ணீர் என்ற விவரத்திற்குப் போகிறீர்கள். பிறகு இன்னொரு கேள்வியும் கேட்பீர்கள். சரி, கேளுங்கள்.

திரு. சி. ஞானசேகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்கூட நேற்று வதந்தி பற்றிச் சொன்னார்கள். தமிழகத்திலே, 'ஹெட்ரசான்' மாத்திரை சாப்பிட்டதால்தான் இப்படி இருவர் இறக்க நேரிட்டது என்ற வதந்தி பரவுகிறது. அதைத் தடுப்பதற்காகத்தான், இந்த அவையின் மூலமாக ஒரு விளக்கம் நாட்டு மக்களுக்குக் கிடைத்தால் அவர்கள் இந்த 'ஹெட்ரசான்' மாத்திரையைத் தைரியமாக உட்கொள்வார்கள்.

அங்கே இருவர் இறந்ததற்குக் காரணம் வாந்தி பேதிதான் என்று அறிக்கையில் சொல்லியிருக்கிறார்கள். உள்ளாட்சித் துறைதான் பாதுகாக்கப்பட்ட குடி நீரை வழங்கும் பொறுப்பில் இருக்கிறது. அப்படியிருக்கும்போது, பாதுகாக்கப்பட்ட குடி தண்ணீர்தான் வழங்கப்படுகிறதா என்பதை மக்கள் நல்வாழ்வுத் துறையும், உள்ளாட்சித் துறையோடு இணைந்து செயல்பட்டு—என்னுடைய மாவட்டத்தில் பாதுகாக்கப்பட்ட குடி தண்ணீர் ஆம்பூர், வாணியம்பாடி, வேலூர் போன்ற பகுதிகளில் இல்லாத காரணத்தால்தான், இதுபோன்ற பிரச்சினைகள் எல்லாம் வருகின்றன என்பதால்—மாண்புமிகு அமைச்சர் அவர்கள், உள்ளாட்சித் துறையோடு இணைந்து செயல்பட்டு, பாதுகாக்கப்பட்ட குடி நீரை, நல்ல தண்ணீரைக் கொடுப்பதற்கு ஆவன செய்வார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

[1998 ஏப்ரல் 29

முற்பகல் 10-45

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. கோ.சி. மணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த அரசு அமைந்ததற்குப் பிறகு, குடிநீர் வடிகால் வாரியம் எடுத்த முதல் முடிவே, பாதுகாக்கப்பட்ட தண்ணீர் வழங்குவது என்பதுதான். அந்தத் தண்ணீர் பாதுகாப்பாகவும், பாதுகாக்கப்பட்டதாகவும் இருக்க வேண்டும் என்பதுதான். நாங்கள் எங்கே தண்ணீர் கொடுப்பதற்கு முயற்சி எடுக்கிறோமோ, அந்தத் தண்ணீரைப் பரிசோதனை செய்து சரியான நீர்தான் என்ற முடிவுக்கு வந்த பிறகுதான், அந்தத் திட்டத்தை அமல்படுத்துகிறோம் என்பதை உறுப்பினர் அவர்களுக்குத் தங்கள் மூலமாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

(ஆ) கோனுலாம்பள்ளம், ஆரம்ப சுகாதார நிலையக் கட்டடத்தின் நிலை

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அடுத்த கவன ஈர்ப்பு. திரு. செ. இராமலிங்கம் அவர்கள் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருவார். திரு. செ. இராமலிங்கம்.

திரு. செ. இராமலிங்கம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தஞ்சை மாவட்டம், கோனுலாம்பள்ளம் ஆரம்ப சுகாதார நிலையம் இடிந்த நிலையில் உள்ளது குறித்த" அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கை ஒன்று அவைமுன் வைக்கப்பட்டுள்ளது.

1998 ஏப்ரல் 29] [திரு. ஆற்காடு நா. வீராசாமி]

அறிக்கை

தஞ்சாவூர் மாவட்டம், திருவிடைமருதூர் வட்டம், திருப்பனந்தாழ் ஒன்றியம், கோனுலாம்பள்ளம் ஆரம்ப சுகாதார நிலையம், திருப்பனந்தாழ் ஊராட்சி ஒன்றியத்தில், அரசுக் கட்டடத்தில் செயல்படுகிறது.

கோனுலாம்பள்ளம் ஆரம்ப சுகாதார நிலையத்தில் பொதுப்பிரிவு மருந்தகக் கட்டடமும் குடும்ப நலப் பிரிவு மருந்தகக் கட்டடமும் உள்ளன. இதில் பொதுப் பிரிவு மருந்தகக் கட்டடம் பழுதடைந்து உள்ளதால், ஆரம்ப சுகாதார நிலையப் பணிகள் குடும்ப நலப் பிரிவு கட்டடத்தில் செயல்பட்டுவருகிறது. இக்கட்டடம் அபாயகரமாக பழுதடைந்த நிலையில் இல்லை.

தஞ்சாவூர் செயற்பொறியாளர், கட்டடப் பராமரிப்புக் கோட்டம், பொதுப் பணித் துறை அவர்களிடம் கோனுலாம்பள்ளம் ஆரம்ப சுகாதார நிலையத்தில் பழுதுபார்ப்புப் பணிகள் மேற்கொள்ள தஞ்சாவூர் துணை இயக்குநர் அவர்களால் கோரப்பட்டுள்ளது. ஆரம்ப சுகாதார நிலையக் கட்டடத்தில் முன்னுரிமை தந்து பழுது நீக்கப்பணிகள் மேற்கொள்ளப்பட வேண்டியுள்ளன.

ஆரம்ப சுகாதார நிலையக் கட்டட பழுதுபார்ப்புப் பணிகள், மேற்கொள்ள 1997-98 ஆம் ஆண்டில் ரூ.2.5 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டது. இதில் தஞ்சாவூர் சுகாதார மாவட்டத்திலுள்ள ஆரம்ப சுகாதார நிலையப் பழுதுபார்ப்புகளுக்கு ரூ.5 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டது. நிதி ஒதுக்கீடு போதாமையால் பணிகள் மேற்கொள்ளப்பட இயலவில்லை.

இந்த ஆண்டில் பழுதுநீக்கும் பணிகள் முன்னுரிமை அடிப்படையில் மேற்கொள்ள பொதுப் பணித் துறையினர் மூலம் மதிப்பீடு பெற்று மேல் நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

திரு. செ. இராமலிங்கம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த ஆரம்ப சுகாதார நிலையம் 24 மணி நேரமும் இயங்க, அண்மையில் நமது அரசு ஆணை பிறப்பித்துள்ளது. இந்த ஆரம்ப சுகாதார நிலையம் அமைந்துள்ள கோனுலாம்பள்ளம் கிராமம் அருகில் உள்ள நகர்ப் பகுதிகளாகிய கும்பகோணம், மயிலாடுதுறை ஆகிய பகுதிகளிலிருந்து 35 கிலோ மீட்டர் தொலைவில் உள்ளது. பெண்

மருத்துவர்கள், செவிலியர்கள் அங்கே தங்கி பணிபுரிய போதியக் கட்டட வசதி இல்லாத ஒரு நிலை தற்போது இருக்கிறது. எனவே பழுதடைந்துள்ள ஆரம்பச் சுகாதார நிலையத்தைப் பழுதுபார்ப்பதோடு, மருத்துவர்கள், செவிலியர்கள் தங்குகின்ற வீடுகளையும் பழுது பார்க்க அரசு ஆவன செய்யுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த ஆண்டு ஆரம்பச் சுகாதார நிலையக் கட்டடங்கள் பழுதுபார்ப்பதற்காக 2.5 கோடி ரூபாய் நிதி ஒதுக்கம் செய்யப்பட்டது. மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய மாவட்டத்திற்கு 5 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்தபோது, இந்தப் பணத்தில் அந்த மாவட்டம் முழுவதற்கும் பழுதுபார்ப்புப் பணிகளை மேற்கொள்ள இயலாது என்று சொன்ன காரணத்தால், கடந்த ஆண்டு இந்தப் பணியை மேற்கொள்ள முடியவில்லை.

இருந்தாலும், மாண்புமிகு உறுப்பினர் அவர்களும் மற்றும் பக்கத்தில் இருக்கிற மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களும் செய்யவேண்டும் என்று சொன்ன காரணத்தால் இந்த ஆண்டு இந்தப் பணி மேற்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. செ. இராமலிங்கம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பழுதுபார்க்கும் பணிக்குரிய மதிப்பீடுகள் அல்லது மதிப்பீட்டுத் தொகை குறித்து தற்போது அமைச்சர் அவர்களால் அறிவிக்க இயலுமா என்றும், இந்த ஆண்டே இந்தப் பணிகளை முடித்துத்தர அரசு ஆணையிடுமா என்றும் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் இந்த அவையில் உறுதி அளித்திருக்கிறேன். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பொதுப்பணித் துறை அலுவலகங்களோடு தொடர்பு வைத்துக்கொண்டு உடனடியாக எஸ்டிமேட் தயார் செய்து மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களுடைய உதவியோடு அந்த புரபோசலை அரசாங்கத்திற்கு அனுப்புவார்களேயானால், இந்த மாதத்திலேயே அதற்கான ஒப்புதலும் தந்து, இந்த வருடத்திற்குள் அரசு நடவடிக்கை எடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

5. மானியக் கோரிக்கைகள், 1998-99, விவாதமும் வாக்கெடுப்பும்—தொடர்ச்சி

கோரிக்கை எண் 30—பழங்குடியினர், ஆதிதிராவிடர் முதலியோர் நலன்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 1998-99 ஆம் ஆண்டுக்கான மானியக் கோரிக்கைகள் மீது விவாதமும் வாக்கெடுப்பும். கோரிக்கை எண் 30—பழங்குடியினர், ஆதிதிராவிடர் முதலியோர் நலன். மாண்புமிகு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. சமயநல்லூர் எஸ். செல்வராசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"பழங்குடியினர், ஆதிதிராவிடர் முதலியோர் நலன் பற்றிய 30-ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ரூ.304,54,77,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்"
எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானங்கள். வெட்டுத் தீர்மானம் எண் 2665, திரு. சி. ஞானசேகரன்.

திரு. சி. ஞானசேகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, " வேலூர் மாவட்டத்தில் குறும்பன் இன மக்களுக்கு எளிதில் சாதிச் சான்று வழங்க வகை செய்யவேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பழங்குடியினர், ஆதிதிராவிடர் முதலியோர் நலன் பற்றிய 30-ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.304,54,77,000-ல் ரூ.100 குறைக்க வேண்டும்".

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 2915, திரு. ஜி.கே. மணி.

திரு. ஜி.கே. மணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பழங்குடியினர், ஆதிதிராவிடர் முதலியோர் நலன் பற்றிய 30 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.304,54,77,000-ல் ரூ.100 குறைக்க வேண்டும்".

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 235, திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்.

திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"ஆண்டிமடம் தொகுதி, செந்துறையில் ஆதிதிராவிடர் நலத் துறை மூலம் மாணவியர் விடுதி சொந்தக் கட்டடத்தில் அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பழங்குடியினர், ஆதிதிராவிடர் முதலியோர் நலன் பற்றிய 30ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.304,54,77,000-ல் ரூ.100 குறைக்க வேண்டும்".

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 1695, திரு. ஜி. பழனிசாமி.

திரு. ஜி. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"கொள்கை பற்றி" விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பழங்குடியினர், ஆதிதிராவிடர் முதலியோர் நலன் பற்றிய 30ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.304,54,77,000-ல் ரூ.100 குறைக்க வேண்டும்".

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 1032, திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன்.

திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"ஈரோடு மாவட்டம், தாளவாடி ஒன்றியம், சத்தியமங்கலம் ஒன்றியம் —கடம்பூர், தூக்கநாயக்கன்பாளையம் ஒன்றியம்—குன்றி, அந்தியூர் ஒன்றியம்—பர்கூர் ஆகிய மலைப் பகுதிகளில் வாழும் பழங்குடி மக்களுக்கு நடமாடும் நியாய விலைக் கடை மூலம் குடிமைப் பொருள்கள் வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பழங்குடியினர், ஆதிதிராவிடர் முதலியோர் நலன் பற்றிய 30ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.304,54,77,000-ல் ரூ.100 குறைக்க வேண்டும்".

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 2021, திரு. ப. கோவிந்தன்.

திரு. ப. கோவிந்தன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"கொள்கை பற்றி" விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பழங்குடியினர், ஆதிதிராவிடர் முதலியோர் நலன் பற்றிய 30ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.304,54,77,000-ல் ரூ.100 குறைக்க வேண்டும்".

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 1830, திரு. பி. வெங்கடசாமி.

Thiru B. VENKATASAMY: Hon. Speaker Sir, to discuss the need to open more hostels to the students belonging to Scheduled Castes and Scheduled Tribes in the State, I move—

``That the allocation of Rs.304,54,77,000/- under Demand No.30 - Welfare of the Scheduled Tribes and Scheduled Castes etc. be reduced by Rs.100".

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மானியக் கோரிக்கையும், வெட்டுத் தீர்மானங்களும் பேரவையின்முன் விவாதத்திற்கு வைக்கப்பட்டுள்ளன. மாண்புமிகு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் அவர்கள் தன்னுடைய முன்னுரையாக ஏதாவது கூற விரும்பினால் கூறலாம்.

முற்பகல் 10-50

மாண்புமிகு திரு. சமயநல்லூர் எஸ். செல்வராசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பழங்குடியினர், ஆதிதிராவிடர் முதலியோர் நலன் குறித்த கொள்கை விளக்கக் குறிப்புகள் தமிழிலும், ஆங்கிலத்திலும் அச்சடிக்கப்பட்டு உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்டுள்ளன. அவற்றில் தமிழில் உள்ள கொள்கை விளக்கக் குறிப்புகளை @ நான் இந்தப் பேரவையில் படித்ததாகக் கருதி, சட்டமன்றப் பதிவேட்டில் பதிந்துகொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொண்டு, மாண்புமிகு உறுப்பினர்கள் தங்கள் அரிய கருத்துக்களைத் தெரிவித்த பின்னர், என்னுடைய பதிலுரையில் அவற்றிற்கு விளக்கம் அளிக்கிறேன் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: விவாதம் தொடங்குகின்றது. திரு. ரா. ஈஸ்வரன்.

(மாண்புமிகு மாற்றுத் தலைவர் திரு. ரா. சேதுநாதன் தலைமை)

திரு. ரா. ஈஸ்வரன்: மாண்புமிகு பேரவையினுடைய மாற்றுத் தலைவர் அவர்களே, இன்று ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை மானியக் கோரிக்கை 30-ல் பேசுவதற்கு வாய்ப்பு அளித்தமைக்காக நன்றி கூறிக் கொள்கிறேன்.

தமிழ்நாட்டினுடைய மொத்த மக்கள் தொகையாகிய 5.59 கோடியில் ஆதிதிராவிடர்கள் 1.07 கோடியாகவும், பழங்குடியினர் 5.74 இலட்சமாகவும் இருக்கிறார்கள். இத்துறையில் ஆதிதிராவிடர்களுக்கு 1017 பள்ளிகளும், பழங்குடியினருக்கு 236 பள்ளிகளும் உள்ளன. இப்பள்ளிகளில் சுமார் 2.38 இலட்சம் மாணவர்கள் பயிலுகிறார்கள். ஆனால், இந்தப் பள்ளிகளில் பயிலக்கூடிய மாணவர்களுக்கு தங்குவதற்குத் தேவையான இடவசதிகள் சரியான முறையில் இல்லை; கழிப்பிடங்கள் சரியான முறையில் இல்லை; அவர்களுக்கு உணவு சரியான முறையில் பரிமாறப்படுவதில்லை. இப்பேர்ப்பட்ட நிலைமைகள் அங்கு இருக்கக்கூடிய விடுதிகளில் இருக்கின்றன. ஆனால், இந்தத் துறைக்கு நடப்பு ஆண்டில் 334 கோடி ரூபாயும், வரும் ஆண்டில் 443 கோடி ரூபாயும் ஒதுக்கப்பட்டு இருக்கிறது. 1049 விடுதிகள் இருக்கின்றன.

@141 முதல் 171 வரையிலான பக்கங்களில் இணைப்பாக அச்சிடப்பெற்றுள்ளது.

1998 ஏப்ரல் 29] [திரு. ரா. ஈஸ்வரன்]

இதில் பயிலக்கூடிய மாணவர்கள் 78,300 பேர் இருக்கிறார்கள். பெற்றோருடன் தங்கிப் படிக்கக்கூடிய மாணவர்களுக்கு 1-லிருந்து 5 ஆம் வகுப்பு வரை 25 ரூபாயும், 6-லிருந்து 8 ஆம் வகுப்பு வரை படிக்கக்கூடிய மாணவர்களுக்கு 40 ரூபாயும், 8-லிருந்து 10 ஆம் வகுப்பு வரை படிக்கக்கூடிய மாணவர்களுக்கு 50 ரூபாயும் வழங்கப்படுகிறது. இந்தத் தொகை இப்போது இருக்கக்கூடிய விலைவாசி உயர்வின் காரணத்தினால் போதுமானதாக இல்லை.

அதுமட்டுமல்லாமல், ஆதிதிராவிடர்களுக்கு மாவட்டத்தில் ஒரு அலுவலகம் இருக்கிறது. 2 தாலுகாக்களுக்கு ஒரு தாசில்தார் இருக்கிறார். அந்த தாசில்தாருக்கு வாகன வசதியே இல்லை. அங்கு கிராமப்புறங்களில் இருக்கக்கூடிய மக்கள் அதிகாரிகளைத் தேடிச் செல்ல வேண்டுமானால், தாசில்தார் அலுவலகம் எங்கே இருக்கிறது என்று அவர்களுக்குத் தெரியாத சூழ்நிலை இருக்கிறது. அவர்களுக்கு வாகன வசதி இல்லை; போன் வசதி இல்லை; இந்தமாதிரியான நிலைமைகள் இருக்கின்றன. இதை மாற்றி எங்கெல்லாம் தாலுகா அலுவலகங்கள் இருக்கின்றனவோ, அந்த இடங்களிலேயே அவர்களுக்கு ஒரு இடத்தைக் கொடுத்தால், அது சரியாக இருக்கும். அங்கு இருக்கக்கூடிய பொது மக்கள் தாலுகா அலுவலகத்திற்குப் போகக்கூடிய நேரத்தில், ஆதிதிராவிட நலத் துறையைச் சேர்ந்த தாசில்தாரையும் சந்திப்பதற்கு ஒரு வாய்ப்பாக இருக்கும்.

அதுமட்டுமல்லாமல், பதவி உயர்வுகளில் ஆதிதிராவிட மக்களுக்கு எல்லாத் துறைகளிலும் முறையோடு பதவி உயர்வு கொடுக்க வேண்டும். மொத்தம் 110 துறைகள் இருக்கின்றன. இப்பொழுது அந்தத் துறைகளில் 19 சதவீதம் பூர்த்தி அடைந்து இருக்காது என்று ஆய்வு செய்யப்பட்டு இருக்கிறது. இதுவரை 80 துறைகளில் ஆய்வு செய்யப்பட்டு இருக்கிறது; இன்னும் 30 துறைகள் ஆய்வு செய்யப்படக்கூடிய நிலையில் இருக்கிறது. இதில் சுமார் 662 இடங்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. இதில் 54 பேருக்கு வேலை வழங்கப்பட்டுள்ளது. ஆனால் மீதி 30 துறைகளில் விரைவாக ஆய்வு செய்து இந்த 662 பேர்களில் 54 பேர் தவிர அனைத்துத் துறைகளிலும் கூடியவிரைவில் அவர்களுக்குப் பதவிகள் வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். மாண்புமிகு முதல்வர் அவர்களின் ஆணையின் பேரில் எந்தெந்தத் துறைகளில் பூர்த்தியடையவில்லை என்பதைக் கண்டுபிடிக்கும் வகையில் ஈடுபட்டு 19 சதவீதம் பணிகள் காலியாக இருக்கிறது என்று

கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது. கூடிய விரைவில் அந்த இடங்களைப் பூர்த்தி செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

முற்பகல் 10-55

அது மட்டுமல்லாமல், தாட்கோ மூலமாக மத்திய, மாநில அரசுகள் வழங்குகின்ற பணம் அங்கே இருக்கக்கூடிய மாவட்ட மையங்களில் உள்ள தாட்கோ அதிகாரிகள் மூலம் அளிக்கப்பட்டாலும், வேலை வாய்ப்பு நிலையங்களிலிருந்து அரசுடைமையாக்கப்பட்ட வங்கிகள் மூலமாகத்தான் வழங்கப்படுகின்றது. இந்த நிதி வழங்குவதில் பிரச்சினைகள் ஏற்பட்டிருக்கின்றன. பல நாட்கள் அலையவிட்டு காலதாமதப்படுத்தி, இந்த தாட்கோ கடன் பெறவேண்டியிருக்கிறது. தாட்கோ நிறுவனத்திற்கு வெளியிலே பல்வேறு புரோக்கர்கள் இருக்கிறார்கள். அவர்கள் கிராமப் புறங்களில் இருந்து போகிற நபர்களிடம் 10 சதவீதம், 5 சதவீதம் என்று கமிஷன் பெற்றுக் கொள்வதால், முறையாக அந்த நிதியைப் பெறமுடியாமல் தடுக்கப்படுகிறார்கள். புரோக்கர்கள் நினைத்தால்தான் எதுவும் முடியும். சட்டமன்ற உறுப்பினர்களோ அல்லது செல்வாக்கு பெற்ற அரசியல்வாதிகளோ சொன்னால்கூட நடப்பதில்லை. இந்த நிலையை மாற்றுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். இதைத் தாட்கோ மூலமாகச் செய்வதைவிட, மாவட்டங்களில் உள்ள மாவட்ட நல அலுவலர் மூலமாக இந்தத் திட்டங்களைச் செய்ய ஒப்படைத்தால் அவர்கள் அதைத் துரிதமாகச் செய்வதற்கு வாய்ப்பாக இருக்கும்.

அது மட்டுமல்லாமல், டயர் வண்டி வாங்குவதற்கு ரூ.9750 அரசுடைமையாக்கப்பட்ட வங்கிகளிலிருந்து மானியமாக வழங்கப்படுகிறது. ஆனால் இந்த மானியம் கிராமப் புறங்களிலிருந்து யார் மனு செய்தாலும் அவர்களுக்கு உண்மையில் கிடைப்பதில்லை. பினாமிகள் மூலமாக, கூட்டுறவுச் சங்கங்களில் இருக்கக்கூடியவர்கள் ஆங்காங்கு புரோக்கர்களை நியமனம் செய்து, 20 மனுக்கள், 30 மனுக்கள் என்று தயாரித்து அந்த சப்சிடி பணமான ரூ.9750-ஐ அவர்களே பெற்றுக் கொள்கிறார்கள். ஆகவே, யார் கிராமங்களிலிருந்து டயர் வண்டி வேண்டுமென்று விரும்புகிறார்களோ, யார் விண்ணப்பிக்கிறார்களோ அவர்களுக்குக் கிடைப்பதில்லை. மாவட்டவாரியாக இதை ஆய்வு செய்தாலே தெரியும்.

அதேமாதிரி, உழ்வு மாடுகள் வாங்குவதற்கு ரூ.3000 மானியமாகவும், ரூ.3000 வங்கிக் கடனாகவும் கொடுக்கிறார்கள். நிச்சயமாக ஒரு ஜோடி

மாடுகள் ரூ.6000-ல் வாங்கமுடியாது. ஒரு ஜோடி மாடுகள் 10,000 ரூபாய்க்கு மேல் ஆகிறது. ஆகவே அதை ரூ.10,000 ஆக உயர்த்தினால் சரியாக இருக்கும்.

அதைப்போல கான்கிரீட் வீடுகள் கட்டிக் கொடுக்கிறீர்கள். ரூ.32,000-க்கு கான்கிரீட் வீடுகள், இன்றைக்கு இருக்கிற விலைவாசியில் இந்த வீடுகளைக் கட்டமுடியாது. ஆகவே, ரூ.32,000 ஆக இருப்பதை சுமார் ரூ.40,000 ஆக உயர்த்தினால் இப்போது இருக்கிற விலைவாசியில் அது சரியாக இருக்கும்.

முற்பகல் 11-00

மாண்புமிகு திரு. கோ.சி. மணி: மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, தொகுப்பு வீட்டைப் பற்றித் தானே சொல்கிறீர்கள்? நான் உங்களைத் தயவுசெய்து கேட்கிறேன். இது உள்ளபடியே நியாயமா? ஏழை அரிசன மக்களுக்கு எவ்வளவு அதிகமான எண்ணிக்கையில் வீடு கட்டிக் கொடுக்க முடியுமோ அந்த முயற்சியிலே மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஈடுபட்டிருக்கிறார்கள். தொகையை உயர்த்த, உயர்த்த எண்ணிக்கை குறைந்துகொண்டே போகும். தேவையாக இருந்தால் உயர்த்தலாம். இதிலேகூட ரூபாய் 3,000 உயர்த்தினால் போதும் என்று பலபேர்கள் சொன்னார்கள். பலமுறை இப்படிச் சொல்லிக் கொண்டிருக்கிறார்களே என்று அதை 5,000 ரூபாயாக உயர்த்தி இருக்கிறோம். மறுபடியும் இந்த மன்றத்திலே இதே மாதிரி சொன்னால் எப்படிச் செய்ய முடியும்?

திரு. ரா. ஈஸ்வரன்: மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, ...

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. ரா. சேதுநாதன்): உரையை இன்னும் ஒரு நிமிடத்தில் முடித்துவிடுங்கள்.

திரு. ரா. ஈஸ்வரன்: மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, இப்போது கட்டப்படுகிற வீட்டினுடைய சதுர அடியைப் பார்த்தால் 20 அடிக்கு 10 அடி உள்ள ஒரு உள்கூடு. ஒரு கணவன், மனைவி மற்றும் குழந்தைகளெல்லாம் அங்கே வாழ முடியாது. அரசாங்கம் கட்டிக் கொடுக்கிறது. இப்போது எல்லாத் திட்டங்களுக்கும் அதிகமாகத்தான் செலவாகின்றது, இந்த அரசாங்கம் வந்த பிறகு. அதனால் கொஞ்சம் உயர்த்தினால் சரியாக இருக்கும் என்று நான் நினைக்கிறேன். வேறொன்றும் இல்லை.

அடுத்தபடியாக, ஒப்பந்தக்காரர்கள்மூலம் அந்த வீட்டைக் கட்டிக் கொடுக்கும்போதே, யார் பட்டா வைத்திருக்கிறார்களோ அவர்களுக்கு நேரடியாக அந்தப் பணத்தைக் கொடுத்தால்தான் சரியாக இருக்க முடியும். (மணியடிக்கப்பெற்றது)

மாண்புமிகு திரு. கோ.சி. மணி: மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, பயனாளிகளுக்குத்தான் கொடுக்க வேண்டும் என்பது அரசினுடைய உத்தரவு. ஆனால், பயனாளிகள் அதைப் பெற முடியவில்லை என்கிறபோது, இடையிலே அவர்கள் பெயரில் சிலபேர் பணம் கொடுத்து எப்படியாவது வீட்டை முடிக்க வேண்டுமே என்பதற்காக அவர்களாக --2 பேரும் சேர்ந்து—அவர்கள் ஒருவர் பெயரிலே பெற்றுக்கொள்கிறார்கள். இப்பொழுதும் நான் சொல்கிறேன், யாராவது பயனாளிகளுக்குத் தர மறுப்பார்களேயானால் அன்றைக்கே நடவடிக்கை எடுப்போம்.

திரு. ரா. ஈஸ்வரன்: மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, ...

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. ரா.சேதுநாதன்) : நீங்கள் சீக்கிரம் முடியுங்கள், ஒரு நிமிடத்தில் பேசி முடித்துவிடுங்கள்.

திரு. ரா. ஈஸ்வரன்: மாண்புமிகு பேரவை மாற்றுத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அரசினுடைய உத்தரவு அந்தமாதிரி இருக்கிறது என்று சொன்னார்கள். ஆனால் நடைமுறையிலே குறிப்பாக நீங்கள் ஊராட்சி மன்றங்களிலே பார்த்தீர்களேயானால், எல்லாமே புரோக்கர்கள் அல்லது அங்கே இருக்கக் கூடிய ஒப்பந்தக்காரர்களிடத்திலே விட்டுவிடுகிறார்கள். நேரடியாக எந்த வீட்டுக்காரர்களும் கட்டவில்லை, இதுதான் உண்மை.

மாண்புமிகு திரு. கோ.சி. மணி: மாண்புமிகு பேரவை மாற்றுத் தலைவர் அவர்களே, நான் இந்த மாமன்றத்திற்குத் தெளிவாகத் தெரிவித்துக்கொள்ள விரும்புவது, யாராவது அந்த ஒப்பந்தக்காரர்கள்தான் கொடுக்க வேண்டுமென்று சொல்லியிருந்தாலும் நடவடிக்கை எடுக்கிறேன், யாராவது அங்கேயிருக்கிற பயனாளிகள் நான் உடன் கட்டுகிறேன் என்று சொல்லி அது ஏற்புடையதாக இல்லையென்று சொல்லி நிராகரித்திருந்தாலும் நடவடிக்கை எடுக்கிறேன். ஒப்பந்தத்தை மீறி அங்கே யாரும் பயனாளிகள் வரவில்லையே? அதற்கு அரசாங்கம் என்ன செய்வது?

1998 ஏப்ரல் 29]

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. ரா. சேதுநாதன்): சீக்கிரம் முடியுங்கள். இன்னும் அரை நிமிடத்தில் உரையை முடித்துக் கொள்ளுங்கள்.

திரு. ரா. ஈஸ்வரன்: அதேபோல, நான் இங்கே டயர் வண்டிப் பிரச்சினை பற்றிச் சொன்னேன். என்னுடைய ஊருக்கு அருகில் உள்ள கிராமமான, நாராயணபுரம் என்ற அந்த ஊரிலே 50 எஸ்.சி. வீடுகள்தான் இருக்கின்றன. ஆனால், 30 டயர் வண்டிகளுக்கு அங்கே இருக்கக்கூடிய கூட்டுறவுச் சங்கம், மற்றுமுள்ளவர்கள் பினாமியிலே மனுக்கள் போட்டிருந்தார்கள். நான் உடனடியாகச் சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் தொடர்பு கொண்டு பேசி, அவர்களின்மீது கிரிமினல் நடவடிக்கை எடுக்கச் சொன்னேன். ஆனால் அது இன்றுவரைக்கும் பெண்டிங்கிலேதான் இருக்கிறது. இன்னும் ஒன்றும் நடக்கவில்லை. மேலும் அந்த 30 நபர்களும் அந்தக் கிராமத்திலேயுள்ள நபர்களேயில்லை. பினாமியிலே பெயர்களை மாற்றி தவறான முறையிலே இந்த மாதிரி நடந்திருந்தது. இதுபோன்ற பிரச்சினைகள் இருக்கின்றன.

மேலும், மத்திய, மாநில அரசுகள் தாட்கோவுக்குப் பணம் கொடுக்கின்றன. தாட்கோவுக்குக் கொடுக்கிற அந்தப் பணம் நடைமுறையில் அதிகாரிகள் ஏஜென்ட்டுகளை வைத்து, அதைத் தவறான முறையில் பயன்படுத்துகிறார்கள். கிராமப் புறத்திலே இருக்கிற மக்கள் அந்தப் பணத்தின் பயனை முழுமையாக அடைய முடியவில்லை. அதனாலே நீங்கள் தாட்கோ மூலமாக அந்தப் பணத்தை வழங்குவதைத் தவிர்த்து, மாவட்ட ஆதிதிராவிடர் நலத் துறை அதிகாரிகள் மூலமாக வழங்கினால் ஓரளவுக்குச் சரியாக இருக்கும். மேலும் எம்.எல்.ஏ.க்களுக்கும் இதற்கும் சம்பந்தம் இல்லாமல் இருக்கிறது. எந்த எம்.எல்.ஏ.க்கள் சொன்னாலும் எதுவும் நடப்பதில்லை. யார் பரிந்துரை செய்தாலும் சரியாக இருப்பதில்லை. எம்.எல்.ஏ.க்களைவிட புரோக்கர்கள் சொன்னால்தான் காரியம் நடக்கிறது. இதற்கு அதிகாரிகளும் உடந்தையாக இருக்கிறார்கள். அதனால்தான் இந்த உண்மையை நான் சொல்கிறேன். அதனால் இந்த மாதிரி காரியங்களிலேயெல்லாம் அரசு துரிதமாக நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. ரா. சேதுநாதன்): அடுத்து, மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. சந்திரசேகரன்.

***திரு. சி. சந்திரசேகரன்**: மாண்புமிகு பேரவை மாற்றுத் தலைவர் அவர்களே, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் மானியத்தில் பேச வாய்ப்பளித்த தங்களுக்கும், மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களுக்கும் என்னுடைய மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

தாழ்த்தப்பட்ட மற்றும் பின்தங்கிய ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் சமுதாயத்தின் நலனை நன்குணர்ந்த நம் முதல்வர் அவர்கள் ஆட்சிப் பொறுப்பேற்ற இரண்டு ஆண்டு காலத்தில் இன்றைய தினம் பல்வேறு திட்டங்களைத் தீட்டி, நிதி அதிகமாக ஒதுக்கிச் செயல்படுத்திக் கொண்டிருக்கிறார்கள். 1996-97 ஆம் ஆண்டு ஒதுக்கிய நிதி 267.39 கோடி ரூபாய். 1997-98 ஆம் ஆண்டு ஒதுக்கிய நிதி 334 கோடி ரூபாய். இந்நிதியாண்டில் 434 கோடி ரூபாய் ஒதுக்கியிருக்கிறார்கள். சென்ற ஆண்டைக் காட்டிலும், இந்நிதியாண்டில் 100 கோடி ரூபாய் சேர்த்து ஒதுக்கியுள்ளார்கள் என்றால் நம் முதல்வர் அவர்கள் ஆதிதிராவிடர் மற்றும் மலைவாழ் மக்களின் மேல் வைத்திருக்கும் அன்பு அளவற்றது. எனவே, மலைவாழ் மக்களின் சார்பாகவும், ஆதிதிராவிட மக்களின் சார்பாகவும் எனது நன்றிகலந்த வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன். சென்ற ஐந்து ஆண்டுக்காலமாக, குறிப்பாக எனது தொகுதியான சேந்தமங்கலம் தொகுதியில் எந்தப் பணிகளும் நடைபெறவில்லை. ஆனால் நமது முதல்வர் அவர்கள் பொறுப்பேற்ற இந்த இரண்டு ஆண்டுக்காலத்தில் தான் மலைவாழ் மக்களுக்கு, குறிப்பாக எனது தொகுதியில் மலைவாழ் மக்கள் வாழும் பகுதியான கொல்லிமலைப் பகுதிக்கு அரசு பல்வேறு திட்டங்களைத் தீட்டி, பணிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன என்பதை இந்த மாமன்றத்திற்குக் கூறக் கடமைப்பட்டிருக்கின்றேன். தாட்கோ மூலம் கடன் வழங்கும் திட்டத்தை ஆதிதிராவிட மக்களுக்கு வழங்கியதுபோல, இன்றையதினம் மலைவாழ் மக்களுக்கும் அந்தத் திட்டத்தை வழங்கிய நம் முதல்வர் அவர்களுக்கு மலைவாழ் மக்களின் சார்பாக எனது நன்றியைக் கூறக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

முற்பகல் 11-05

அதேபோல சாதிச் சான்றிதழ் வழங்குவதைப் பொறுத்தவரை, சென்ற ஆட்சியாளர்கள் மலைவாழ் மக்களுக்கு சாதிச் சான்றிதழ் வழங்குவதில்

காலதாமதம் செய்து வந்தார்கள். ஆனால் இன்றையதினம் நமது முதல்வர் அவர்கள் ஆட்சிப் பொறுப்பேற்றவுடன், இந்த சாதிச் சான்றிதழை வழங்குவதற்காக கோட்டாட்சியர் அவர்களையும், அதேபோல மற்ற அலுவலர்களையும் மலைவாழ் மக்கள் வாழ்கின்ற அந்தந்த பகுதிகளுக்கு அனுப்பிவைத்து, மலைவாழ் மக்களுடைய விண்ணப்பத்தை ஏற்று அந்தந்தப் பகுதியிலேயே சாதிச் சான்றிதழ் வழங்க ஏற்பாடு செய்தார். உதாரணத்திற்குச் சொல்லவேண்டுமானால், எனது தொகுதியில் அமைந்துள்ள கொல்லிமலைப் பகுதிக்கு இரண்டு நாட்களை ஒதுக்கி, காலை முதல் மாலை வரை ஆயிரக்கணக்கான விண்ணப்பங்களை ஏற்று, உடனடியாக அந்தப் பகுதியில் சாதிச் சான்றிதழ் வழங்கியதும் நமது கழக ஆட்சியில்தான்.

மேலும், ரேஷன் பொருட்களை வழங்குவதில், மலைவாழ் மக்களுக்கு 100 ரேஷன் கார்டுகள் இருந்தால் போதும், ஒரு கிலோமீட்டர் தூரம் இருந்தால் போதும் என்ற அரசு விதியைத் தளர்த்தி மலைவாழ் மக்களுக்கு ரேஷன் கடையை அமைத்துக் கொடுத்ததும் நமது கலைஞர் ஆட்சியில்தான். மேலும், மலையிலுள்ள சாலைகளைப் பொறுத்தவரையில் 5 ஆண்டுக்காலத்தில் பழுது அடைந்திருந்தன. சாலையின் இருபுறங்களிலும் முட்புதர்கள் மூடிக் கிடந்தன. கழக ஆட்சி ஏற்பட்ட இரண்டு ஆண்டுக்காலத்தில்தான் 'நபார்ட்' திட்டத்தின் மூலமாக, சாலை மேம்பாட்டிற்காக 70 இலட்சம் ரூபாயும், அதேபோல மலைவாழ் மக்கள் மேம்பாட்டுத் திட்டத்திற்காக 37 இலட்சமும் ஒதுக்கி இன்றைக்கு பல்வேறு பணிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. மலையிலுள்ள குக்கிராமங்களுக்கு, மின்சார வசதி இல்லாத கிராமங்களுக்கு 67 இலட்சம் ரூபாயை எனது தொகுதியான கொல்லிமலைப் பகுதிக்கு ஒதுக்கி, இன்றைக்கு பல்வேறு பணிகள் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன. ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினருக்காக ஒதுக்கப்பட்ட காலிப் பணியிடங்கள் சென்ற 5 ஆண்டுக்காலத்தில் நிரப்பப்படவில்லை. ஆனால் கழக ஆட்சி பொறுப்பேற்று 662 இடங்கள் கண்டுபிடிக்கப்பட்டு, 54 பணியிடங்கள் நிரப்பப்பட்டுள்ளன. இப்படி தாழ்த்தப்பட்டவர்களுக்கு அரசு முன்னுரிமை அளித்து, திட்டங்களை நிறைவேற்றுகின்ற நேரத்தில், 'ஆட்சியைக் கலைப்போம், கலைப்போம்' என்று டெல்லிக்குச் சென்று பத்திரிகைகளுக்குப் பேட்டி அளித்துக் கொண்டிருக்கிறார்கள் என்றால் அவர்களை ஆதிதிராவிட மக்களும், மலைவாழ் மக்களும் நிச்சயமாக

மன்னிக்க மாட்டார்கள். எனது தொகுதியில் அமைந்துள்ள கொல்லிமலைப் பகுதிக்குச் சென்று மக்களைச் சந்தித்தபோது, அங்குள்ள மக்கள், சொன்னது 5 ஆண்டுக்காலத்திற்குப் பிறகு, இப்போது இந்த இரண்டு ஆண்டு ஆட்சிக் காலத்தில்தான் பலவேறு திட்டங்கள் செயல்பட்டுக் கொண்டிருக்கின்றன. இந்த நேரத்தில் இப்படிப் பேசுகிறார்களே அவர்களை நாம் மன்னிக்கக் கூடாது, இதை நீங்கள் மாமன்றத்திலே தெரிவிக்க வேண்டுமென்று சொன்னதன் அடிப்படையில், இந்தக் கருத்தை நான் இங்கே கூறக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மேலும், கொல்லிமலை என்றால் 'தேன்' என்றுதான் தமிழ்நாட்டு மக்களுக்கு நினைவுக்கு வரும். எல்லாக் கவிஞர்களும் கொல்லிமலை என்றால் 'தேன்' என்றுதான் கவிதை எழுதுவார்கள். கொல்லிமலையில் சென்ற 5 ஆண்டுக்காலத்தில், இயற்கையாகவே அரளிப்பூ பூத்திருந்தது. மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள் பொறுப்பேற்றவுடன், இயற்கையாக செண்பகப்பூ பூத்துக் குலுங்குகின்றது. சென்ற ஆட்சியாளர்கள் ஆண்ட 5 ஆண்டுக்காலத்தில், அரளிப்பூ பூத்த காலத்தில் தேன் சுவை கசப்பாக மாறியது. இந்த ஆட்சி வந்தபிறகுதான் செண்பகப்பூவினால் இருக்கும் தேன் சுவையாக மாறி, அதைச் சுவைத்துக் கொண்டிருக்கிறார்கள் என்றால் அது நமது கழக ஆட்சியில்தான் என்பதில் ஆச்சரியம் இல்லை.

இன்றையதினம் 'அண்ணா மறுமலர்ச்சித் திட்டம்' என்ற திட்டத்தை நம் முதல்வர் அவர்கள் உருவாக்கியிருக்கிறார்கள். அதாவது, ஒரு தொகுதிக்கு ஓர் ஊராட்சி என்று தேர்ந்தெடுத்து, அந்த ஊராட்சிக்கு அடிப்படை வசதிகளான குடிநீர் வசதி, சாலை வசதி போன்றவற்றை நிறைவேற்றி வருகிறார்கள். அதேபோல, எனது தொகுதியான சேந்தமங்கலம் தொகுதியை அரசு தத்தெடுத்துக் கொண்டு, எனது தொகுதிக்குப் பல்வேறு புதிய திட்டங்களை உருவாக்கிச் செயல்படுத்த வேண்டுமாய் மாண்புமிகு முதல்வரையும், மற்ற அமைச்சர் பெருமக்களையும் நான் பணிவோடு கோரிக்கை வைக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். பட்டணம், சிராப்பள்ளி, சேந்தமங்கலம், புதுச்சத்திரம் கூட்டுக் குடிநீர்த் திட்டம் நீண்டகாலமாகக் கிடப்பில் இருந்தது. ஆனால், உள்ளாட்சித் துறை மானியத்தில் பேசிய மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் இன்றைக்கு 61 கோடி ரூபாய் நிதி ஒதுக்கி, இந்தத் திட்டத்தை நிறைவேற்றுவதற்கு ஒப்புதல் அளித்திருக்கிறார்கள். இன்றைக்கு எனது தொகுதிக்கு அருகாமையில்

உள்ள நாமக்கல் மற்றும் ராசிபுரம் தொகுதிகளுக்கு காவிரி நீர் கிடைக்கிறது. ஆனால், எனது தொகுதியான சேத்தமங்கலம் தொகுதிக்கு, அது மலைவாழ் மக்கள் தொகுதியாக இருக்கிற காரணத்தாலோ என்னவோ, இதுவரை இந்தச் சலுகைகள் வழங்கப்படவில்லை. ஆனால், தற்போதுதான் நிதி கிடைத்து இருக்கிறது. எனவே, அதற்காக மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கும், உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களுக்கும் எனது நன்றிகலந்த வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

முற்பகல் 11.10

மேலும், கொல்லிமலைவாழ் மக்களின் நீண்டநாள் கோரிக்கை, கொல்லிமலையை தனித் தாலுகாவாக உருவாக்க வேண்டும் என்பதுதான். கொல்லிமலையில் உள்ள 7 ஊராட்சிகள் நாமக்கல் வட்டத்திலும், 7 ஊராட்சிகள் இராசிபுரம் வட்டத்திலும் இயங்கி வருகின்றன. நாமக்கல் வட்டத்திற்கு கொல்லிமலைப் பகுதியிலிருந்து செல்வதற்கு 70 கிலோமீட்டர் தூரமும், அதேபோல், ராசிபுரம் வட்டத்திற்கு மலைவாழ் மக்கள் செல்வதற்கு 70 கிலோமீட்டர் தூரமும் ஆகிறது. கொல்லிமலையைப் பற்றி நமது முதல்வர் அவர்கள் நன்றாக அறிந்தவர்கள். இவர்கள், 1976 ஆம் ஆண்டு முதலமைச்சராக இருந்தபோது, கொல்லிமலைக்கு வருகை தந்து, அங்கே வல்வில் ஓரிக்கு சிலை வைத்து, விழா எடுத்தீர்கள். எனவே, மலைவாழ் மக்களை நீங்கள் கண்டறிந்த பிறகுதான் கொல்லிமலைப் பகுதியில் உள்ள அனைத்து கிராமங்களுக்கும், சாலை வசதி செய்து கொடுக்கப்பட்டது. எனவே, அவர்களுடைய நீண்டநாள் கோரிக்கையை ஏற்று, கொல்லிமலையைத் தலைமையிடமாகக் கொண்டு, தனித் தாலுகாவை உருவாக்கித்தர ஆவன செய்யவேண்டும் என்று அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

மேலும் மலைவாழ் மக்கள் சிறு விவசாயக் கூலி வேலை செய்பவர்கள். அவர்கள் பொருளாதாரத்தில் மிகவும் பின்தங்கியவர்களாக இருக்கிறார்கள். பொதுவாக மலைவாழ் மக்களின் வாழ்க்கைத் தரத்தைப் பற்றி உணர்ந்த நம் முதல்வர் அவர்கள் இன்றையதினம் ஆதிதிராவிட பழங்குடியினர், மலைவாழ் மக்கள் வாழ்கின்ற பகுதிகளுக்கு அனைத்து அடிப்படை வசதிகளையும் செய்து கொடுக்க 3 ஆண்டுத் திட்டம் என்ற ஒரு திட்டத்தை உருவாக்கியிருக்கிறார்கள். இந்த 3 ஆண்டுத் திட்டத்திலே குடிநீர் வசதி, சாலை வசதி, மின்சார வசதி செய்து

கொடுக்கப்படும் என்று இங்கே கூறியிருக்கிறார்கள். ஆனால் சென்ற ஆண்டு, மலைவாழ் மக்களுக்காக ஒதுக்கப்பட்ட நிதி இதுவரை மலைவாழ் மக்களைச் சென்றடையவில்லை. நேற்றைக்குக்கூட மணி 6-40 செய்தியிலே அங்கே மேல்சபையில் எம்.பி. பேசி இருக்கிறார்கள். மலைவாழ் மக்களுக்கு ஒதுக்கப்பட்ட நிதி மலைவாழ் மக்களைச் சென்றடையவில்லை என்று கூறியிருக்கிறார்கள். எனவே, நமது முதல்வர் அவர்களும், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் அவர்களும், ஆராய்ந்து, மலைவாழ் மக்களுக்கு எவ்வளவு நிதி ஒதுக்கினார்களோ, அந்த நிதி எல்லாம் மலைவாழ் மக்களுக்குச் செலவு செய்யப்பட்டிருக்கின்றதா என்பதை நன்கு கண்டறிந்து, அவர்களுக்கு நீங்கள் பாடுபட வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

மேலும், இந்த இரண்டு ஆண்டுக்காலத்தில் மலைவாழ் மக்களுக்குச் சாலை வசதிக்காக, குடிநீர் வசதிக்காக எவ்வளவு சலுகைகள் போய்ச் சேர்ந்திருக்கின்றன என்பதை ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் அவர்கள் விளக்க வேண்டுமாய் நான் அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

மேலும், கொல்லிமலைக்கு மாற்றுவழிச் சாலை ஒன்று அமைத்துத் தரவேண்டும். இன்றையதினம் கொல்லிமலைக்குச் செல்லும் சாலை 70 கொண்டை ஊசி வளைவுகள் உள்ளதாக இருந்து வருகின்றது. எனவே, மலைக்கு வரும் சுற்றுலாப் பயணிகளும், மலைவாழ் மக்களும் மிகவும் சிரமப்படுகிறார்கள். எனவே, சேந்தமங்கலம் பள்ளம் பாறையிலிருந்து வாசலூர்பட்டிக்கு ஒரு மாற்று வழிச் சாலையும், அதேபோல் முள்ளுகுறிச்சிப் பகுதியிலிருந்து நவக்காடு வரை ஒரு மாற்று வழிச் சாலையும் அமைத்துக் கொடுக்க வேண்டுமாய் அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

அதேபோல், சேந்தமங்கலம் பகுதி மக்களின் நீண்டநாள் கோரிக்கை, நாமக்கல் வட்டத்தை இரண்டாகப் பிரித்து, சேந்தமங்கலத்தை தனி வட்டமாக உருவாக்க வேண்டும் என்பது. எனவே, அந்தக் கோரிக்கையை நிறைவேற்றித் தரவேண்டுமாய் அன்புடன் கேட்டுக் கொண்டு, மலைவாழ் மக்களுக்குத் தேவையான அனைத்து அடிப்படை வசதிகளையும் இந்த 3 ஆண்டுத் திட்டத்தில் செயல்படுத்த வேண்டுமாய்க் கேட்டு, வாய்ப்பு அளித்தமைக்கு நன்றி தெரிவித்து அமர்கிறேன்.

1998 ஏப்ரல் 29]

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. ரா. சேதுநாதன்): டாக்டர் க. கிருஷ்ணசாமி.

டாக்டர் க. கிருஷ்ணசாமி: மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, இன்று புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் அவர்களுடைய 108-வது பிறந்த நாள். இன்று அவரை நினைவு கூர்கின்ற வகையில், 2 ஆயிரம் ஆண்டுகாலமாக வர்ணாசிரமத்தின் பிடியிலே சிக்கித் தவிக்கின்ற தமிழ்ச் சமுதாயத்தை, இந்திய சமுதாயத்தைச் சாடுகின்ற வகையில் அவர் இயற்றிய ஒரு கவிதையினுடைய சில வரிகளைச் சுட்டிக்காட்டி பட்டியல் இன பழங்குடி மக்களுக்கான நலத் துறை மானியக் கோரிக்கையில் புதிய தமிழகத்தினுடைய சில கருத்துக்களை எடுத்து வைக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

'இருட்டறையில் உள்ளதடா உலகம், சாதி இருக்கின்றது என்பானும் இருக்கின்றானே' என்று வேதனைப்பட்டு என்றோ சொன்ன அவருடைய கருத்துக்கள் இன்றும்கூட அப்படியே பொருத்தமாக இருக்கின்றது என்பதுதான் வேதனைக்குரிய விஷயம். எனவே, புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் அவர்களுடைய கருத்துக்களையெல்லாம் ஏற்றுக்கொண்ட நாம், இந்த வேதனை ஆண்டாண்டு காலத்திற்கும் தொடராத நிலையை உருவாக்க வேண்டுமென்ற அடிப்படையில் நான் இந்த மாமன்றத்திற்கு சில முக்கியமான கருத்துக்களை எடுத்து வைக்கக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

முற்பகல் 11-15

என்றும் இல்லாத அளவிற்கு இந்த ஆண்டு பட்டியல் இன, பழங்குடியினர் நலத் துறை புத்தகமே சற்று பெரியதாக இருக்கிறது. அதில் நல்ல நோக்கத்தோடு பல நல்ல அம்சங்களையெல்லாம் குறிப்பிட்டிருக்கிறார்கள். அதற்காக நான் பாராட்டக் கடமைப்பட்டிருக்கின்றேன். இன்னும் சொல்லப்போனால், சமூகக் கண்ணோட்டத்தோடும், விஞ்ஞானப் பூர்வமான கண்ணோட்டத்தோடும், அந்தப் புத்தகத்திலே பல கருத்துக்களை பகுத்து, ஆராய்ந்து சொல்லப்பட்டு இருக்கிறது. இந்த நாட்டிலே சமத்துவத்தை உருவாக்க, சம வாய்ப்பை உருவாக்க கல்வியிலே கவனம் செலுத்தப்பட வேண்டும். வேலைவாய்ப்பிலே சம வாய்ப்புகள் கொடுக்கப்பட வேண்டும். தீண்டாமை ஒழிக்கப்பட வேண்டும். விவசாயத் தொழில்களிலேயும், நவீனத் தொழில்களிலேயும் முக்கிய வாய்ப்புகள் கொடுக்கப்பட வேண்டும் என்ற பார்வையில்

அனுகப்பட்டிருக்கிறது. எனவே, அந்தப் பார்வைக்காக என்னுடைய மனமார்ந்த வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

இங்கே கடந்த 3 சட்டமன்றத் தொடர்களிலேயும் நான் ஒரு கருத்தை வலியுறுத்தி வருகின்றேன். தமிழகத்தில் பட்டியல் இன, பழங்குடி சாதி மக்கள் ஒட்டுமொத்தமாக 114 பிரிவினர் இருக்கின்றார்கள். இதிலே பழங்குடி மக்கள் 36 பிரிவினரும், பட்டியல் இன மக்கள் 78 பிரிவினரும் இருக்கின்றார்கள். அப்படி இருக்கின்றபோது, 78 சாதிகள் கொண்ட ஒரு துறையை குறிப்பிட்ட ஒரு சமுதாயத்தினுடைய துறையாக மட்டும் ஆதிதிராவிடர் நலத் துறை என்று அறிவித்திருப்பது, மற்ற 77 சமுதாய மக்கள் மத்தியிலே வருத்தத்தை, அவர்கள் மத்தியிலே ஆதங்கத்தை ஏற்படுத்தியிருக்கிறது என்பதை நான் தொடர்ந்து வலியுறுத்தி வருகின்றேன். இன்னும் சொல்லப்போனால், அந்தத் துறைக்கு பட்டியல் இனத் துறை என்றோ அல்லது ஒட்டுமொத்தமாக சமூக நீதித் துறை என்றோகூட மாற்றுவதுதான் அவசியமாகும் அல்லது சமூக நீதியாகும் என்று நான் இந்த மாமன்றத்தின் வாயிலாக வலியுறுத்தக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

***மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவை மாற்றுத் தலைவர் அவர்களே, சமுதாயப் புரட்சியை தமிழகத்திலே வித்திட்டு உருவாக்கிய தந்தை பெரியார் அவர்கள் இப்படிப் பலவாறாக, பல்வேறு சாதிகளாக தாழ்த்தப்பட்ட சமுதாயம் இருப்பதை எண்ணித்தான் அவர்களை எல்லாம் ஆதிதிராவிடர்கள் என்ற பெயரால் அழைக்க வேண்டுமென்று குறிப்பிட்டார். அதைத்தான் என்னுடைய அருமை நண்பர் எம்.ஜி.ஆர். அவர்களுடைய ஆட்சிக்காலத்தில் அரிசனத் துறை என்று இருந்த அந்தப் பெயரை மாற்றி, ஆதிதிராவிடர் நலத் துறை என்று மாற்றினார்கள். எனவே, பெரியார் அவர்கள் இந்தப் பெயர்தான் இருக்க வேண்டும் என்று விரும்பியதற்கு மாறாக, இன்று அந்தப் பெயரை மாற்றுவது மத்திய அரசிலிருந்து எஸ்.சி., எஸ்.டி. என்ற அந்தப் பெயரால், தாழ்த்தப்பட்டவர்கள் என்ற பெயரால், ஆதிதிராவிடர்கள் என்ற பெயரால் பெற்று வருகின்ற மானியங்கள், உதவிகள் இவைகளுக்கெல்லாம்கூட இடையூறு ஏற்படக்கூடும். அவைகளையெல்லாம் சிந்தித்துத்தான் இதிலே ஒரு முடிவு எடுக்க வேண்டும்.

1998 ஏப்ரல் 29]

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

டாக்டர் க. கிருஷ்ணசாமி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இதிலே பிற்பட்டோர் நலத் துறை என்று அழைக்கின்றபோது பல சமூகங்கள் இருக்கின்றபோது, அதைப் பிற்பட்டோர் என்று வைக்கின்றோம். ஒரு குறிப்பிட்ட சமுதாயத்தினுடைய பெயரை மட்டும் பயன்படுத்துவது கிடையாது. அதேபோல், பட்டியல் இனத் துறை என்று அழைப்பதிலே எந்தவிதமான சங்கடமும் வரப்போவது கிடையாது. ஏன் என்றால், ஒவ்வொரு சமுதாயமும் தன்னுடைய அடையாளங்களைக் காட்டிக் கொள்வதற்காகப் போராடிக் கொண்டிருக்கின்றபோது, இதில் பல உள்சங்கடங்களை ஏற்படுத்திக் கொண்டிருக்கின்ற ஆதங்கத்தை, மக்கள் மத்தியிலே இருக்கக்கூடியதை நான் இந்த மாமன்றத்திற்குத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

முற்பகல் 11-20

அதேபோல சான்றிதழ்கள் வழங்குகின்றபோது பறையன், சக்கிலியன், பள்ளன் என்று 'ன்' விகுதி கொடுத்து கொடுக்கிறார்கள். இந்த நாட்டிலே ஒதுக்கப்பட்ட காரணத்திற்காக இப்போது எதுவும் சலுகைகள் அளிக்கப்படுவதில்லை. ஒட்டுமொத்தமாகப் பங்கீடு என்ற அடிப்படையிலேதான் கொடுக்கப்படுகின்றன. பிற்படுத்தப்பட்ட சமுதாயத்திற்கோ, மிகமிகப் பிற்படுத்தப்பட்ட சமுதாயத்திற்கோ இதுபோன்ற வாசகங்கள் பயன்படுத்தப்படுவது கிடையாது. எனவே அந்த 'ன்' விகுதியோடு அழைக்கப்படுகின்ற நிலையை மாற்றி 'ர்' விகுதியோடு அழைக்கப்படுவதற்கு அரசு தக்க உத்தரவு பிறப்பிக்க வேண்டும் என்று இந்த மாமன்றத்தின் வாயிலாகக் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். மாண்புமிகு முதல்வர் அவர்களுடைய உத்தரவின்பேரில் நான் கடந்த 3 ஆண்டுக்காலமாக கேட்டு வந்த வெள்ளை அறிக்கையைப் பற்றி ஆராய்வதற்காக மாண்புமிகு பட்டியலினத் துறை அமைச்சர் அவர்களுடைய தலைமையின் கீழ் 11 சட்டமன்ற உறுப்பினர்கள் அடங்கிய குழுவை நியமித்தார்கள். அந்தக் குழு தொடர்ந்து ஓராண்டுக்காலமாக பல துறைகளிலே ஆய்வு நடத்தி வருகிறது. குழு ஏதோ அந்த அதிகாரிகள் கொடுக்கக்கூடிய தகவல்களைப் பெறுவதற்காக மட்டும் அல்ல; என்ன காரணத்தினாலே இத்தனை ஆண்டுக்காலம் இவர்களுக்கு கொடுக்கப்பட வேண்டிய இட ஒதுக்கீடுகள்

கொடுக்கப்படவில்லை என்பதைக் கண்டறிவதற்கும் ஒரு குறிப்பிட்ட காலத்திற்குள்ளே கொடுக்கப்பட வேண்டிய இட ஒதுக்கீடு உடனடியாக நிரப்பப்பட வேண்டும் என்பதற்காகத்தான் அந்தக் குழு போடப்பட்டிருக்கிறது. அப்படி இருக்கின்றபொழுது கடந்த வாரத்திலே பல்கலைக்கழகங்களுடைய துணை வேந்தர்களோடு கலந்துரையாடலுக்கும், அதேபோல தேர்வாணையத்தினுடைய அங்கத்தினர்களோடும், உறுப்பினர்களோடும், தலைவர்களோடும் கலந்துரையாடலுக்கும் ஏற்பாடு செய்யப்பட்டு இருந்தது. கடந்த பல்லாண்டுக்காலமாக பல்கலைக்கழகங்கள் இட ஒதுக்கீட்டை அப்படியே தூக்கி எறிந்துவிட்டு தாழ்த்தப்பட்ட, மிகமிக பிற்படுத்தப்பட்ட, பிற்படுத்தப்பட்ட மக்களுக்குண்டான இட ஒதுக்கீட்டை முறையாகக் கொடுக்கவில்லை என்பது நாடறிந்த உண்மை.

எனவே அது என்ன காரணத்தினாலே கொடுக்கப்படவில்லை என்பதைத் தெரிந்துகொண்டு, தக்க ஆலோசனை வழங்கி தாழ்த்தப்பட்ட, மிகமிக பிற்படுத்தப்பட்ட மக்களுக்கான பங்கைக் கொடுப்பதற்கு ஆய்வு நடத்துவதற்காக ஓர் அமைச்சர் தலைமையிலே 11 பேர் கொண்ட சட்டமன்ற உறுப்பினர்கள் குழு கூடியும்கூட, அந்தப் பல்கலைக் கழக துணை வேந்தர்கள் 14 பேர்களில் 11 பேர் வரவேயில்லை. அதுபோல, பப்ளிக் சர்வீஸ் கமிஷனுடைய தலைவர், உறுப்பினர்.....

மாண்புமிகு திரு. சமயநல்லூர் எஸ். செல்வராசு: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இட ஒதுக்கீட்டுக் கண்காணிப்புக் குழுவிற்குச் சட்டமன்ற உறுப்பினர்கள் 9 பேரைத்தான் முதலமைச்சர் அவர்கள் நியமனம் செய்திருக்கிறார்கள். 11 உறுப்பினர்கள் என்பது தவறான கருத்து.

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் கிருஷ்ணசாமி அவர்கள் இரண்டு கருத்துக்களை இங்கே சொன்னார்கள். சில சமுதாயங்களைக் குறிப்பிடும்போது 'ன்' விகுதி இருப்பதை மாற்ற வேண்டும் என்று. இந்தக் கருத்தை 1957-58 ஆம் ஆண்டில் இந்த அவையில் நான் எதிர்க்கட்சி வரிசையிலே, அண்ணா அவர்களுடைய தலைமையில் அமர்ந்திருந்த அந்தக் காலத்திலேயே எடுத்துக் கூறியிருக்கிறேன். அப்போது பிற்படுத்தப்பட்டவர்கள், மிகவும் பிற்படுத்தப்பட்டவர்கள் என்று ஒரு பட்டியல் வைக்கப்பட்டது.

1998 ஏப்ரல் 29] [கலைஞர் மு. கருணாநிதி]

அவர்களுக்கு இட ஒதுக்கீடு செய்வது என்றாலும்கூட அவர்களுக்கான சில சலுகைகளை வழங்குவதற்காக பிற்படுத்தப்பட்டவர்கள், மிகவும் பிற்படுத்தப்பட்டவர்கள் என்கின்ற ஒரு பட்டியல் மேஜையிலே வைக்கப்பட்டது. அதில் நாவிதர் என்று இருக்கும். குயவர் என்று இருக்கும். சாணான் என்று இருந்தது. நான் அதை எடுத்துக் குறிப்பிட்டுக் காட்டி அன்றைய அமைச்சர் சி. சுப்பிரமணியம் அவர்களிடத்திலே வாதாடியிருக்கிறேன். இந்த 'ன்' விகுதி இருக்கிறதே, இதை மாற்ற வேண்டும் என்று வாதாடினேன். அப்போது அதற்குரிய பதில் எனக்குக் கிடைக்கவில்லை. எனவே அந்த உணர்வு எனக்கும் இருக்கிறது. தொடர்ந்து அது இருக்குமானால் அந்த 'ன்' என்பது நிச்சயமாக அகற்றப்படும், 'ர்' என்ற எழுத்து சேர்க்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி).

இன்னொன்று, குழுவைப் பற்றிக் குறிப்பிட்டார்கள். அது பதினொன்றா, ஒன்பதா என்பது பிரச்சினை அல்ல. அந்த 9 பேர் கொண்ட குழு கூடுகிற நேரத்தில் பல்கலைக்கழகத்தினுடைய துணை வேந்தர்கள் அதிலே கலந்து கொள்ளவில்லையென்றால் உள்ளபடியே வருந்தத்தக்க செய்தி. இந்த விவாதத்திற்குப் பிறகாவது அதை யோசித்துப் பார்த்து அவர்களும் கடமை உணர்வோடு கலந்துகொள்ள முன்வர வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

டாக்டர் க. கிருஷ்ணசாமி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பப்ளிக் சர்வீஸ் கமிஷன் சேர்மன் அண்டு மெம்பர்ஸ். அதேபோல 1973-ஆம் ஆண்டு மதம் மாறிய கிருத்துவர்கள் — தாழ்த்தப்பட்ட சமுதாயத்திலேயிருந்து மதம் மாறிய கிருத்துவர்களுக்கு நீங்கள் தாழ்த்தப்பட்ட மக்களுக்குண்டான பல சலுகைகளை அளித்தீர்கள். ஆனால் அவர்களைப் பிற்பட்டோர் பட்டியலுக்கு மாற்றியதால் அப்போது இட ஒதுக்கீட்டில் தாழ்த்தப்பட்டவர்களுக்கு உண்டானச் சலுகைகள் கிடையாது. ஆனால் கல்வி சலுகை இருந்தது. அவர்கள் பிற்பட்டவர்களாகக் கருதப்பட்டார்கள். ஆனால் இதற்கிடையில் 1989-க்கு பிறகு மிகமிகப் பிற்பட்டோர் பட்டியல் என்று வந்து விட்டது. முதலில் தாழ்த்தப்பட்டவர்கள் மதம் மாறிய காரணத்தால் அவர்களைத் தாழ்த்தப்பட்டவர்களாகக் கருத முடியாது என்ற காரணத்தால் பிற்பட்டோர் பட்டியலில் வைக்கப்பட்டது. ஆனால் இப்போது மிக மிகப் பிற்பட்டோர் பட்டியல் என்று உருவான பிறகு தாழ்த்தப்பட்டவர்களை பிற்பட்டோர் பட்டியலில் வைத்து இருப்பது

நியாயம் ஆகாது. எனவே, அவர்களைத் தாழ்த்தப்பட்டோர் பட்டியலில் சேர்ப்பதற்கு மத்திய அரசுதான் ஆணையிட வேண்டும் என்று இருந்தாலும் இடைப்பட்ட காலத்தில் அவர்களுக்கு மிக மிகப் பிற்பட்டோர் பட்டியலில் இருக்கக்கூடிய சலுகைகளையாவது அளிப்பதற்கு தமிழக அரசு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று இந்த மாமன்றத்தின் வாயிலாகக் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். 1973 ஆம் ஆண்டு அவர்களைப் பிற்பட்டோர் பட்டியலில் வைத்து, அந்தச் சலுகைகளை அளித்தது இந்த அரசு என்பதை நான் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

முற்பகல் 11-25

அடுத்தபடியாக, பல துறைகளில் 650 பதவிகள்தான் விடுபட்டு இருக்கின்றன என்பதைப்போல் கொடுக்கப்பட்டிருக்கிறது. ஆனால் இப்போது நாங்கள் கண்டறிந்த 60-க்கும் மேற்பட்ட துறைகளில் ஒரு இலட்சத்திற்கும் மேற்பட்ட இடங்கள் காலியாக இருக்கின்றன. உதாரணமாக ஒரே ஒரு துறையை மட்டும் நான் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். எல்லா சட்டமன்ற உறுப்பினர்களின் கவனத்திற்கும், இதைக் கொண்டுவந்து அனைவரும் இதில் கவனம் செலுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இது என்னுடைய தகவல் அல்ல. அரசாங்கத்தின் ரூரல் டெவலப்மெண்ட் துறையிலிருந்து அவர்கள் கொடுத்திருக்கிற தகவலில் 18,684 மொத்தப் பதவிகள். அதிலே Night Watchman-ல் start பண்ணி PA (PD) - PA to Collector, Panchayat Development வரையில் இருக்கக்கூடிய மொத்த பதவிகள் 18,684. அதிலே எல்லாத் தலங்களிலேயும் 19 சதவீதம் என்று போட்டால் மொத்தப் பதவிகள், தாழ்த்தப்பட்ட மக்களுக்கு வரவேண்டியது 3,542. இப்போது கொடுத்திருப்பது 1,784 மட்டுமே. நிலுவையில் இருக்கக்கூடியது 1,778 பதவிகள் என்று அந்தத் துறையின் அதிகாரிகள் எங்களிடம் கொடுத்திருக்கிறார்கள். இதிலே வேதனையான விஷயம் என்னவென்றால் இப்படி நிரப்பிய 1,784 பதவிகளிலும் அதிகப்படியாக நிரப்பயிருப்பது Night Watchman, Office Assistant, Record Clerk, Driver, Junior Assistant தான். மற்ற பதவிகள், உதாரணமாக உதவியாளர், Extension Officer, Deputy Block Development Officer, Sharistradar, Block Development Officer, Assistant Project Officer, Divisional Development Officer, இவை எல்லாம் ஒரு

முக்கியமான தீர்மானிக்கக்கூடிய பதவிகள். அரசினுடைய கோடிக்கணக்கான ரூபாயை நீங்கள் அள்ளிக் கொடுக்கிறீர்கள்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இது நெடுங்காலமாக இருந்து வருகின்ற தொய்வின் தொடர்ச்சி. எனவேதான், இந்தத் தொய்வைப் போக்குவதற்காகத்தான் இந்தக் குழுவே அமைக்கப்பட்டிருக்கிறது. எனவே, இனியும் குறை சொல்லிக்கொண்டு இருக்காமல் ஏன் இந்தக் குழு அமைக்கப்பட்டிருக்கிறது என்ற காரணத்தைத்தான் டாக்டர். கிருஷ்ணசாமி அவர்கள் விளக்கிக் கொண்டிருக்கிறார்கள் என்று நான் கருதுகிறேன். எனவே, இந்தக் குழு தக்க வகையில் ஆராய்ந்து கடமையுணர்ச்சியோடு பணியாற்றி இந்தத் தொய்வைப் போக்க உதவிட வேண்டும். அதை அரசு பாராட்டி, வரவேற்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி).

டாக்டர் க. கிருஷ்ணசாமி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இதிலே நான் குறிப்பிட்டு மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டுவர விரும்புவது, உதாரணமாக பிளாக் டெவலப்மெண்ட் ஆபீசர் என்று இருக்கக்கூடிய பதவிகள் 819. அதிலே தாழ்த்தப்பட்டவர்களுக்கு 19 சதவீதம் என்று சொன்னால், 147 பதவிகள் கொடுக்க வேண்டும். ஆனால் இன்றைக்கு 26 தான் இருக்கிறது. எதற்காகச் சொல்ல விரும்புகிறேன் என்றால் 147-க்கு 26 பதவிகள் இருக்கின்றன. இவர்களுக்கு இட ஒதுக்கீட்டில் கொடுப்பதற்கு அந்த 147-ஐ fill-up செய்வதற்குத் தடையாக இருக்கக்கூடியது என்னவென்றால் பிளாக் டெவலப்மெண்ட் ஆபீசர் போஸ்ட் என்பதை புரமோஷன் போஸ்ட் என்று வைத்து இருக்கிறார்கள். அப்படி புரமோஷன் போஸ்ட் என்று சொல்லுகிறபோது இன்று அதற்கு நேரடியாக நியமனம் செய்ய முடியாது. அப்படி நேரடி நியமனம் செய்யலாம் என்று நம்முடைய அமைச்சரவையில் ஒரு முடிவு எடுத்து அப்படி ஒரு பைலில் — நீங்கள் எந்தப் பைலையும் சீக்கிரம் டிஸ்போஸ் செய்யக் கூடியவர்கள் — எட்டு மாதங்களுக்கு மேலே, கடந்த ஆகஸ்ட் மாதத்திலேயிருந்து அந்த உத்தரவு இன்னும் அரசாணையாக வெளியே வராமல் இருக்கின்ற காரணத்தினாலே

இந்தப் பணி இடங்களெல்லாம் அப்படியே நிரப்பப்படாமல் இருக்கிறதென்று அரசு அதிகாரிகள் காரணம் சொல்கிறார்கள். எனவே, இந்த உத்தரவைப் பிறப்பிக்காமல், அது வராமல் நாம் எந்த முயற்சி எடுத்தாலும், எல்லாத் தடங்களிலேயும் நிச்சயமாகத் தாழ்த்தப்பட்ட மக்கள் அந்தப் பதவிகளைப் பெற முடியாது. எனவே, அதற்குண்டான உத்தரவும் சிறிதுகூட காலந் தாழ்த்தாமல் வர வேண்டும். அதற்குச் சில அமைச்சர்களேகூட முட்டுக்கட்டையாக இருக்கிறார்கள் என்று கேள்விப்படுகின்றபொழுதுதான் என்னுடைய மனம் வேதனைப்படுகிறது.

முற்பகல் 11-30

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி: பேரவைத் துணைத் தலைவரவர்களே, அமைச்சரவை என்பது ஒரு கூட்டுப் பொறுப்பு. எந்த அமைச்சரைச் சொன்னாலும், அதற்கு முதலமைச்சரும் கட்டுப்பட்டவர்தான். அமைச்சர் யாராவது அப்படிப்பட்ட தவறு செய்திருந்தால் அதில் நடவடிக்கை எடுக்க முதலமைச்சருக்கு உரிமை உண்டு. அதைக் குறிப்பிட்டு என்னிடத்திலே டாக்டர் கிருஷ்ணசாமி அவர்கள் குறிப்பிடலாம். அப்படி யாரும் — எத்தனையோ அமைச்சரவைக் கூட்டங்கள் நடைபெற்றிருக்கின்றன — யாரும் இந்த மக்களுக்கு விரோதமாக, அதாவது குறிப்பாகச் சுட்டிக்காட்டுவதற்காகச் சொல்கிறேன், தாழ்த்தப்பட்ட சமுதாய மக்களுக்கு விரோதமாக எந்த அமைச்சரும், எந்த நடவடிக்கைகளிலும் ஈடுபடவில்லை என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஒன்றை மாத்திரம் சொல்ல விரும்புகிறேன். இந்த அரசைப் பொறுத்தவரையில் ஒரு குறிப்பை, கிருஷ்ணசாமி பேசுவார் என்று எதிர்பார்த்தே, நான் வைத்திருக்கின்ற குறிப்பை இங்கே குறிப்பிட விரும்புகின்றேன்.

இந்த ஆட்சியிலேதான், 100 ஆண்டு காலமாக உயர்நீதிமன்றத்திற்கு ஒரு தாழ்த்தப்பட்டவர், அங்கே நீதிபதியாக வராமல் இருந்த நிலையை மாற்றி, கழக ஆட்சியிலேதான், வரதராஜன் என்பவர் உயர்நீதிமன்றத்திற்கு நீதிபதியாக நியமிக்கப்பட்டார். அவர் பிறகு, உச்சநீதிமன்ற நீதிபதியாகவும் வர முடிந்தது என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

1998 ஏப்ரல் 29] [கலைஞர் மு. கருணாநிதி]

டி.ஜி.பி.யாக துரை அவர்கள், இந்தச் சமுதாயத்தைச் சேர்ந்தவர், தி.மு.க. ஆட்சியிலேதான் வந்தார். அதைப் பாராட்டி நம்முடைய அக்காள் பொன்னம்மாள்கூடப் பலமுறை பேசியிருக்கிறார்கள். அவர் ஒருவர் வந்ததைப் பொறுத்துக்கொள்ள முடியாமல், எதிர்க்கட்சியினர் இப்படியெல்லாம் பேசுகிறார்களே என்றுகூட இங்கே அவர்கள் குமுறிப் பல நேரங்களிலே பேசியிருக்கின்றார்கள்.

சென்னை உயர்நீதிமன்றத்தின் நீதிபதி தணிகாசலம் அவர்கள், தலைமை நீதிபதியாகப் பொறுப்பேற்க வழிவகை செய்ததும் இந்த அரசுதான் என்பதை நான் தெரிவித்துக்கொள்கின்றேன்.

1970 ஆம் ஆண்டு, பப்ளிக் சர்வீஸ் கமிஷன் தலைவராக பாலசுந்தரம் அவர்கள் நியமிக்கப்பட்டார். அவரும் இந்தச் சமுதாயத்தைச் சேர்ந்தவர்தான் அதுவும் கழக அரசிலேதான்.

1996-ல் டி. முருகராஜ், சர்வீஸ் கமிஷன் தலைவராக நியமிக்கப்பட்டார். இடையில் யாரும் இந்தச் சமுதாயத்தைச் சேர்ந்தவர்கள் அந்தப் பதவியிலே நியமிக்கப்படவில்லை. அவர்தான் நியமிக்கப்பட்டிருக்கின்றார்.

இப்பொழுது பாரதிதாசன் பல்கலைக்கழகத்தினுடைய துணை வேந்தர் பதவியில் நியமிக்கப்பட்டிருக்கிற ஜெகதீசன் யார் என்பது கிருஷ்ணசாமி அவர்களுக்குத் தெரியும். அவரும் நம்முடைய சமுதாயத்தைச் சேர்ந்தவர்தான்.

நான் தற்போது முதல்வர் பொறுப்பை ஏற்றதும், என்னுடைய செயலாளராக நியமித்துக் கொண்டதும் அதே முருகராஜைத்தான்.

முருகராஜ் சர்வீஸ் கமிஷன் செயலராகச் சென்றவுடன் என்னுடைய — முதல்வருடைய முதன்மைச் செயலராக நியமிக்கப்பட்டிருப்பவர் — இன்றைக்குப் பணியாற்றிக் கொண்டிருப்பவர் விஸ்வநாதன், ஐ.ஏ.எஸ். அவரும் இந்தச் சமுதாயத்தைச் சேர்ந்தவர்தான்.

ஜெயலலிதா அவர்களுடைய ஆட்சியிலே 3 பேர் செயலாளர்களாக நியமிக்கப்பட்டார்கள் இந்த சமுதாயத்திலே. ஆனால் அவர்களெல்லாம் 2 மாதங்கள், 3 மாதங்கள்கூட நீடிக்கவில்லை.

அதிலே ஒருவர் தங்கராஜ், ஐ.ஏ.எஸ்., அவர் இந்த ஆட்சியிலேதான் வணிகவரி சீர்திருத்த உயர்மட்டக் குழுவின் தலைவராக நியமிக்கப்பட்டிருக்கிறார்.

இதே தங்கராஜ், ஐ.ஏ.எஸ்., அவர்கள் பின்னர் தமிழ்நாடு நிர்வாகத் தீர்ப்பாயத்தின் உறுப்பினராகவும் இந்த ஆட்சியிலே நியமிக்கப்பட்டு இருக்கின்றார்.

தற்போது தமிழக அரசின் சிறப்புத் தலைமைச் செயலாளர் - இப்பொழுது இருக்கிற தலைமைச் செயலாளர் - சீஃப் செகரட்டரி - இன்னும் இரண்டொரு மாதங்களில் ஓய்வு பெறப் போகிறார். எனவே, இப்பொழுதே பயிற்சி பெறுவதற்காக, அடுத்த தலைமைச் செயலாளர் இவர்தான் என்று நிர்ணயித்து ஏ.பி. முத்துசாமி, ஐ.ஏ.எஸ்., அவர்கள் இன்றைக்கு அந்தப் பணியிலே நியமிக்கப்பட் க்கிறார். அவரும் இந்தச் சமுதாயத்தைச் சேர்ந்தவர்தான்.

சென்னை துறைமுகப் பொறுப்புக் கழகத்தின் தலைவராக நியமிக்கப்பட்டிருக்கின்ற மணிவண்ணன், ஐ.ஏ.எஸ்., அவர்கள், அவர்தான் நியமிக்கப்பட வேண்டுமென்று நான் மத்தியிலே உள்ள அரசோடு - அன்றிருந்த அரசோடு வாதாடி, போராடி, அவர்தான் - மணிவண்ணன்தான் இன்றைக்கு அந்தப் பொறுப்பிலே நியமிக்கப்பட்டிருக்கிறார்.

ஓய்வு பெற்ற உயர்நீதிமன்ற நீதிபதி சாமிதுரை அவர்களை மனித உரிமை ஆணையத்தின் உறுப்பினராக நியமித்தது இந்த அரசுதான்.

டாக்டர் திருமதி சுசீலாராஜ் என்ற டாக்டரையும் அந்தக் குழுவிலே உறுப்பினராக நியமித்திருப்பதும் இந்த அரசுதான்.

இன்றைக்கிருக்கிற மாவட்ட ஆட்சித் தலைவர்களுடைய எண்ணிக்கையை எடுத்துக் கொண்டாலும்கூட, திருமதி கண்ணகி, திருவண்ணாமலை மாவட்டம்; திரு. சோளை, நீலகிரி மாவட்டம்; திரு. கட்டாரியா, நாமக்கல் மாவட்டம்; திரு. உமாசங்கர், கன்னியாகுமரி மாவட்டம்; சிவதாஸ் மீனா, நாகப்பட்டினம்; இப்பொழுதுள்ள மாவட்ட ஆட்சித் தலைவர்களில் 5 பேர் இந்தச் சமுதாயத்தைச் சேர்ந்தவர்கள்தான் இருக்கிறார்கள்.

சென்னை நகரத்தினுடைய காவல் துறை கமிஷனர் காளிமுத்து; மாநகராட்சி ஆணையர் கோலப்பன் எல்லோரும் நம்மவர்கள்தான்

என்பதை கிருஷ்ணசாமி அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி).

முற்பகல் 11-35

டாக்டர் க. கிருஷ்ணசாமி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தீண்டாமை ஒழிப்பிற்கு தந்தை பெரியார் அவர்கள் 100 கட்டளைகளைச் சொல்லியிருக்கிறார்கள். அதிலே 44-வது, போலீஸ் உத்தியோகங்களைத் தாழ்த்தப்பட்டவர்களுக்குக் கொடுக்க வேண்டும்; அவர்களை அக்ரஹாரத்தில் குடியிருக்கச் செய்ய வேண்டும்; தீண்டாமையைப் பாராட்டாத கிராமங்களுக்குச் சிறந்த பரிசுகளை அளிக்க வேண்டும்; தாழ்த்தப்பட்டவர்களுக்கு என்று தனியாக சேரிகளைக் கட்டி அங்கே அவர்கள் குடியேறுவதை மாற்ற வேண்டும்; தாழ்த்தப்பட்டவர்களுக்கு என்று தனியாக சேரிகள் இருக்கக்கூடாது என்று சொல்லியிருக்கின்றார்கள்.

நீங்கள் நூற்றுக்கு நூறு போலீஸ் உத்தியோகங்களைத் தாழ்த்தப்பட்டவர்களுக்குக் கொடுக்காவிட்டாலும்கூட, சுந்தரலிங்கம் வாரிசான, 200 ஆண்டுகளுக்கு முன்பே தற்கொலைப் படையாகச் செயல்பட்ட அந்தச் சமுதாயத்தினரை, அதேபோல தியாகத்திற்கும் திறமைக்கும் பெயர் பெற்ற பட்டியல் சமுதாயத்தினருக்கும் 80 சதவீதமாவது காவல் துறையில் இடம் கொடுப்பதன் மூலமாக காவல் துறைகூட சுத்தப்படும்; சுத்தமாகும் என்று நான் இந்த நேரத்திலே சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

கல்லூரி மாணவர்களுக்கு தாங்கள் இந்த ஆண்டு 300 ரூபாயிலிருந்து 400 ரூபாயாக நிதியுதவியை உயர்த்திக் கொடுத்திருக்கிறீர்கள். ஆனால், அது பள்ளி மாணவர்களுக்கு 180 ரூபாயாக உயர்த்திக் கொடுக்கப்படவில்லை. எனவே, 300 ரூபாயிலிருந்து 400 ரூபாயாகக் கல்லூரி மாணவர்களுக்கு உயர்த்திக் கொடுத்ததைப் போல, பள்ளி மாணவர்களுக்கும் அதே அளவு உயர்த்தப்பட வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். கல்லூரி மாணவர்களுக்கு 400 ரூபாயிலிருந்து இன்னும் கொஞ்சம் அதிகமாக ஆக்கி 500 ரூபாயாவது உயர்த்திக் கொடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அதேபோல், தனியார் பள்ளிகளிலே 4,000 மாணவர்களுக்கு அனுமதி கொடுத்திருக்கிறீர்கள். அவர்களுக்கும் 120 ரூபாய் என்று

இருக்கக்கூடியதை, அரசுப் பள்ளி மாணவர்களுக்குக் கொடுப்பதைப்போல அந்த மானியத்தை உயர்த்திக் கொடுக்க வேண்டும் என்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

இன்னொன்று மிக முக்கியமானது. சுயசார்பு நிதி கல்லூரிகள் தற்போது அதிகமாகி வருகின்றன. தாழ்த்தப்பட்ட மக்கள் இது போன்ற கல்லூரிகளைத் தொடங்குவதற்கு வசதி இல்லாமல் இருக்கின்றார்கள். எனவே, ஆதிதிராவிட நலத் துறையே இந்த தொகையிலேயிருந்து கடனாகவோ அல்லது மானியமாகவோ கொடுத்துதவ வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல், சுயசார்பு நிதி கல்லூரியிலே பயிலுகின்ற மாணவர்களுக்கு அக்கட்டணத்தை அரசே ஏற்கும் என்று அறிவிக்கப்பட்டிருந்தது. ஆனால், அதற்கான நிதியைப் பற்றி இந்த ஆண்டு எதுவும் சொல்லாமல் இருக்கக்கூடியதைப் பற்றி நான் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன்.

அதேபோல் 1996 ஆம் ஆண்டிலேயிருந்து கல்லூரி மாணவர்களுக்குக் கட்டணம் போதவில்லை என்ற காரணத்திற்காக அவர்களுக்குக் கட்டணமாக 6,500 ரூபாயிலிருந்து 7,000 ரூபாய் வரை வழங்கப்பட்டிருக்கிறது. அது பல கல்லூரிகளிலே முறையாக, உடனடியாகக் கொடுக்கப்படுவதில்லை என்பதைச் சுட்டிக்காட்டுவதோடு, அது உடனடியாக வழங்கப்பட வேண்டும் என்று நான் இந்த நேரத்திலே கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

புத்தக வங்கியிலிருந்து ஒவ்வொரு மாணவருக்கும் ஒரு செட் புத்தகம் தனியாக வழங்கப்பட வேண்டும். தீண்டாமை ஒழிப்பிற்கு 1989 கொடுமை தடுப்புச் சட்டம் முறையாக அமலாக்கப்பட வேண்டும். அவர்களுக்கு கொடுக்கப்படக்கூடிய நஷ்டயீடுகளை 1989 ஆம் ஆண்டிலிருந்து கொடுப்பதற்கு இந்த அரசு ஆணையிட வேண்டும் என்று இந்த நேரத்திலே நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். (மணியடிக்கப்பெற்றது) நன்றி, வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: திரு. க. வேல்சாமி.

திரு. க. வேல்சாமி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தங்களுக்கு முதலில் எனது பணிவான வணக்கத்தைத் தெரிவித்துக்கொண்டு, எனது உடல்நலம் பாதிக்கப்பட்டு நான் அறுவை

சிகிச்சை பெற பெரிதும் காரணமாக இருந்த, எனது உயிரைக் காத்த மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கும், அடிக்கடி மருத்துவமனைக்கு வந்து மருத்துவர்களைச் சந்தித்து மருத்துவ வசதியைச் செய்து கொடுத்த மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்களுக்கும் எனது நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். ஆதிதிராவிட நலத் துறை மானியக் கோரிக்கையின்மீது பேசுகின்ற வாய்ப்பினை நல்கிய சட்டமன்றப் பேரவைத் துணைத் தலைவர் அவர்களுக்கு எனது நன்றியைக் கூறி, எனது சில கருத்துக்களைக் கூற முற்படுகின்றேன்.

இந்த ஆண்டு நிதிநிலை அறிக்கையில் ஆதிதிராவிட பழங்குடியினர் நலனுக்காக, கழகத் தலைவர் மாண்புமிகு முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள் ரூ. 334 கோடியை ஒதுக்கி, அது வரும் ஆண்டில் ரூ. 434 கோடியாக உயர்த்தப்படுகிறது என்று அறிவித்ததற்கு, ஆதிதிராவிட மக்கள் சார்பாக, அவர் செய்த இந்தப் பெரும் உதவிக்காக, நன்றியைத் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். அதுமட்டுமல்ல, 2,000 மாணவர்கள் படிப்பதற்காக 40 விடுதிகளை ஏற்படுத்திக் கொடுத்ததற்கும் எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

ஆதிதிராவிடர் பள்ளிகள் கட்டடத்திற்காக 172 இலட்சம் ரூபாய் அனுமதித்ததற்கும் மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கு நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். கல்லூரி மற்றும் தொழில் பயிற்சி விடுதிகளில் அரசு வழங்கும் கட்டணத்தை மாணவர் ஒருவருக்கு, மாதம் ஒன்றுக்கு 250 ரூபாயிலிருந்து 300 ரூபாயாகவும், 300 ரூபாயை 400 ரூபாயாகவும் உயர்த்திக் கொடுத்தமைக்கு எங்களது ஆதிதிராவிட மக்களின் சார்பாக நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். அதுமட்டுமல்லாமல், ஆதிதிராவிடர், பழங்குடியினருக்காக ஒதுக்கப்படும் காலியிடங்கள் அனைத்தும் நிரப்பப்படவுள்ளன என்ற செய்தியையும் இந்த நேரத்தில் நிதிநிலை அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்கள். அதற்காக என்னுடைய நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். அடிப்படை வசதிகளுக்காக 68 கோடி ரூபாய் ஒதுககிக் கொடுத்திருக்கிறார்கள். அந்த 68 கோடி ரூபாயிலே எங்களுக்கு அடிப்படை வசதிகள் செய்து கொடுக்க வேண்டுமாய் கேட்டுக்கொள்கிறேன்.

முற்பகல் 11-40

கூட்டுறவு வங்கி, சர்க்கரை ஆலைகளில் எழுத்தர் முதல் மேனேஜர் வரை உள்ள பதவிகளில் தாழ்த்தப்பட்டோர் இல்லாத நிலை இருந்து வருகிறது. கூட்டுறவு நிறுவனங்களான கூட்டுறவு சொசைட்டி, நகர கூட்டுறவு வங்கி, நில அடமான வங்கி, சென்ட்ரல் பாங்க் போன்றவற்றில் 18% இல்லாமல் இருந்து வருகிறது. எனவே, புதிதாக ஆட்களைப் போடும்போது தாழ்த்தப்பட்டவர்களுக்கு 15% கொடுக்க வேண்டுமென்று கழகத் தலைவர் டாக்டர் கலைஞர் அவர்கள் ஆணையிட வேண்டுமென்று பணிவோடு கேட்டுக்கொள்கிறேன். அதுமட்டுமல்லாமல், பதவி உயர்வு அளிக்கும்போது தாழ்த்தப்பட்ட அரசு அலுவலர்களுக்கு முன்னுரிமை கொடுக்க அரசு சட்டத்திருத்தம் கொண்டு வரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, நாமக்கல் மாவட்டத்திற்கு தாட்கோ அலுவலகம் இல்லாமல் இருக்கிறது. எனவே, ஒரு தாட்கோ அலுவலகத்திற்கு அனுமதி அளிக்குமாறு மாண்புமிகு முதல்வர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன். நாமக்கல் மாவட்டம், மோகனூர் வாய்க்கால் 15 மைல் நீளமுள்ளது. நாமக்கல் தொகுதியில் 5 மைல் தூரம் கடைமடைப் பகுதியாக முடிவடைகிறது. அது பொதுப்பணித் துறைக்குச் சம்பந்தப்பட்டது. அதிலிருந்து கொமாரிபாளையம், சங்கரம்பாளையம், பொய்யேறி, செல்லிபாளையம், ஒருபந்தூர், புதூர் வடுகப்பட்டி விவசாயிகளின் கடைமடைப் பகுதியாக இருப்பதால், அவர்களுக்கு வந்து சேரவேண்டிய தண்ணீர் வராத சூழ்நிலை இருக்கிறது. வாய்க்கால் மேடாகவும், காவிரி ஆறு பள்ளமாகவும் இருப்பதால், கொரம்பு அமைத்தாலும், கடைமடைப் பகுதிக்குத் தண்ணீர் சரியாக வருவதில்லை. வேலூர் ஜெபர்பாளையத்தில் காவிரி ஆற்றில் பெற்குலேட்டர் அமைத்து ராஜா வாய்க்காலில் கடைமடைப் பகுதியான வேலூர் வரை தண்ணீர் வருவதுபோல, எங்களுடைய மோகனூர் வாய்க்காலுக்கு மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் அவர்கள் ஒரு தடுப்புச் சுவர் இடையாற்றிலே கட்டி நிரந்தரமாகத் தண்ணீர் வருவதற்கு ஏற்பாடு செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மோகனூர்—வாங்கல் பாலம், நீண்ட நாளைய கோரிக்கையாகும். மாண்புமிகு முதல்வர் அவர்கள் அந்தத் திட்டத்தைப் பற்றிய அறிக்கை கேட்டிருப்பதாக இந்த மாமன்றத்தில் எங்களுடைய மாவட்டச் செயலாளர் எடுத்துக் கூறியிருக்கிறார். ஆகவே, அந்த மோகனூர்—

1998 ஏப்ரல் 29] [திரு. க. வேல்சாமி]

வாங்கல் பாலத்தை மாண்புமிகு முதல்வர் அவர்கள் எங்களுடைய பகுதிக்கு அறிவித்து, அவர்களுடைய பிறந்த நாள் பரிசாகக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

நாமக்கல் நகருக்கு அருகிலுள்ள கிராமத்தைச் சேர்ந்தவர்கள் லாரித் தொழிலில் அதிகமாக ஈடுபட்டு வருகிறார்கள். 'ஆட்டோ நகர்' என்று கடந்த ஆட்சியிலே ஆரம்பித்து நிதி ஒதுக்காமலே அந்தத் திட்டம் நின்று போய்விட்டது. 50 தொழிற்பேட்டைகளை மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் அவர்கள் இம்மாமன்றத்திலே அறிவித்தார்கள். அதில் 17 இடங்கள் தேர்வு செய்யப்பட்டு, மீதி 33 இடங்கள் தேர்வு செய்ய இருப்பதாகச் சொன்னார்கள். அந்த 33-ல் நாமக்கல் பகுதிக்கு ஒரு தொழிற்பேட்டை அமைத்துத் தருமாறு மாண்புமிகு முதல்வர் அவர்களைப் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

எருமைப்பட்டியில் போக்குவரத்து சரியாக இல்லாமல் இருக்கிறது. மாணவர்கள் பள்ளிகளுக்குச் செல்வதற்கு சரியாக. அவர்களின் நேரத்தைக் கணக்கிட்டு மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் நகரப் பேருந்து ஒன்றை செவந்திப்பட்டி வழியாக நாமக்கல் - தொட்டியம் வரை விடுமாறு கேட்டுக்கொள்கிறேன். ஏனென்றால், அது நாமக்கல் தொகுதியில் கடைமடைப் பகுதி. அந்தக் கடைமடைப் பகுதியிலிருந்து நாமக்கல்லை சுற்றித்தான் தொட்டியம் வரவேண்டியிருக்கிறது.

நாமக்கல் மாவட்ட வழக்கறிஞர்கள் சங்கம், மாவட்ட நீதிமன்றம் வேண்டுமென்று மாண்புமிகு முதல்வர் அவர்களிடம் கேட்டு இருக்கிறார்கள். ஆகவே, நாமக்கல் மாவட்டத்திற்கு ஒரு மாவட்ட நீதிமன்றம் அமைத்துத் தருமாறு பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

மாவட்ட ஆட்சியர் அலுவலகம் திருச்செங்கோடு ரோட்டில் அமைய இருக்கிறது. அதற்காக சிலுவம்பட்டி பஞ்சாயத்தில் மட்டும் சர்வே செய்யப்பட்டிருக்கிறது. ரோட்டுக்குத் தென்புறமாக இருக்கின்ற தும்மங்குறிச்சி பஞ்சாயத்துக்கும் சேர்த்து சர்வே செய்து மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகம் அமைப்பதற்கு மாண்புமிகு முதல்வர் அவர்கள் ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

முற்பகல் 11-45

பாலப்பட்டி-வாழவந்தி-வள்ளிபுரம் வழியாக, திருச்செங்கோட்டில் அமையவிருக்கும் மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகத்திற்கு, கூட்டுக்

குடிநீர்த் திட்டம் ஒன்றை அனுமதிக்கும்படி மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

மோகனூரிலிருந்து வளையப்பட்டி வழியாகவும், பொன்னேரி எருமைப்பட்டி வழியாகவும், அம்பாள்பாளையம் வரை கூட்டுக் குடிநீர்த் திட்டம் செயல்பட்டு வருகிறது. அது துரிதமாக நடைபெற்று, இந்த ஆண்டிலேயே குடிநீர் வசதி செய்து கொடுக்குமாறு மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

அதுமட்டுமல்லாமல், நாமக்கல் நகராட்சியில் பணிபுரியும் துப்புரவுத் தொழிலாளர்கள் வீட்டு வசதியில்லாமல் வாடகை வீடுகளில் அதிக வாடகை கொடுத்துக் கொண்டு வருகிறார்கள். குடிசை மாற்று வாரியத்தின் மூலம், நாமக்கல் நகரில் அடுக்குமாடி வீடு கட்டிக் கொடுக்குமாறு மாண்புமிகு குடிசை மாற்று வாரிய அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

நாமக்கல் அறிஞர் அண்ணா அரசினர் கலைக் கல்லூரியில், எம்.எஸ்சி. பூகோளப் பாடமும், எம்.ஏ. பொருளாதாரப் பாடமும் இல்லாமல் இருக்கிறது. அந்த இருபாடப் பிரிவுகளையும் அந்தக் கல்லூரியில் அனுமதிக்கும்படி மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களையும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களையும் கேட்டுக்கொள்கிறேன்.

எருமைப்பட்டி ஒன்றியம், செவந்திப்பட்டி கிராமம் கடைக்கோடியில் இருக்கிறது. அங்கு கால்நடை மருத்துவமனை ஒன்று வேண்டுமென்று அந்தப் பகுதி மக்கள் கேட்டுக் கொண்டிருக்கிறார்கள். அதேபோன்று, கீழ்சாத்தம்பூரிலும் ஒரு கால்நடை மருத்துவமனை வேண்டுமென்று கேட்டுக் கொண்டிருக்கிறார்கள். அந்த இரண்டு ஊர்களிலும், கால்நடை மருந்தகங்களை ஏற்படுத்தித் தருமாறு மாண்புமிகு கால்நடைத் துறை அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோன்று, கோனூர் கந்தபாளையத்தில் ஒரு ஆரம்பச் சுகாதார நிலையம் ஒன்று வேண்டுமென்று கேட்டுக் கொண்டிருக்கிறார்கள். அதையும் ஏற்படுத்தித் தருமாறு மாண்புமிகு முதல்வர் அவர்களையும், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்களையும் கேட்டுக்கொள்கிறேன். மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்களுடைய ஆலோசனையின் பேரில், அடுத்த ஆண்டிலாவது

அந்த ஆரம்பச் சுகாதார நிலையம் கிடைப்பதற்கு ஆக்கப்பூர்வமான பணியிலே ஈடுபட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

நாமக்கல், பழையபாளையத்தில், உயர்நிலைப்பள்ளி ஒன்று இருக்கிறது. அரசுக்குக் கட்டவேண்டிய ரூ.2 இலட்சமும் ஊர் பொதுமக்களால் கட்டப்பட்டிருக்கிறது. 10ஆம் வகுப்பில் 110 மாணவர்கள் படித்து வருகிறார்கள். போதிய கட்டட வசதியும் இருக்கிறது. ஆகவே, பழையபாளையம் அரசு உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாக உயர்த்தும்படி மாண்புமிகு முதல்வர் அவர்களையும், மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களையும் கேட்டுக்கொள்கிறேன். தூய்மையான நிர்வாகத்தைக் கொடுத்துக் கொண்டுவரும் மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கு, தமிழகத்திலுள்ள ஆதிதிராவிட மற்றும் அனைத்து மக்களும், துணை இருக்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டு, இம்மாமன்றத்திலே ஆதிதிராவிட மக்களுக்கு எந்த அளவுக்கு உயர்பதவிகளைக் கொடுத்திருக்கிறார்கள் என்பதை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்கள். அதுமட்டுமல்லாமல், இந்த மாமன்றத்திலே ஒவ்வொரு சமுதாயத்திற்கும் ஒரு அமைச்சரை கொடுத்ததோடு மட்டுமல்லாமல், துணைச் சபாநாயகரையும் ஒரு ஆதிதிராவிட சமுதாயத்தவராக கொடுத்ததற்கும் எங்கள் ஆதிதிராவிட மக்கள் சார்பாக நன்றிகூறி முடிக்கிறேன். நன்றி, வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: டாக்டர் பத்மா.

டாக்டர் பத்மா: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் மானியத்தில் பேச வாய்ப்பு அளித்த தங்களுக்கு நான் சார்ந்துள்ள தமிழ் மாநிலக் காங்கிரஸ் கட்சியின் சார்பாக நன்றியைத் தெரிவித்துக்கொண்டு, ஒருசில கருத்துக்களை எடுத்துக் கூற விழைகிறேன்.

தமிழக அரசு கொடுத்துள்ள இந்த மானியக் கொள்கைக் குறிப்பேட்டிலே, கடந்த ஆண்டு சாதனை என்று 19-ம், இந்த ஆண்டு சாதனைகள் என்று 15-ம் குறிப்பிடப்பட்டுள்ளது பாராட்டுக்குரியது. இந்தச் சமுதாயத்தைச் சேர்ந்த மக்கள் முன்னேற கல்வி ஒன்றுதான் அடிப்படைத் தேவை என்று கருதி செயல்படும் இந்த அரசுக்கு நான் தெரிவித்துக்கொள்ள விரும்புவது என்னவென்றால், 1981-ல், கல்வியறிவு பெற்ற ஆதிதிராவிடர்கள் 29.6 விழுக்காடு என்றும், பழங்குடியினர் 20.46 விழுக்காடு என்றும், 1991-ல், ஆதிதிராவிடர் 46.74 விழுக்காடு

என்றும், பழங்குடியினர் 27.89 விழுக்காடு என்றும் குறிப்பிட்டிருக்கிறீர்கள். 10 ஆண்டுகளுக்குள், ஆதிதிராவிடர் 15 விழுக்காடும், பழங்குடியினர் 7 விழுக்காடும் அதிகரித்துள்ளனர். 1991 முதல் 1998 வரை, 10 விழுக்காடு அதிகமாகக் கல்வியறிவு பெற்றவர்கள் இருப்பார்கள். ஆனால், தேர்ச்சி விழுக்காடோ 10ஆம் வகுப்பு, 1992-93-ல் 70 விழுக்காடும், 1996-97-ல் 57 விழுக்காடும், 12ஆம் வகுப்பு, 1992-93-ல் 62 விழுக்காடு என்றும், 1996-97-ல் 59 விழுக்காடு என்றும் குறைந்துள்ளது. எனவே, கல்வியறிவு அதிகமாகப் பெற்றிருந்தாலும், கல்வித் தரம் உயரவில்லை. எனவே, தேர்ச்சி விழுக்காடு குறைந்ததற்கான காரணத்தை கண்டுபிடித்து தக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமாய் அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

ஒருங்கிணைந்த தஞ்சாவூர் மாவட்டமாக இருந்தபோது, தஞ்சாவூரில் 8 ஆசிரியர் பயிற்சிப் பள்ளிகள் இருந்தன. தஞ்சாவூர், வேதாரண்யம், கருக்கத்தி, திருமுல்லைவாசல், ஆடுதுறை, திருச்சிற்றம்பலம், மன்னார்குடி என்ற 8 இடங்களில் 80-லிருந்து 100 மாணவர்களுக்கு மேல் ஆதிதிராவிடர்கள் கல்வியறிவு பெற்றவர்கள் இருக்கிறார்கள். ஒவ்வொரு மாவட்டத்திற்கும் இரண்டு ஆசிரியர் பள்ளிகள் அமைத்தால், அதில் ஆதிதிராவிடர்களுக்கும், பழங்குடியினருக்கும் முன்னுரிமை வழங்க வேண்டுமென்று மாண்புமிகு பேரவைத் தலைவர் மூலம், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

முற்பகல் 11-50

சுமார் 3 இலட்சத்து 6 ஆயிரம் ஆசிரியர்கள் பணியில் உள்ளனர். அவர்களில் 2 இலட்சத்து 60 ஆயிரம் இடைநிலை ஆசிரியர்கள். அவர்களில் ஓய்வு பெறுவோர் மற்றும் புதிய நியமனங்கள் போக ஆண்டுக்கு சுமார் 10,000 பணியிடங்கள் வருகின்றன. அதில் 19 சதவிகிதம் என்று கணக்கு பார்த்தால் 2000 பணியிடங்கள் வருகிறது. அவற்றை நிரப்புவதற்கு அரிசன மாணவர்கள் இடைநிலை ஆசிரியர்கள் பயிற்சி பெற வேண்டும். எனவே, ஒரு மாவட்டத்திற்கு இரண்டு ஆசிரியர் பயிற்சிப் பள்ளியை அமைப்பதற்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் முயற்சி எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். (மணியடிக்கப்பெற்றது)

மாண்புமிகு திரு. சமயநல்லூர் எஸ். செல்வராசு: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஆதிதிராவிடர் நலத் துறையில் இடைநிலை ஆசிரியர்கள் இல்லை என்ற ஒரு குறையைப்

போக்குவதற்காக மாண்புமிகு முதல்வர் அவர்கள் 17 மையங்களை ஆரம்பிப்பதற்கு 5 கோடி ரூபாய் ஒதுக்கி, இப்போது 17 மையங்களில் ஆசிரியர் பயிற்சிப் பள்ளிகள் இயங்கி வருகின்றன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

டாக்டர் பத்மா: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இன்னும் அதிகமாகப் பள்ளிகள் வேண்டும் என்றுதான் கேட்கிறேன். படிப்பறிவு பெற்றவர்கள் அதிகமாக இருக்கின்ற காரணத்தினால் ஒவ்வொரு ஆண்டும் ஆதிதிராவிட பள்ளிகளில் படிக்கும் மாணவர்கள் எண்ணிக்கை அதிகரித்துக் கொண்டே வருகிறது. எனவே, ஆசிரியர் தேவையும் அதிகமாக இருக்கும். கர்ம வீரர் காமராஜர் காலத்தில் ஒருங்கிணைந்த தஞ்சை மாவட்டத்தில் மட்டும் 8 இடங்களில் ஆசிரியர் பயிற்சிப் பள்ளிகள் இருந்தன என்பது குறிப்பிடத்தக்கது. எனவே, அதைப்போல மீண்டும் பயிற்சிப் பள்ளிகளை அதிகமாகத் திறக்க வேண்டும் என்றுதான் கேட்கிறேனே தவிர உங்களைக் குறை கூற வேண்டும் என்கிற எண்ணத்தில் நான் கூறவில்லை. ஆதிதிராவிடர்களுக்காக நடத்தப்படும் பள்ளிகளில் கிட்டத்தட்ட 3 இலட்சத்து 39 ஆயிரம் மாணவர்கள் படிக்கின்றனர். அதில் 10 சதவீதம் வேண்டுமானால் Other community -ஆக இருக்கலாம் ஆதிதிராவிடர் பள்ளிகள் அனைத்தும் மாவட்டத் தலைவரது பார்வையில் நடப்பதால் ஒருசில முதன்மை கல்வி அலுவலர்கள், உதவி கல்வி அலுவலர்கள் இன்ஸ்பெக்ஷன் செய்வதை நிறுத்தியிருக்கிறார்கள் என்பதை மிகுந்த வருத்தத்துடன் நான் தெரிவித்துக்கொள்கிறேன். (மணியடிக்கப்பெற்றது)

மாண்புமிகு திரு. சமயநல்லூர் எஸ். செல்வராசு: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஆதிதிராவிடர் நலத் துறையில் கோட்டாட்சியர் மற்றும் கல்வித் துறையில் பணியாற்றக்கூடிய மாவட்டக் கல்வி அலுவலர், முதன்மைக் கல்வி அலுவலர் இவர்கள் எல்லாம் சென்று இன்ஸ்பெக்ஷன், அதாவது ஆடிட் செய்யலாம் என்று உத்தரவிடப்பட்டிருக்கிறது என்பதை மாண்புமிகு உறுப்பினருக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

டாக்டர் பத்மா: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இத்தகைய குறைபாடுகள் வராமல் இருப்பதற்கும், பள்ளிகளில் பயிலும் மாணவர்கள் மேம்பாடு அடைவதற்கும் ஆதிதிராவிடர் பள்ளிகளுக்குத் தனியாக ஒரு சி.இ.ஓ. அல்லது டி.இ.ஓ. என்று மாவட்டத்திற்கு

ஒருவரையோ அல்லது 2, 3 மாவட்டங்களுக்கு ஒருவரையோ நியமிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். நாங்கள் எல்லாம் பள்ளிக்கூடத்தில் படிக்கும்போது சி.இ.ஓ., டி.இ.ஓ. இன்ஸ்பெக்ஷன் என்றால் ஒரு விழா போன்ற நிகழ்ச்சியாகவே அது இருக்கும். என்னுடைய வீட்டிலிருந்து 2 வீடுகள் தள்ளி ஒரு பள்ளிக்கூடம் இருக்கிறது. பெண்கள் உயர்நிலைப்பள்ளி. அங்கு என்றைக்கு சி.இ.ஓ. வருகிறார், என்றைக்கு டி.இ.ஓ. வருகிறார் என்ற அடிச்சுவடுகூடத் தெரியவில்லை. முன்பெல்லாம் ஆசிரியர்கள் இன்ஸ்பெக்ஷன் என்றால் ஒரு வாரத்திற்கு முன்பே பள்ளியை சுத்தம் செய்து, சார்ட் எல்லாம் தொங்கவிட்டு, இப்படி எவ்வளவு பொறுப்புகளை அவர்கள் எடுத்துக்கொள்வார்கள் என்பது உங்களுக்குத் தெரியும். ஆனால், தற்போது நடக்கின்ற இன்ஸ்பெக்ஷனில் அவர்கள் மேசையில் வந்து உட்கார்ந்துவிட்டு, கணக்கைப் பார்த்துவிட்டு சென்றுவிடுகிறார்கள். அதை உங்களுக்குத் தெரியப்படுத்தத்தான் நான் இதைக் கூறினேன். நான் இப்படிப் பேசுவதால் மாண்புமிகு முதல்வர் அவர்களையும், மாண்புமிகு அமைச்சர் அவர்களையும் குறை கூறுவதாக நினைக்க வேண்டாம்.

என்னுடைய திருவாரூர் மாவட்டத்தைப் பொறுத்தவரையில் தற்போதுள்ள ஆட்சித் தலைவர் அவர்கள் திறமையாக நிர்வாகம் நடத்துகிறார்கள். அதற்காக அவர்களை நான் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். என்னுடைய மாவட்டத்தைப் பொறுத்தவரையில் ஆதிதிராவிட நலத் துறையைச் சார்ந்த அத்தனை அலுவலர்களும் நேரம், காலம் பார்க்காமல் வேலை செய்கிறார்கள். மீதியுள்ள மாவட்டங்களில்தான் இந்தக் குறைபாடுகள் இருக்கின்றன என்று கூறுகின்றேன். எல்லா மாவட்டங்களிலும் எங்களுடைய மாவட்ட ஆட்சித் தலைவர் நடத்துவது போன்று ஆதிதிராவிடர் நலத் துறையில் இருக்கும் அனைத்து அலுவலர்களும் நடத்த வேண்டும், நல்லமுறையில் வேலை செய்ய வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

ஆதிதிராவிடர் பள்ளிகளில் மாலை நேரத்தில் டியூஷன் நடத்துவதற்கு Tutors, especially for Maths and Physics subjects-க்கு நியமித்தால் Professional Course-ல் சேருவதற்கு அது வாய்ப்பாக இருக்கும். அதை காலை 8 மணியிலிருந்து 9 மணி வரையிலோ அல்லது மாலை 4 மணியிலிருந்து 5 மணி வரையிலோ நடத்த ஆவன செய்ய வேண்டுமென்று மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் மூலமாக மாண்புமிகு முதல்வர் அவர்களை நான் கேட்டுக்கொள்கிறேன். மாநில

புள்ளிவிவரப்படி 24.5 விழுக்காடு தாழ்த்தப்பட்ட பழங்குடியினர் இருக்கிறார்கள்.

இந்த விழுக்காட்டிற்கு ஏற்ப மாநில அரசு அதிகாரிகள் புரமோசன் செய்யப்படவில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பட்டியலிட்டுக் காண்பித்திருக்கிறார்கள். தாழ்த்தப்பட்ட சமுதாயத்தைச் சேர்ந்தவர்கள் அனைத்துப் பதவிகளிலும் இருப்பதாகச் சொன்னார்கள். ஆனால், ஒன்றை நான் குறிப்பிட விடும்புகிறேன். இதில் விழுக்காடு குறைவாக இருக்கிறது என்ற குறை இருக்கிறதே தவிர, மாண்புமிகு முதல்வர் அவர்கள் நடத்துகின்ற இந்த அரசில் எந்தக் குறையும் இல்லை. எனவே, விழுக்காட்டை அதிகப்படுத்த வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

முற்பகல் 11-55

அடுத்து, இந்த 19 விழுக்காட்டை முழுமையாக அமல்படுத்த தக்க கவனம் செலுத்த வேண்டுமென்று நான் மாண்புமிகு முதல்வர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன். தனியார் பள்ளிகள், பாலிடெக்னிக்குகள் மற்றும் கல்லூரிகளில் இந்த ஒதுக்கீடு வழங்கப்படுவதில்லை. அதையும் முறைப்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினருக்கு குடியிருப்புகள் அமைத்துக்கொள்ள தற்போது வழங்கப்படும் இரண்டு சென்ட் நிலத்தை, ஐந்து சென்டாக உயர்த்தி வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். கர்மவீரர் காமராஜர் அவர்கள் பஞ்சமி நிலங்களை மீட்பு செய்து இத்திட்டத்திற்காகக் கொடுத்ததைப்போல, ஆக்கிரமிப்பில் உள்ள நிலங்களை மீட்டு இத்தகைய குடியிருப்புகளுக்கு அதிக இடத்தை ஒதுக்கிக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

குறிப்பாக, தஞ்சாவூர் மற்றும் திருவாரூர் மாவட்டங்களில் சில ஊர்களில் கோயில் நிலங்கள் அதிகமாக இருக்கின்றன. அவற்றையும் அரசு கையகப்படுத்தி, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடி மக்களுக்கு வீடு கட்டுவதற்கு ஒதுக்கிக் கொடுக்கும்படி கேட்டுக்கொள்கிறேன். என்னுடைய தொகுதியில் திருப்புகலூர் பஞ்சாயத்தில் அக்கினிபுரீஸ்வரர் ஆலயம் ஒன்று இருக்கிறது. திருப்புகலூர் கிராமம் முழுவதுமே கோயில் நிலம் என்று கூறுகிறார்கள். அங்கே ஆற்றின் கரையோரம் வசித்து வந்த ஆதிதிராவிடர்கள் பொதுப்பணித் துறையின் இடத்தில்

குடியிருந்ததன் காரணமாக, அவர்களை காலி செய்யச் சொல்வதன் அடிப்படையில் அவர்கள் திருப்புகலூர் பண்டார சன்னதி அவர்களை அணுகி, வாய்மொழி உத்திரவு பெற்று கோயில் நிலத்தில் குடியிருந்து வந்தனர். தற்போது அவர்களை அங்கிருந்து காலி செய்யச் சொல்லியிருக்கிறார்கள். அங்கே 42 குடியிருப்புகளைக் கட்டி அவர்கள் வாழ்ந்துகொண்டிருக்கிறார்கள். ஆனால், பண்டார சன்னதி அவர்கள் அதே இடத்தை வசதி படைத்தவர்களுக்கு விற்றுவிட்டு அரிசன மக்களைக் காலி செய்யும்படி சொல்லியிருக்கிறார்கள். இது எவ்வகையில் நியாயமாகும்? எனவே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும், மாண்புமிகு அறநிலையத் துறை அமைச்சர் அவர்களும், மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் அவர்களும் இதில் தலையிட்டு அந்த இடத்தை அரசு விலைக்கே ஆதிதிராவிட மக்களுக்கு வழங்கும்படி கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: திரு. சி. சுப்பிரமணி என்கிற சி.சு. மணி.

திரு. சி. சுப்பிரமணி என்கிற சி.சு. மணி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அண்ணாவின் இதயத்தை இரவலாகப் பெற்றுள்ள, இரக்கத்தின் இமயம், கருணைக் கடல், மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்களுக்கும், ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் அவர்களுக்கும், பூச்சி புழுக்களாய், புன்மைத் தேரைகளாய், சமுதாயத்தின் அடித்தளத்தில் உள்ள ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் சார்பில் இம்மானியக் கோரிக்கையில் பேச வாய்ப்பளித்தமைக்காக என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

எந்த ஒரு நாடு கல்வியில் சிறந்து விளங்குகிறதோ, அந்த நாடுதான் மக்களாட்சித் தத்துவத்தில் மகத்தான வெற்றி காணமுடியும். அதனை நன்கு உணர்ந்த, சமத்துவபுரம் கண்ட மாண்புமிகு முதல்வர் அவர்கள், பழங்குடியினர், ஆதிதிராவிடர் நலன் பேண கல்விக்கு முன்னுரிமை தந்தார்கள். சமுதாயத்தில் மேல் மட்டத்தில் இருப்பவர்கள் கல்வி பயின்றால் அது கீழ் மட்டத்தில் இருப்பவர்களுக்கு, கீழ் நோக்கிக் கசிதல் என்ற முறையில் சென்றடையும் என்று ஜான் மெக்கலே சொன்னார். ஆனால், மாண்புமிகு முதல்வர் அவர்கள் கீழ் மட்டத்தில் இருப்பவர்கள் உயர வேண்டுமென்றால், சம உரிமை பெற வேண்டும் என்றால் அவர்களுக்கும் நேரடியாகக் கல்வி போய் சேரவேண்டுமென்று

1998 ஏப்ரல் 29] [திரு. சி. சுப்பிரமணி என்கிற சி.சு. மணி]

எண்ணினார்கள். அதன் வழியே, அவர்தம் வாழ்விலே விழிப்புணர்வு ஏற்படும், கொத்தடிமை விலகும், மனித நேயம் மலரும் என்று நினைத்தார்கள். அந்த நினைப்பின் விளைவுதான் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினருக்காக அமைக்கப்பட்ட அனைத்து உயர்நிலைப் பள்ளிகளிலும், மேல்நிலைப் பள்ளிகளிலும் கணினிப்பாடம் தொடங்குதல், ஆய்வுக் கூடம் கட்டித் தருதல், ஆய்வுக்கான கருவிகள் வழங்குதல், இருக்கைகள் அளித்தல், அங்கு பணிபுரியும் ஆசிரியர்களுக்குக் கல்விப் பயிற்சி அளித்தல், கூடுதல் வகுப்பறைகள் கட்டுதல், முதுகலைப் பட்டதாரிகளுக்கு விடுதிகள் கட்டுதல் போன்ற எண்ணற்ற திட்டங்களை அறிவித்துள்ளார்கள். பள்ளியில் பயிலும் மாணவர்களுக்கு கூடுதல் பலன்களாக, கல்விக் கடனை 2,000-லிருந்து 7,000-ஆக உயர்த்துதல், விடுதிச் சேர்க்கைக்கான வருமான வரம்பை 15 ஆயிரத்திலிருந்து 50 ஆயிரமாக உயர்த்துதல், 12-ஆம் வகுப்பு வரை இரு இணை சீருடை வழங்குதல். மாணவர் விடுதி, உணவுக் கட்டண சலுகையை பொறுத்தவரையில் ரூ.202.50 என்பதை ரூ.300.00ஆக உயர்த்தி, இந்த நிதி ஆண்டில் ரூ.400 ஆக உயர்த்தியது. இளங்கலை மற்றும் முதுகலை மற்றும் தொழிற்கல்விப் படிப்பிற்கானவற்றில் 60 மதிப்பெண் பெறும் மாணவர்களுக்கு பரிசுத் தொகையாகக் கொடுத்த ரூ.1000/-ஐ ரூ.5000/-ஆக உயர்த்தியது. அது போல தொழிற்கல்வி நுழைவுத் தேர்வு விண்ணப்ப பதிவுக் கட்டணத்தைப் பொறுத்தவரையில் விதிவிலக்கு அளித்தது போன்ற அனைத்துத் திட்டங்களும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் உள்ளத்தில் மலர்ந்த மலர்களேயாகும்.

நண்பகல் 12-00

தீண்டாமை ஒழிப்பு வார விழா என ஏட்டளவிலே இருந்ததை, மனித நேய வார விழாவாக 1998-ஜனவரி 24-ந் தேதி முதல் 30-ந் தேதி வரை அமைத்து கொண்டாடியது சிறப்பானதாகும். மத்திய, மாநில அரசுகள் `Care bola' என்ற தொண்டு நிறுவனத்துடன் இணைந்து கொத்தடிமை ஒழிப்பு மாநாடு ஒன்றை சென்னையில் நடத்தியது. மாவட்ட அளவிலும் மண்டல அளவிலும் பல கருத்தரங்குகள் நடைபெற்றன. இவை அனைத்தும் முதலமைச்சரின் சீரிய முயற்சிக்கு ஒரு மைல் கல் ஆகும்.

நேரடிக் கடன் திட்டத்தில் நிறைவான செயல்பாட்டினால் தேசிய நிதி மற்றும் மேம்பாட்டுக் கழகம் நேரடிக் கடன்களை கடந்த ஆண்டு ரூ.11.60 கோடி அளித்துள்ளது என்பதை நிறைவுதரும் செயல்பாடாகும்.

வேலைவாய்ப்பு பயிற்சி அளிக்க சிப்காட் நிறுவனம் மூலம் ஒரு மாதக் கால பயிற்சி அளிக்கும் திட்டம் கடந்த ஆண்டு தொடங்கப்பட்டதும் மற்றும் கல்விக் குடும்பத் திட்டத்தை ஏற்படுத்தியதும் இவையெல்லாம் இவ்வரசின் முக்கியமான சாதனை ஆகும். வன்கொடுமை அகல, தேநீர் கடைகளில் தனிக் குவளை நீக்க ஆணைப்பிறப்பித்தது, கொத்தடிமை ஒழிப்பில் இந்த நாட்டிற்கே வழிகாட்டியாக விளங்குகிற இதைப் போன்ற அளவில்லாத் திட்டங்கள் வந்தவண்ணமாக இருக்கின்றன. இந்த மாதிரியான அளவில்லாத திட்டங்களை அள்ளி வழங்கும் நமது அரசு எனது அன்பு வேண்டுகோளை ஏற்று அதற்கு உரிய நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

திருவள்ளூர் மாவட்டம், திருவள்ளூர் நகரில் தனியார் கட்டடத்தில் இயங்கும் ஆதிதிராவிடர் பெணகள் விடுதிக்கு அரசு கட்டடம் கட்டித்தர ஆவன செய்ய வேண்டுமென்று நான் மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

செவ்வாப்பேட்டையில் ஒரே இடத்தில் இயங்கிவரும் ஆண்கள் மேல்நிலைப்பள்ளி மற்றும் பெண்கள் மேல்நிலைப் பள்ளிகளுக்காக ஒதுக்கப்பட்டுள்ள 5 ஏக்கர் நிலப்பரப்பில் கட்டடங்களை அமைத்து பள்ளிகளையும் நடத்தித்தர ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

திருவள்ளூர் மாவட்டத்திற்குத் தனியே தாட்கோ அலுவலகம் தொடங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். திருவள்ளூர் மாவட்ட ஆட்சியர் அலுவலகம் வீட்டுவசதி வாரியக் கட்டடத்தில் இயங்கிவருகிறது. எனவே மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தை அரசுக் கட்டடத்தில் இயங்க வழி செய்திட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதுபோல ஒருங்கிணைந்த நீதிமன்றமும் மற்றும் மாவட்ட அளவில் எல்லா துறைகளையும் திருவள்ளூரிலேயே இயங்கச் செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். முள்ரம்பாக்க கிராமத்திலுள்ள புறக்காவல் நிலையத்தை முழுக் காவல் நிலையமாக மாற்ற வேண்டுகிறேன். அதுபோல மாவட்ட அளவிலான சாலை கண்காணிப்பு ஆய்வு அமைப்பினையும் திருவள்ளூர் மாவட்டத்திலே ஏற்படுத்திக் கொடுக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

1998 ஏப்ரல் 29] [திரு. சி. சுப்பிரமணி என்கிற சி.சு. மணி]

திருமழிசை—சத்தியவேடு சாலை ஓரத்தில் மணல் எடுத்ததன் காரணமாக, சாலை துண்டிக்கப்பட்ட நிலையில் இருப்பதால் அந்தச் சாலையினைச் சரி செய்து கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அதுபோல, வெங்கத்தூரிலிருந்து அறங்கவாயல் வரை தடுப்புச் சுவர் அமைத்துத் தருமாறு கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: திரு. கொ.வீ. நன்னன்

திரு. கொ.வீ. நன்னன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஆதிதிராவிடர் மானியக் கோரிக்கையில் பேச வாய்ப்புத் தந்தமைக்கு என்து நன்றியையும், வணக்கத்தையும் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

பாரியோ முல்லைக்குத் தேர் கொடுத்தான்
பேகனோ மயிலுக்குப் போர்வையிட்டான்
கோரியப் புலவனுக்குத் தன் தலையைக்
கொடுக்கவோ தயங்கவில்லை குமணவள்ளல்
பாரிலே அழியாத புகழைப் பெற்ற
பரம்பரையின் தலைவிளக்காய் இக்காலத்தில்
வாரியே மக்களுக்கு வழங்கும் கொடை
வள்ளலே! கலைஞரே!! முதல்வரே வாழ்க! வாழ்க!!

பள்ளன், பறையன் சக்கிலியன் அந்த 'ன்' என்பதைப் பெயரிலிருந்து மாற்றி, கடைசியில் 'ர்' என்று ஆக்கிய முதலமைச்சர் அவர்களுக்கு மீண்டும், மீண்டும் என்னுடைய நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

"கஞ்சிக்கும் கூழுக்கும் கட்டமுழக் கந்தைக்கும்
கதியற்றுக் கண்கலங்கி கவலையுற்றுக் கைப்பிசைந்து
இஞ்சிக்கும் பருப்புக்கும் புளிமிளகா யுப்புக்கும்
இல்லையோர் வழியென்று ஏங்கித் தவித்தழுது
அஞ்சிக்கும் பிட்டுயெழும் பஞ்சைப் பராரிகளை
அலைகழித்தாட்டிவைத்து அச்சத்தில் மூழ்கவிட்டு
வஞ்சிக்கும் பாவிகளை வளைத்துத் துளைத்தெடுக்க
வழிகாணும் திருநாளும் வாராதோ ஒரு நாளும்!"

என்று ஏங்கிக் கொண்டிருந்த ஏழைகளுக்கு வாழ்வு கொடுக்க, சமுதாயத்தைக் குளிர்விக்க வந்ததுதான் இந்த அரசு என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

[திரு. கொ.வீ. நன்னன்] [1998 ஏப்ரல் 29

அந்தத் திருநாளை, அந்த இன்பத் திருநாளை எதிர்பார்த்திருந்த அடித்தள மக்களின் இதயத்தைக் குளிரவைக்கும் அரசுக்கு எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

ஆதிதிராவிடர்கள் என்பவர்கள் ஆதி உழைப்பாளர்கள். அன்றிலிருந்து இன்றுவரை உழைத்துப் பிழைப்பவர்கள். பிறர் உழைப்பை உறிஞ்சிப் பிழைக்கத் தெரியாதவர்கள். இந்தத் திருவிடத்தின் மூத்த குடிமக்கள். இந்த இனத்தில் பிறந்த நாங்களெல்லாம்கூட வெள்ளுடை தரித்து வேஷம் போடுவது சட்டம் தந்த சலுகையினால்தான். 'ஏன்? எதற்கு?' என்ற கேள்வியைக் கற்றுக் கொண்டது, முன்பு மாண்புமிகு முதல்வர் அவர்கள் திரை நிழலில் சாக்ரடீஸ் என்ற தத்துவ மேதையை உலவ விட்ட போதுதான். முதல்வர் அவர்கள் மனதிலே இருந்த எண்ணங்களை அந்தப் பாத்திரத்தின் வாயிலாகப் பேசவைத்து, பேசத் தெரியாத என் போன்ற ஊமைகளுக்குப் பேசக் கற்றுக் கொடுத்தார். அதற்காக நானும், நான் சார்ந்த இனமும் நன்றிக் கடன் பட்டிருக்கிறோம்.

பிற்பகல் 12-05

கருப்பர்கள் மேல் வெறுப்பர்களாக இருந்த வெள்ளை இனத்தின் தொல்லையை ஒழிக்க ஆப்ரகாம் லிங்கனைப் போன்ற அறிவு ஜீவிகள் அமெரிக்க மண்ணிலே அடியெடுத்துக் கொடுத்த சமுதாயப் போருக்கு, தென்னாட்டைப் பொறுத்தவரை பெரியார் விதையானார்; அண்ணா அவர்கள் பயிரானார்; மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள், பயன் கொடுக்க அதில் விளைந்த மணியானார். இடையிலே எண்ணற்ற தடைகள். நீரான நிதிப் பற்றாக்குறையினால் சமூகப் புரட்சிப் பயிர் செழித்து வளர முடியவில்லை என்பதுதான் நிதர்சனமான உண்மை.

உழைக்கும் கூலிக்கு ஒரு பொழுது உணவு. வரப்பில் நிற்பவர்தான் வாரிக் கொண்டு சென்று விடுகிறார். உணவுக்குத் தட்டுப்பாடு; உடைக்குக் கட்டுப்பாடு; இருக்கும் இடத்திற்கோ இடர்ப்பாடு. இப்படிப் பல பாடுகள். பாடுபட மட்டும் பிறந்த குடிக்கு இனிமேலும் துன்பம் தொடரக்கூடாது நமது ஆட்சியில் என்று மன்றாடி வேண்டுகிறேன்.

சென்ற ஆட்சியில் வீடுகள் கட்டிக் கொடுப்பதாகச் சொல்லி, கூடுகள் கட்டிக் கொடுத்திருக்கிறார்கள். இடித்து, இடித்துக் கட்டினாலும் இடம் போதவில்லை என்ற காரணத்தால்-தோட்ட மாளிகையோடு பல கூட்டு மாளிகையும், விரல்விட்டு எண்ண முடியாத மாளிகைகளை

எல்லைக்குள்ளும், எல்லை கடந்தும் கட்டி சொகுசாய் அதனைச் சுகித்து வாழ்ந்தவர்கள், 'இறந்தால் ஆறடி, இருந்தால் எட்டடி' என்று கணக்கிட்டு, வீடுகளென்ற பெயரில் கூடுகளைக் கட்டிக் கொடுத்ததை—அதை 400 சதுர அடிக்குக் குறையாது மாற்றித் தர வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

நிலமற்ற ஆதிதிராவிடர்களுக்குப் புறம்போக்கு நிலத்தைப் பட்டா செய்து கொடுக்கின்ற எண்ணிக்கையை இன்னும் அதிகப்படுத்த வேண்டும். ஏனென்றால், அந்தத் திட்டத்தில் பயன் பெற்றவர் எண்ணிக்கை, சதவிகிதத்தில் மிகக் குறைவு.

சாதி, மதப் பிரிவினைகளற்ற சமுதாயத்தை உருவாக்க 'சமத்துவபுரத்தை' இந்தியாவிலேயே மற்ற மாநிலங்களுக்கு முன்னோடியாக உருவாக்கி, சமுதாய மாற்றம் ஏற்பட சாதனை புரிந்த நமது மாண்புமிகு முதல்வரின் கீழ் உள்ள இந்த அரசை வருங்கால சரித்திரம் வாயாரப் பாராட்டும்.

தமிழகமெங்கும் ஆண்டுக்கு 50 சமத்துவபுரங்கள் என்பதை, தொகுதிக்கு ஒரு சமத்துவபுரம் என்று நமது அரசு செயல்படுத்தினால், அவரின் தொலைநோக்குப் பார்வை துரிதமாகி, சென்றடையும் தூரத்தைச் சீக்கிரம் சென்றடைய ஏதுவாகும்.

நடப்பாண்டு நிதிநிலை அறிக்கையில் ஆதிதிராவிடர்களைப் பற்றி அரசு அதிக அக்கறை செலுத்தியுள்ளமைக்கு, மாற்றாரும் மனமுவந்து பாராட்டுவார்கள் என்றே நம்புகிறேன்.

ஆதிதிராவிடர்களுக்கான துவக்கப் பள்ளிகள் நடுநிலைப் பள்ளிகளாக நிலை மாற்றம் செய்யப்படுவது; ஆதிதிராவிட மாணவர்களின் கல்லூரி, தொழிற் பயிற்சி விடுதிகளின் உணவுக் கட்டணம் கடந்த ஆண்டு ரூ.300ஆக உயர்த்திய நமது அரசு, நடப்பாண்டில் ரூ.400ஆக உயர்த்திக் கொடுக்கப்படுவது; அதேபோல், மருத்துவம், பொறியியல் படிப்புகளுக்கான நுழைவுத் தேர்வு விண்ணப்பப் படிவக் கட்டணத்திலிருந்து விலக்கு அளித்தது; பட்டியல் இனத்தவரும், பழங்குடி இனத்தவரும் தனியார் கல்வி நிறுவனங்களைத் தொடங்கி நடத்த நல்லாதரவு கொடுத்து ஊக்கப்படுத்துவது; 'சிப்காட்' மூலம் ஆதி திராவிட மாணவர்களுக்குத் தொழிற் பயிற்சி அளிப்பது; அதை மேலும் விரிவுபடுத்த முயற்சி செய்வது; தொழில் தொடங்கி நடத்த

மானியத்தோடு மூலதனம் அளிப்பது; இந்தத் தன்னிறைவுத் திட்டங்களோடு, தீண்டாமை என்ற எண்ணத்தையே தீண்டாமல் மக்கள் பழக, வன்கொடுமைச் சட்டத்தை வன்மையாகப் பயன்படுத்தி, சமுதாயச் சீர்கேடுகளைச் சரி செய்து அரசு ஆவன செய்திருப்பது ஆகியவற்றைப் பாராட்ட ஆசைப்படுகிறேன்.

இதுபோன்று, கல்வியில், தொழிலில், மன உணர்வுகளில் பட்டியல் இனமும், பழங்குடி இனமும் மேம்பாடு அடையச் செயலாற்றும் நமது அரசைப் பாராட்டுக்களால் நீராட்ட ஆசைப்படுகிறேன்.

நில எடுப்பு எடுத்து இலவசமாக வீட்டுமனை கட்டித் தரும் திட்டத்தில் 127 சதவிகிதம் இலக்கைத் தாண்டி விரைந்திருப்பது மிக மிகப் பாராட்டுதலுக்குரியது.

இந்த ஆண்டு கல்விக்கான உதவித் தொகைகள் மாணவர்களுக்கு உரிய காலத்தில் அதிகாரிகளால் தரப்பட்டுள்ளது. அது தொடர, அரசின் பங்களிப்பு தொடர வேண்டும் எனக் கேட்டுக்கொள்கிறேன். ஆயினும், இந்த அரசு தீட்டுகின்ற நல்ல பல திட்டங்கள் தேவைப்படுவோரைச் சென்றடையாமல், பயனாளிகள் பாதிப்படைவதற்கு, இடையில் உள்ள குறுக்கீடுகளாக, சட்டத் தடைகளும், அரசு அதிகாரிகளும் அமையாமல் பார்த்துக் கொள்வது நமது இன்றைய அரசின் தலையாய கடமையாகும். அதற்காக அரசு செவ்வனே செயலாற்றுமாறு மிகப் பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன்.

பயன்பெறத்தக்க திட்டங்கள் பட்டியல் இனத்திற்கும், பழங்குடி இனத்திற்கும் எத்துணை இந்த அரசு செய்திருந்தாலும், பற்றாக்குறை என்பது பக்கத்தில் வந்து கொண்டே இருக்கிறது. தற்போது சுய நிதி அடிப்படையில் கல்லூரிகளும், தொழில் கல்லூரிகளும் அமைக்கப்பட வேண்டுமென அரசு தெரிவிக்கின்றது. அப்படி ஆரம்பிக்கவும் படுகிறது. இந்த சுய நிதிக் கல்லூரிகளில் அதிகக் கட்டணம் செலுத்தி, பொருளாதாரத்தில் பின்தங்கிய பட்டியல் இன மக்களும், பழங்குடி இன மக்களும் எப்படிப் படிக்க முடியும்? ஆகவே, அவர்கள் படித்து முன்னேற, சுய நிதிக் கல்லூரிகளைப் பட்டியல் இனத்தவரும், பழங்குடியினருமே தொடங்க அரசு ஆவன செய்து, அந்தக் கல்லூரிகளைத் தொடங்கி நடத்த அரசு நிதி உதவி செய்ய வேண்டும்.

அதற்கு மானியமாக இல்லாவிட்டாலும் வட்டியில்லாக் கடனாகத் தந்து உதவுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

பிற்பகல் 12-10

அரசுத் துறைகளில் ஆயிரக்கணக்கான கோடி ரூபாய்களுக்குக் கட்டுமானப் பணி டெண்டர் விடுகிறார்கள். இந்தப் பணிகளில் பாதியாவது பட்டியல் இனத்திற்கும், பழங்குடி இனத்திற்கும் ஒப்பந்தக்காரர்களாகக் கட்டாயமாகத் தந்து உதவ வேண்டும். அதற்குத் தடையாக இருக்கும் சொத்து மதிப்பீட்டுச் சான்றிதழ் இல்லாமலேயே, அதற்கு விலக்களித்து ஒப்பந்தக்காரர்களாக அங்கீகரிக்க அரசு ஆவன செய்ய வேண்டுமாய்ப் பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன்.

போக்குவரத்துக் கழகங்களில் ஆண்டுக்கு ஏறக்குறைய ஆறாயிரம் பேருந்துகள் வாங்குகிறார்கள். அதற்கான நிதி ஆதாரங்களைத் தேடி அல்லல்படுகிறார்கள். கையில் வெண்ணெயை வைத்துக்கொண்டு நெய்க்கு அலைவதை விடுத்து, தாட்கோவில் வாகனக் கடன் வழங்குகிற திட்டத்தில் பயன்பெறுகிற பட்டியல் இனத்தவரிடமும், பழங்குடி இனத்தவரிடமும் ஒப்பந்தம் மூலமாக அவர்களுக்கு அந்தப் பேருந்துகளை வாங்கிக் கொடுத்து, போக்குவரத்துக் கழகங்கள் அந்த வாகனங்களைக் குத்தகைக்குப் பெற்றுக்கொண்டு, குத்தகைப் பணத்தில் தாட்கோவிற்குக் கட்டிய கடன் போக, பட்டியல் இனத்தவராகிய பயனாளிகள் பயன்பெற அரசு ஆவன செய்யுமாறு வேண்டுகிறேன்.

சவ்வாது மலைப் பகுதியில் மலைவாழ் மக்கள் வசித்து வருகின்றனர். போளூர், கலசப்பாக்கம், செங்கம் சட்டமன்றத் தொகுதிகள் அடங்கியுள்ளன. 12 ஊராட்சிகள் அமைக்கப்பட்டுள்ளன. ஒன்றிய அலுவலகங்கள் உள்ளன. ஆனால் அந்த மக்கள் வேலைவாய்ப்பு இல்லாமல் இருந்து வருகின்றனர். அங்கு அதிகமான அளவு விவசாயத்திற்கு மின் இணைப்புத் தர வேண்டும். தனியாக ஜமுனா மருதூரில் துணை மின் நிலையம் ஒன்று அமைக்கப்பட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

சாதிச் சான்று பெற போளூர், செங்கம் செல்ல வேண்டியுள்ளது. அந்த அவல நிலையைப் போக்க வேண்டும். அதற்காக சவ்வாது மலையில் தனியாகத் தாலுக்கா அலுவலகம் ஏற்படுத்த வேண்டும். சவ்வாது மலை, ஜமுனாமருதூரில் உள்ள மருத்துவமனையில் படுக்கை வசதிகளை ஏற்படுத்த வேண்டும்.

ஏழ்மை நிலையில் உள்ள ஆதிதிராவிடர் குடும்பத்தில் யாராவது இறந்துவிட்டால், அந்த ஈமச்சடங்கிற்கு மானியமாக ரூ. 500 வழங்கப்படுகிறது. அந்தத் தொகையை ரூ.2,000/- ஆக உயர்த்தித்தர வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, வாய்ப்புக்கு நன்றியையும், வணக்கத்தையும் தெரிவித்து விடைபெறுகின்றேன். நன்றி, வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: திரு. கே. தங்கமணி.

திரு. கே. தங்கமணி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பழங்குடியினர், ஆதிதிராவிடர் முதலியோர் நலன் குறித்த மானியக் கோரிக்கையின்மீது இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் சில கருத்துக்களை முன்வைக்க விரும்புகிறேன்.

அறிஞர்களும், சான்றோர்களும் கொண்ட இந்தியாவில், பிறப்பால் உயர்ந்தவன், தாழ்ந்தவன் என்ற இழிநிலையை அகற்ற எண்ணற்ற தியாகங்களைச் செய்து, தீண்டாமை என்ற கொடுமையை எதிர்த்துப் பலர் போராடினார்கள். ஆனால், நமது நாட்டில் ஜாதி மத வெறியைத் தன்னகத்தே கொண்டு பல நூறு ஆண்டுகளாக இருந்துவரும் பிறப்பால் இழிந்தவன் என்ற இந்துத்துவ வருணாசிரம ஆதிக்கத்தை மீண்டும் அமல்படுத்துகிற ஒரு ஆட்சியாக, பாரதிய ஜனதாக் கட்சியின் ஆட்சி மத்தியில் அதிகாரத்திற்கு வந்திருப்பது என்பது வேதனையான ஒன்று என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

தமிழ்நாட்டில்கூட, ஜாதிய ஆதிக்கத்தை, எண்ணற்ற ஜாதிக் கொடுமைகளை எதிர்த்து, தந்தை பெரியார் அவர்களும், கம்யூனிஸ்ட் இயக்கமும், திராவிட இயக்கமும் நின்று இருக்கின்றன; அந்தக் கொள்கையில் இன்றுவரை உறுதியாக அந்த இயக்கங்கள் சென்று கொண்டிருக்கின்றன என்பதையும் இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்கிறேன்.

தமிழ்நாட்டில் ஏற்பட்ட ஜாதிக் கலவரங்களால் விரும்பத்தகாத சில நிகழ்ச்சிகள் நடைபெற்றன. மாண்புமிகு முதல்வர் அவர்கள் உறுதியான நடவடிக்கை எடுத்து, மேலும் பரவாமல் தடுத்திருப்பது மிகவும் வரவேற்கத்தக்கது. இனிமேலும் ஜாதிக் கலவரங்கள் தமிழ்நாட்டில் ஏற்படாமல் தடுக்க, தொடர்ந்து முயற்சிகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

அரசு அமைத்துள்ள குழுவின் பரிந்துரைகளை அமல்படுத்தவும், பழங்குடி மக்களுடைய அடிப்படைத் தேவைகளைப் பூர்த்தி செய்யவும் நடவடிக்கை எடுக்க வேண்டும். இரு சமூகத்தினரிடையே நெருக்கத்தை உருவாக்க வேண்டி அரசு தகுந்த நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன். அதுபோல, தமிழகத்தில் கடந்த ஆண்டு இட ஒதுக்கீடு சம்பந்தமாக மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் அவர்கள் தலைமையில் குழு ஒன்று அமைக்கப்பட்டது என்பதைக் குறிப்பிட்டார்கள். அதை நான் வரவேற்கிறேன்.

தமிழகத்தில் நிரப்பப்படாமல் உள்ள காலியிடங்களைக் கண்டறிந்து, எந்தத் துறைகளில் காலியிடங்கள் இருக்கின்றனவோ, அவற்றையெல்லாம் நிரப்புவதற்கான உரிய நடவடிக்கைகளை, வரக்கூடிய காலங்களில் வேகமாகச் செய்ய வேண்டும். அரசின் அனைத்துத் துறைகளிலும் காலியிடங்கள் இருக்கின்றன. எனக்கு முன்னால் பேசிய மாண்புமிகு உறுப்பினர் திரு. கிருஷ்ணசாமி அவர்கள் தெரிவித்ததுபோல, எல்லாக் காலியிடங்களையும் நிரப்புவதற்கான வேகமான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.

தமிழகத்தில் இருக்கக்கூடிய தேர்வாணைக் குழு சரியாக நடந்து, உயர்மட்டக் குழுவிடம் சரியான தகவல் கொடுக்கவில்லை என்பதாக நான் அறிகிறேன். இது போக்கப்பட்டு, காலி இடங்களை நிரப்ப நடவடிக்கை எடுக்கக் கேட்டுக்கொள்கிறேன். நாடு சுதந்திரம் அடைந்து 50 ஆண்டுகள் முடிந்து, பொன் விழாவைக் கொண்டாடிக் கொண்டு இருக்கிறோம். ஆனால், ஆதிதிராவிட மக்கள் குடியிருப்பு மனை கோரி மனுச் செய்கின்ற அவலமும் இருக்கிறது. மாண்புமிகு முதல்வர் அவர்கள் குடியிருப்பு மனைகள் வழங்குவதில் உறுதியான நடவடிக்கைகளை தி.மு.க. ஆட்சிக்கு வரும்போதெல்லாம் எடுத்து வந்துள்ளார்கள். இருந்தாலும், இந்த நூற்றாண்டின் இறுதிக்குள் ஆதிதிராவிட மக்கள் அனைவருக்கும் குடியிருப்பு மனைகள் வழங்கி, குடியிருப்புகளைக் கட்டி முடிக்கவும் நடவடிக்கை எடுக்க வேண்டும். ஆதிதிராவிட மக்களுக்குக் கட்டிக்கொடுக்கும் தொகுப்பு வீடுகளின் எண்ணிக்கை அதிகரிக்கப்பட வேண்டும். அதனை, தொகையை வைத்து மதிப்பிடக் கூடாது என்பதையும் இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன்.

பிற்பகல் 12-15

அதேபோல, ஆதிதிராவிட மக்கள் வாழும் குடியிருப்புகளுக்குக் குடிநீர் வசதி, சாலை வசதி, மின் வசதி போன்ற வசதிகள் செய்து கொடுப்பதிலே அரசு மிகுந்த கவனம் செலுத்த வேண்டும். ஆதி திராவிட மக்களுக்கு இன்னும் சுடுகாட்டிற்குச் செல்வதற்கு வழி இல்லை. சுடுகாட்டிற்குச் செல்ல இடம் இல்லை. இடம் இருந்தால், சுடுகாட்டிற்குச் செல்வதற்குப் பாதை இல்லை. எனவே, இந்த நிலையையும் போக்க அரசு தீவிர நடவடிக்கை எடுக்க வேண்டும். இறந்தவர்களைத் தூக்கிச் செல்லக்கூட சில இடங்களில் அனுமதிப்பது இல்லை. தஞ்சை மாவட்டத்தில் அப்படி இறந்தவர்களைத் தூக்கிச் சென்றதால், அந்த வழியாகச் செல்வதைத் தடுப்பதற்காக அங்கிருந்த பாலத்தைக்கூட இடித்துவிட்டதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன. இராமநாதபுரம் மாவட்டம் திருவாடனை தொகுதியில், ஒரு கிராமத்தில் பாதையை ஆக்கிரமித்து 3 மணி நேரம் பிரேதம் செல்வதைத் தாமதப்படுத்தினார்கள். அந்த இடத்தைக்கூட நான் சென்று பார்த்து வந்திருக்கிறேன்.

சாதி சமயமற்ற சமுதாயத்தை உருவாக்கும் நோக்குடன் மாண்புமிகு முதல்வர் அவர்கள் அறிவித்த சமத்துவபுரத் திட்டத்தை முழுமனதோடு நான் வரவேற்கிறேன். ஆதிதிராவிடர், பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் இதர இனத்தவர்களையும் இணைத்து உருவாக்கும் சமத்துவபுரத்தில் மக்களின் இணக்கத்தையும், ஐக்கியத்தையும், மனித நேயத்தையும் உருவாக்கும் நெறிமுறைகளை ஆரம்பத்தில் இருந்தே கொண்டுவர வேண்டும் என்றும் கேட்டுக்கொள்கிறேன்.

ஆதிதிராவிட மற்றும் பழங்குடிச் சமுதாயம் பாதுகாப்பற்ற நிலையிலேயே இன்னும் உள்ளது. அவர்களுக்கு நிரந்தரமான பாதுகாப்புத் தேவை. எல்லாத் துறைகளிலிருந்தும் இந்தச் சமுதாயத்திற்கு நீதி கிடைக்க வேண்டும். சுய மரியாதையும், சுதந்திரமான வாழ்க்கையும் இந்தச் சமுதாயம் பெற்றாக வேண்டும்.

கொள்கைக் குறிப்பில் '25,008 பேர் கொத்தடிமைகளாக இருப்பது கண்டறியப்பட்டது' என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும் இதன் எண்ணிக்கை கூடும். இதற்கு முற்றுப்புள்ளி வைக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அடிமைகளை விடுவித்து, வாழ்வு அளிக்க அரசு

அனைத்து முயற்சிகளையும் மேற்கொள்ள வேண்டும் என்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

கிராமங்களில் டீயை இன்னும் தனிக் குவளையில் தருவதுதான் நடைமுறையில் இருக்கிறது. இந்த முறை இன்னும் ஒழிக்கப்படவில்லை. ஆயிரம் வழக்குகள் போடப்பட்டுள்ளதாகக் கொள்கை விளக்கக் குறிப்பில் குறிப்பிடப்பட்டு இருக்கிறது. வழக்குகளுக்கு உள்ளானவர்களே இன்னும் அந்த முறையை மாற்றவில்லை. இதில் நடவடிக்கை எடுக்க வேண்டிய அதிகாரிகளே துணை போகின்ற நிலைமை இருக்கின்றது. வன்கொடுமைச் சட்டத்தைத் தொய்வின்றி நடத்த வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

ஆதிதிராவிடர் நல தனித் தாசில்தார் 6 மாதத்துக்குக்கூட ஒரு இடத்தில் இருப்பது இல்லை. பனிஷ்மென்ட் செய்யப்பட்ட அதிகாரிகள்தான் அங்கு தாசில்தாராக வருகிறார்கள். எனவே, இதை மாற்றி நேரடியாகத் தனித் தாசில்தார்கள் நியமிக்கப்பட வேண்டும் என்றும், அதற்கு அரசு பெருமுயற்சி எடுக்க வேண்டும் என்றும் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, பழங்குடி மக்கள். பழங்குடி மக்கள் வாழும் பகுதிகளை அட்டவணைப்படுத்த வேண்டும். அந்தப் பகுதிகளைப் பழங்குடி வட்டங்களாக வரையறுக்க வேண்டும். (மணியடிக்கப்பெற்றது) அவர்களுக்கு அடிப்படை வசதிகளை அளிப்பதில் உள்ள நடைமுறைச் சிக்கல்களைக் கண்டறியவும், தீர்வு காணவும் ஒரு சிறப்புக் குழு நியமிக்கப்பட வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

பழங்குடியினர் ஆண்டாண்டுக் காலமாக விவசாயம் செய்து கொண்டிருக்கும் நிலங்களை அவர்களுக்குப் பட்டா போட்டுக் கொடுக்க வேண்டும். பட்டா கிடைக்காத காரணத்தால்தான் வனத் துறையினர் பழங்குடியினர் பகுதிகளுக்குள் நுழைந்து அந்த மக்களைக் கொடுமைப்படுத்தக்கூடிய சூழ்நிலை உள்ளது. இது தடுக்கப்பட வேண்டும். குறிப்பாக, இந்தப் பகுதி மக்களில் பெண்களின் பாதுகாப்பு விஷயத்திலே அரசு உறுதியான நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மலைவாழ் மக்களுக்கு சாதிச் சான்றிதழ் கொடுப்பதில் மிகுந்த சிரமம் ஏற்படுகிறது. இதைப் போக்க, அதிகாரிகள் சரியாக நடந்து

கொள்ளவில்லை. குறிப்பாக, பரமக்குடியில் காட்டுநாயக்கர் என்ற சாதியினருக்கு சாதிச் சான்றிதழ் வழங்க கோர்ட் தீர்ப்பு வழங்கியும், முன்னோர்கள் வாங்கிய சாதிச் சான்று ஆவணங்களைக் கொடுத்தாலும்கூட, நானே நேரில் சென்று பல தடவை தெரிவித்தும், பரமக்குடி ஆர்.டி.ஓ., சுமார் 4 மாதங்களாக, சாதிச் சான்று தர மறுக்கிறார். இதனால் எப்போதாவது கிடைக்கும் பதவி உயர்வு தடைபடுகிறது என்பதை அரசின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். (மணியடிக்கப்பெற்றது) இன்னும் ஒரே ஒரு நிமிஷத்தில் முடித்துவிடுகிறேன். இன்னும் சில அதிகாரிகள், 'உன்னைப் பார்த்தால் பழங்குடியினராகத் தெரியவில்லையே; நீ உயர்ந்த வகுப்பைச் சேர்ந்த மாதிரித் தெரிகிறாயே' என்று சொல்லக்கூடிய நிலை இருக்கிறது. இது மாற்றப்படவேண்டும். இறுதியாக, ஒன்றே ஒன்றை மட்டும் சொல்லிவிடுகிறேன். இந்தக் கொள்கை விளக்கக் குறிப்பில் ஆதி திராவிடர் நலத் துறை மூலம் மாநிலம் முழுமைக்கும் இரண்டு சமுதாயக் கூடங்கள் கட்டப்படும் என்று தெரிவிக்கப்பட்டிருக்கிறது. இது உள்ளபடியே வேதனை அளிப்பதாக இருக்கிறது. தமிழ்நாட்டில் 234 தொகுதிகள் இருக்கின்றன. வருடத்திற்கு இரண்டு என்றால் மிகவும் குறைவு. குறைந்தது 50 என்று அந்த எண்ணிக்கையை உயர்த்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். வணக்கம்.

பிற்பகல் 12-20

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: அடுத்து, திரு. உ. திசைவீரன்.

***திரு. உ. திசைவீரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்தியத் திருநாட்டினுடைய முதல் குடிமகனாக ஒரு தலித் பதவியேற்றுள்ள இந்த அரிய வேளையில், அவர் அப்படிப் பதவி ஏற்பதற்கு அல்லும் பகலும் பாடுபட்ட நம்முடைய தானைத் தலைவர் கலைஞர் அவர்களை வணங்கி, கடந்த காலத்திலே இலவச வீட்டுமனைப் பட்டா வழங்குவதும், காலனிகள் கட்டித் தருவதுமாக இருந்த இந்தத் துறையை முழுவதுமாக மாற்றி, அடிமைத் தளத்திலே இருக்கின்ற இந்தச் சமுதாய மக்களை கல்வி, வேலைவாய்ப்பு, பதவி உயர்வு மற்றும் பொருளாதாரத்திலும் மேம்பாடு அடையச் செய்த தானைத் தலைவர் கலைஞர் அவர்களை இந்தச் சமுதாயம் என்றைக்கும் மறக்காது என்று கூறி, இந்த ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலன் பற்றிய மானியக் கோரிக்கையில் என்னையும் பேச அழைத்த

தங்களுக்கும், நமது தமிழகத்தின் முதல்வர் அவர்களுக்கும் நன்றி கூறி என் உரையைத் தொடங்குகிறேன்.

1955-லே ஒரு கோடி ரூபாய் என்ற அளவில் இந்த மானியத்திற்கு ஒதுக்கியிருந்த நிதியை இன்றைக்கு ரூ. 434 கோடியாக உயர்த்தி, அனைத்து வசதிகளையும் செய்து கொடுத்ததற்காக, அதற்கு அனுமதி அளித்த டாக்டர் கலைஞர் அவர்களுக்கு இரண்டு கோடி தாழ்த்தப்பட்ட மக்களின் சார்பாக நன்றி கூறிக் கொள்கிறேன். 1997--98-லே 662 இடைநிலை ஆசிரியர்களையும், 39 முதுநிலைப் பட்டதாரி ஆசிரியர்களையும், 77 பட்டதாரி ஆசிரியர்களையும் பணியமர்த்தி, தாழ்த்தப்பட்ட மக்களுடைய வாழ்விலே விளக்கேற்றிய தமிழக அரசை நான் மனதாரப் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். அதுமட்டுமல்லாமல், 17 அரசு ஆசிரியர் பயிற்சிப் பள்ளிகளில் கூடுதலாக 50 இடங்கள் ஒதுக்கித் தந்து, இன்றைக்குப் பின்னடைவில் இருக்கிற அனைத்து ஆசிரியர் பணியிடங்களையும் நிரப்ப வழி செய்த நமது அரசை நான் மனதாரப் பாராட்டுகிறேன்.

இராமநாதபுரம் மாவட்டத்தில் சுமார் 53 பட்டதாரி ஆசிரியர்களை இடைநிலை ஆசிரியர்களாகப் பதவியேற்க வைத்த நமது அரசை மனதாரப் பாராட்டுகிறேன். முக்கியமாக, கல்லூரி மாணவர்களுடைய உறைவிடக் கட்டணம் ரூ. 202.50 என்று இருந்ததை மாற்றி, இன்றைக்கு ரூ. 400 ஆக உயர்த்தியிருக்கிறீர்கள். அதேபோல, பள்ளி மாணவர்களுக்கும் ரூ. 180-லிருந்து ரூ. 250 ஆக உயர்த்தித் தர வேண்டுமென்று கோரிக்கை விடுக்க ஆசைப்படுகிறேன். அதுமட்டுமல்லாமல், அங்கே படிக்கும் மாணவர்களுக்கு இலவசச் சீருடை அளிக்கிறார்கள். அது காட்டனாக இருப்பதால் அதை முதன்முதலாகப் போடும்போது சரியாக இருக்கிறது. ஆனால், துவைத்தவுடன் போதவில்லை. எனவே, ஒவ்வொரு பள்ளிக்கும் ஏற்றவாறு அந்தப் பள்ளியில் என்ன சீருடை அனுமதிக்கப்படுகிறதோ, அதே கலரில் டெரிகாட்டன் துணியை வழங்க அரசு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று இந்த நேரத்தில் நான் கூறிக்கொள்கிறேன்.

தேசிய அட்டவணை இனத்தவர் நிதி மற்றும் மேம்பாட்டுக் கழகத்தின் மூலம் சென்ற ஆண்டு ரூ. 17.60 கோடி அளவுக்கு நீங்கள் கடன்களை வழங்கியிருக்கிறீர்கள். அது போதாது. குறைந்தபட்சம் 100 கோடி ரூபாய் கடன் வழங்க மத்திய அரசைக் கேட்டுக்கொள்ள வேண்டும். எதற்கெடுத்தாலும் டெல்லிக்குப் போய்த்தான் அனுமதி பெற

வேண்டுமென்ற நிலையை மாற்றி, தமிழக அரசு 10 இலட்சத்திற்குள்ளாக உள்ள தொகையை சாங்ஷன் செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும். மாநில அட்டவணை இனத்தவர் நிதி மற்றும் மேம்பாட்டுக் கழகத்திலே 100 கோடி ரூபாய் இந்த ஆண்டு ஒதுக்கி, இப்படிப்பட்ட மக்களுக்குப் பல்வேறு நன்மைகளைச் செய்து கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். குறிப்பாக, ஈமக்கிரியைகளுக்கு வழங்கப்படும் ரூ. 200-ஐ ரூ. 500 ஆக உயர்த்தியது, தொகுப்பு வீடுகள் கட்ட, ரூ. 27,000-ஐ ரூ. 32,000 ஆக உயர்த்தித் தந்தது ஆகியவற்றிற்காக எங்கள் பகுதியில் இந்த அரசை மனதாரப் பாராட்டுகிறார்கள். தீண்டாமையை ஒழிக்க, நெல்லை, மதுரை, தஞ்சை, திருச்சி மாவட்டத் தலைநகர்களில் தனி அமர்வு நீதிமன்றம் உருவாக்கியிருக்கிறீர்கள். அதுமட்டும் போதாது. அரசு, நிலத்தைக் கையகப்படுத்துகிறபோது இன்றைக்கு அனைவரும் கோர்ட்டுக்குப் போகக்கூடிய சூழ்நிலை இருப்பதால், அதைத் தீர்ப்பதற்குத் தனியாகக் கோர்ட் ஏற்படுத்தவேண்டும். ; சமுதாயக் கூடங்கள் வருடத்திற்கு இரண்டு கட்டுவதாகச் சொல்லப்பட்டிருக்கிறது. கிராமங்களில் திருமண விழாக்களில் மண் தரையில் உட்கார்ந்து சாப்பிடுகிற நிலை ஏற்படுகிறது. ஆகவே, ஆண்டுக்கு 50 சமுதாயக் கூடங்களாவது கட்ட வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

பிற்பகல் 2-25

அடுத்ததாக, சமுதாயக் கிணறுகள். தாழ்த்தப்பட்ட மக்கள் அதிகமாக (மணியடிக்கப்பெற்றது) வாழக்கூடிய பகுதிகளில் சமுதாயக் கிணறுகளை நீங்கள் கட்டித்தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

முக்கியமாக, 1974 ஆம் ஆண்டின் சட்டப்படி 19 சதவீதம் தனியார் பேருந்து உரிமைகளை நீங்கள் வழங்க வேண்டும். ஆனால், தமிழகத்திலுள்ள சட்டத்தின்படி இன்று தனியாருக்கு அந்த உரிமை இல்லை என்று நான் அறிகின்றேன். அதனால், தாழ்த்தப்பட்ட மக்களுக்குக் கண்டிப்பாக அந்தச் சதவீத அடிப்படையில் நீங்கள் வழங்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, பத்திரப் பதிவுத் துறையிலே, பத்திர எழுத்தர், பத்திர விற்பனையாளர் போன்ற பணிகளிலும் நீங்கள் இட ஒதுக்கீடு அளிக்க வேண்டும். அதேபோல, இன்றைக்கு மதுபானக் கடைகள் இருக்கின்றன. மேலும், கேஸ் டீலர், பெட்ரோல் பங்க் அமைப்பது போன்ற மத்திய

அரசினால் இட ஒதுக்கீடு அடிப்படையில் ஒதுக்கப்படுபவைகள் இருக்கின்றன. இவைகளிலே மத்திய அரசு எந்த அளவிற்கு இட ஒதுக்கீடு கொடுக்கின்றதோ, அதே அளவிலே மதுபானக் கடைகளுக்கான உரிமையை வழங்குகின்ற வேளைகளிலும், அவர்களுக்கு இட ஒதுக்கீடு தர வேண்டுமென்று அன்போடு கேட்டுக்கொள்கின்றேன்.

அடுத்து, அரசு ஒப்பந்தப்புள்ளிகள். ஒப்பந்தப்புள்ளிகள் கோருகின்றபோது ஒரு சில குறிப்பிட்ட பணிகளைத் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு ஒதுக்கித்தர வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கின்றேன்.

அடுத்து முக்கியமான ஒன்று. மருத்துவப் பட்ட மேற்படிப்பு, எம்.எஸ்., எம்.சி.எச்., டி.எம். (ரேடியாலஜி) போன்ற படிப்புகளிலே தமிழகத்திலே இட ஒதுக்கீடு இல்லையென்று சொல்கின்றார்கள். தாழ்த்தப்பட்ட, பிற்படுத்தப்பட்ட மக்கள் மருத்துவப் பட்ட மேற்படிப்பு படிக்கக்கூடிய ஒரு சூழ்நிலை இல்லாமல் இருக்கிறது. எனவே, இதை அரசு கவனத்துடன் பரிசீலித்து, அந்தப் படிப்புகளிலும் பாண்டிச்சேரியிலே இருப்பதைப் போல, சுழற்சி முறையிலே நீங்கள் அவர்களுக்கு வாய்ப்பு அளிக்க வேண்டுமென்று இந்த நேரத்தில் நான் கூறிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன் (மணியடிக்கப்பெற்றது).

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: அடுத்து, திரு. எஸ்.எஸ். முகம்மது இஸ்மாயில்.

திரு. எஸ்.எஸ். முகம்மது இஸ்மாயில்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 1998–99ஆம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கையில், இன்று நடைபெறுகின்ற பழங்குடியினர், மலைவாழ் மக்கள், ஆதிதிராவிடர், பட்டியல் சாதியினர் நலன் குறித்த மானியக் கோரிக்கையின் மீது நான் சார்ந்துள்ள இந்திய தேசிய லீக் கட்சியின் சார்பில் சில கருத்துக்களை இம்மாமன்றத்தில் எடுத்து வைக்க விரும்புகிறேன். அனுமதி வழங்கிய தங்களுக்கும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

தமிழகத்தினுடைய தானைத் தலைவர் டாக்டர் கலைஞர் அவர்கள், பொறுப்பேற்றுள்ள 2 ஆண்டுக் காலத்திலே நல்லாட்சி நடத்தி வருகின்றார்கள். ஏழை, எளிய மக்கள், பாமர மக்கள், நடுத்தர மக்கள், வியாபாரிகள், விவசாயிகள், அரசு அலுவலர்கள், ஆசிரியர்கள் அனைவரும் பாராட்டும் வண்ணம், நிதி நிலை அறிக்கையில் சம்பள

உயர்வு, வரிச் சலுகைகளையெல்லாம் வழங்கி அனைவரின் பாராட்டுதல்களையும், வாழ்த்துக்களையும் பெற்று நல்லாட்சி நடத்தி வருகின்றார்கள். ஆனால், இவ்வரசைக் கலைக்க வேண்டும்; 356, 352 ஆகிய அரசமைப்புச் சட்டப் பிரிவுகளைப் பயன்படுத்திக் கலைக்க வேண்டுமென்று சதித் திட்டம் தீட்டி, மத்திய அரசிடம் தொடர்ந்து வற்புறுத்தி வருகின்றார்கள். அறுதிப் பெரும்பான்மையோடு தேர்ந்தெடுக்கப்பட்டு, தோழமைக் கட்சிகளின் பெருத்த ஆதரவோடு சிறப்பாக ஆட்சி செய்து வரும் இவ்வமைச்சரவையைக் கலைக்க ஏன் இத்தனை பெருமுயற்சியை எடுக்கிறார்கள்? தன்னுடைய சுய நலனுக்காக, வழக்குகளிலிருந்து தப்பித்துக்கொள்ள, மத்திய அரசைத் தொடர்ந்து நிர்ப்பந்தித்து வருகிறார்கள். கிரிமினல் குற்றம் சம்பந்தப்பட்டவர்களின் பேரில் நீதிமன்றத்தில் வழக்குகள் இருப்பதால், மத்திய அமைச்சரவையிலிருந்து அவர்கள் நீக்கப்பட வேண்டுமென்று முன்னாள் முதல்வர் ஜெயலலிதா அவர்கள் கோரிக்கை வைத்தார்கள். பாரதப் பிரதமர் வாஜ்பாய் அவர்கள், நிர்ப்பந்தத்தின் காரணமாக அதனை ஏற்றுக் கொண்டதால் மத்திய அமைச்சரான, தாழ்த்தப்பட்ட இனத்தைச் சேர்ந்த அமைச்சர் திரு. பூட்டாசிங் அவர்கள் பலியாக்கப்பட்டுள்ளார்கள். ஆனால், 'பாப்ரி மஸ்ஜித் இடிக்கப்பட்ட வழக்கில் உள்ளவர்கள் கிரிமினல் குற்றத்தின்கீழ் வரமாட்டார்கள், அவர்களுக்கு இது பொருந்தாது' என்று பாரதப் பிரதமர் வாஜ்பாய் அவர்கள் அறிவித்திருப்பது ஏற்புடையதல்ல. மத்தியிலே நல்லாட்சி நடைபெற, மக்களுக்காக நல்லாட்சி நடத்துவதற்கு, அவர் பொறுப்பேற்றவுடன் இந்திய தேசிய லீக்கின் சார்பாக நல் வாழ்த்துக்களை நாங்கள் சொல்லியிருக்கின்றோம். நீங்கள் யாரை வேண்டுமானாலும் அமைச்சராகச் சேர்த்துக் கொள்ளுங்கள் அல்லது நீக்குங்கள், எங்களுக்கு ஆட்சேபணை இல்லை. ஆனால், பாப்ரி மஸ்ஜித் இடிக்கப்பட்ட நேரத்தில், பல்லாயிரக்கணக்கான மக்கள் படுகொலை செய்யப்பட்டார்கள், பல கோடி ரூபாய் சொத்துக்கள் சூறையாடப்பட்டு, நஷ்டப்படுத்தப்பட்டு பேரிழப்பு ஏற்படுத்தப்பட்டுள்ளது. உயிர்களை இழந்தவர்களின் குடும்பத்தினரும், சொத்துக்களை இழந்தவர்களும் மன வேதனையில், துயரத்தில் ஆழ்ந்துள்ளார்கள். இந்தியத் திருநாட்டிலே தீவிரவாதம், வெடிகுண்டு கலாச்சாரம் பரவுவதற்கு....

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: நீங்கள் இந்த மானியத்திலே பேசுங்கள்.

1998 ஏப்ரல் 29]

திரு. எஸ்.எஸ். முகம்மது இஸ்மாயில்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, வெடிகுண்டுக் கலாச்சாரம் பரவுவதற்குக் காரணமாக இருந்த, நீதிமன்றத்திலே குற்றம் சாட்டப்பட்ட அனைவரும் கிரிமினல் குற்றவாளிகள்தான் என்பதைக் ஏற்கக் கடமைப்பபட்டுள்ளோம். ஆகவே, வாஜ்பாய் அவர்கள் தெரிவித்துள்ள கருத்து இந்திய தேசிய லீகிற்கு ஏற்புடையதல்ல என்பதைப் பணிவன்போடு தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. பி.ஆர். சுந்தரம்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஒரு பாயிண்ட் ஆப் ஆர்டர்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: என்ன பாயிண்ட் ஆப் ஆர்டர்.

திரு. பி.ஆர். சுந்தரம்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களை இந்த மானியத்திலே பேசச் சொல்லுங்கள்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: இந்த மானியத்திலே பேசுங்கள் என்று மாண்புமிகு உறுப்பினருக்கு நான் ஏற்கெனவே சொல்லிவிட்டேன்.

திரு. எஸ்.எஸ். முகம்மது இஸ்மாயில்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தமிழகத்தைப் பொறுத்தவரையில், அண்ணா மறுமலர்ச்சித் திட்டம், நமக்கு நாமே திட்டம், சட்டமன்ற உறுப்பினர்களின் தொகுதி மேம்பாட்டுத் திட்டத்திற்கு ரூபாய் 25 இலட்சத்திலிருந்து ரூ. 35 இலட்சமென உயர்த்தி ஒதுக்கீடு செய்தது, இதுபோன்ற சாதனைகளைப் படைத்து, சமத்துவபுரம் கண்ட சரித்திர நாயகனாக விளங்கி வருகின்ற மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களை இந்திய தேசிய லீக் கட்சியின் சார்பாக வாழ்த்தி, வரவேற்கக் கடமைப்பட்டுள்ளோம்.

சமத்துவபுரத்தைப் பொறுத்தவரையில், மாவட்ட ஆட்சித் தலைவர்கள் மூலமாக இடங்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு, ஆர்.டி.ஓ. தலைமையில் பஞ்சாயத்துத் தலைவர்கள் அடங்கிய குழுக்களை ஏற்படுத்தி, அதனடிப்படையில் தேர்வு செய்கின்றார்கள். இதில் ஒரு சிறிய திருத்தத்தைச் செய்துதர வேண்டுமாய் இந்த மாமன்றத்தின் மூலமாக எடுத்து வைக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். சட்டமன்ற உறுப்பினர்கள்

[திரு. எஸ். எஸ். முகம்மது இஸ்மாயில்] [1998 ஏப்ரல் 29

அடங்கிய ஒரு குழுவை அமைத்து, அனைத்து அரசியல் கட்சிகளைச் சார்ந்தவர்களும், அனைத்துச் சமுதாயத்தைச் சார்ந்தவர்களும் அதில் இடம்பெற்று, தேர்வு செய்தால், அனைத்துச் சமுதாயத்திற்கும் பயனுள்ளதாக இருக்கும் என்ற கருத்தினை இங்கே எடுத்து வைக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். அதேபோல, தொகுப்பு வீடுகளை ஒதுக்கித் தருவதிலே, ஒரு பகுதிக்கு 20 வீடுகள் என்று ஒதுக்கிக் கொடுக்கின்றீர்கள். என்னுடைய பகுதி தாழ்த்தப்பட்ட மக்கள் அதிகமாக இருக்கின்ற பகுதியாக இருக்கின்ற காரணத்தால் 20 வீடுகள் என்பதை...

பிற்பகல் 12-30

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டதைப்போல, சமத்துவபுரத்திலே யார், யாரைக் குடியமர்த்துவது என்பது குறித்து அதிகாரிகளே தன்னிச்சையாக முடிவெடுக்காமல், ஒரு குழுவை அமைக்க வேண்டுமென்ற கருத்து ஏற்கத்தக்கது. ஏற்கெனவே, பாஞ்சாலங்குறிச்சிக்கு அருகில் கவர்னகிரியில் கட்டப்பட்டுள்ள சுந்தரலிங்கம் நினைவுக் குடியிருப்புகளில் குடியேற்றுவதற்கு, ஒரு குழு அமைக்கப்பட்டு, அந்தக் குழு தேர்ந்தெடுத்தவர்கள்தான் அங்கே குடியமர்த்தப்பட்டு இருக்கிறார்கள். அதேபோல சமத்துவபுரத்திலே யார், யாரைக் குடியமர்த்துவது என்பதற்கு, தகுதியுள்ளவர்களைத் தேர்ந்தெடுக்கின்ற பொறுப்பு ஒரு குழுவிடம் நிச்சயமாக ஒப்படைக்கப்படும். அந்தக் குழுவில் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிடுவதுபோல, நிச்சயமாக ஒரு சட்டமன்ற உறுப்பினரும் இடம்பெற வேண்டும் என்று ஆணை இடப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

திரு. எஸ்.எஸ். முகம்மது இஸ்மாயில்: மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். என்னுடைய மாவட்டமும் இதுபோலத் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறது. இஸ்லாமியப் பெருங்குடி மக்களும் அந்த சமத்துவபுரத்திலே இருக்க இடம் கேட்கிறார்கள். இதுபோன்ற வாய்ப்பை வழங்கியதற்காக, மாண்புமிகு முதலமைச்சர் இந்த அறிவிப்பைச் செய்ததற்காக, நெஞ்சார்ந்த நன்றியையும், நல்வாழ்த்துக்களையும் இந்திய தேசிய லீக் கட்சியின் சார்பாக தெரிவித்துக்கொள்கிறேன். எனது தொகுதியிலே ஆதிதிராவிட மக்கள் அதிகமாக வாழ்கின்ற காரணத்தால், ஒரு பகுதிக்கு 20 வீடுகள் என்று ஒதுக்கியிருப்பதை, 10 வீடுகள் அல்லது 15 வீடுகள் என்றாவது

1998 ஏப்ரல் 29] [திரு. எஸ். எஸ். முகம்மது இஸ்மாயில்]

வீடுகளின் எண்ணிக்கையைக் குறைத்துக் கிராமங்களின் எண்ணிக்கையை அதிகப்படுத்தித்தர வேண்டுமாய் மிக அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல, என்னுடைய தொகுதியிலுள்ள அரவக்குறிச்சி பகுதியிலே ஆதிதிராவிட மாணவர் விடுதியைக் கட்டுவது தடை செய்யப்பட்டு, நின்றிருப்பதை மாண்புமிகு அமைச்சருடைய கவனத்திற்குக் கொண்டு சென்றேன். உடனடியாகக் காண்ட்ராக்டரை மாற்றி அதனைத் துரிதமாகக் கட்டிக் கொடுக்கின்ற பணியை மேற்கொண்டிருக்கிறார்கள். அதை விரைவிலே முடித்துத்தர வேண்டுமாய்க் கேட்டுக்கொள்கிறேன். சின்னதாராபுரம் பகுதியில், மாணவ, மாணவியர்களுக்கு ஒரு விடுதியைக் கட்டித்தர வேண்டுமாய் இந்த நேரத்திலே பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன். அதேபோல, மாணவ, மாணவியர்கள் வசிக்கும் விடுதிகளில், குளிப்பதற்குத் தண்ணீர் வசதி, குடிநீர் வசதி, மின்சார வசதி ஆகியவற்றைச் செய்துதர வேண்டுமாய்க் கேட்டுக்கொள்கிறேன். அதுபோன்றுதான், சேலம் மாவட்டம், ஏற்காட்டில் ஆதிதிராவிடப் பெண்களுக்கான விடுதி வாடகைக் கட்டடத்தில் இயங்கி வருகிறது. மலைவாழ் மக்களும் ஆதிதிராவிட மக்களும் வாழ்ந்து வருகின்ற அந்தப் பகுதியிலே ஒரு சொந்தக் கட்டடம் கட்டித்தர வேண்டுமாய் இந்த நேரத்தில் கோரிக்கையாக வைக்க விரும்புகின்றேன். ஆதிதிராவிட மக்கள், மலைவாழ் மக்கள் அரசு அலுவலகங்களுக்கு சான்றிதழ்கள் பெறச் செல்கின்ற நேரத்தில், அங்குள்ள அதிகாரிகள் தாமதப்படுத்தி வீணாய் இழுத்தடிக்கிறார்கள். ஆகவே, அதனைப் போக்குகின்ற வகையில் புகார்ப் புத்தகம் ஒன்றை ஒவ்வொரு அரசு அலுவலகத்திலும் வைத்தால் வசதியாக இருக்கும் என்ற கருத்தைச் சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். அதேபோல, படித்துவிட்டு வேலையில்லாமல் இருக்கின்ற மலைவாழ் மற்றும் ஆதிதிராவிட மக்களுக்கு, சி.எம்.ஆர். திட்டம், Self Employment Scheme—சுய வேலைவாய்ப்புத் திட்டம் மூலம் கடன் வழங்கும்போது, அவர்களிடம் 'செக்யூரிட்டி', 'சூரிட்டி' வேண்டும் என்ற முறையிலே காலதாமதம் செய்கின்ற காரணத்தால், டிரைவிங் லைசென்ஸ் வைத்திருப்பவர்கள் கடன் பெற்று, வாகனங்கள்—டாக்ஸி, ஆட்டோ, லாரி போன்றவற்றை வாங்குவதற்கு சிரமப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். இதை எளிமைப்படுத்துகின்ற வகையில் சட்டத்தை இலகுவாக்கி, அவர்களுக்குக் கடன் கிடைக்கின்ற வகையில் செய்து கொடுக்க வேண்டுமாய்க் கேட்டுக்கொள்கிறேன். இடுகாட்டுக்குச் செல்கின்ற வழியிலே அங்கே சிரமங்கள் இருக்கின்றன.

[திரு. எஸ்.எஸ். முகம்மது இஸ்மாயில்.] [1998 ஏப்ரல் 29

மாவட்ட ஆட்சித் தலைவர் மூலமாக இது உடனடியாக கவனத்திற்குக் கொண்டு செல்லப்பட்டு ஆலோசனைகள் ஏற்கப்பட்டு, செயல்பட்டு வருகின்றன. இதுபோன்று தென்காசி தாலுகா, மேளக்கடநல்லூரில் சங்கிலிமான் மகன் ஆறுமுகம் என்பவர் 9-4-97-ல் அங்கே ஆக்கிரமிப்புச் செய்தார். இதை அமைச்சருடைய மேலான கவனத்திற்குக் கொண்டு வந்திருக்கிறேன். இதைப் பார்வையிட்டு ஆவன செய்ய வேண்டுமாய் கேட்டுக்கொள்கிறேன்.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

தமிழ்நாட்டிலுள்ள அனைத்துப் பகுதிகளிலும் தினக்கூலி அடிப்படையிலே பணியாற்றுபவர்களில், 1840 பேர் இதிலே இடம் பெற்றிருக்கிறார்கள். இதில் பட்டியல் சாதியைச் சேர்ந்தவர்கள் மற்றும் ஆதிதிராவிடர்கள் மட்டும் ஏறத்தாழ நிறையப் பேர், துப்புரவுத் தொழிலாளர்களாகப் பணியாற்றி வருகிறார்கள். இவர்களை உடனடியாகப் பணி நிரந்தரம் செய்து, இவர்களுக்கு அரசின் ஐந்தாவது ஊதியக் குழுவின்பரிந்துரைப்படி 750 ரூபாய் அடிப்படைச் சம்பளமாகக் கொடுத்து...

மாண்புமிகு பேரவைத் தலைவர்: கொஞ்சம் வேகமாகப் படியுங்கள். (சிரிப்பு)

திரு.எஸ்.எஸ். முகம்மது இஸ்மாயில்: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, அடிப்படைச் சம்பளம் 750-லிருந்து உயர்த்தப்பட்டு, இப்போது 2150 ரூபாய் கிடைத்து வருகின்றது. ஊதியத்தினுடைய அடிப்படையிலே இப்போது வழங்க இருக்கின்ற சம்பளத்தை 100 முதல் 120ஆக உயர்வு செய்திருந்தாலும், 3 ஆயிரம் ரூபாய் அவர்கள் சம்பளம் பெறக்கூடிய நிலையில் இருந்தாலும், அவர்கள் தினக்கூலி அடிப்படையில் இருந்து வருகிறார்கள். அவர்களை நிரந்தரப் பணியாளர்களாக ஆக்குவதற்கு அவர்கள் எவ்விதப் போராட்டமும், உண்ணாவிரதமும் இருக்காமல், மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களிடத்திலேகூட, கோரிக்கை வைத்து இருக்கிறார்கள். தாய் உள்ளம் கொண்ட மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள், நேற்று முன்தினம்கூட, 473 சாலைப் பணியாளர்களை நிரந்தரப் பணியாளர்களாக ஆக்கியிருக்கிறார்கள். அந்த அடிப்படையிலே

இவர்களும் வயது முதிர்ச்சி அடைந்துவிட்ட காரணத்தால், இவர்களையும் நிரந்தரப் பணியாளர்களாக ஆக்கித் தரவேண்டுமாய் உங்களிடம் கோரிக்கை வைக்கக் கடமைப்பட்டு இருக்கிறேன்.

பிற்பகல் 12-35

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அடுத்து திரு. செல்வராஜ் என்கிற கவிதைப்பித்தன். (குறுக்கீடு) முக்கியமானது என்றால், ஏன் முதலிலே சொல்ல மாட்டேன் என்கிறீர்கள்? சீக்கிரம் பேசி முடியுங்கள்.

திரு. எஸ்.எஸ். முகம்மது இஸ்மாயில்: தமிழ்நாட்டிலே உள்ள விதவைகள், எக்ஸ்-சர்வீஸ்மென் ஆகியோரில் பழங்குடியினர்களுக்குத் தலா 25 விவசாய மின்சார இணைப்புகள் முன்னுரிமையிலே வழங்கப்பட்டு வருகின்றது. அதேபோல், பட்டியல் மலை சாதி வகுப்பைச் சேர்ந்த மலைவாழ் மக்களுக்கும், இரண்டு ஏக்கருக்கும் குறைவாக உள்ள சிறு விவசாயிகளுக்கும், இந்த வருடத்திற்கு 25 மோட்டார்களுக்கு மின் இணைப்புகளை விவசாயத்திற்காக உடனடியாகப் பெற்றுத்தரவேண்டுமாய்க் கேட்டுக்கொள்கிறேன்.

அரசுப் பணி புரியும் பட்டியல் சாதியினருக்குப் பதவி உயர்விலே முன்னுரிமை வழங்கும் பொருட்டு, மாண்புமிகு முதல்வர் அவர்கள், மாநில அளவிலே தலைமைச் செயலாளரைக் கொண்டு காலமுறைக் கூட்டம் நடத்துவதைப் போல, மாவட்டந்தோறும் அங்கேயுள்ள மாவட்ட ஆட்சித் தலைவருடைய தலைமையிலே ஒரு குழுவை அமைத்து, அதைச் செயல்படுத்தித் தரவேண்டுமாய்க் கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இரண்டு கோரிக்கைகளைச் சொல்லியாகிவிட்டது, உட்காருங்கள். திரு. செல்வராஜ் என்கிற கவிதைப் பித்தன்.

திரு. செல்வராஜ் என்கிற கவிதைப்பித்தன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மாமன்றத்தில் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை மானியக் கோரிக்கைகள் மீதான விவாதத்திலே கலந்து கொண்டு, உரையாற்றுவதற்கு வாய்ப்பு வழங்கிய தங்களுக்கும், தமிழ் மக்களின் ஒரே தலைவர், தாழ்த்தப்பட்ட மக்களின் காவல் தெய்வம், தமிழக முதல்வர், டாக்டர் கலைஞர் அவர்களுக்கும்,

[திரு. செல்வராஜ் என்கிற கவிதைப்பித்தன்] [1998 ஏப்ரல் 29 சட்டப்பேரவையிலே என்னை இடம்பெறச் செய்த என்னுடைய கொளத்தூர் தொகுதி மக்களுக்கும் எனது நெஞ்சார்ந்த நன்றியை மீண்டும் தெரிவித்துக்கொள்கிறேன்.

அறிவுலக மாமேதை, அரசியல் சட்டத்தின் ஞானத் தந்தை, அண்ணல் டாக்டர் அம்பேத்கர் அவர்களின் 108 ஆவது பிறந்த நாள் இந்த மாதம் 14 ஆம் தேதி. அந்த மகத்தான மனிதர் பிறந்த இந்த மாதத்தில் நடக்கும் இந்த மானியக் கோரிக்கை மீதான விவாதத்தில் கலந்துகொள்வதிலே மட்டற்ற மகிழ்ச்சி அடைகிறேன். இந்த நேரத்திலே ஒரு செய்தியை நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு அரசியல் ரீதியாகத் துரோகிகள் சிலரால் சோதனை வந்த நேரம். தஞ்சையில் பொதுக் குழு—இயக்கம் சம்பந்தப்பட்ட பல்வேறு பிரச்சினைகளை விவாதிக்க வேண்டிய அந்தப் பொதுக் குழுவில், தலைவர் கலைஞர் அவர்களுடைய முனைப்பால் நிறைவேற்றப்பெற்ற முக்கியமான முதல் தீர்மானம் என்ன தெரியுமா? மராட்டிய மண்டலத்திலே அமைய இருந்த சட்டப் பல்கலைக் கழகத்திற்கு அண்ணல் டாக்டர் அம்பேத்கர் பெயர் வைக்கப்படவேண்டும் என்பதை வலியுறுத்தி, தமிழ் மக்களின், குறிப்பாக, கழகத் தோழர்களின் தந்திகள் குவியட்டும் என்பதுதான், அந்தத் தீர்மானம். தந்திகள் குவிந்தன. அம்பேத்கர் பெயரும் அந்தப் பல்கலைக் கழகத்திற்கு வைக்கப்பட்டது. அதுமட்டுமல்ல, அன்றைக்கு முதல்வர் பொறுப்பில் இல்லாத தலைவர் கலைஞருக்கு, அந்த மண்ணின் முதல்வரும், கவர்னரும் முறையாக இந்தத் தகவலை அனுப்பி வைத்திருக்கிறார்கள் என்பதை நான் இங்கே நன்றி உணர்ச்சியோடு எடுத்துச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதுமட்டுமல்ல, ஊருக்குத்தான் உபதேசம், உங்களுக்கு இல்லை என்று இல்லாமல், அண்ணல் டாக்டர் அம்பேத்கர் பெயரிலே சட்டக் கல்லூரியை நிறுவிய எங்கள் ஒப்பற்ற தலைவர் டாக்டர் கலைஞர் அவர்கள், தமிழகத்திலே அமைந்த சட்டப் பல்கலைக் கழகத்திற்கும் அண்ணல் டாக்டர் அம்பேத்கர் பெயரைச் சூட்டினார்களே, அதற்குக் கோடானுகோடி தாழ்த்தப்பட்ட மக்களின் சார்பிலே நான் நன்றி உணர்ச்சியை வெளிப்படுத்தி, உரையாற்ற விரும்புகிறேன்.

நான் இந்தப் பேரவையிலே மெத்தப் பணிவன்போடு தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். சாதி ஒழிக என்று எத்தனையோ தலைவர்கள்

1998 ஏப்ரல் 29] [திரு. செல்வராஜ் என்கிற கவிதைப்பித்தன்]

பேசிக் கொண்டிருக்கிறார்கள். பேசினார்கள், எழுதினார்கள். ஆனால், அந்த சாதியை நடைமுறையிலே ஒழித்துக் கட்டுகிற அனைத்து முயற்சிகளிலும் ஈடுபட்டவர், ஈடுபட்டுக் கொண்டிருப்பவர் எங்கள் ஒப்பற்ற தலைவர், டாக்டர் கலைஞர்தான். அவர் வீட்டிலே தன் மகனுக்குப் பெண் எடுத்திருக்கிறார்கள். அதுமட்டுமல்ல, அந்தக் குடும்பத்தைச் சேர்ந்த ஒரு பெண்ணை தாழ்த்தப்பட்ட இளைஞனுக்கு மணமுடித்துக் கொடுத்திருக்கிறார். நீங்கள் மன்னிக்க வேண்டும். தீண்டாமை ஒழிக என்று பாடுபட்ட தேசப்பிதா காந்தியடிகள்கூட, இராஜகோபாலாச்சாரியார் வீட்டிலேதான் சம்பந்தம் செய்து கொண்டார்கள். ஆனால், எங்கள் ஒப்பற்ற தலைவர் டாக்டர் கலைஞர் அவர்கள், சாதாரண, சாமானியக் குடும்பத்திலே பிறந்த நானோ அல்லது மாண்புமிகு டாக்டர் கிருஷ்ணசாமி போன்றவர்களோ, எங்கள் சம்பந்தி இன்றைக்கு முதலமைச்சராக வீற்றிருக்கிறார் என்று சொல்கிற ஒரு மாபெரும் கௌரவத்தை எங்களுக்கு வழங்கியவர், ஒப்பற்ற தலைவர், முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள்தான்.

இன்னும்கூட ஒரு தகவலைச் சொல்ல விரும்புகிறேன். 1989 ஆம் ஆண்டு முதல்வராகப் பொறுப்பேற்ற டாக்டர் கலைஞர் அவர்கள், தன்னுடைய அமைச்சரவையிலே 2 தாழ்த்தப்பட்ட சமுதாயத்தைச் சேர்ந்தவர்களுக்கு அமைச்சர் பொறுப்பை வழங்கினார்கள். சட்டப்பேரவையினுடைய துணைத் தலைவராக தாழ்த்தப்பட்ட சமுதாயத்தைச் சேர்ந்த ஒருவருக்கு அந்த வாய்ப்பை வழங்கினார்கள். துரதிருஷ்டவசமாக அரசியல் தட்பவெட்ப சூழ்நிலையின் காரணமாக, அந்த மூவருமே, எங்கள் தலைவர் டாக்டர் கலைஞரைவிட்டு இடம் பெயர்ந்த சூழ்நிலையிலேயும்கூட, மீண்டும் ஆட்சிப் பொறுப்புக்கு வந்த நேரத்திலே, எங்கள் தலைவர் டாக்டர் கலைஞர் அவர்கள், நாம் பொறுப்புகள் வழங்கிய அந்தப் பிரிவினர், நம்மைவிட்டுப் போய்விட்டார்கள் என்று வருத்தப்படாமல், 'இன்னா செய்தாரை ஒறுத்தல் அவர்நாண நன்னயம் செய்துவிடல்' என்கிற அந்த வள்ளுவர் பெருந்தகையின் வாக்கை மெய்ப்பிக்கிற வகையில், 1996 ஆம் ஆண்டு முதல்வர் பொறுப்பை ஏற்றபோது 3 அமைச்சர் பெருமக்களுக்குப் பொறுப்புகளை வழங்கி, சட்டப் பேரவையினுடைய துணைத் தலைவராக அண்ணன் பரிதி இளம்வழுதி அவர்களையும் வீற்றிருக்கச் செய்திருக்கிறார்களே, அவர்கள்தான் உண்மையாகவே, தாழ்த்தப்பட்ட மக்களுடைய காவல் தெய்வம் என்பதற்கு இதைவிட வேறு என்ன சான்று கூற முடியும்?

[திரு. செல்வராஜ் என்கிற கவிதைப்பித்தன்] [1998 ஏப்ரல் 29 பிற்பகல் 12-40

இன்னும்கூட ஒரு சம்பவத்தைக் குறிப்பிட விரும்புகிறேன். திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய 10-வது பொதுக் குழு தேர்தல் முடிந்து, பொதுக் குழு சென்னையில் நடைபெறுகிறபோது, தாழ்த்தப்பட்ட சமுதாயத்தைச் சேர்ந்த ஒரு பொதுக் குழு உறுப்பினர், உரையாற்றுகிற நேரத்தில் அடிக்கடி வார்த்தைகளுக்கு இடையிலே 'ஐயா கலைஞர் அவர்களே, ஐயா கலைஞர் அவர்களே' என்று குறிப்பிட்டார். உடனே, தலைவர் கலைஞர் அவர்கள் எழுந்து நின்று 'ஐயா கலைஞர் அவர்களே' என்று அழைக்கிற அந்தச் சொல் ஒரு மரியாதைக்குரிய சொல்லாக இருந்தாலும்கூட, ஒரு மதிப்பிற்கு அடையாளமான சொல்லாக இருந்தாலும்கூட, அது ஏதோ ஒரு ஆண்டான், அடிமை என்கின்ற உணர்வை வெளிப்படுத்துகிற சொல்லாக இருக்கிறது; எனவே, அன்புத் தம்பி அவர்களே, என்னை அண்ணன் கலைஞர் அவர்களே என்று அழையுங்கள் என்று சொன்னாரே, வேறு எந்தத் தலைவன் இப்படிக் கூற முடியும் என்பதை மனச்சாட்சி உள்ளவர்கள் எண்ணிப்பார்க்க வேண்டும். அது மட்டுமல்ல, பெரியோர்களே, சதிக்கு கால் முளைத்து சாதி வந்து விட்டது, அந்தப் பேதத்தை முறியடிப்போம், பெரியார் வழி நடப்போம் என்பது முதல்வர் கலைஞர் அவர்களின் முழக்கம். அந்த முழக்கத்தை நடைமுறைப்படுத்துகிற தலைவராக அவர்கள் இன்றைக்கு நடந்து கொண்டிருக்கிறார்கள். அதுமட்டுமல்ல, நாங்கள் எல்லாம் நெருங்கிப் பழகுகிறபோது, ஒரு முதல்வர், சட்டமன்ற உறுப்பினர் என்ற அந்த வட்டத்திற்கு அப்பால் ஒரு தலைவர், தொண்டர் என்கிற அந்த எல்லைகளுக்கெல்லாம் அப்பால் குடும்பப் பிள்ளையைப் போல உட்கார வைத்து அன்பு காட்டுகிற, பாசம் காட்டுகிற, அந்த ஒப்பற்ற தலைவருடைய நடைமுறை அணுகுமுறையை நாங்கள் அனுபவித்துக் கொண்டிருக்கிறோம்.

ஒரு செய்தியை இங்கே நினைவுபடுத்த விரும்புகிறேன். 1986 ஆம் ஆண்டு புதுக்கோட்டை மாவட்டத்தினுடைய குற்றவியல் நீதிபதியாக இருந்த திரு. ஓ. வெங்கடாசலம் என்ற தாழ்த்தப்பட்ட சமுதாயத்தைச் சேர்ந்தவர் அந்தப் பொறுப்பை வகித்து இருந்தார்கள். அந்த நேரத்திலே, திராவிட முன்னேற்றக் கழகம் ஈடுபட்ட ஒரு போராட்டம் தொடர்பான வழக்கிலே வழங்கிய தீர்ப்பின் காரணமாக அவர் உடனடியாக சென்னையிலே சட்டத் துறை சம்பந்தப்பட்ட ஒரு பத்திரிகையினுடைய எடிட்டராக மாற்றப்பட்டார், பதவி இறக்கம் செய்யப்பட்டார்.

1998 ஏப்ரல் 29] [திரு. செல்வராஜ் என்கிற கவிதைப்பித்தன்]

அன்றைக்கு நாங்கள் எல்லாம் சென்னைக்கு வந்து ஒரு தாழ்த்தப்பட்ட சமுதாயத்தைச் சேர்ந்த ஆற்றல் வாய்ந்த, நேர்மையான நீதிபதி இப்படிப் புறக்கணிக்கப்பட்டிருக்கிறாரே, மாவட்ட குற்றவியல் நீதிபதி பொறுப்பிலிருந்து பதவி இறக்கம் செய்யப்பட்டு இருக்கிறாரே என்று நாங்கள் தலைவரிடம் முறையிட்டோம். அன்று தலைவர் சொன்னார்கள், என்னிடம் அதிகாரம் இல்லை, என்னிடம் முதல்வர் பொறுப்பு இல்லை, நான் என்ன செய்வேன் என்று சொல்லிவிட்டு, பெயரை மட்டும் குறித்துக் கொண்டுவிட்டார்கள். ஆண்டுகள் உருண்டு ஓடின. 1989 ஆம் ஆண்டு தலைவர் ஆட்சிக்கு வந்தார்கள். பெரியோர்களே, மாண்புமிகு பேரவை உறுப்பினர்களே, நாங்கள் மீண்டும் நினைவுபடுத்தக்கூட இல்லை. 1986 ஆம் ஆண்டு சொன்ன அந்தச் செய்தியை நினைவு வைத்துக்கொண்டு 1989 ஆம் ஆண்டு அந்த வெங்கடாசலம் எங்கே இருக்கிறார் என்று தேடிப் பிடித்து, இராமநாதபுரம் மாவட்டத்தினுடைய தலைமை நீதிபதியாகப் பதவி வழங்கியவர் இங்கே வீற்றிருக்கிற ஒப்பற்ற முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள். இன்னும் சொல்லப்போனால், அந்த வெங்கடாசலம் எனக்கும் உறவினர், மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் கிருஷ்ணசாமி அவர்களுக்கும் மிகவும் நெருங்கிய உறவினர் என்ற முறையிலே அவரும் முதல்வருக்கு நன்றி சொல்லக் கடமைப்பட்டிருக்கிறார்.

அண்ணல் டாக்டர் அம்பேத்கர் பிறந்த 1896 ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள்தான், ஏன் இதே 29 ஆம் தேதிதான் புரட்சிக் கவிஞர் பாரதிதாசனுடைய பிறந்த நாள். இன்று பாரதிதாசனுடைய 108-வது பிறந்த நாள். அடக்கும் பகையை ஒடுக்கும் கர்வம், நடக்கும் களிற்று இடிக்கும் உருவம் என்கின்ற வரிகளுக்குச் சான்றாக கடற்கரையோரத்திலே மிகக் கம்பீரமாக நிற்கும் புரட்சிக் கவிஞரின் சிலைக்கு மாண்புமிகு அமைச்சர் பெருமக்களும், வணக்கத்திற்குரிய மேயர் அவர்களும் மாலை அணிவித்தபோது, எங்கள் சிந்தை, உடல், அணு, ஒவ்வொன்றும் சிலிர்த்துப் போனோம். காரணம், அந்தப் புரட்சி கவிஞன்தான் பாடினான்; தமிழாய்ந்த தமிழ் மகன், தமிழ் நாட்டின் முதலமைச்சராக வருதல் வேண்டுமென்று. அந்த தமிழாய்ந்த தமிழ் மகன், தமிழ்த் தாயின் தலைமகன், முத்தமிழ் வித்தகர் டாக்டர் கலைஞர் அவர்கள், இப்போது நான்காவது முறையாக இங்கே முதல்வராக வீற்றிருக்கிறார்கள். 'கிளம்பிற்றுகாண் தமிழ் சிங்கக் கூட்டம், கிழித்தெறிய தேடுதுகாண் பகைக் கூட்டத்தை, வளம் பெரிய தமிழ்நாட்டில் தமிழர் அல்லார் வால் நீட்டினால் உதைதான்

[திரு. செல்வராஜ் என்கிற கவிதைப்பித்தன்] [1998 ஏப்ரல் 29 கிடைத்திடும்' என்று அன்றைக்கு 60 ஆண்டுகளுக்கு முன்னால் கையில் தமிழ் குடியோடு களத்திலே குதித்த இளஞ்சிங்கம் கலைஞருக்கு அந்தப் புரட்சிக் கவிஞன்தான் வரிகள் தீட்டிக் கொடுத்தான். ஆனால்...

மாண்புமிகு பேரவைத் தலைவர்: சீக்கிரம் பேசி முடியுங்கள்.

திரு. செல்வராஜ் என்கிற கவிதைப்பித்தன்: ஆனால், இன்றைக்கும் அப்படிப்பட்ட சம்பவங்கள் வாலாட்டம் குறையவில்லை. பேரவைத் தலைவர் அவர்களே, பத்திரிகையிலே ஒரு செய்தி படித்தேன். இரண்டு தினங்களுக்கு முன்னால், திருப்பதியைச் சேர்ந்த 9 வயது சிறுவன், வால் முளைத்தபடி பிறந்த சிறுவன், அவனுக்கு ஆற்றல் வாய்ந்த டாக்டர் ஒருவர் அறுவை சிகிச்சை செய்து அந்த வாலை நறுக்கி அனுப்பியதாகப் பத்திரிகைச் செய்தி படித்தேன். இன்றைக்குக்கூட தமிழகத்தின் அரசியலில் அரசியல் விபத்தின் காரணமாகப் பொது வாழ்க்கைக்கு வந்துவிட்ட சில பேர், அவர்களின் தலையிலேகூட அல்ல, மூளையிலே வால் முளைத்து இருக்கும் காரணத்தால், குரங்குச் சேட்டை என்பார்களே, அப்படிப்பட்ட குறும்புத்தனங்களிலே ஈடுபட்டிருக்கிறார்கள். நான் குறிப்பிட்டுச் சொல்வேன். எப்படி திருப்பதி சிறுவனுக்கு ஆற்றல் வாய்ந்த டாக்டர் ஒருவர் அந்த வாலை நறுக்கி அறுவை சிகிச்சை செய்தாரோ, அதைப்போல இந்த வஞ்சகர்களின் வாலை இந்த டாக்டர் கலைஞர் அவர்கள் ஒட்ட நறுக்குவார், அதற்குத் தமிழ் மக்கள் துணையாக இருப்பார்கள் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

பிற்பகல் 12-45

என்னுடைய தொகுதியிலே 30 ஆண்டுகளாக கோரிக்கையாக விளங்கிய இலுப்பூருக்குத் தாலுகா வழங்கிய தலைவர் அவர்களுக்கு நன்றி செலுத்துகிறேன். குன்னாண்டார்கோயிலிலே துணை மின் நிலையம் அமைப்பதற்காக 1 கோடியே 96 இலட்சம் ரூபாய் மதிப்பீடு தயாரிக்கப்பட்டு இங்கே மின்துறை உயர் அதிகாரி கவனத்திற்கு வந்திருக்கிறது. எனவே, மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள், அதை வலியுறுத்தி எங்களுக்கு குன்னாண்டார்கோயிலிலே துணை மின் நிலையம் வாங்கித் தருமாறு கேட்டுக்கொள்கிறேன். அதைப்போலவே, மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள், கிள்ளுக்கோட்டை உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாகவும், மண்டையூர் நடுநிலைப் பள்ளியை உயர்நிலைப்

1998 ஏப்ரல் 29] [திரு. செல்வராஜ் என்கிற கவிதைப்பித்தன்]

பள்ளியாகவும், அன்னவாசல் ஒன்றியத்திலே மதியநல்லூர், கீழப்பழுவஞ்சி ஆகிய தொடக்கப் பள்ளிகளையும், விராலிமலையிலே இராமக்கவுண்டன்பட்டி, மாங்குடி ஆகிய தொடக்கப் பள்ளிகளை நடுநிலைப் பள்ளிகளாக ஆக்கித்தர வேண்டும். கேள்வி நேரத்திலேயே விராலிமலைக்குத் தீயணைப்பு நிலையம் வேண்டும் என்று முதல்வர் அவர்களிடம் வினா தொடுத்தேன். அதையும் மாண்புமிகு முதல்வர் அவர்கள் கருணை உள்ளத்தோடு செய்து தருவார் என்று நம்புகிறேன். அதைப்போல, கடந்த நிதி ஆண்டிலே மானியக் கோரிக்கையிலேயே அண்டக்குளத்திற்கு காவல் நிலையம் வேண்டும் என்று கேட்டேன். அதையும் மாண்புமிகு முதல்வர் அவர்கள் செய்து தரவேண்டும் என்று கேட்டு வாய்ப்புக்கு நன்றி கூறி அமர்கிறேன். வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. ச. புரட்சிமணி.

***திரு. ச. புரட்சிமணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த ஆதிதிராவிடர் நலத் துறையானது 1949 ஆம் ஆண்டு தொடங்கப்பட்டு, இன்றைக்கு பல்வேறு காலக்கட்டங்களிலே பல்வேறு முயற்சிகளைச் செய்து, பல்வேறு முன்னேற்றங்களை அடைந்துள்ளது. இன்றைக்கு இந்தத் துறையின் மூலமாக இந்த ஆண்டிலே இந்த அரசானது ரூ. 434 கோடி ஒதுக்கியுள்ளதை நான் வரவேற்கிறேன். அதேபோன்று, தாழ்த்தப்பட்ட ஆதிதிராவிடர் மக்களுக்கு இட ஒதுக்கீட்டை ஆய்வு செய்ய ஒரு கண்காணிப்புக் குழு ஒன்றைத் தமிழக முதலமைச்சர் அவர்கள் இன்று அமைத்துள்ளார்கள். அந்தக் குழுவிலே என்னையும் அவர்கள் நியமனம் செய்துள்ளார்கள். அவர்களுக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். அதுமட்டுமல்லாமல், இந்த உயர் மட்டக் குழு ஆய்வு செய்து, சுமார் 80 துறைக்கான ஆய்வு நடத்தப்பட்டு அந்த அறிக்கையின் மூலம் இந்தத் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு படித்த பட்டதாரிகளுக்கு ஒரு நல்ல வேலைவாய்ப்பை அமைத்துத்தர வேண்டுமாய், அதற்கான தகுந்த நடவடிக்கையைத் தமிழக முதல்வர் அவர்கள் எடுக்க வேண்டுமாய் இந்த நேரத்திலே அன்போடு கேட்டுக்கொள்கிறேன். இந்த உயர் மட்டக் குழு கூடும்போது ஒவ்வொரு துறை தலைமை அதிகாரிகளுக்கும் தகவல் கொடுக்கப்பட்டும் இந்த உயர் மட்டக் குழு கூட்டத்திற்கு அந்தந்த தலைமைத் துறை அதிகாரிகள் வருகை புரிவதில்லை. ஏதோ ஒரு காரணத்தைச் சொல்லி அவர்கள் இந்தக் கூட்டத்தைப் புறக்கணிக்கிறார்கள். ஆதலால், நம்முடைய தமிழகத்தினுடைய முதல்வர்

அவர்கள் அந்தந்தத் துறை உயர் அதிகாரிகளுக்கு மிகக் கடுமையான உத்தரவைப்போட்டு இந்தக் குழுக் கூட்டத்தில் அவர்கள் கண்டிப்பாகக் கலந்து கொள்ள தாங்கள் ஆவன செய்ய வேண்டும் என்று இந்த நேரத்தில் நான் அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

தாழ்த்தப்பட்ட மக்களுக்கு வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்குகின்றபோது, நிலத்தின் சொந்தக்காரர்கள் உயர் நீதிமன்றத்தில் தடையாணை பெற்றுவிடுகிறார்கள். அந்த வீட்டுமனைப் பட்டாக்கள் சம்பந்தப்பட்ட வழக்குகள் மிகப் பல்லாண்டுக்காலமாக நிலுவையில் உள்ளது. இன்றைக்கு தமிழக முதல்வர் அவர்கள் பல தனி நீதிமன்றங்கள் அமைத்துள்ளார்கள். அதேபோன்று இந்த தாழ்த்தப்பட்ட மக்களுக்கு வீட்டுமனைப் பட்டாக்கள் கொடுக்கின்ற வகையில், பல்லாயிரக்கணக்கான நிலுவையில் உள்ள வழக்குகளைத் தீர்க்கின்ற வகையில் தனி நீதிமன்றம் ஒன்று அமைக்க வேண்டும் என்று இந்த நேரத்தில் மிக அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

இந்த நாடு சுதந்திரம் பெற்ற காலத்திற்குப் பிறகு பல்வேறு காலக் கட்டங்களில் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு எதிராக பல்வேறு இடர்பாடுகள், பல்வேறு தகராறுகள், பல்வேறு சாதிச் சண்டைகள். இன்றைக்கு அத்தனை சண்டைகளிலும் பல்வேறு உயிர்கள் மற்றும் பொருள் சேதாரங்கள் ஏற்பட்டுள்ளன. அதாவது அந்தந்த குடும்பங்களைக் கணக்கெடுத்து அந்தந்த குடும்பங்களுக்கு அரசு நிதி உதவி வழங்க வேண்டுமென்று இந்த நேரத்தில் நான் அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 12-50

அடுத்து, பல்வேறு தொழிற்சாலைகள் தனியார் துறைகளின் மூலம் தொடங்கப்பட்டுள்ளன. தனியார் துறைகளின்மூலம் தொடங்கப்படுகின்ற அந்தத் தொழிற்சாலைகளில் இந்தத் தாழ்த்தப்பட்ட மக்களுக்கும் தனியார் துறைகளில் இட ஒதுக்கீடு முறையைக் கொண்டு வரவேண்டுமென்று நான் அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

உதாரணமாக ஹூண்டாய் கார் தொழிற்சாலை, அதேபோல் எங்கள் பகுதியில் அருணா சுகர்ஸ், சங்கர் சிமென்ட், ராம்கோ சிமென்ட், அதேபோல் பல்வேறு தனியார் தொழிற்சாலைகள் தமிழ்நாட்டில் தொடங்கப்பட்டிருக்கின்றன. அந்தத் தனியார் தொழிற்சாலைகளில்

இந்தத் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு இட ஒதுக்கீடு முறையை அமல் செய்தால்தான் தாழ்த்தப்பட்ட படித்த பட்டதாரிகள் பல்வேறு பயன்களை அடைவார்கள் என்று இந்த நேரத்தில் நான் அன்போடு தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். தனியார் தொழிற்சாலைகளுக்கு அனுமதி வழங்கும்போது அதிலே தாழ்த்தப்பட்ட மக்களுக்கு இட ஒதுக்கீடு முறையில் வேலைவாய்ப்பு வழங்க வேண்டும் என்ற நிபந்தனையை சொல்லி, அதற்குப் பிறகு அனுமதி வழங்க வேண்டுமென்று இந்த நேரத்தில் நான் அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

கிராம உதவியாளர்கள், தலையாரி போன்றவர்கள் சுமார் 36 ஆயிரம் பேர் இருக்கிறார்கள். அவர்கள் முழு நேர ஊழியர்களாக மாற்றப்பட வேண்டும். அதோடு மட்டும் அல்லாமல் அவர்களுக்குப் பதவி உயர்வு அளிக்கும்போது அவர்களுடைய கல்வி அறிவைப் பொறுத்து பதவி உயர்வு அளிக்கவேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

இந்த தாழ்த்தப்பட்ட மக்களுக்கு என்று தமிழகத்தில் இரண்டு தொழில் பயிற்சி நிலையங்கள்தான் அரசால் தொடங்கப்பட்டிருக்கின்றன. 1949 ஆம் ஆண்டு தொடங்கப்பட்ட இந்த துறையில் இத்தாழ்த்தப்பட்ட மக்களுக்கு என்று தொழில் பயிற்சி நிலையங்கள் தமிழ்நாடு முழுவதும் இந்த 2 தான் இருக்கின்றன. அதில் ஒன்று சிதம்பரத்திலும் மற்றொன்று சங்கராபுரத்திலும் இருக்கிறது. அதேபோல் இந்த ஆண்டில் சுமார் 50 தொழில் பயிற்சி நிலையங்களையாவது தாழ்த்தப்பட்ட ஆதி திராவிட மக்களுக்கு இந்தத் துறையின் மூலம் தொடங்க வேண்டுமென்று இந்த நேரத்தில் மிக அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

எனது தொகுதியில் தீவளூர் என்ற ஒரு கிராமம் இருக்கிறது. அந்தக் கிராமத்திலே அரசின் சார்பாக ஆதிதிராவிட நலப்பள்ளி இருக்கிறது. அந்தப் பள்ளியில் எல்லா ஆண்டுகளிலும் மிக அதிகப்படியான விழுக்காடு பெற்று இருக்கிறார்கள். அந்தப் பள்ளிக்கு போதுமான கட்டட வசதி இல்லை, இட வசதி இல்லை. ஆகவே அருகில் உள்ள இந்து சமய அறநிலையத் துறைக்குச் சொந்தமான இடம் 5 ஏக்கர் இருக்கிறது. நம்முடைய ஆதி திராவிட நலத் துறை அமைச்சர் அவர்கள் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் அவர்களோடு பேசி அந்த இடத்தைப் பெற்றுத் தர வேண்டுமென்று அன்போடு

அன்போடு நான் கேட்டுக்கொள்கிறேன்.

1993-94 ஆம் ஆண்டு, கடந்த அரசு, இந்த ஆதிதிராவிட நலப்பள்ளிகளைத் தொடங்குவதை நிறுத்தி வைத்தது. தமிழக முதலமைச்சர் அவர்கள் அந்த 1993-94 ஆம் ஆண்டு போடப்பட்ட தடையை நீக்கி இனி வரும் ஆண்டுகளில் இந்தப் பள்ளிகளைத் தொடங்கவேண்டுமென்று அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

எனது தொகுதியில் தொரவலூர் புலிவலம், இகிரனூர், ஏ.கிரனூர் போன்ற பகுதிகளில் ஆதிதிராவிட மக்கள் மிக அதிக அளவில் வசித்து வருகிறார்கள். அவர்களுக்கு இந்தத் துறையின் மூலமாக புதிதாக ஆதி திராவிட நலப்பள்ளிகளைத் தொடங்க வேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

இரண்டு தாலுகாக்களுக்கு ஒரு தாசில்தார்தான் இப்போது இருக்கிறார். அந்த நிலையைப் போக்கி எப்படி ஒரு தாலுக்காவுக்கு இப்போது வருவாய்த் துறையில் ஒரு தாசில்தார் இருக்கிறாரோ; அதேபோன்று எல்லா தாலுகாக்களுக்கும், இந்தத் துறையில் தனித் தாசில்தாரை நியமிக்க வேண்டுமென்று நான் இங்கே அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 12-55

ம. பொடையூர் என்ற ஒரு கிராமம் உள்ளது. அந்த ம. பொடையூர் கிராமத்தில் ஓர் ஆதிதிராவிட நல பள்ளி உள்ளது. அந்தப் பள்ளிக்கு ஆய்வுக் கூடம் ஒன்று தொடங்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். (மணியடிக்கப்பெற்றது)

சமுதாயக் கூடம் பற்றி இன்றைக்கு உறுப்பினர்கள் மிகத் தெளிவாகப் பேசினார்கள். இந்தச் சமுதாயக் கூடம் இந்த ஆண்டில் 2 தான் கொடுக்கப்படும் என்று இந்த செயல் திட்ட விளக்கப் புத்தகத்திலே இருக்கிறது. குறைந்தபட்சம் ஐம்பதாவது கொடுக்க வேண்டுமென்று அமைச்சரவர்களை மிக்க அன்போடு கேட்டுக்கொள்கிறேன். ஆதிதிராவிடமக்களைப் பொறுத்தவரை, அவர்கள் திருமணம் செய்துகொள்வதற்குப் போதிய இடவசதி இல்லாதவர்கள். வீட்டிலே ஒரு பந்தல் போட்டுக்கொண்டு கல்யாணம் பண்ணுவார்கள். இன்றைக்கு நீங்கள் சிறப்பான ஆட்சி புரிகிறீர்கள். எனவே, எடுத்தவுடன் நீங்கள்

1998 ஏப்ரல் 29] [திரு. ச. புரட்சிமணி.]

பல்வேறு திட்டங்களையும் அறிவித்தீர்கள். இன்றைக்கு நம்முடைய ஜனாதிபதி, பல்வேறு அரசு அதிகாரிகளையெல்லாம் நியமித்திருக்கிறார்கள். அதுபோன்று இருக்கும்போது, இந்தச் சமுதாயக் கூடம் 2 என்று அறிவித்திருப்பதை, கண்டிப்பாக 50 ஆக அறிவிக்க வேண்டுமாய் இந்த நேரத்திலே உங்களை நான் மிக்க அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

நீங்கள் தவறாக நினைக்கக் கூடாது. எங்களுடைய பெருந்தலைவர் காமராஜர் அவர்கள் அன்றைக்கு ஆட்சியிலே இருந்தபொழுது கக்கன்ஜி அவர்களுக்கு மிகவும் முக்கியத்துவம் கொடுத்து—இந்தத் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு ஒரு பெரிய பதவியான, காவல் துறையினால் புறக்கணிக்கப்பட்ட தாழ்த்தப்பட்ட மக்களில் ஒருவரான கக்கன்ஜி அவர்களுக்கு போலீஸ் துறை என்று அந்த மந்திரிப் பதவியைக் கொடுத்தார்கள்.

இன்றைக்கு நீங்கள் பதவி கொடுத்துள்ள இரண்டு அமைச்சர்கள் உள்ளார்கள். இல்லையென்று நான் சொல்லவில்லை. இருந்தாலும் ஒரு முக்கியமான அமைச்சர் பதவியை நீங்கள் தர வேண்டுமென்று நான் இங்கே அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

நம்முடைய பரிதி இளம்வழுதி அவர்கள் கடந்த 5 வருடத்திலே பட்ட கஷ்டத்தை எல்லாம் நாம் பார்த்தோம். அவர் பலமாக அடி வாங்கியிருக்கிறார். பலமுறை தூக்கி வெளியே போட்டிருக்கிறார்கள். நாங்கள் 5 வருஷம் பட்ட . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நீங்கள் துறையைப் பற்றிப் பேசுங்கள். எங்கள் கட்சியிலே பரிந்துரை செய்து விவகாரத்தை உண்டாக்காதீர்கள்.

திரு. சி. ஞானசேகரன்: கட்சி சார்பில்லாத . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நீங்கள் உட்காருங்கள், மாண்புமிகு அமைச்சரவர்கள்.

திரு. ச. புரட்சிமணி: நான் பேசி முடித்து விடுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நீங்கள் பேசி முடித்தாகி விட்டது. மாண்புமிகு அமைச்சரவர்கள்.

***மாண்புமிகு திரு. சமயநல்லூர் எஸ். செல்வராசு:** மாண்புமிகு பேரவைத்

தலைவர் அவர்களே, 1998-99 ஆம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கை எண். 30. ஆதிதிராவிடர் நலன், பழங்குடியினர் மேம்பாடு, கொத்தடிமை ஒழிப்பு மானியத்தினை மூன்றாவது முறையாக இங்கே எடுத்து வைக்கின்ற பெரும் வாய்ப்பினை வழங்கிய மாண்புமிகு முதல்வரவர்களை வணங்கி இந்த உரையை எடுத்து வைக்கின்றேன்.

இத்துறையின்மீது நடைபெறும் விவாதங்களிலே பங்கேற்றுப் பேசிய மாண்புமிகு உறுப்பினர்களின் மனம் மகிழத்தக்க அளவிற்கு நம்முடைய முதல்வரவர்கள் இடைமறித்துத் தக்க விளக்கங்களைத் தந்திருக்கின்றார்கள். இது ஆதிதிராவிடர் நலத் துறை. ஆகவே, ஆதிதிராவிடர் நலத் துறை குறித்து பாதியை முதல்வரவர்களே ஏற்றுத் தக்க விளக்கத்தைக் கொடுத்திருக்கின்ற காரணத்தினால் மீதியை நான் விரைவாகக் கூறி விடை பெறலாம் என்று நினைக்கின்றேன்.

இன்றையதினம் மாறிவரும் சமுதாயத்தில், மலர்ந்து நிற்கக் கூடிய ஆதிதிராவிடர் நலத் துறையின் சார்பாக, இந்தத் திட்டங்களை, மூன்று பெரும் திட்டங்களாக மாண்புமிகு முதல்வரவர்கள் உருவாக்கித் தந்திருக்கிறார்கள். மூன்று பெரும் திட்டங்களாக உருவாக்கித் தந்த முதல்வரவர்கள், அந்தத் திட்டங்கள் சிறப்பாகச் செயல்படுவதற்கு, அந்த மக்கள் செம்மாந்து வாழ்வதற்காக 434 கோடி ரூபாயை வாரி வழங்கியிருக்கின்றார்கள். 434 கோடி ரூபாய் என்பது, கடந்த கால ஆட்சியில் ஒதுக்கப்பட்ட நிதியைவிட 225 கோடியே 90 இலட்சம் அதிகம் என்பதை இந்த நேரத்தில் நான் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

ஆதிதிராவிட மக்களுடைய வாழ்க்கைத் தரம் உயர, "கண் மூடாக் கடிகாரமாக" இருக்கக்கூடிய முதல்வர் கலைஞர் அவர்கள், அந்த மக்கள்மீது கொண்ட அன்பின் காரணமாக, பற்றின் காரணமாக, பாசத்தின் காரணமாக, பரிவின் காரணமாக இந்த அளவிற்குப் பணத்தை ஒதுக்கித் தந்திருக்கின்றார்கள்.

முதல்வர் கலைஞர் அவர்கள், சமுதாய வளர்ச்சி, கல்வியில்தான் உள்ளது என்பதை உணர்ந்து, அதுதான் சமுதாய மாற்றத்திற்குச் சரியான பாதையில் அழைத்துச் செல்வது என்பதையும் தெரிந்து, ஆதிதிராவிட மக்களும், அந்த அருந்தமிழ்ப் பழங்குடியினரும் ஓதி உணர்வதற்காக, கல்விக்காக அதிகமான பணத்தை ஒதுக்கித்

1998 ஏப்ரல் 29] [திரு. சமயநல்லூர் எஸ். செல்வராசு]

தந்திருக்கின்றார்கள். இந்த ஆதிதிராவிடர் நலத் துறையின் சார்பாக கடந்த 10 ஆண்டுகளாகத் தொடக்கப் பள்ளியை நடுநிலைப் பள்ளியாக உயர்த்தாமல் முடக்கிப் போட்டு வைத்திருந்தார்கள். ஆனால், கலைஞர் அவர்கள் பொறுப்பேற்ற பிறகு, 50-வது சுதந்திர தினப் பொன்விழா கொண்டாடுகின்ற இந்த நேரத்திலே, 50 தொடக்கப் பள்ளிகளை நடுநிலைப் பள்ளிகளாக உயர்த்துவதற்கு ஆணையிட்டுள்ளார்கள் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

பிற்பகல் 1-00

நடுநிலைப் பள்ளிகளை உயர்த்துவதற்காக 1 கோடியே 12 இலட்சம் ரூபாயை வாரி வழங்கியிருக்கின்றார்கள். அதனால் திருத்துறைப்பூண்டி தொகுதி மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் ஜி. பழனிசாமி அவர்களின் நீண்ட நாள் கோரிக்கை நிறைவேற்றப்பட்டிருப்பது அவர்களுக்கு மனநிறைவு தரும் என்று நான் நினைக்கின்றேன். மேலும், 6 நடுநிலைப் பள்ளிகளை உயர்நிலைப் பள்ளிகளாகவும், 6 உயர்நிலைப் பள்ளிகளை மேல்நிலைப் பள்ளிகளாகவும் நிலை உயர்த்துவதற்கும், அவற்றுக்கு அடிப்படை வசதிகளைச் செய்து கொடுப்பதற்கும், கூடுதல் கட்டடங்களைக் கட்டுவதற்கும் மாண்புமிகு முதல்வர் அவர்கள் 1 கோடியே, 37 இலட்சத்து, 13,000 ரூபாய் ஒதுக்கியிருக்கின்றார்கள். மேலும், 3 மேல்நிலைப் பள்ளிகளில் ஆய்வுக் கூடங்கள் கட்டுவதற்கும், சென்னை கன்னிகாபுரம், செவ்வாய்ப்பேட்டை மகளிர் மேல்நிலைப் பள்ளிகளில் சுற்றுச் சுவர் எழுப்பவும் மற்றும் கோமுகி அணை பழங்குடியினர் மனையகப் பள்ளிக்குச் சிறுபாலம் அமைக்கவும் ரூ. 91 இலட்சத்து 48,000 ஒதுக்கியிருக்கின்றார்கள் மாண்புமிகு முதல்வர் என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதே நேரத்தில், 'மாணவர்கள் எதிர்காலச் சமுதாயத்தின் விதை நெல், என்பதை உணர்ந்த தமிழக அரசு மாணவர்களைக் கண்ணின் மணியெனக் கருதி, 'எங்கும் தமிழ், எதிலும் தமிழ்' என்பதைப் போல எங்கும் கணினி, எதிலும் கணினி என்னும் நிலையினை நம் மாண்புமிகு முதல்வர் அவர்கள் ஏற்படுத்தி, 51 மேல்நிலைப் பள்ளிகளிலும், 9 உயர்நிலைப் பள்ளிகளிலும் மாணவர்களுக்குக் கணினிக் கல்வியும், நலப்பள்ளிகளில் பணிபுரியும் ஆசிரியர்களுக்கு கணினியில், பயிற்சியும், மாணவர்களுக்கு சுயதொழில் சார்ந்த கணினிப் பயிற்சியும், கணினி

[திரு. சமயநல்லூர் எஸ். செல்வராசு] [1998 ஏப்ரல் 29

மையங்கள் வைத்துக் கொள்ள நிதியுதவியும் அளித்திருக்கின்றார்கள் என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

வேலூர், திருநெல்வேலி ஆகிய இடங்களில் பட்ட மேற்படிப்பு படிக்கும் மாணவர்களுக்கு, புதியதாக இரண்டு விடுதிகளைத் திறப்பதற்கு மாண்புமிகு முதல்வர் அவர்கள் நிதியினை ஒதுக்கியிருக்கிறார்கள். பள்ளி மாணவர்களுக்கு 24 மாணவர் விடுதிகளும், சிவகங்கை, திண்டுக்கல், மேலூர், பொன்னேரி ஆகிய இடங்களில் கல்லூரி மாணவியர்களுக்கு 4 கல்லூரி விடுதிகளும் கட்ட நிதி ஒதுக்கித் தந்திருக்கிறார்கள். ஆக மொத்தம், 30 விடுதிகள் இவ்வாண்டு தொடங்கப்படும் என்பதை இப்பேரவையில் மகிழ்ச்சியுடன் நான் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். வேலூரில் விடுதி காலூன்ற வித்திட்டவர்களான மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்களும், மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் அவர்களும் அந்தப் பெருமைக்குச் சொந்தக்காரர்கள் என்பதை இந்த நேரத்திலே கூறுவதில் மகிழ்ச்சியடைகிறேன். அதற்கு ஆகும் செலவு 1 கோடியே 20 இலட்சம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இந்த நேரத்தில் கல்லக்குடி என் நினைவுக்கு வருகிறது. 'கல்லக்குடி தமிழர்களின் உள்ளக்குடி, இங்கே ஏன் டால்மியாவுக்கு ஒரு விலாசக்குடி' என்ற தலைவர் மாண்புமிகு கலைஞர் அவர்கள் இங்கே வீற்றிருக்கிறார்கள். இன்று சமத்துவபுரம் கண்டு, அந்த சமத்துவபுரத்திலே தொடக்கப் பள்ளி ஒன்று நடுநிலைப் பள்ளியாக நிலை உயர்த்தியும், அந்தப் பள்ளி மாணவர்கள் தங்கிப் படித்திட விடுதி ஒன்றும் துவக்கிட ஆணைகள் வழங்கப்படுகின்றன. இந்த நிலை உயர்விற்கு எடுத்தியம்பியவர் மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர், எனக்கு நேராக அமர்ந்திருக்கும் அண்ணன் நேரு அவர்களே. அன்பில் பொய்யாமொழி அவர்கள் வேண்டியபடி மிளகுப்பாறை உயர்நிலைப் பள்ளிதனை மேல்நிலைப் பள்ளியாக உயர்த்துவதற்கு இன்றையதினம் ஆணையிடப்பட்டுள்ளது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பள்ளி விடுதியில் தங்கிப் பயிலும் மாணவர்களுக்கு உணவுக் கட்டணம் கடந்த காலத்தில் 138 ரூபாய் 75 காசாக இருந்தது. மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள் பொறுப்பேற்றதற்குப் பிறகு, அந்தப் பள்ளி விடுதியிலே தங்கிப் படிக்கக்கூடிய அந்த மாணவர்களுக்கு ரூ.138.75 ஆக இருந்ததை

1998 ஏப்ரல் 29] [திரு. சமயநல்லூர் எஸ். செல்வராசு]

180 ரூபாய் என உயர்த்தி ஆணையிட்டவர் தலைவர் கலைஞர். அதேப்போல இந்த ஆண்டு, 180 ரூபாய் என்பதை 225 ரூபாயாக மாண்புமிகு முதல்வர் தலைவர் கலைஞர் அவர்கள் உயர்த்தியிருக்கிறார்கள். அதனால் கூடுதல் செலவு 3 கோடியே 87 இலட்சம் ரூபாய் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதைப்போலவே, கல்லூரி மாணவரில்லங்களில் மாணவர்களுக்கு உணவுக் கட்டணம் முந்தைய ஆட்சியில் 202 ரூபாய் 50 பைசாவாக இருந்தது. 202 ரூபாய் 50 பைசாவாக இருந்ததை 250 ரூபாயாக மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள் உயர்த்தினார்கள். அதற்குப் பின்னாலே, 300 ரூபாயாக உயர்த்தினார்கள். பழகுபவர்களுக்கு அகநானூறாக, பகைவர்களுக்குப் புறநானூறாக இருக்கக்கூடிய மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள், நான் நூறு, நூறாகத் தருகிறேன், நானூறாகத் தருகிறேன் என்று சொல்லி நானூறு ரூபாயாக அந்த மாணவர்களுக்கு உயர்த்தித் தந்திருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) இதற்காக 10 கோடியே 70 இலட்சத்து 60,000 ரூபாய் கூடுதல் நிதி இந்த அரசின் சார்பாக ஒதுக்கப்பட்டிருக்கிறது என்பதை இந்த நேரத்திலே கூறிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதைப்போலவே, ஆதிதிராவிடர் மாணவர்களுக்கு மட்டுமல்லாமல், பிற்படுத்தப்பட்ட மாணவர்களுக்கும் அட்சயப் பாத்திரமாக, அமுதசுரபியாகத் திகழ்பவர் நம் மாண்புமிகு முதல்வர் அவர்கள் என்பதற்கு இது ஓர் எடுத்துக்காட்டாகும். உயர்த்தப்பட்ட உணவுக் கட்டணத்தில் விடுதிகளில் தரமான உணவு வழங்குவதற்கு, சென்னையில் 5 விடுதிகளும் மற்ற மாவட்டங்களில் 20 விடுதிகளும் தேர்ந்தெடுக்கப்பட்டு ஒப்பந்த அடிப்படையில் மாணவர்களுக்கு 1-6-1998 முதல் உணவு வழங்கும் முறை நடைமுறைப்படுத்தப்படுகிறது. தரமான உணவினை படைத்திட்ட மாண்புமிகு முதல்வர் அதேநேரத்தில் தகுதியான, கெட்டியான விடுதிகளைக் கட்டுவதற்கும் பணத்தை ஒதுக்கியிருக்கின்றார்கள்.

மாட்டுத் தொழுவங்கள் போல், கடந்தகால ஆட்சியில் கட்டப்பட்டுள்ள, மயானக்கூரை போல இடிந்த, வடிவமிழந்த சில தனியார் கட்டடங்களில் நடந்து வந்த மாணவ/மாணவியர் விடுதிகளை முதல்வர் கலைஞர் அவர்கள் பார்த்து, 'ஐயோ, மாணவ/மாணவியர் இப்படிப்பட்ட விடுதிகளிலா தங்கிப் படிக்கிறார்கள், சுவர் இருந்தால்தானே சித்திரம் வரைய முடியும்' என்பதனை உணர்ந்து,

TRUTH ALONE TRIUMPHS

மாணவ/மாணவியர் விடுதி கட்டுவதற்காக ரூ.8 கோடியே 50 இலட்சம் ஒதுக்கித் தந்திருக்கிறார்கள் என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

பிற்பகல் 1-05

அந்தக் கட்டடங்களைக் கெட்டியாகக் கட்டுவதற்கு, ஒழுங்காக வடிவமைப்பதற்கு திறந்த முறையில் ஒப்பந்தப்புள்ளிகளை, ஆதிதிராவிட ஒப்பந்தக்காரர்களுக்கு மட்டுமே முன்னுரிமை கொடுத்து பணிகளைக் கண்காணிப்பதற்கு ஐவர் குழு என்ற ஒரு புதிய முறை இப்போது கடைப்பிடிக்கப்பட்டு வருகிறது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். இந்த மகத்தான செயல்பாட்டினை இந்திய அளவிலே முதன்முதலில் உருவாக்கியவர் இங்கே அமர்ந்திருக்கிற உன்னதத் தலைவர் கலைஞர் அவர்கள்தான். அதைப்போல, பள்ளிகளிலும் விடுதிகளிலும் தங்கிப் பயிலும் மாணவர்களுக்கு 2 இணை இலவசச் சீருடைகளும், பாடப் புத்தகங்களும், வழிகாட்டிகளும் வழங்குவதோடு, மாணவ/மாணவியருக்கு உதவித்தொகை, ஊக்கத்தொகை, பரிசுத்தொகை ஆகியவையும் வழங்கப்பட்டு வருகின்றன. இதற்காக 54 கோடியே 60 இலட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது.

சென்னையிலுள்ள அனைத்துக் கல்லூரி மாணவர்களுக்கும், 500 மாணவர்கள் தங்கிப் பயிலும் மாணவர் இல்லங்களுக்கு 17 இலட்சத்து 50 ஆயிரம் செலவில் அறைகலன் அறைகளும், வளர்ந்து வரும் அறிவியல் உலகத்தில், 'அடுப்பெரிக்க விறகுக் கட்டைகளா, புகைக்கும் மண்ணெண்ணெய் அடுப்புகளா' எனச் சிந்தித்த கலைஞர் அவர்கள் பணத்தடை முன் நின்றபோதும், மனத் தடையில்லாத தாராள குணத்தால், வாடுகின்ற பயிர்களுக்கு வான் மழை போல, 50 மாணவர் இல்லங்களுக்கு சமையல் எரிவாயு இணைப்புகளும் வழங்குவதற்கு சிறப்பு நிதியாக ரூ. 20 இலட்சத்தை ஒதுக்கித் தந்திருக்கிறார்கள் என்பதைச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மேலும், பள்ளி மாணவ மாணவியரிடம் மறைந்து கிடக்கும் கலைத்திறனை வளமூட்டி, வளர்த்து புதுப் பொலிவு பெறும் வண்ணம் இத்துறையில் பள்ளிகள் மேம்பாட்டுத் திட்டம் ஒன்று உருவாக்கப்பட்டு, மாணவ மாணவியர்களின் இயல், இசை, நாடகத்திறன், விளையாட்டுத் திறன், அறிவியல் உணர்வு ஆகியவற்றை உரமிட்டு, ஊக்கப்படுத்தும் வகையில் மாவட்டங்கள், மண்டல, மாநில அளவிலான போட்டிகளும்

விழாக்களும் நடத்தப்பட்டன. கடந்த ஆண்டும்கூட மதுரை மாநகரில் இந்த விழா சிறப்பாக நடத்தப்பட்டு ஏராளமான மாணவ மாணவியருக்குச் சான்றிதழ்களும் பரிசுகளும் வழங்கப்பட்டன. இது முதல் முறையாக இந்தியாவில் அறிமுகப்படுத்தப்பட்ட திட்டம் என்பதை நான் பெருமையோடு கூறிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அடுத்து, ஒரு காலத்தில் குலத்துக்கு ஒரு கல்வித் திட்டம் என்று ஒரு கற்காலத் திட்டம் இருந்தது. இன்று குடும்பத்துக்கு ஒரு கல்வித் திட்டம் என்ற பொற்காலத் திட்டத்தை தமிழக முதல்வர் அவர்கள் தந்துள்ளார்கள். ஒவ்வொரு ஆதிதிராவிட, மலைவாழ் மக்களும் தனிப்பட்ட முறையில் தொழில் துறையில் முன்னேறவும், குடும்பங்கள் தழைக்கவும், கல்வியில் நாட்டம் பிறக்கவும், 'கல்வி குடும்பத் திட்டம்' என்ற புதிய திட்டத்தை இவ்வரசு கொண்டு வந்திருக்கிறது. அதே நேரத்தில், பட்டயம் அல்லது பட்டப் படிப்பு படித்த மாணவர்கள் யாராக இருந்தாலும், அந்தக் குடும்பத்தில் ஒருவருக்கு ரூபாய் 15 ஆயிரத்திலிருந்து 50 ஆயிரம் வரைக்கும் இலவசமாக சிறு தொழில்கூடம் அமைக்க அரசு உதவி செய்து வருகிறது.

பழங்குடியின மக்களுக்காக இந்த அரசு எத்தனையோ சலுகைகளைச் செய்து வருகிறது. பழங்குடியின மக்களின் தரத்தை உயர்த்துவதற்கு இந்த அரசு எடுத்துக்கொண்ட முயற்சி அளவிடற்கரியது. இந்தியத் துணைக் கண்டத்தில் 'பழங்குடியினர் மேம்பாட்டுக் குழு' நடத்தும் மேல்நிலைப் பள்ளி ஒன்றைத் துவக்க தமிழக முதல்வர் அவர்களின் பரிந்துரையின்பேரில் மத்திய அரசு ஒரு கோடி ரூபாயை வழங்கியுள்ளது. ஒருங்கிணைந்த பழங்குடியினர் மேம்பாட்டுத் திட்டப் பகுதிகள் அல்லாத பகுதிகளிலும், தந்தை பெரியார் பிறந்த கத்தேரி மலையிலும், கோவை மாவட்டத்தில் காட்டம்பாறை மற்றும் பரளி ஆகிய இடங்களிலும் 15 இலட்சத்து 23 ஆயிரம் செலவில் 4 பள்ளிகளைத் துவக்குவதற்கு இந்த அரசு பணத்தை அள்ளித் தந்திருக்கிறது.

இங்கே பேசிய மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் க. கிருஷ்ணசாமி அவர்கள், 'இட ஒதுக்கீடு என்ன ஆயிற்று' வெள்ளை அறிக்கை என்ன ஆயிற்று என்று கேட்டார்கள். அதற்கு நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள் தெள்ளத் தெளிவாக விளக்கத்தை எடுத்து வைத்தார்கள்.

ஒடுக்கப்பட்ட மக்களுக்காக ஒதுக்கப்பட்ட பணியிடங்களை—அரசுத் துறைகளிலும், அரசுத் துறை நிறுவனங்களிலும் நிரப்பப்படாமல் இருக்கும்

இடங்களை—முழுமையாக நிரப்புவதுதான் இந்த அரசினுடைய கொள்கை என்பதை உணர்ந்து, அதற்காகக் கண்காணிப்புக் குழு ஒன்றை அமைத்திருக்கிறார்கள். இந்தக் கண்காணிப்புக் குழுவில் 9 உறுப்பினர்கள் இருப்பார்கள். அவர்களுக்கு தக்க வழிமுறைகளை வரையறுத்து இந்த அரசு இட ஒதுக்கீட்டில் என்னென்ன செய்ய வேண்டுமென்பதை தலைவர் கலைஞர் அவர்கள் கொடுத்திருக்கிறார்கள். அதன்மூலமாக 110 துறைகள் ஆய்வு செய்யப்பட்டு, 662 இடங்கள் காலியாக இருப்பதைக் கண்டறிந்து, அந்த 662 இடங்களில், 54 இடங்கள் நிரப்பப்பட்டிருக்கின்றன. இந்தக் குழு, 14 முறை கூடி, நல்லதொரு முடிவை எடுத்திருக்கிறது. நல்லதொரு முன்னேற்றத்தை ஏற்படுத்தியிருக்கிறது. இட ஒதுக்கீட்டில் ஆதிதிராவிட மக்களுக்குக் கிடைக்க வேண்டிய சலுகைகளையும், உரிமைகளையும் பெற்றுத் தருவதற்கு, முதல்வர் கலைஞர் அவர்கள் தலைமையில் அமைந்துள்ள இந்தக் குழு சிறப்பாகச் செயல்பட்டு வருகிறது என்பதை நான் இந்த நேரத்திலே கூறிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். இது முதலமைச்சரின் சிந்தனையில் பூத்த ஒரு சிறப்பான திட்டம் என்பதையும், பெருமைக்குரிய திட்டம் என்பதையும், இந்திய வரலாற்றிலே, ஆதிதிராவிட மக்களுக்கு ஒரு புதிய வரலாறு படைக்கக்கூடிய திட்டம் என்பதையும் நான் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

பிற்பகல் 1-10

ஆதிதிராவிட மக்களுக்கு வீட்டு மனை வழங்குவதற்காக, முதல்வர் கலைஞர் அவர்கள், 15 கோடியே 51 இலட்சம் ரூபாயை ஒதுக்கித் தந்திருக்கிறார்கள். அதேபோல், இந்த வீட்டு மனைகள் வழங்குவதில் காலதாமதம் ஏற்படுகிறது; சில குளறுபடிகள், குறைபாடுகள் ஏற்படுகின்றன என்பதையெல்லாம் உணர்ந்து, இத்துறையைச் சார்ந்த 20 தனி வட்டாட்சியர்களுக்கு ஈப்புகள் வாங்கி வழங்குவதற்காக 71 இலட்சம் ரூபாயை, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் வழங்கி இருக்கிறார்கள்.

"கோப்புகள் சிகப்பு நாடாவில் கட்டப்பட்டு உறங்குகின்றபோது, ஊழல் எழுந்து உட்கார்ந்து ஊர் சுற்ற ஆரம்பித்து விடுகிறது" என்று முதலமைச்சர் அவர்கள் இதே அவையில் எடுத்து வைத்தார்கள். ஆகவே, ஆதிதிராவிடர் நலத் துறையின் செயல்பாடுகள் தாமதமின்றியும்,

1998 ஏப்ரல் 29] [திரு. சமயநல்லூர் எஸ். செல்வராசு.]

தடையின்றியும், ஊழல் இன்றியும் சிறப்பாக நடைபெற, முதல்வர் கலைஞர் அவர்கள், அனைத்து மாவட்ட நல அலுவலகங்களுக்கும் புதிதாக கணினிகளை வழங்குவதற்கு உத்தரவிட்டிருக்கிறார்கள். மேலும் கூடுதலாக வட்டாட்சி அலுவலகங்களையும் உருவாக்க உத்தரவிட்டிருக்கிறார்கள்.

கொட்டும் மழையிலும், கொளுத்தும் வெயிலிலும், குடிசை கூட இல்லாத ஆதிதிராவிட மக்களுக்கு, இந்தியாவிலேயே, முதன்முதலாக, கான்கிரீட் வீடுகளைக் கட்டித் தந்த பெருமை, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களையே சாரும். அதன் முன்னோடித் திட்டம்தான் 'இந்திரா வீட்டு வசதித் திட்டம்' என உருவாக்கப்பட்டது என்பது உலகறிந்த உண்மையாகும். நடப்பாண்டில், இதன்கீழ் 60 ஆயிரம் வீடுகள் கட்டப்படவிருக்கின்றன என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

விடுதலைக்கு வித்திட்ட வீரபாண்டிய கட்டபொம்மன் வாழ்ந்த பாஞ்சாலங்குறிச்சிக்கு அருகிலுள்ள கவர்னகிரி என்பது, கட்டபொம்மனுடைய தளபதியாக இருந்த சுந்தரலிங்கனார் வாழ்ந்து மறைந்த இடம். சுந்தரலிங்கனார் வாழ்ந்து மறைந்த இடத்திலே, சுந்தரலிங்கனாருடைய வாரிசுகள், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களைச் சந்தித்து, அங்கு அடிப்படை வசதிகள் இல்லாமல் இருப்பதாகவும், ஆகவே அவர்களுக்கு வீட்டடி மனை வேண்டுமென்றும் கேட்டார்கள். வீட்டடி மனை வேண்டுமென்று சொன்ன நேரத்திலே, வீட்டடி மனையும் கொடுத்து, அதேநேரத்திலே 200 வீடுகளைக் கட்டிக் கொடுத்து, அதற்காக 1 கோடியே 5 இலட்சம் ரூபாயை ஒதுக்கித் தந்திருக்கிறார்கள். பத்தே பத்து மாதத்தில், கம்பீரமான, அருமையான அளவிற்குப் பார்க்கக்கூடிய அந்த வீடுகளை, கவர்னகிரியிலே, 18-4-1998-ஆம் நாள் தலைவர் கலைஞர் அவர்கள் திறந்து வைத்து வந்திருக்கிறார்கள். கவர்னகிரியில் வாழ்கின்ற ஆதிதிராவிட மக்கள் மட்டுமல்ல; இந்த பூமிப் பந்தின் குறுக்கிலும், நெடுக்கிலும் வாழும் ஆதிதிராவிட மக்கள் அத்தனை பேரும் தலைவர் கலைஞர் அவர்களுக்கு நன்றி சொல்லிக் கொண்டிருக்கிறார்கள் என்பதை இந்த நேரத்திலே கூறிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதேபோல சமத்துவபுரம் திட்டம். சாதிகளை வேரறுத்து, சமத்துவத்தை நிலைநாட்ட, இந்தியாவிற்கே வழிகாட்டும் திட்டம்தான், சமத்துவபுரம் திட்டம். சமத்துவபுரம் திட்டத்தின்கீழ், பொன்விழா

[திரு. சமயநல்லூர் எஸ். செல்வராசு] [1998 ஏப்ரல் 29

ஆண்டிலே, ஐம்பதாம் ஆண்டு விடுதலைப் பொன்விழா ஆண்டிலே, 50 சமத்துவபுரங்களை உருவாக்கி, ஒவ்வொரு சமத்துவபுரத்திலும் 100 வீடுகளை உள்ளடக்கி, அனைத்து இன மக்களையும் அதிலே குடியேற்றி, அனைத்து அடிப்படை வசதிகளையும் நிறைவேற்றி, 'எல்லோரும் இன்னாட்டு மன்னர்' என்ற நிலையை ஏற்படுத்திய, சமத்துவச் சூரியனாக இருக்கக்கூடிய முதல்வர் அவர்கள், மொத்தம் 5 ஆயிரம் வீடுகளைக் கட்டித் தருவதற்கு, 17 கோடியே 50 இலட்சம் ரூபாயை ஒதுக்கித் தந்திருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

இங்கே பேசிய மாண்புமிகு உறுப்பினர்கள் பலபேர் நல்ல கருத்துக்களை எடுத்து வைத்தார்கள். 'சமுதாயக் கூடம் வேண்டும்; ஆதிதிராவிட மக்கள் பொது இடங்களிலே திருமணம் செய்வதற்கு அவதிப்படுகிறார்கள்; பொது இடங்களில் கூடுவதற்கு வழி இல்லாமல் இருக்கிறார்கள்; அதற்கான வாய்ப்பை உருவாக்கித் தரவேண்டும்' என்று பல மாண்புமிகு உறுப்பினர்கள் கேட்டார்கள். மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடம் இதுகுறித்து எடுத்துச் சொல்லப்பட்டது. சொன்ன உடனேயே—ஆதிதிராவிட நலத் துறைக்கு சமுதாயக் கூடங்கள் வேண்டுமென்று நாங்கள் கேட்டது பத்து; ஏனென்றால் கடந்த காலத்திலே 2 சமுதாயக் கூடங்கள்தான் கூட்டிக் கொடுக்கப்பட்டன; ஆகவே, இந்த ஆண்டு பத்தாவது நீங்கள் கொடுக்கவேண்டும்; பத்தாவது நிதிநிலை அறிக்கையினை நீங்கள் தந்திருக்கிறீர்கள் என்று நாங்கள் நினைவுபடுத்தியவுடனேயே—பத்தும் எடுத்துச் செல்லுங்கள் என்று முத்தாகக் கொடுத்திருக்கிறார்கள். ஆகவே, ஆதிதிராவிடர் நலத் துறைக்கு, இந்த தடவை, 10 சமுதாயக் கூடங்கள் கட்டப்படும் என்பதை நான் சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

தீண்டாமை ஒழிப்பு வாரவிழா. ஒரு காலத்தில், தீண்டாமை ஒழிப்பு என்றிருந்தது. அந்தத் தீண்டாமை ஒழிப்பில் இருந்த 'தீண்டாமை' நமக்கு வேண்டாம் என்று, தலைவர் கலைஞர் அவர்கள், அதை 'மனிதநேய வார விழா' என்று மாற்றி, ஒவ்வோராண்டும் ஜனவரித் திங்கள் 24 முதல் 30-ஆம் தேதி வரைக்கும், தீண்டாமைக் கொடுமையை வேரறுத்து, பட்டியல் வகுப்பினர், பழங்குடியினர் மக்கள் மீது இழைக்கும் வன்கொடுமைகளைத் தடுக்க வகைசெய்யும், 1989ஆம் ஆண்டு வன்கொடுமைத் தடுப்புச் சட்டத்தை நிறைவேற்றி, அது இந்த அரசால் வலுவோடு செயல்பட்டுக் கொண்டு வருகிறது.

கடந்த ஆண்டு மட்டும் வன்கொடுமையால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு முதல்வர் கலைஞர் அரசு 2¼ கோடி ரூபாய் வழங்கியிருக்கிறது. இப்படி பாதிக்கப்பட்ட மக்களுக்கு நீதி வழங்கிட மதுரை, திருச்சி, தஞ்சை, நெல்லை ஆகிய இடங்களில் அமர்வு நீதிமன்றங்கள் உண்டாக்கி அதன் மூலமாக அந்த பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணம் வழங்கப்பட்டு வருகிறது என்பதை எடுத்துச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

பிற்பகல் 1-15

அதுபோல, தனி குற்றவியல் வழக்கறிஞர் மன்றமும், ஒவ்வொரு மாவட்டத்திலும் தனி குற்றவியல் வழக்கறிஞர் பணியிடமும் உருவாக்கப்பட்டு, வன்கொடுமை நடக்கும் இடங்களுக்கு உயர் அதிகாரிகள் குழுக்கள் உடனுக்குடன் சென்று அமைதி காத்திடவும், நீதி கிடைத்திடவும், அந்த மக்கள் நிம்மதியாக வாழ்ந்திடவும் தலைவர் கலைஞர் அவர்கள் நடவடிக்கை எடுத்திருக்கிறார்கள்.

அதுபோல, கொத்தடிமை கொடுமைக்கு சாவுமணி அடித்து, சவக்குழி ஏற்படுத்தி வரும் தானைத் தலைவர் கலைஞர், எங்கெல்லாம் மனித உரிமைகள் பறிக்கப்படுகின்றனவோ, எங்கெல்லாம் உடைமைகள் கவரப்படுகின்றனவோ அங்கெல்லாம் அரவணைப்பில் தாயாகச் செயல்பட்டுக் கொண்டிருக்கும் முதல்வர் கலைஞர் அவர்கள், எங்கெல்லாம் ஜனநாயகத்தினுடைய உரிமைகள் பறிக்கப்படுகின்றதோ, எங்கெல்லாம் 356 என்ற பிரிவு பயன்படுத்தப்படுகின்றதோ - ஏன் உத்திரப்பிரதேசத்தில்கூட அந்தப் பிரிவு பயன்படுத்தப்பட்டபோது உரத்த குரல் எழுப்பி நீதியை நிலைநாட்டினார்கள்.

முதல்வர் கலைஞர் அவர்களுடைய அரசு அண்மையில் கொடைக்கானல் குண்டுபட்டியில் பழங்குடி மக்களின் அடிமை விலங்கை முறித்தது. குண்டும் குழியுமாக இருந்த அவர்களது வாழ்க்கைப் பாதையைச் சீரமைக்க சீர்மிகு முதல்வர் அவர்கள் அங்கே சென்ற உயர்மட்டக் குழுவின் பரிந்துரையை ஏற்று குண்டுபட்டி மக்களின் போக்குவரத்து வசதியை மேம்படுத்த பூம்பாறையிலிருந்து குண்டுபட்டி வரையிலும் 9 கி.மீட்டர் தூரத்திற்கு தார்ச்சாலை அமைக்க 1½ கோடி ரூபாயை உளப்பூர்வமாக தாய் உள்ளத்தோடு வழங்கியிருக்கிறார்கள் என்பதை நான் மனமகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

[திரு. சமயநல்லூர் எஸ். செல்வராசு] [1998 ஏப்ரல் 29

'கொத்தடிமை ஒழிப்பில் இந்தியாவிற்கே வழிகாட்டியாகத் திகழ்கிறது தமிழகம்' என்று இங்கே பேசிய மாண்புமிகு உறுப்பினர்கள் எடுத்துரைத்தார்கள். இதையே உச்ச நீதிமன்றமும் உரத்த குரலில் சொல்லியிருக்கிறது. தமிழக அரசுதான் கொத்தடிமை ஒழிப்புக்கு, இந்தியாவிலேயே அடுத்த மாநிலங்களும் பின்பற்றக்கூடிய அளவிற்கு முன்மாதிரி மாநிலமாகத் திகழ்கிறது என்று உச்ச நீதிமன்றம் சொல்லியிருக்கிறது. 25,008 கொத்தடிமைகள் கண்டறியப்பட்டு அவர்களுக்கு மறுவாழ்வு அளிக்கப்பட்டிருக்கிறது. அதற்காக தமிழக அரசு 5 கோடி ரூபாய் ஒதுக்கி இருக்கிறது. மத்திய அரசும் இதற்காக 3 கோடி ரூபாயை ஒதுக்கியிருக்கிறது என்பதை இந்த நேரத்தில் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

அடுத்து, தேசிய துப்புரவுத் தொழிலாளர்கள். அடிமை நாட்டில் அரசனாய் இருப்பதைவிட சொந்த நாட்டில் துப்புரவுப் பணியாளனாய் இருப்பது மேல் என்று வங்கம் தந்த சிங்கம் நேதாஜி சுபாஷ் சந்திர போஸ் சொல்லிச் சென்றார். ஆனால், இந்தத் துப்புரவுத் தொழிலாளர்களுக்கு இதைச் செய்வோம், அதைச் செய்வோம் என்று சொன்ன இதற்கு முன்னால் இருந்த அரசு எதையும் செய்யவில்லை. ஆனால், தலைவர் கலைஞர் அவர்கள் பொறுப்பேற்ற பிறகுதான் மீட்பு மற்றும் புனர்வாழ்வுத் திட்டத்தின்கீழ் தொழிற்கல்வி பயிலுவதற்கும், தட்டச்சு, ஓட்டுநர் பயற்சி, தோல் ஆடைகள் தயாரித்தல், குளிர்சாதனப் பெட்டி பழுதுபார்த்தல், பனைப்பொருட்கள், மூங்கில் கூடைகள் தயாரித்தல் ஆகியவற்றிற்குப் பயிற்சி அளிப்பது போன்ற துப்புரவுத் தொழிலாளர்கள் மறுவாழ்வு திட்டத்திற்கு வங்கித் தொடர்பு இல்லாமல் நேரடியாகக் கடன் வழங்கும் திட்டத்தை அறிவித்திருக்கிறார்கள்.

அதைப்போல, மனிதவர்க்கம் மறக்கமுடியாத சாதனையாக, மனிதனே மனிதக் கழிவுகளை அகற்றும் கொடுமைக்கு முடிவு கட்டுவதற்காக முதல்வர் கலைஞர் அவர்கள் ஒரு சட்டத்தையே நிறைவேற்றி இருக்கிறார்கள் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். அந்தத் துப்புரவுத் தொழிலாளர்களுக்கு இந்த அரசு செய்த சாதனை இந்திய வரலாற்றில் ஒரு முக்கியமான திருப்பத்தை உண்டுபண்ணும் என்பதை இந்த நேரத்தில் கூறிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

1998 ஏப்ரல் 29] [திரு. சமயநல்லூர் எஸ். செல்வராசு]

அடுத்து தாட்கோ. மாண்புமிகு முதல்வர் அவர்களின் அரிய ஆலோசனைக்கேற்ப ஆதிதிராவிட மக்களின் பொருளாதார வளர்ச்சிக்கு முத்தாய்ப்பு வைப்பது 'தாட்கோ' நிறுவனம். தனிநபர் தொழில் முனைவோர் திட்டத்தின்கீழ் கடன் பெறுவதில் இடர்பாடுகளும், கடன் பெறுவதில் காலதாமதமும், வங்கி அதிகாரிகளுடைய உதாசீனமும் இந்த மக்களுக்குப் பெரும் துன்பங்களைக் கொடுத்து வந்தது. முதல்வர் கலைஞர் அவர்கள் நிதிநிலை அறிக்கையிலே 27-3-1998 அன்று ஆதிதிராவிடர்களுக்குத் தொழில் நடத்த சலுகை வட்டியில் கடன் வழங்கிட, வங்கிக்கு நிகராக கடன் வழங்கிட தாட்கோ மூலம் ஏற்பாடு செய்வதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்படும் என்று அறிவித்திருக்கிறார்கள். இந்தியாவிலேயே சிறந்த முதல்வராக இருக்கக்கூடிய தமிழக முதல்வர் அவர்கள் இதைத் தெரிவித்திருக்கிறார்கள். இதனடிப்படையில் 'தாட்கோ' வங்கியாகச் செயல்பட, வங்கிகளுக்கெல்லாம் தலைமை வங்கியாக இருக்கக்கூடிய ரிசர்வ் வங்கியின் அனுமதியைப் பெற நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

பிற்பகல் 1-20

திரு. சோ. பாலகிருஷ்ணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தாட்கோ லோன் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு ஏராளமாகக் கொடுக்கப்படுகிறது. அதிலே ரொம்ப பேர் கடனைத் திரும்பக் கட்டுவதில்லை. முழுமையாகக் கடனைக் கட்டியவர்கள் திரும்பக் கடன் கேட்டால் இல்லை என்று சொல்லப்படுவதாகத் தெரிகிறது. மானியமும் கிடையாது, கடனும் கிடையாது என்று தாட்கோவில் சொல்லுவதாக கடன் கேட்டவர்கள் குறை சொல்லுகிறார்கள். டிஐஐசி-ல் கடனைக் கட்டியவர்களுக்கு உடனடியாக கோல்ட் கார்ட் ஒன்று கொடுத்து அவர்கள் திரும்பக் கடன் கேட்கிறபோது முன்னுரிமை கொடுக்கிறார்கள். அதேபோல தாட்கோவில் கடன் பெற்று அதனை திரும்பக் கட்டியவர்கள் மீண்டும் கடன் கேட்கும்போது, அவர்களை ஊக்குவிக்கின்ற வகையில் மறுபடியும் கடன் கொடுப்பதற்கு அரசு உத்தரவிடுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சமயநல்லூர் எஸ். செல்வராசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தாட்கோ நிறுவனத்தின் மூலமாகக் கடன் பெற்றவர்கள் மீண்டும் அதனைத் திருப்பிக் கட்ட வேண்டும் என்ற

[திரு. சமயநல்லூர் எஸ். செல்வராசு] [1998 ஏப்ரல் 29

உணர்வு குறைந்தவர்களாகத்தான் இருக்கிறார்கள். அதற்கு அடிப்படைக் காரணம், அந்தத் தாட்கோ நிறுவனத்தின் மூலமாகக் கடன் பெறுவதற்காக அவர்கள் ஏறிச் செல்லக்கூடிய படிக்கட்டுகள் ஏராளம். இடைத்தரகர்கள் வழிமறித்து தாட்கோ கடனுக்காக வழங்கப்படுகின்ற மானியத்தைக் கொள்ளையடித்துச் சென்றுவிடுகிறார்கள். எனவே, கடன் பெற்றவர்கள் கடனைத் திருப்பிக் கட்ட வேண்டும் என்ற உணர்வு இல்லாதவர்களாக இருக்கிறார்கள். இதனால்தான் தாட்கோ கடனைத் திருப்பிச் செலுத்துவதற்கு வாய்ப்பு இல்லாமல் இருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: எதிர்க் கட்சித் தலைவர் உங்களிடம் அதைக் கேட்கவில்லை. கடனைத் திருப்பிக் கொடுத்தவர்களுக்கு மறுபடியும் கடன் கொடுப்பதற்கு நீங்கள் உதவி செய்வீர்களா என்று தான் கேட்கிறார்கள். அதைப்பற்றிச் சொல்லுங்கள்.

மாண்புமிகு திரு. சமயநல்லூர் எஸ். செல்வராசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடனைத் திரும்பக் கட்டாத காரணத்தால் பிரச்சினை இருக்கிறது. ஆனால், கடனைத் திரும்பக் கட்டினால் அவர்களுக்கு உடனடியாக மறுகடன் வழங்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்து, பின்னலாடைத் தொழிற்கூடம். இந்த ஆட்சி பணியேற்குமுன், முதலிப்பாளையத்தில் முடக்கி வைக்கப்பட்டிருந்த பின்னலாடைத் தொழிற்கூடப் பணிகள் எல்லாம் இவ்வாட்சி பதவியேற்றவுடன் முடுக்கி விடப்பட்டன. அரசு மானியம் விடுவிப்பதற்கான ஆணை வெளியிடப்பட்டு, எப்போதுமில்லாத வகையில் தொழில் தொடங்குவதற்கு, முன்னதாகவே அரசு மானியத் தொகை வழங்கியுள்ளது.

அரசு மானியம் வழங்கியவுடன், தொழில் முனைவோரைக் கைவிடாது அவர்களுக்கு தேசிய அளவில் புகழ்பெற்று விளங்கும் "தேசிய அலங்கார ஆடை வடிவமைப்பு" நிறுவனத்தின் மூலமாக சென்னையில் பயிற்சியும் அளிக்கப்பட்டுள்ளது. தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகம் கடன் உறுதிப் பத்திரத்தை ஏற்கெனவே வழங்கத் தொடங்கியுள்ளது என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: உறுப்பினர்கள் அமைதியாக இருக்க வேண்டும்.

1998 ஏப்ரல் 29]

மாண்புமிகு திரு. சமயநல்லூர் எஸ். செல்வராசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தாட்கோ மூலமாக ஏற்படுகின்ற தவறுகளை எல்லாம் களைவதற்காக ஒரு சிறு கையேடு வெளியிடப்பட்டிருக்கிறது. பாமர மக்களின் மூலதனத்தைப் பயன்படுத்தி சிலர் தவறான பாதையில் அழைத்துச் செல்லும் தரகர்களின் பிடியில் சிக்காமல் இருக்க அவர்களை நல்வழிப்படுத்தும் நோக்குடன், நெல்லுக்குப் போய்ச் சேரவேண்டிய நீர் புல்லுக்குச் சென்றிடாமல் தடுத்திடவும் நலத் துறை மூலம் கிடைக்கும் பல்வேறு நலப் பணிகள், அவற்றைப் பெறுவதற்கென வழிமுறைகளைக் கூறும் கையேடு ஒன்று கருத்தோடு தயாரிக்கப்பட்டு, நல்ல கருத்தேடாக, கொள்கைக் குறிப்பேடாக வெளியிடப்பட்டுள்ளது. கடந்த ஆட்சியில் வெளியிடப்பட்ட பணத்தை விரயமாக்கிய, சுயவிளம்பர ஏடாக இது இல்லாமல், தக்க தகவல் அளிக்கும் 53 பக்கங்கள் கொண்ட சிறந்த கையேடாகத் திகழ்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த ஆட்சியில் நடுக்கடலில் சிக்கிய மாலுமி இல்லாத படகாக அலைமோதியது இத்துறை. தீயோன் கையில் சிக்கிய படகு, பாறைமீது மோதி அழியும் என்றார் பேரறிஞர் அண்ணா அவர்கள். அதைப்போல, இந்தத் துறை ஊழலில் சிக்கிச் சீரழிந்தது. அதிலிருந்து ஆதிதிராவிட மக்களை மீட்டு அந்த மக்களின் அழுகுரலைப் போக்கிய கலைஞர் இத்துறையை பீடுநடை போட பெருமைமிகு திட்டங்களைத் தந்து, எளியவனாகிய என்னை இந்த அமைச்சரவையில் அமரச் செய்து, ஏற்றமுடன் உரைத்திட நல் ஆலோசனைகள் வழங்கிய ஆற்றல்மிகு முதல்வர் கலைஞர் இப்புவியை ஒன்றாக்கி, இலக்கணத்தை இரண்டாக்கி, தமிழ் மொழியை மூன்றாக்கி, காற்றை நான்காக்கி, நிலத்தை ஐந்தாக்கி, சுவையை ஆறாக்கி, இசைச் சுரங்களை ஏழாக்கி, தொகை நூல்களை எட்டாக்கி, நவரத்தினங்களை ஒன்பதாக்கி, பத்துப் பாடல்களைப் பாடி மகிழ்ந்திட்ட பத்தாவது நிதிநிலை அறிக்கையினைத் தந்திட்ட பாராளும் தமிழ் மன்னர் கலைஞர் அவர்கள் சொல்லைச் செயலாக்கி, செயலைப் பொருளாக்கி, நாளொரு திட்டங்களை உருவாக்கி, பொழுதொரு சாதனைகளைப் படைத்திட்ட அவரது பொன்னான ஆட்சிதனில், மெல்லத் தழைத்திடும் நலத் துறை என்று சொல்லும் அளவுக்கு ஆதி திராவிடர், பழங்குடியினர் மேம்பாடு பலமடங்கு உயருதலை எடுத்து வைத்தேன் இப்பேரவையில்.

இம்மானியக் கோரிக்கையில் மாண்புமிகு உறுப்பினர்கள் பங்கேற்று உரை நிகழ்த்தி, வாழ்த்துரைத்த வரிகளையும், அறிவுரைகளையும் மனமகிழ்வோடு ஏற்கின்றேன். செயலாற்ற அவற்றிற்கு என் பதிலாக இவ்வுரைதனை ஏற்றிடவும், இதனையே சட்டப் பேரவை நிகழ்ச்சியில் பதிவு செய்திடவும் வேண்டுகிறேன். நான் தந்த விளக்கத்தை ஏற்று, வெட்டுத் தீர்மானங்களை மனமுவந்து விலக்கி மானியக் கோரிக்கை எண் 30-ல் ரூபாய் 304,54,77,000-க்கு மிகைப்படாத தொகையை அரசிற்கு வழங்கிட வேண்டுகிறேன். மீண்டும் வாய்ப்புக்கு நன்றி கூறி, உங்களை வணங்கி, மகிழ்ந்து விடைபெறுகிறேன், நன்றி, வணக்கம்.

பிற்பகல் 1-25

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி: தலைவர் அவர்களே, எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் எழுப்பிய பிரச்சினைக்கு அமைச்சர் அவர்கள் சொன்ன பதிலில் ஒரு திருத்தத்தோடு சொல்ல விரும்புகிறேன். தொழில் நடத்துவதற்காகத்தான் இந்த ஏற்பாடு. இதிலே வங்கி கடன் தருகிறது, துறை மானியம் தருகிறது. இது ஒரு முறைதான் தர முடியும். ஒரே குடும்பத்திற்கு திரும்பித் திரும்பி மானியம் தர இயலாது. இந்தத் திருத்தத்தை இந்த அவையிலே எதிர்க் கட்சித் தலைவர் அவர்களுக்கு விடையாக அளிக்கிறேன்.

திருமதி ஏ.எஸ். பொன்னம்மாள்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே.....

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நீங்கள் உட்காருங்கள், மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவர்.

திரு. சோ. பாலகிருஷ்ணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மானியம் இல்லாமலாவது கடன் கொடுப்பார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி: தலைவர் அவர்களே, அது மானியமில்லாத கடன், அது வேறு விஷயம். மானியத்தோடுள்ள கடன் தர இயலாது.

திருமதி ஏ.எஸ். பொன்னம்மாள்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,....

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நான் அனுமதியே கொடுக்கவில்லை, நீங்கள் எழுந்து நிற்கிறீர்களே. இவ்வளவு நேரத்திற்குப் பிறகு, எல்லோரும் பேசிய பிறகு, என்ன கேட்கப் போகிறீர்கள்? சீக்கிரம் பேசி முடியுங்கள்.

திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் 1974-வது ஆண்டிலே திருப்பூரிலே 200 தொழிலதிபர்களை உண்டாக்குவதற்காக, அங்கே இந்த பின்னலாடைத் தொழில் ஏற்படுத்தப்பட்டது. அது இன்றைக்கு சரியாக நடைபெறவில்லை என்று சொல்கிறார்களே, அதற்கு என்ன காரணம்? இதில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தலையிட வேண்டும். அது மாத்திரமில்லாமல், அரசு மானியம் கொடுத்து அந்தத் தனியார் ஆரம்பித்திருக்கக்கூடிய தொழிற்சாலைகளிலும், இந்த ஆதிதிராவிடர்களுக்கு 25 சதவிகிதம் வேலைவாய்ப்பு கொடுக்க வேண்டுமென்ற ஒரு நிலையை நான் பலமுறை, காங்கிரஸ் காலத்திலிருந்தே சொல்லிக் கொண்டு வருகிறேன். எனவே, இதையும் செய்வதற்கான முயற்சிகளை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் எடுத்துக்கொள்வார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி: தலைவர் அவர்களே, தனியாரை இதில் கட்டாயப்படுத்த முடியாது. தனியார்கள் அவர்களாக விரும்பி அந்த இட ஒதுக்கீட்டை செய்ய முடியுமே தவிர, அரசுதான் இந்த இட ஒதுக்கீட்டில் கண்டிப்பாக இருக்க முடியும். தனியாருக்கு எல்லாம் இதைச் சொல்ல இயலாது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: விவாதம் முடிவுற்றது. இப்போது வாக்கெடுப்பு. மானியக் கோரிக்கை எண் 30-பழங்குடியினர், ஆதிதிராவிடர் முதலியோர் நலன். வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்படுகின்றனவா என்று அறிய விரும்புகிறேன். திரு. சி. ஞானசேகரன்.

திரு. சி. ஞானசேகரன்: இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. சி. ஞானசேகரன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

திரு. ஜி. கே. மணி இருக்கையில் இல்லை. திரு. ஜி. கே. மணி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பட்டதாகக் கருதப்படுகிறது. திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்.

திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்: இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ஜி. பழனிசாமி.

திரு. ஜி. பழனிசாமி: இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. ஜி. பழனிசாமி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன்.

திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன்: இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ப. கோவிந்தன்.

1998 ஏப்ரல் 29]

திரு. ப. கோவிந்தன் : இல்லை

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. ப. கோவிந்தன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. பி. வெங்கடசாமி.

திரு. பி. வெங்கடசாமி : இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. பி. வெங்கடசாமி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

"பழங்குடியினர், ஆதிதிராவிடர் முதலியோர் நலன் பற்றிய 30ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ரூ. 304,54,77,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்" என்னும் மாண்புமிகு அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம், என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

அரசுக்குக் கோரிய தொகை வழங்கப்பெறுகிறது.

பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. பேரவை மீண்டும் வியாழக்கிழமை (30-4-1998) காலை 9-30 மணிக்குக் கூடும். வணக்கம்.

பின்னர், பேரவை பிற்பகல் 1-28 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.

6. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

அ. சட்டமுறை விதிகளும், ஆணைகளும்

141. 1978-ஆம் ஆண்டு தமிழ்நாடு நகர்ப்புற நில உடைமைக்குரிய (உச்ச வரம்பினை ஒழுங்கு முறைபடுத்துதல்) விதிகளில் திருத்தமொன்று செய்தது குறித்து வருவாய்த் துறையின் 29-8-1997ஆம் நாளிட்ட 806ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1978ஆம் ஆண்டு தமிழ்நாடு நகர்ப்புற நில உடைமைக்குரிய (உச்ச வரம்பினை ஒழுங்குமுறைப்படுத்துதல்) சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 24/1978) 47 (3) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது].

ஆ. அறிக்கைகள், அறிவிக்கைகள் மற்றும் ஏனைய தாள்கள்

134. மானியக் கோரிக்கை எண் 30-ஆதிதிராவிடர்-பழங்குடியினர் நலன் பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 1998-99. (தமிழ், ஆங்கிலம்)

135. ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை பற்றிய வரவு-செலவு செயலாக்கத் திட்டம், 1998-99. (தமிழ், ஆங்கிலம்)

136. ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறையினரால் வழங்கப்படும் கல்வி உதவித் தொகைகள் மற்றும் பிற சலுகைகள் குறித்து சிறு வெளியீடு, 1997-98. (தமிழ்)

137. ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறையின் நலத் திட்டங்கள் குறித்த சிறிய புத்தகம். (தமிழ்)

வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

1998 ஏப்ரல் 29]

இணைப்பு

(58ஆம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க)

பழங்குடியினர், ஆதிதிராவிடர் முதலியோர் நலன்

1998-99 கொள்கை விளக்கக் குறிப்பு

கோரிக்கை எண் 30

"பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும்" என்ற தமிழ்மறை வாக்கு, பட்டியல் இனத்தவர் நடைமுறை வாழ்விலும் காணப்பட வேண்டும் என்ற எண்ணமதை திண்ணமுறச் செய்து கருத்தோடு நில்லாமல் கருத்துடன் செயல் திட்டம் வகுப்பதிலும் தமிழரசும், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறையும் முனைப்போடு செயல்பட்டு வருகின்றன.

"வளர்ச்சி" ஒன்றை மட்டுமே அடிப்படையாகக் கொள்ளாமல் "சமத்துவம்" என்ற ஒப்புயர்வற்ற மானுட நெறியும் எய்தப்பட வேண்டும் என்பதையும் அணுகுமுறையாகக் கொண்டு இவ்வரசு செயல்பட்டு வருகிறது.

இந்த அணுகுமுறையின் ஒரு வெளிப்பாடுதான் "சமத்துவபுரம்" என்ற எழுச்சிமிகு திட்டம். விடுதலைப் 'பொன்' விழாவின் பொன்னொளிர் திட்டமாக மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் மு. கருணாநிதி அவர்களால் அறிவிக்கப்பட்ட இத்திட்டம் அனைவராலும் ஒருமித்துப் பாராட்டப்பட்டுள்ளது. இத்திட்டத்தை வருமாண்டுகளிலும் வெற்றியுடன் நடத்துவது இத்துறையின் எடுப்பான கொள்கையாம். 1997-98 இல் "சமத்துவபுரம்" எடுக்கப்பட்டுள்ள ஊர்களின் பட்டியல் இணைப்பு ஒன்றில் தரப்பட்டுள்ளது.

I புதிய கண்ணோட்டம்

பட்டியல் இனத்தவர், பழங்குடியினரின் கல்வி மேம்பாட்டிற்கான நடப்புத் திட்டங்களைக் குறைவுபடா வகையில் இவ்வரசு சிறப்புற நடத்தி வருகிறது. நடப்புப் பள்ளிகளின் தரத்தை மேம்படுத்தும் வகையில் கடந்த இரு ஆண்டுகளில் பல புதிய திட்டங்களை வகுத்துச் செயல்படுத்தி வருகிறது.

[1998 ஏப்ரல் 29

1 அனைத்து உயர்நிலைப் பள்ளிகளிலும், மேல்நிலைப் பள்ளிகளிலும் கணினி பாடம் துவக்குதல்:

(அரசு ஆணை எண் 173, ஆதிந, நாள் 31-12-96.

அரசு ஆணை எண் 60, ஆதிந, நாள் 27-3-97.

அரசு ஆணை எண் 130, ஆதிந, நாள் 03-7-97).

2 அனைத்து உயர்நிலைப் பள்ளிகளுக்கும், மேல்நிலைப் பள்ளிகளுக்கும் ஆய்வுக் கூடம் கட்டித் தந்து ஆய்வுக்கான கருவிகளும் வழங்குதல்:

(அரசு ஆணை எண் 79, ஆதிந, நாள் 5-9-97.

அரசு ஆணை எண் 119, ஆதிந, நாள் 24-5-97.

அரசு ஆணை எண் 110, ஆதிந, நாள் 24-5-97.

அரசு ஆணை எண் 14, ஆதிந, நாள் 06-2-98.

3 அனைத்து உயர்நிலை, மேல்நிலைப் பள்ளிகளுக்கும் தேவையான இருக்கைகள் அளித்தல்:

(அரசு ஆணை எண் 83, ஆதிந, நாள் 5-5-97)

4 அனைத்து உயர்நிலை, மேல்நிலைப் பள்ளி ஆசிரியர்களுக்கும் கணினிப் பயிற்சி அளித்தல்:

(அரசு ஆணை எண் 191, ஆதிந, நாள் 10-12-97)

5 கூடுதல் வகுப்பறைகள் கட்டித் தருதல்:

[அரசு ஆணை (நிலை) எண் 109, ஆதிந, நாள் 24-5-97]

6 முதுகலைப் பட்டதாரி விடுதிகள் துவக்குதல்:

(அரசு ஆணை எண் 9, ஆதிந, நாள் 29-1-97)

ஆகிய மேம்பாட்டுத் திட்டங்களை இவ்வரசு வலுப்படுத்தி வருகிறது. கடந்த பத்தாண்டுகளுக்குமேல் துவக்கப் பள்ளிகளை நிலையுயர்த்த சரியான நடவடிக்கை எடுக்கப்படாத முடக்க நிலையை நடப்பு

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

1998 ஏப்ரல் 29]

ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் மாற்றும் பெரிய திட்டம் வகுக்கப்பட்டுள்ளது. இதன்படி இவ்வாண்டு, இதுகாறும் இல்லாத அளவிற்கு **50** துவக்கப் பள்ளிகள் நடுநிலைப் பள்ளிகளாக நிலை உயர்த்தப்படும். இம்முயற்சியை வருமாண்டுகளிலும் தொடர்வதை இவ்வரசு கொள்கையாகக் கொண்டுள்ளது.

II கூடுதல் பலன்கள்

பட்டியல் இன/பழங்குடி மாணவர்க்கு வழக்கப்படி உள்ள உதவிகள் தவிர கூடுதல் உரிமைகளைக் கடந்த ஆண்டு இவ்வரசு படைத்துத் தந்தது. அவையாவன:

1 கல்விக் கடன் ரூ. 2,000-த்திலிருந்து ரூ. 7,000 வரை உயர்த்தப்பட்டது.

(அரசு ஆணை எண் 36, ஆதிந, நாள் 19-2-97)

2 விடுதிச் சேர்க்கைக்கான வருமான வரம்பு ரூ. 15,000-த்திலிருந்து ரூ. 50,000 ஆக உயர்த்தப்பட்டது.

(அரசு ஆணை எண் 102, ஆதிந, நாள் 19-5-97)

3 நலப் பள்ளிகளிலும், நல விடுதிகளிலுமுள்ள ஆண், பெண் மாணாக்கர் இருபாலருக்கும் இரு இணைச் சீருடை வழங்குவது. 12-ம் வகுப்பு வரை விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

(அரசு ஆணை எண் 108, ஆதிந, நாள் 13-5-96
அரசு ஆணை எண் 94, ஆதிந, நாள் 14-5-97)

4 1997-98-ம் ஆண்டு கல்லூரி/தொழிற்பயிற்சி மாணவர் விடுதி உணவுக் கட்டணம் ரூ. 202.50-லிருந்து ரூ. 300 ஆக உயர்த்தப்பட்டது.

(அரசு ஆணை எண் 119, ஆதிந, நாள் 12-6-97)

1998-99-ம் ஆண்டில் ரூ. 300-லிருந்து ரூ. 400 ஆக உயர்த்தப்படுகிறது.

5. இளங்கலை, முதுகலை, தொழிற் பட்டப் படிப்புகளில் 60% மதிப்பெண் பெற்றுத் தேர்ச்சி பெறுவோர்க்குப் பரிசுத் தொகை ரூ. 1,000-லிருந்து ரூ. 5,000 வரை உயர்த்தப்பட்டுள்ளது.

(அரசு ஆணை எண் 189, ஆதிந, நாள் 8-12-97)

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY சட்டமன்றப் பேரவை TRUTH ALONE TRIUMPHS வாய்மையே வெல்லும்

[1998 ஏப்ரல் 29

6 1997-98-ம் ஆண்டு தொழில் கல்வி நுழைவுத் தேர்வுக்கான விண்ணப்ப, பதிவுக் கட்டணத்திலிருந்து விலக்கு.

(அரசு ஆணை எண் 69, ஆதிந, நாள் 17-4-97)

அரசு அளித்துள்ள இந்த வாய்ப்புகளைப் பற்றிக் கொண்டு, தம்முடைய கூர்திறத்தால், பட்டியல் இன மாணவர்கள் கடந்த ஆண்டு மாபெரும் சாதனைகளைப் படைத்திருக்கிறார்கள். கடந்த ஆண்டு 12-ம் வகுப்புத் தேர்வில் உயர்இன மாணவர்களை விட பட்டியல் இன மாணவர்கள் கூடுதலாகப் பங்கேற்றுள்ளனர் என்ற களிப்போடு நில்லாமல் அவர்களை விடப் பட்டியல் இன மாணவர்கள் உயரளவு தேறியும் மலைப்பான சாதனை படைத்துள்ளனர்.

தேர்வு எழுதியவர்		வெற்றி பெற்றவர்	
பரவிய இனம் (O.C)	பட்டியல் இனம்	பரவிய இனம் (O.C)	பட்டியல் இனம்
31150	51697	27370	34329

12 ஆம் வகுப்புத் தேர்வில் 90%க்கு மேல் மதிப்பெண் பெற்று குறைந்தது 4000 பட்டியல் இன, பழங்குடி மாணவர்கள் தேர்ச்சி பெறுவதைக் குறிக்கோளாகக் கொண்டு எதிர்கால நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். அதேசமயம் இந்த முயற்சியில் வெற்றி, அரசு தரும் ஆதரவுகளுடன் மாணவர் முனைப்பு, பெற்றோர் ஊக்கம், சமுதாயச்சாரம் ஆகியவற்றைப் பொறுத்து அமையும் என்பதையும் உலகு உணர வேண்டும்.

III புதிய கொள்கை

கல்வியும் தனியார் மயமாகிவரும் இந்நாளில், பட்டியல் இனத்தவரும், பழங்குடியினரும் தாமே கல்வி நிறுவனங்களை நடத்துவதற்கு அவர்களுக்கு நல்லாதரவு தருவதை இவ்வரசு ஒரு கொள்கையாக மேற்கொண்டுள்ளது.

அதன் முதல் துவக்கமாகப் பழங்குடியினர் பங்கேற்கும் மேலாண் குழுவே பழங்குடியினர் மேல்நிலைப் பள்ளி ஒன்றை ஏற்று நடத்தும் திட்டம் இவ்வாண்டு நிறைவேற்றப்படும். இதற்காக ஒரு கோடி ரூபாய் ஒதுக்கப்படும்.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

1998 ஏப்ரல் 29]

IV மனித நேய விளக்கம்

சமத்துவம் என்பது மனித நேயத்தின் அடிப்படையில்தான் அமையக்கூடும் என்பதை உணர்த்தும் வண்ணம் 'தீண்டாமை ஒழிப்பு வார விழா' என ஏட்டளவில் இருந்த திட்டம் 'மனித நேய வார விழா' வாக 1998 சனவரி 24 முதல் 30 வரை சிறப்பாக அனைத்து மாவட்டங்களிலும் கொண்டாடப்பட்டது. சமத்துவத்தைத் துய்ப்பதற்கு, அரசியல் சட்டத்தில் என்னென்ன உரிமைகளும், பாதுகாப்புகளும் படைக்கப்பட்டுள்ளன என்பது பற்றியும், அரசு என்னென்ன சாதனங்களை உருவாக்கித் தந்துள்ளது என்பது பற்றியும் மக்கள் இன்னும் பரவலாக அறிய வேண்டும் என்பதற்காக 'மனித நேய வார விழா' போன்ற விழிப்புணர்வு மக்கள் தொடர்புத் திட்டங்களை நடத்துவது இவ்வரசின் கொள்கை முடிவாம். இத்தகைய விழிப்புணர்வுக் கூட்டங்களை நடத்துவதற்குத் தொண்டு நிறுவனங்களுக்கும் அரசு ஆதரவு நல்குகிறது.

கடந்த 1997-ம் ஆண்டு, ஆகஸ்ட் 20 மற்றும் 21 தேதிகளில் மத்திய மாநில அரசுகள் கேர்போலா (CARE BOLA) என்ற தொண்டு நிறுவனத்துடன் இணைந்து தேசிய அளவிலான மாபெரும் கொத்தடிமை ஒழிப்பு மாநாடு ஒன்றை சென்னையில் நடத்தின. இதே போன்று மாநில அளவிலும், மண்டல அளவிலும், மாவட்ட அளவிலும் பல்வேறு கருத்தரங்குகளும், மக்கள் தொடர்புக் கூட்டங்களும் நடைபெற்றுள்ளன. அரசுத் திட்டங்கள் பற்றி தொலைக்காட்சி, வானொலி மூலமாக அடிக்கடி செய்திகள் பரப்பப்படுகின்றன.

V நேரடி கடன் திட்டத்தின் நிறைவான செயற்பாடு

பொருளாதார முன்னேற்றத் திட்டங்களில் மத்திய சிறப்பு நிதியிலிருந்து தாட்கோ ஆண்டாண்டு அளித்துவரும் மானியத் திட்டங்களை முழுமையாக நிறைவேற்றியதோடு கடந்த ஆண்டு ரூ. **11.60 கோடிக்கான தேசிய பட்டியல் இனத்தோர் நிதி மற்றும் மேம்பாட்டுக் கழகம் (NSFDC) நேரடிக் கடன்களையும் அளித்துள்ளது நிறைவு தரும் செயல்பாடாகும்.** வரும் ஆண்டு, தேசிய பட்டியல் இனத்தோர் நிதி மற்றும் மேம்பாட்டுக் கழகம் (NSFDC) கடன் தொகையை இன்னும் கூடுதலாக வழங்கத் தக்க முயற்சிகளும் எடுக்கப்படும்.

[1998 ஏப்ரல் 29

VI வேலைவாய்ப்புப் பயிற்சிகள்

தொழில் முனைவோரை ஊக்குவிக்கும் வண்ணமாகப் பொறியியல் பட்டதாரிகளுக்கும், மேற்படிப்பு படித்தவர்களுக்கும் 'சிப்காட்' (SIPCOT) நிறுவனத்தின் மூலமாகத் தொழிற் துறையே ஒரு மாத காலம் பயிற்சி அளிக்கும் திட்டம் கடந்த ஆண்டு சிறப்பாகத் துவக்கப்பட்டுள்ளது. ரூ. 12 இலட்சம் செலவில் ஆண்டுக்கு எட்டு பயிற்சிகள் நடத்தப்படும்.

ஏற்கெனவே கல்வித் தகுதி பெற்றவர்களுக்கு சுய தொழில் அமைக்கவும், பணிகளில் சேரவும் வாய்ப்பளிக்கும் பணி சேர் பயிற்சிகள் (Placement Guaranteed Trainings) பல இத்துறையால் வெற்றியோடு நடத்தப்பட்டு வருகின்றன. அவற்றுள் சில:

1 பட்டதாரிகளுக்கு பிளாஸ்டிக் தொழில் நுட்பப் பயிற்சி 'சிப்பெட்' (CIPET) நிறுவனம் நடத்துவது.

(அரசு ஆணை 2டி எண் 20, ஆதிந, நாள் 27-04-97)

2 ஓயில் கலையில் உற்பத்தி தொழில் நுட்பவியல் சான்றிதழ் பயிற்சி. 'நிப்ட்' (NIFT) நிறுவனம் நடத்துவது.

(அரசு ஆணை எண் 275, ஆதிந, நாள் 22-12-97)

3 செய்தியாளர் பயிற்சி—சென்னைப் பல்கலைக் கழகமும் செய்தியாளர் சங்கமும் இணைந்து நடத்துவது.

அரசு ஆணை எண் 63, ஆதிந, நாள் 30-3-98)

4. மூளை மருத்துவத்தில் செவிலியர் பயிற்சி—சென்னை பொது மருத்துவமனை நடத்துவது.

(அரசு ஆணை எண் 77, ஆதிந, நாள் 13-05-96)

இவை தவிர்த்த இணைப்பு இரண்டில் கண்டுள்ள வழக்கமான பயிற்சிகள் தொடர்ந்து சிறப்போடு நடத்தப்பட்டு வருகின்றன. **இத்துறையும், வேலைவாய்ப்புத் துறையும் இணைந்து நடத்தும் முன்தேர்வுப் பயிற்சியில் பங்கு பெற்றவர்களில் 120 பேர் கடந்த ஆண்டு தொழில் கல்லூரிகளில் சேர்ந்துள்ளனர் என்பது நிறைவு தரும் சேதி.**

1998 ஏப்ரல் 29]

கணினித் துறையிலும், புதிய தொழில் நுட்பத் துறையிலும் பணிசேர் பயிற்சிகளைப் பரந்த அளவில் நடத்துவதை இவ்வரசு பீடுயர் கொள்கையாகக் கொண்டுள்ளது. இவ்வாண்டு பல புதிய பயிற்சித் திட்டங்கள் வரவுள்ளன.

VII கல்விக் குடும்பம் ஒரு தொழிற்கூடம்

தனியார் தொழில் முனைவோர் திட்டம் ஒருபுறமிருக்க, குடும்பம் தழைக்கவும், மக்களுக்குக் கல்வியில் நாட்டம் பிறக்கவும், கல்வியால் பயன் கிட்டும் என்பதை உறுதியாக்கம் செய்யவும், கல்விக் குடும்பத் திட்டம் ஒன்றை இவ்வரசு புதிதாகக் கொண்டு வந்துள்ளது.

(அரசு ஆணை எண் 194, ஆதிந, நாள் 18-12-97)

இத்திட்டத்தின்படி வறுமைக் கோட்டிற்குக் கீழுள்ள எந்தக் குடும்பம் யாரொரு மகவையாவது பட்டம் அல்லது பட்டயப் படிப்பில் தேர்ச்சி பெறச் செய்கிறதோ, அந்தக் குடும்ப உறுப்பினர் ஒவ்வொருவரையும் கணக்கில் கொண்டு குறைந்தது ரூ. 15,000 முதல் ரூ. 50,000 வரை சிறுதொழில் கூடம் நடத்த சாதனங்களை இலவசமாக அரசு வழங்கும்.

VIII வன்கொடுமைத் தடுப்பு

தீண்டாமை என்னும் சமூகக் கேடு, நயத்தக்க நற்பண்பு, சீர்காண் மாண்பு, நேர்முறை நீதி ஆகிய மனிதப் பண்பு நலன்களுக்கு முரண்பட்டதாகும். இக்கொடிய நோய் சமுதாயம் முழுமைக்கும் ஊறு விளைவிக்கக் கூடியதாகும். தீண்டாமைக் கொடுமையை வேரறுக்கவும், பட்டியல் இனத்தவர், பழங்குடியினர் மீது சூழப்படும் வன்கொடுமைகளைத் தடுக்கவும், 1989 வன்கொடுமை தடுப்புச் சட்டம் இந்த அரசால் வலுவோடு கையாளப்பட்டு வருகிறது. நெல்லை, மதுரை, தஞ்சை, திருச்சிராப்பள்ளி ஆகிய நான்கு இடங்களில் தனியுறு கூடுதல் அமர்வு நீதிமன்றங்கள் கடந்த ஆண்டு உருவாக்கப்பட்டு செயல்பட்டு வருகின்றன.

(அரசு ஆணை எண் 1638, உள், நாள் 12-11-97)

ஒவ்வொரு மாவட்டத்திற்கும் தனியுறு குற்றவியல் வழக்குரைஞர் பணியிடமும் உருவாக்கப்பட்டுள்ளது.

(அரசு ஆணை எண் 1638, உள்துறை (நீதி), நாள் 12-11-97).

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

[1998 ஏப்ரல் 29

தேநீர்க் கடைகளில் தனிக்குவளை என்ற அவலம் அடியோடு மாற்றப்படும் என்ற முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி ஆயிரம் (1000) தேநீர்க் கடைகள் கண்டறியப்பட்டு வழக்குகள் தொடுக்கப்பட்டு வருகின்றன.

இத்துறையும், குடியுரிமைப் பாதுகாப்புக் காவல் பிரிவும் எடுத்த அயராத முயற்சிகளினால் கடந்த ஆண்டு தென் மாவட்டங்களில் நடந்த வன்கொடுமைகள் யாவும் 1989 வன்கொடுமைத் தடுப்புச் சட்டத்தில் வழக்குப் பதிவு செய்யப்பட்டுள்ளன. விருதுநகர் மாவட்டத்தில் மட்டும் 1995 வன்கொடுமைத் தடுப்பு விதிகளின் கீழ் ஒரு கோடியே, பதினான்கு லட்சத்து, முப்பதாயிரத்து தொள்ளாயிரத்து அறுபது ரூபாய்க்கான திருதவி பணமாகவும், பொருளாகவும் வழங்கப்பட்டுள்ளது. வன்கொடுமைகள் நடக்குமிடங்களுக்கு உயரதிகாரிகள் குழுக்களை உடனுக்குடன் அனுப்பி தக்க தீர்வு நடவடிக்கைகளையும் அரசு மேற்கொண்டு வருகிறது.

1989 வன்கொடுமைத் தடுப்புச் சட்டத்தைத் தொய்வின்றி நடைமுறைப்படுத்துவதை இவ்வரசு மேலாய கடமையாகக் கடைப்பிடிக்கும்.

IX ஒதுக்கீட்டு விதி

ஒதுக்கீட்டு விதிகளைக் கையாளுவதில், இத்துறை கூர்ந்த கண்ணோட்டம் செலுத்தி வருகிறது. அரசு ஆணை எண் 156, ஆதிந, நாள் 13-9-97-இல் ஆதிதிராவிடர் நல அமைச்சர் தலைமையில் அமைக்கப்பட்ட உயர்மட்ட கண்காணிப்புக் குழு, 7-10-97, 9-10-97, 4-11-97 முதல் 7-11-97 முடிய, 17-11-97 முதல் 19-11-97 முடிய, 21-11-97 மற்றும் 22-11-97 ஆகிய நாட்களில் கூடி அனைத்து துறைச் செயலர்களுடனும், துறைத் தலைவர்களுடனும் ஆய்வு நடத்தியுள்ளது.

ஒதுக்கீட்டு விதிகளைத் தவறாது கையாளும் பொருட்டு கீழ்வரும் அரசாணைகள் வெளியிடப்பட்டுள்ளன:

1. ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் பின்னடைவுப் பணியிடங்களைச் சிறப்பு நியமனம் மூலம் நிரப்புதல்.

(அரசு ஆணை எண் 2, ஆதிந, நாள் 2-1-97)

1998 ஏப்ரல் 29]

2. ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினருக்கான பணியிடங்களை நிரப்புவது குறித்து கண்காணிக்கவும் உறுதி செய்யவும் பற்றாளர் ஒருவரைத் துறை வாரியாகக் குறித்தறிதல்.

(அரசு ஆணை எண் 65, ஆதிந, நாள் 9-4-97)

3. எல்லா தேர்வுக் குழுக்களிலும் இனி ஓர் உறுப்பினராவது ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் வகுப்பிலிருந்து நியமனம் செய்யப்பட வேண்டும்.

(அரசு ஆணை எண் 163, ஆதிந, நாள் 30-9-97)

4. ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினருக்கென்று ஒதுக்கப்பட்டுள்ள பணியிடங்கள் நிரப்பப்படுவதைக் கண்காணிப்பதற்கும், ஒதுக்கீடு செய்யப்பட்டு நிரப்பப்படாது உள்ள பணியிடங்கள் ஒரு கால வரையறைக்குள் நிரப்பப்படுவதற்குரிய வழிமுறைகளைக் காண்பதற்கும், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அமைச்சரின் தலைமையில் ஒன்பது சட்டமன்ற உறுப்பினர்களைக் கொண்ட கண்காணிப்புக் குழு அமைக்கப்பட்டது.

(அரசு ஆணை எண் 156, ஆதிந, நாள் 13-9-97)

5. தொழிற்கல்வி சேர்க்கையில் ஒதுக்கீட்டு விதிகளைக் கடைப்பிடித்தல் பற்றிய பொதுவான நடைமுறைகள்.

(நேர்முக கடித எண் 580/ஆதிந3/98-2, நாள் 28-1-98)

X கொத்தடிமை ஒழிப்பு

கொத்தடிமை ஒழிப்பில் இந்நாட்டிற்கே வழிகாட்டியாகத் தமிழகம் திகழ்கிறது. உச்ச நீதிமன்றத்தில் இம்மாநில அரசு எடுத்த நடவடிக்கைகள் பிற மாநிலங்களுக்கு முன்மாதிரியாகக் காட்டப்பட்டுள்ளன. தொண்டு நிறுவனங்கள் மூலமாக எடுத்த கணக்கெடுப்பில் கீழ்க்கண்டவாறு 25,008 கொத்தடிமைகள் கண்டறியப்பட்டனர்.

01.	சென்னை	..	இல்லை
02.	காஞ்சிபுரம்	..	621
03.	திருவள்ளூர்	..	2794

[1998 ஏப்ரல் 29

04.	வேலூர்	..	3448
05.	கடலூர்	..	43
06.	திருவண்ணாமலை	..	90
07.	விழுப்புரம்	..	670
08.	திருவாரூர்	..	93
09.	நாகப்பட்டினம்	..	579
10.	தஞ்சாவூர்	..	177
11.	பெரம்பலூர்	..	1073
12.	திருச்சிராப்பள்ளி	..	1498
13.	கரூர்	..	882
14.	புதுக்கோட்டை	..	192
15.	சேலம்	..	881
16.	நாமக்கல்	..	126
17.	தர்மபுரி	..	323
18.	ஈரோடு	..	87
19.	கோயம்புத்தூர்	..	7603
20.	திண்டுக்கல்	..	1617
21.	மதுரை	..	68
22.	தேனி	..	26
23.	நீலகிரி	..	136
24.	விருதுநகர்	..	1692
25.	சிவகங்கை	..	இல்லை
26.	இராமநாதபுரம்	..	71
27.	திருநெல்வேலி	..	188
28.	தூத்துக்குடி	..	12
29.	கன்னியாகுமரி	..	18
	மொத்தம்		**25008**

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY சட்டமன்ற பேரவை வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

1998 ஏப்ரல் 29]

முதற்படியாக 10,000 பேர்க்கு மறுவாழ்வு அளிக்க அரசு உறுதிபூண்டு ரூபாய் ஐந்து கோடி நிதியை ஒப்பளித்துள்ளது. (அரசு ஆணை எண் 192, ஆதிந, நாள் 15-12- 97) மறுவாழ்வு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

XI துப்புரவாளருக்கு நேரடிக் கடன்

துப்புரவுப் பணியாளர்கள் மறுவாழ்வுத் திட்டத்திற்குப் புத்தாக்கம் தரும் வகையில் வருமாண்டிலிருந்து வங்கித் தொடர்பில்லாமல் நேரடிக் கடன் அளிக்கும் திட்டம் நடைமுறைப்படுத்தப்படும்.

மனிதக் கழிவை மனிதக் கையால் அகற்றும் பணிகளைத் தடுக்கும் வகையாகவும், உலர்கழிப்பிடங்கள் அமைக்கப்படாமல் தடுக்கும் வகையாகவும், நீரடிக் கழிப்பிடம் அமைக்கப்படுவதை உறுதி செய்யும் வகையாகவும் புதிய சட்டம் ஒன்று கொண்டு வரப்படும்.

XII பழங்குடியினர் மேம்பாடு

பழங்குடியினர்க்குப் புதிய திட்டங்களும், நடப்புத் திட்டங்களுக்குப் புதிய வடிவமும் தரப்பட்டுள்ளன. ஏற்கெனவே பழங்குடியினர்க்கு தனியார் தொழில் முனைவோர்க்காக ரூ. 1.50 கோடி ஒதுக்கப்பட்டு புதிய திட்டம் துவங்கப்பட்டது.

இவ்வாண்டு தேசிய பழங்குடி இணையத்துடன் (TRIFED) பெரும்பலநோக்குச் சங்கங்களுக்குத் (LAMP) தொடர்பு ஏற்படுத்தி இச்சங்கங்களுக்கு உறுதியான சந்தையும், இவர்கள் பொருட்களுக்கு நியாய விலையும் கிட்டுவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. வனத் துறையிலிருந்து சிறு வனப் பொருள் குத்தகையை இச்சங்கங்கள் பெறுவதற்கு உரிய குத்தகைத் தொகையை முன்பணமாக வனத் துறைக்கு ஆதிதிராவிடர் நலத் துறையே ஒட்டுமொத்தமாக சங்கங்கள் சார்பில் அளிக்கவும் முன்வந்துள்ளது. சிறுவனப் பொருள் சேகரிப்பு முழுவதும் பழங்குடியினர்க்கே உள்ள உரிமை என்பதை இத்துறை கொள்கையாகக் கொண்டுள்ளது.

தமிழ்நாட்டில் உள்ள பழங்குடியினர் நலனுக்கென தனியே பழங்குடியினர் கடன் நிவாரணச் சட்டம் ஒன்றை இவ்வரசு கொண்டு வரும்.

[1998 ஏப்ரல் 29

பழங்குடியினரிடையே மேல்நிலைக் கல்வி வரை நூறு சதவீதம் இலக்கு எய்த வேண்டும் என்பதை இத்துறை கொள்கையாக மேற்கொண்டு அதற்கொப்ப நடப்பு ஐந்தாண்டுக் காலத்தில் திட்டங்களைச் செயல்படுத்தும்.

இதன் முதற்படியாக வருமாண்டில் பழங்குடியினர் மேலாண் குழு நடத்தும் மேல்நிலைப்பள்ளி ஒன்றைத் துவக்க ரூ. 1.00 கோடி வழங்கப்படும்.

இடைநிலை ஆசிரியர் பயிற்சிப் பள்ளிகளில் பழங்குடியினர்க்கு 85 கூடுதல் இடங்கள் அளிக்கப்பட்டு வருகிறது.

பழங்குடியினர் மேம்பாட்டிற்கென ஒருங்கிணைந்த பழங்குடி மேம்பாட்டுத் திட்ட சிறப்பு அதிகாரி அலுவலகம் வலுப்படுத்தப்படும்.

ஊட்டியிலுள்ள 'பழமை' (பழங்குடியினர் ஆய்வு மையம்) கடந்த ஆண்டு சிறப்பாகச் செயல்பட்டு ஆய்வுக் கட்டுரைகளை வெளியிட்டுள்ளது. வருமாண்டு ஏழு ஆய்வுத் திட்டங்களையும் இம்மையம் மேற்கொள்ள உள்ளது. ஆய்வுப் பட்டங்கள் வழங்கும் பல்கலைக் கழகம் சார்ந்த ஆய்வு மையமாகப் 'பழமை' மேம்படுத்தப்பட வேண்டும் என்பது அரசின் கொள்கையாகும்.

XIII மனையடி நில எடுப்பு

வீட்டுமனைக்கான நில எடுப்பில் இவ்வரசு தொடர்ந்து தொய்வுறா செயல்பாட்டை நிறைவேற்றி வருகிறது. கடந்த ஆண்டு 127% எய்தப்பட்டுள்ளது என்பது பெருமிதச் சாதனையாகும். நடப்பாண்டுக்கு இப்பணிக்கென ரூ. 15.51 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. கடந்த ஆண்டிலிருந்து எந்தெந்த ஊர்களில், எத்தனை பேர்க்கு, எந்தப் புலத்தில் நிலமளிக்கப்பட்டுள்ளது என்ற விவரம் ஆண்டுத் தொகுப்பாக ஒவ்வொரு மாவட்டத்திலும் தனித் தனியாக உள்ளூர் செய்தித் தாட்களில் நிதி ஆண்டு இறுதியில் வெளியிடப்பட்டு வருகிறது. மாநிலம் முழுமைக்குமான இந்த விவரம் ஆண்டுக் கையேடாகவும் அச்சிட்டு வெளியிடப்படும்.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

1998 ஏப்ரல் 29]

1997-98 ஆம் ஆண்டு நில எடுப்பு விவரம் கீழே தரப்பட்டுள்ளது.

	செயல்			நிதி (இலட்சத்தில்)			
மாவட்டம்	இலக்கு	அடைவு	சதவீதம்	இலக்கு	அடைவு	சதவீதம்	தகுதி நிலை
தர்மபுரி	3000	4810	160.33	30.00	89.37	297.90	01
திருவண்ணாமலை	2500	2587	103.48	25.00	54.15	216.60	02
விருதுநகர்	5000	4002	80.04	30.00	64.49	214.97	03
திண்டுக்கல்	5500	6939	126.16	35.00	73.07	208.77	04
சேலம்	4000	2815	70.38	30.00	58.80	196.00	05
கோயம்புத்தூர்	5000	5169	103.38	94.00	175.14	186.32	06
திருவள்ளூர்	2500	1350	54.00	25.00	41.51	166.04	07
நாமக்கல்	2000	1948	97.40	44.00	67.96	154.45	08
நீலகிரி	500	560	112.00	39.23	56.80	144.79	09
காஞ்சிபுரம்	5000	2563	51.26	75.00	107.18	142.91	10
மதுரை	3000	4019	133.97	75.00	105.18	140.24	11
தூத்துக்குடி	3800	2587	68.08	20.00	25.44	127.20	12
விழுப்புரம்	10000	7635	76.35	120.00	148.07	123.39	13
புதுக்கோட்டை	1500	1618	107.87	35.00	42.80	122.29	14
பெரம்பலூர்	4000	1532	38.30	20.00	23.74	118.70	15
சிவகங்கை	3500	3472	99.20	19.00	22.00	115.79	16
இராமநாதபுரம்	3000	3137	104.57	15.00	17.05	113.67	17
திருநெல்வேலி	2500	2653	106.12	33.00	37.04	112.24	18
நாகப்பட்டினம்	6500	1457	22.42	30.00	33.49	111.63	19
கரூர்	2000	3300	165.00	45.00	46.13	102.51	20
கன்னியாகுமரி	700	733	104.71	36.00	36.43	101.19	21
திருச்சி	3500	4035	115.29	70.00	70.66	100.94	22
தஞ்சாவூர்	2000	1230	61.50	40.00	38.28	95.70	23
திருவாரூர்	4000	1601	40.03	40.00	37.00	92.50	24
கடலூர்	5000	1944	38.88	60.77	56.09	92.30	25
தேனி	3000	1009	33.63	20.00	16.43	82.15	26
ஈரோடு	2000	2263	113.15	89.00	61.74	69.37	27
வேலூர்	5000	3838	76.76	139.00	90.74	65.28	28
சென்னை	இலக்கு கிடையாது						29
மொத்தம்	100000	80806	80.81	1334.00	1696.78	127.19	

[1998 ஏப்ரல் 29

1949 ஆம் ஆண்டு தொடங்கி ஆதிதிராவிடர்களுக்கு இதுவரை தமிழகத்தில் வழங்கப்பட்டுள்ள மனைப் பட்டாக்களின் விவரம் இணைப்பு 10-ல் தரப்பட்டுள்ளது.

XIV 1998-99 ஆம் ஆண்டு - புதிய திட்டங்கள்

வருமாண்டுக்குக் கீழ்வரும் 14 புதிய திட்டங்களுக்கு ரூ. 436.39 இலட்சம் ஒப்பளிப்பு செய்யப்படும்.

வரிசை எண் (1)	திட்டப் பணிகளின் விவரம் (2)	மொத்தச் செலவினம் (ரூ. இலட்சத்தில்) (3)
1.	தனி வட்டாட்சியர்களுக்கு (ஆதிந) 20 ஈப்புகள் வழங்குதல்	71.00
2.	ஒருங்கிணைந்த பழங்குடியினர் மேம்பாட்டுத் திட்டப் பகுதிகள் அல்லாத பகுதிகளில் அரசு பழங்குடியினர் உண்டுறைப் பள்ளிகள் நான்கு தொடங்குதல். கத்திரிமலை (ஈரோடு), காடம்பாறை (கோயம்புத்தூர்), பரளி (கோயம்புத்தூர்), ஆனைமலை (தேனி)	15.23
3.	ஆறு (6) நடுநிலைப் பள்ளிகளை உயர்நிலைப் பள்ளிகளாக நிலை உயர்த்துதல்	10.98
4.	ஆறு (6) உயர்நிலைப் பள்ளிகளை மேனிலைப் பள்ளிகளாக நிலை உயர்த்துதல்	26.37
5.	ஐம்பது (50) தொடக்கப் பள்ளிகளை நிலை உயர்த்துதல்	112.93
6.	உயர்நிலை/மேனிலைப் பள்ளிகளுக்கு இருக்கைகள் வழங்குதல்	37.50
7.	சுற்றுச் சுவர் கட்டுதல்:	

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

1998 ஏப்ரல் 29]

	(i) மாணவரில்லம், துறையூர்	
	(ii) மகளிர் மேனிலைப்பள்ளி, கன்னிகாபுரம், சென்னை	
	(iii) மகளிர் மேனிலைப்பள்ளி செவ்வாய்ப்பேட்டை மற்றும்	
	(iv) கோமுகி அணை உண்டுறைப் பள்ளிக்குச் சிறுபாலம்	13.16
8.	புதிதாக இரண்டு (2) பட்டமேற்படிப்பு மாணவரில்லங்கள் மற்றும் மூன்று (3) கல்லூரி மாணவரில்லங்கள் தொடங்குதல்	30.43
9.	ஏழு (7) கல்லூரி மற்றும் தொழிற்பயிற்சி மாணவர் இல்லங்களுக்கு வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டி வழங்குதல்	1.54
10.	மாணவரில்லங்களுக்கு ஐநூறு (500) அறைகலன்கள் வழங்குதல்	17.50
11.	ஐம்பது (50) மாணவரில்லங்களுக்கு சமையல் எரிவாயு இணைப்பு வழங்குதல்	20.00
12.	உண்டுறை பள்ளிகளுக்கும், மூன்று (3) மேனிலைப் பள்ளிகளுக்கும் ஆய்வுக் கூடக் கட்டடங்கள் கட்டுதல்	7.20
13.	இயக்கக அலுவலகத்திற்குக் கூடுதல் வசதிகள்	1.27
14.	நிலை உயர்த்தப்பட்டவிருக்கும் ஆறு (6) நடுநிலைப் பள்ளிகளுக்கும் ஆறு (6) உயர்நிலைப் பள்ளிகளுக்கும் கூடுதல் கட்டடம் கட்டுதல்	71.28
	மொத்தம்	**436.39**

[1998 ஏப்ரல் 29

இணைப்பு - 1

சமத்துவபுர கிராமங்களின் பட்டியல் 1997-98

வ.எண்	மாவட்டம்	வட்டம்	கிராமம்
1.	காஞ்சிபுரம்	1. காஞ்சிபுரம்	ஏனாத்தூர்
2.	திருவள்ளூர்	2. திருவள்ளூர்	மேப்பேடு
		3. பள்ளிப்பட்டு	எஸ்.வி.ஜி. புரம்
3.	கடலூர்	4. பண்ருட்டி	திருவாமூர்
4.	வேலூர்	5. வேலூர்	பொய்கை
		6. அரக்கோணம்	பெரும்புலிபாக்கம்
5.	விழுப்புரம்	7. உளுந்தூர்பேட்டை	அரும்பட்டு
		8. கள்ளக்குறிச்சி	அம்மையகரம்
6.	திருவண்ணாமலை	9. ஆரணி	தச்சூர்
		10. திருவண்ணாமலை	மேக்களூர்
7.	தஞ்சாவூர்	11. தஞ்சாவூர்	நாஞ்சிக்கோட்டை (மாப்பிள்ளை நாயக்கன்பட்டி)
		12. கும்பகோணம்	பட்டீஸ்வரம்
8.	நாகப்பட்டினம்	13. நாகப்பட்டினம்	பனங்குடி
9.	திருவாரூர்	14. திருவாரூர்	அலிவலம்
		15. மன்னார்குடி	சித்தமல்லி
10.	திருச்சி	16. லால்குடி	கல்லக்குடி
		17. மணப்பாறை	பண்ணப்பட்டி
11.	புதுக்கோட்டை	18. புதுக்கோட்டை	புதுக்கோட்டை (வடக்கு) நரிமேடு
		19. குளத்தூர்	நார்த்தாமலை
12.	பெரம்பலூர்	20. பெரம்பலூர்	பெரம்பலூர் (வடக்கு)
		21. அரியலூர்	வாரணவாசி
13.	கரூர்	22. கரூர் வடபாகம்	வெள்ளியபணை
		23. அரவக்குறிச்சி	கோடியூர்

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

1998 ஏப்ரல் 29]

வ.எண்	மாவட்டம்	வட்டம்	கிராமம்
14.	மதுரை	24. திருமங்கலம்	மேலக்கோட்டை
		25. உசிலம்பட்டி	போத்தம்பட்டி
15.	திண்டுக்கல்	26. திண்டுக்கல்	சீவல்சரகு
		27. ஒட்டன்சத்திரம்	விருப்பாட்சி
16.	தேனி	28. உத்தமபாளையம்	ஒடைப்பட்டி
17.	இராமநாதபுரம்	29. இராமநாதபுரம்	மண்டபம் கிராமம்
18.	சிவகங்கை	30. சிவகங்கை	அரசனூர்
		31. காரைக்குடி	அமராவதிபுதூர்
19.	விருதுநகர்	32. ராஜபாளையம்	சம்பந்தபுரம்
		33. திருவில்லிபுத்தூர்	தெய்வேந்திரபுரம்
20.	திருநெல்வேலி	34. பாளையங்கோட்டை	பொன்னங்குடி
		35. திருநெல்வேலி	அழகியபாண்டியபுரம்
21.	தூத்துக்குடி	36. திருவைகுண்டம்	அனவரதநல்லூர் (சைவபுரம்)
		37. கோவில்பட்டி	லிங்கப்பட்டி
22.	சேலம்	38. சேலம்	நெய்க்காரப்பட்டி
		39. சங்ககிரி	கத்தேரி
23.	தர்மபுரி	40. ஒசூர்	நல்லூர்
		41. பாப்பிரெட்டிப்பட்டி	அலமேலுபுரம்
24.	நாமக்கல்	42. நாமக்கல்	மேட்டுப்பட்டி
		43. பரமத்தி	குன்னமலை
25.	கோயம்புத்தூர்	44. கோவை (தெற்கு)	செட்டிப்பாளையம்
		45. பல்லடம்	கணபதிபாளையம்
26.	ஈரோடு	46. பவானி	அந்தியூர்
		47. ஈரோடு	குமிளாம்பரப்பு
27.	நீலகிரி	48. கோத்தகிரி	நெடுகுலா
		49. கூடலூர்	சேரன்கோடு
28.	கன்னியாகுமரி	50. தோவாளை	செண்பகராமன்புதூர்

வாய்மையே வெல்லும்
TAMILNADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

இணைப்பு - 2

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர்களுக்கு அளிக்கப்படும் பயிற்சிகளின் விவரம்

		செலவினம். ரூ.
1.	தட்டச்சு, சுருக்கெழுத்து, ஆங்கிலம் மற்றும் பொது அறிவிற்கான ஓராண்டுப் பயிற்சி	1,18,880
2.	வங்கித்தேர்வு மற்றும் எழுத்தர் தேர்வுக்கான முன்தேர்வுப் பயிற்சி	10,99,700
3.	வங்கி அலுவலர் தேர்வுக்கான முன்தேர்வுப் பயிற்சி	1,33,100
4.	கனரக வாகனங்கள் ஓட்டுநர் பயிற்சி (2000 பேர்களுக்கானது)	1,84,00,000
5.	ஐ.டி.ஐ. படித்தவர்களுக்கு சுயதொழில் முனைவோருக்கான பயிற்சி	35,75,000
6.	பின்னலாடைத் தொழிலகங்களில் வேலை வாய்ப்புக்கான சிறப்புப் பயிற்சி	21,57,000
7.	தோலாடை, தோலணிகள் செய்முறைச் சிறப்புப் பயிற்சி	21,57,000
8.	பல்வேறு போட்டித் தேர்வுகளுக்கான முன்தேர்வுப் பயிற்சி - பயனாளிகள் - 6045	56,10,725
9.	மத்திய சிறப்பு நிதித் திட்டத்தின் கீழ் வழங்கப்படும் தட்டச்சு, சுருக்கெழுத்துப் பயிற்சி	16,86,000
10.	சட்டப் பட்டதாரிகளுக்கு சட்டத் துறையில் சிறந்து விளங்கும் மூத்த வழக்கறிஞர்களிடம் 4 ஆண்டு பயிற்சி	1,50,000

1998 ஏப்ரல் 29]

11.	நேஷனல் இன்ஸ்ட்டியூட் ஆப் ஃபேஷன் டெக்னாலஜி மூலம் வழங்கப்படும் ஆடை தயாரிப்பு, வடிவமைப்பு ஆகியவற்றுக்கான பயிற்சி	7,40,000
12.	பி.எஸ்.சி. படித்த இளைஞர்களுக்கு பிளாஸ்டிக் தொழில் பயிற்சி - பயனாளிகள் - 60	9,00,000
13.	கூட்டுறவுப் பட்டயப் பயிற்சி பயனாளிகள் - 200	6,00,000
14.	பட்டயக் கணக்கர் பயிற்சி	–
15.	அல்-அசா இன்டர்நேஷனல் தொண்டு நிறுவனம் நடத்தும் துணைச் செவிலியர் பயிற்சி அளித்தல்	3,16,000
16.	சென்னை அரசு பொது மருத்துவமனை நரம்பியல் துறையின் மூலம் மூளை மருத்துவத்தில் உதவுவதற்கான துணைச் செவிலியர் பயிற்சி	7,43,000
17.	பொறியியல் பட்டதாரிகளுக்கு சிப்காட் மூலம் ஒரு மாத கால தொழிற்பயிற்சிகள் — நான்கு	6,00,000
18.	பட்டம் பயின்றவர்களுக்கு பத்திரிகை மற்றும் தகவல் தொடர்பு பயிற்சி - பயனாளிகள் - 50	1,03,500

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

[1998 ஏப்ரல் 29

இணைப்பு - 3

பள்ளி வளர்ச்சிப் பணிகள்

1. ஆதிதிராவிடர் நல/அரசு பழங்குடியினர் உண்டுறைப் பள்ளிகளுக்குக் கூடுதல் வகுப்பறைக் கட்டடம் கட்டுதல்.
2. ஆதிதிராவிடர் நல/அரசு பழங்குடியினர் உண்டுறை உயர்நிலை/மேல்நிலைப் பள்ளிகளுக்கு ஆய்வுக்கூடக் கட்டடம் மற்றும் ஆய்வுக்கூடக் கருவிகள் வழங்குதல்.
3. உயர்நிலை/மேல்நிலைப் பள்ளிகளுக்குச் சாய்வு மேசையுடன் கூடிய நீள் இருக்கை வழங்குதல்.
4. 3-வது வகுப்பு முதல் 6-வது வகுப்பு வரை பயிலும் ஆதிதிராவிடர் பழங்குடியினர் மாணவியர்களுக்கு ஊக்கத்தொகை அளித்தல்.
5. அரசு பழங்குடியினர் உண்டுறைப் பள்ளி ஆசிரியர்களுக்கு இல்லங்கள் கட்டுதல்.
6. ஆதிதிராவிட நலப் பள்ளிகளுக்கு விளையாட்டுப் பொருட்கள் வழங்குதல்.
7. ஆதிதிராவிடர் நல உயர்நிலை/மேல்நிலைப்பள்ளிகளுக்குக் கணினி வழங்குதல்.
8. தொடக்கப்பள்ளிகள் நடுநிலைப்பள்ளிகளாகவும், நடுநிலைப்பள்ளிகள் உயர்நிலைப் பள்ளிகளாகவும், உயர்நிலைப்பள்ளிகள் மேல்நிலைப்பள்ளிகளாகவும் நிலை உயர்த்தப்படல்.
9. பழங்குடியினர் கல்வி மேம்பாட்டுக்காக உண்டுறைப் பள்ளிகள் தொடங்கல்.
10. ஒவ்வோர் ஆண்டும் மாணவர்களுக்குச் சிறந்த முறையில் புதிய கல்வித் திட்டங்களின்படி கல்வி புகட்ட அனைத்து இடைநிலை/பட்டதாரி, முதுகலைப் பட்டதாரி ஆசிரியர்களுக்கும் புத்தறிவுப் பயிற்சி வழங்கல்.
11. ஆதிதிராவிடர் நல விடுதிகளுக்கு ஒவ்வோர் ஆண்டும் விளையாட்டுச் சாதனங்கள் வழங்குதல்.
12. ஆதிதிராவிடர் நல விடுதியில் தங்கிப் பயிலும் மாணவர்களுக்கு அறைகலன்கள் வழங்குதல்.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

1998 ஏப்ரல் 29]

இணைப்பு - 4

ஆதிதிராவிடர் மாணவர்களுக்கு வழங்கப்படும் கல்விக் கட்டணம்/ கல்வி உதவித் தொகை மற்றும் ஊக்கப் பரிசுகள் விவரம்

வ.எண்	திட்டத்தின் பெயர்	செலவினம் (ரூ. இலட்சத்தில்)
1.	பள்ளி இறுதி வகுப்பிற்கு முற்பட்ட படிப்பிற்கு மாநில அரசு கல்வி உதவித் தொகை: பயனாளிகள் ஏழு இலட்சம்	201.16
2.	மாசுகளையும் தொழில் புரிவோர் குழந்தைகளுக்கு மத்திய அரசு கல்வி உதவித் தொகை: பயனாளிகள் 23,000	205.36
3.	பள்ளியிறுதி வகுப்பிற்கு மேற்பட்ட படிப்பிற்கான மத்திய அரசின் கல்வி உதவித் தொகை: பயனாளிகள் 1.47 இலட்சம்	2603.24
4.	பள்ளியிறுதி வகுப்பிற்கு மேற்பட்ட படிப்பிற்கு மாநில அரசு கல்வி உதவித்தொகை: பயனாளிகள் 17,000	149.84
5.	பரிசுத் திட்டங்கள்	
	(i) மாவட்ட அளவில் 10-ம் வகுப்புத் தேர்வில் முதல் இரண்டு மாணவ, மாணவியருக்கான அறிவுக்கூர்மை பரிசு	8.05
	(ii) +2 வகுப்புத் தேர்வில் மாவட்ட அளவில் முதல் மதிப்பெண் பெறும் மாணவ/மாணவிக்கு காந்தி நினைவுப் பரிசு/தகுதி வழிவகைப் பரிசு	1.49
	(iii) +2 தேர்வில் முதல் 1000 மாணவியருக்கும் மற்றும் 1000 மாணவருக்கும் முதலமைச்சர் தகுதிப் பரிசு	39.21

TRUTH ALONE TRIUMPHS

[1998 ஏப்ரல் 29

	(iv) 10-ம் வகுப்பு மற்றும் +2 வகுப்புத் தேர்வுகளில் 60%-க்கு அதிகமாக மதிப்பெண் பெறுபவருக்குத் தனித்தகுதி மானியம்	46.88
	(v) பட்டம், பட்டமேற்படிப்பு, தொழிற்கல்வி பட்டப் படிப்புகளில் 60% மதிப்பெண் பெறுபவருக்குத் தனித்தகுதி மானியம்	7.20
	(vi) மாவட்ட அளவில் 8-வது வகுப்புத் தேர்வில் அதிக மதிப்பெண் பெற்ற ஒரு மாணவர்/ஒரு மாணவிக்கு இரண்டு பரிசுகள் வழங்கப்படுகின்றன	-
	(vii) 10, +2 வகுப்புகளில் மாநில அளவில் முதன்மையாக வரும் மாணவர்களுக்கு பரிசுத் திட்டம்	0.19
6.	பத்தாம் வகுப்பிற்கு மேற்பட்ட படிப்பு பயிலும் மாணவர்களுக்குக் கல்விக் கட்டணம் செலுத்துவதிலிருந்து விலக்கு	47.25
7.	பட்டம், பட்ட மேற்படிப்பு மற்றும் தொழிற்பட்டம் பயிலும் மாணவர்களுக்கு ரூ. 6,500 முதல் ரூ. 7,000 வரை கல்விக் கடனுதவித் தொகை	473.40
8.	மருத்துவம், பொறியியல், வேளாண்மை, கால்நடை மருத்துவம், இந்திய மருத்துவம் மற்றும் பாலிடெக்னிக் பயிலும் மாணவர்களுக்குப் புத்தக வங்கித் திட்டம்	182.37
9.	தொழிற்கல்வி நுழைவுத் தேர்வுக்கு விண்ணப்பம் பதிவுக் கட்டணம் மற்றும் வயது வரம்பு விலக்கு	-
10.	+2 வரை பயிலும் அனைத்து மாணவ மாணவியருக்கும் இரண்டு இணை இலவச சீருடை : பயனாளிகள் 3,15,060	497.89
11.	10-ம் வகுப்பு வரை பயிலும் அனைத்து மாணவ, மாணவியர்க்கும் இலவச பாடப் புத்தகங்கள், குறிப்பேடுகள்	997.29

1998 ஏப்ரல் 29]

இணைப்பு - 5

பழங்குடியினர் துணைத் திட்டம்

		செலவினம் (ரூ. இலட்சத்தில்)
1.	பழங்குடியினர் குடியிருப்புகளுக்கு குடிநீர் வசதி செய்து தர	50.00
2.	பழங்குடியினர் குடியிருப்புகளுக்கு மின்வசதி செய்து தர	30.00
3.	பழங்குடியினர் துணைத் திட்டப் பகுதிகளில் சாலை வசதி செய்து தர	9.00
4.	பழங்குடியினர்களுக்கு வீடுகள் கட்ட	25.00
5.	பண்டைய பழங்குடியினர் குடும்பங்கள் சமூகப் பொருளாதார மேம்பாடு மற்றும் வீட்டு வசதி அளிக்க	82.22
6.	சிதறி வாழும் பழங்குடியினர்களுக்கு வீடுகள் கட்டவும் சமூகப் பொருளாதார மேம்பாட்டிற்கெனவும்	75.03
7.	பழங்குடியினர் உண்டுறைவிட பள்ளிகள் கட்ட	15.00
8.	விடுதிக் கட்டடங்கள் கட்ட	50.00
9.	பழங்குடியினர் உண்டுறைவிடப் பள்ளிக் கட்டடங்கள் கட்ட	25.00
10.	தனி நபர் தொழில் முனைவோர் திட்டம்	150.00

சட்டமன்றப் பேரவை TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

[1998 ஏப்ரல் 29

இணைப்பு - 6

தாட்கோ ஆண்டு செயல் திட்டங்கள் - 1997-98

வ.எண்	திட்டத்தின் பெயர்	மான்ய இலக்கு (ரூ. இலட்சத்தில்)
1.	வடிமுனை பொங்கு ஊற்றுக் கிணறுகள்	5.00
2.	மின்விசை டீசல் பம்ப்செட்	17.50
3.	மின்விசை மின்சார பம்ப்செட	10.50
4.	நியூமேடிக் டயர் வண்டி	243.75
5.	உழவு மாடுகள்	45.00
6.	மிதி வண்டியோடு கூடிய மருந்து தெளிப்பான்	3.00
7.	தனிநபர் தொழில் முனைவோர் திட்டம்	600.00
8.	தேசிய பட்டியலினத்தோர் நிதி மற்றும் மேம்பாட்டுக் கழகத் திட்டங்கள்	69.60
9.	சுயவேலை வாய்ப்புத் திட்டம்	152.25
10.	பயிற்சி	7.75
	மொத்தம்	1154.35

வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS
TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY

1998 ஏப்ரல் 29]

இணைப்பு - 7

சிறப்பு மத்திய நிதி உதவித் திட்டங்கள் 1997-98

வ.எண்	துறை	நிதி (ரூ. இலட்சத்தில்) இலக்கு	விடுவிப்பு	செயல்பாடு (பயனாளி எண்ணிக்கை) இலக்கு	சாதனை
1.	ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை	31.74	39.48	4175	5740
2.	வேளாண்மைத் துறை	52.50	52.50	60000	48226
3.	கூட்டுறவு பால் உற்பத்தி இணையம்	1207.20	905.40	17000	7731
4.	பட்டு வளர்ச்சித் துறை	50.00	50.00	1000	254
5.	வேளாண் பொறியியற் துறை	..	13.07	1000	7570
6.	வேளாண் பொறியியற் கழகம்	125.00	125.00	500	441
7.	வேளாண் பொறியியற் சேவை மையம்	97.50	97.50	1000	1000
8.	கால்நடை பராமரிப்புத் துறை	51.00	51.00	1000	1000
9.	தோட்டக்கலைத் துறை	75.00	75.00	10000	10000
10.	தையூர் ஆதிதிராவிடர் உப்பு கூட்டுறவு சங்கம்	3.59	3.59	29	29
11.	கதர் கிராமத் தொழில் வாரியம்	66.40	66.40	664	664
12.	மதிப்பீடு மற்றும் ஆராய்ச்சித் துறை	6.62			
13.	சென்னை மாநகராட்சி பயிற்சி	3.57	3.57	1	1
14.	வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறை	172.50	35.51	10500	5960

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY சட்டமன்றப் பேரவை வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

[1998 ஏப்ரல் 29

வ.எண்	துறை	நிதி (ரூ. இலட்சத்தில்) இலக்கு	விடுவிப்பு	செயல்பாடு (பயனாளி எண்ணிக்கை) இலக்கு	சாதனை
15.	புரோடோ-டைப் பயிற்சி மையம்	..	10.71	..	..
16.	ஆதிதிராவிடர் மகளிர் ஆட்டோ ஓட்டுநர் பயிற்சி	5.85	2.73	30	28
17.	கனரக வாகன ஓட்டுநர் பயிற்சி	184.00	184.00	2000	1972
18.	சிப்பெட்	9.00	3.30	60	30
19.	பொறியியற் பட்டதாரிகளுக்கான பயிற்சி சிப்காட்	6.00	6.00		..
20.	நேஷனல் இன்ஸ்டிடியூட் ஆப் பேஷன் டெக்னாலஜி	7.40	..	..	..
21.	சென்னை மருத்துவக் கல்லூரி	7.43	0.70	50	50
22.	செவிலியர் பயிற்சி	3.16	3.16	25	27
23.	தொழிற்கல்வி நுழைவுத் தேர்வுக்கான பயிற்சி, சென்னை பல்கலைக் கழகம்	1.73	1.73	250	250
24.	கூட்டுறவுப் பட்டயப் பயிற்சி	6.00	..	200	..
25.	பத்திரிகை மற்றும் தகவல் தொடர்பு பயிற்சி	1.04	..	50	..

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

1998 ஏப்ரல் 29]

இணைப்பு - 8

தேசிய பட்டியலினத்தோர் மற்றும் பழங்குடியினர் நிதி வளர்ச்சிக் கழகம் (NSFDC), புதுதில்லி, நிதியுதவியுடன் தாட்கோ மூலம் செயல்படுத்தப்படும் நேரடிக் கடன் திட்டங்கள்

வ. எண்	திட்டம்	பயனாளிகள்	தே.ப.நி.க. விடுவித்த நிதி (ரூ. இலட்சத்தில்)
1.	லாட்டி - 1 (விவசாய நிலம் வழங்கும் திட்டம்)	982	43.26
2.	லாட்டி - 2	1029	59.88
3.	டாப்சி	550	90.94
4.	அக்ரி-கார்ப் (தொழிற்சாலை)	36	11.30
5.	விக்னேஷ் லெதர்ஸ்	25	5.40
6.	அம்பாள் ப்ளு மெட்டல்	32	1.90
7.	திருச்சி டெக்ஸ்டைல்ஸ்	45	15.00
8.	பாலசுப்பிரமணி விசைத்தறி	1	1.97
9.	பட்டுப்புழு வளர்ப்புத் திட்டம்	2000	137.00
10.	வாகனம் (தனி நபர் தொழில் முனைவோர் திட்டம்)	251	51.97
11.	வாகனங்கள் 1997-98 கட்டம் - 1	203	456.65
12.	தொலைத் தொடர்பு நிலையம்	1	0.25
13.	ஆழ்கிணறு தோண்டும் இயந்திரம்	1	21.70
14.	வாகனங்கள் 1997-98 கட்டம் - 2	331	375.90
	மொத்தம்	**5487**	**1273.12**

சட்டமன்றப் பேரவை TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

[1998 ஏப்ரல் 29

இணைப்பு - 9

தேசிய துப்புரவுத் தொழிலாளர்கள் மற்றும் அவரைச் சார்ந்தோரின் மீட்பு மற்றும் புனர்வாழ்வுத் திட்டம்

இத்திட்டத்தின் கீழ் புனர்வாழ்வு மற்றும் கீழ்க்கண்ட பயிற்சித் திட்டங்கள் 1993 முதல் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. ஓட்டுநர் பயிற்சி, தையல், தட்டச்சு இயந்திர உபகரணங்கள் பழுது பார்த்தல், தோல் ஆடைகள், பனைபொருள் பயிற்சிகள், மூங்கில் கூடை, குளிர் சாதனப் பெட்டி பழுது பார்த்தல் ஆகிய இனங்களில் பயிற்சி அளிக்கப்படுகிறது.

வருடம்	பயிற்சி பெற்ற மொத்த துப்புரவுப் பணியாளர்கள்	பயிற்சியின்போது ஏற்பட்ட செலவினங்கள் முழு மானியமாக (ரூ. இலட்சத்தில்)
1993-94	500	5.000
1994-95	3461	87.930
1995-96	625	8.720
1996-97	471	11.000
1997-98	403	4.297
மொத்தம்	**5460**	**116.947**

புனர்வாழ்வு

வருடம்	பயனாளிகளின் எண்ணிக்கை	மானியம் (ரூபாய் இலட்சத்தில்)	விளிம்புத் தொகை
1993-94	2556	120.960	42.080
1994-95	4987	304.440	97.290
1995-96	4094	318.030	93.230
1996-97	2048	166.920	58.210
1997-98	2534	224.100	79.400
மொத்தம்	16219	1134.450	370.210

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

1998 ஏப்ரல் 29]

புனர்வாழ்வுத் திட்டத்தின் கீழ் மாவட்ட வாரியாக 1997-98-ல் பயன்பெற்ற பயனாளிகள் மற்றும் செலவினங்கள் கீழ்க்கண்டவாறு:—

வரிசை எண் (1)	மாவட்டத்தின் பெயர் (2)	பயனாளிகள் எண்ணிக்கை (3)	மானியம் (4)	விளிம்புத் தொகை (5)	வங்கிக் கடன் (6)
1.	சென்னை	27	2.660	0.840	1.880
2.	காஞ்சிபுரம்	158	12.580	3.770	11.180
3.	வேலூர்	65	5.700	2.090	5.950
4.	திருவண்ணாமலை	28	2.200	0.660	1.540
5.	கடலூர்	86	7.870	3.060	5.880
6.	விழுப்புரம்	102	10.200	6.680	9.080
7.	தஞ்சாவூர்	34	1.650	0.490	1.160
8.	நாகப்பட்டினம்	55	4.250	1.280	2.970
9.	புதுக்கோட்டை	52	5.140	1.540	3.590
10.	திருச்சிராப்பள்ளி	8	0.770	0.230	0.540
11.	ஈரோடு	70	6.320	2.100	0.700
12.	சேலம்	85	8.500	3.150	6.270
13.	தர்மபுரி	87	8.700	5.910	15.220
14.	கோயம்புத்தூர்	263	21.130	7.100	12.260
15.	நீலகிரி	9	0.600	0.270	1.030
16.	மதுரை	469	43.690	15.080	25.210
17.	திண்டுக்கல்	258	25.450	7.650	4.160
18.	திருநெல்வேலி	102	9.460	2.960	2.610
19.	விருதுநகர்	109	6.030	1.880	5.330
20.	தூத்துக்குடி	275	26.900	8.060	7.730
21.	இராமநாதபுரம்	97	8.800	2.760	4.810
22.	சிவகங்கை	15	1,450	0.570	1.080
23.	கன்னியாகுமரி	80	4.050	1.270	2.860
	மொத்தம்	**2534**	**224.100**	**79.400**	**133.040**

[1998 ஏப்ரல் 29

இணைப்பு - 10

1949 முதல் தமிழ்நாட்டில் பட்டியல் இனத்தவர் பழங்குடியினருக்கு வழங்கப்பட்ட வீட்டுமனைப் பட்டா பற்றிய அறிக்கை

வரிசை எண்	மாவட்டம்	குடும்பங்களின் எண்ணிக்கை (1991 கணக்கெடுப்பின்படி)			வழங்கப்பட்ட பட்டாக்கள்		மொத்தம்
		பட்டியல் இனத்தவர்	பழங் குடியினர்	மொத்தம்	ஆதிநலத் துறை மூலம் 1949 முதல் பிப்ரவரி 98 வரை	வருவாய்த் துறை மூலம் 1990-91 முதல் பிப்ரவரி 98 வரை	
1.	சென்னை	108160	7950	116110	-	-	-
2.	காஞ்சிபுரம்	256220	15070	271290	56931	44091	101022
3.	திருவள்ளூர்	-	-	-	1300	5130	6430
4.	திருவண்ணாமலை	87325	11700	90025	19476	51629	71105
5.	வேலூர்	123780	10595	134375	106967	38144	145111
6.	கடலூர்	297435	12345	309780	127760	81901	209661
7.	விழுப்புரம்	--	--	--	41952	19047	60999
8.	தஞ்சாவூர்	278075	2615	280690	49954	43207	93161
9.	நாகப்பட்டினம்	-	-	-	9292	18416	27708
10.	திருவாரூர்	-	-	-	1175	2452	3627
11.	புதுக்கோட்டை	51740	715	52455	18469	50012	68481
12.	திருச்சி	202780	8685	211465	104320	66881	171201
13.	பெரம்பலூர்	-	-	-	5300	1462	6762
14.	கரூர்	-	-	-	4991	7907	12898
15.	சேலம்	175305	34465	209770	71329	113861	185190
16.	நாமக்கல்	-	-	-	2462	3894	6356
17.	தர்மபுரி	70675	10090	80765	55402	18078	73480

1998 ஏப்ரல் 29]

வரிசை எண்	மாவட்டம்	குடும்பங்களின் எண்ணிக்கை (1991 கணக்கெடுப்பின்படி) பட்டியல் இனத்தவர்	பழங்குடியினர்	மொத்தம்	வழங்கப்பட்ட பட்டாக்கள் ஆதிநலத் துறை மூலம் 1949 முதல் பிப்ரவரி 98 வரை	வருவாய்த் துறை மூலம் 1990-91 முதல் பிப்ரவரி 98 வரை	மொத்தம்
18.	ஈரோடு	104155	4525	108680	57433	43381	100814
19.	கோயம்புத்தூர்	142715	7355	150070	74092	34484	108576
20.	நீலகிரி	51970	6210	58180	2429	4160	6589
21.	மதுரை	123750	3575	127325	74294	27225	101519
22.	திண்டுக்கல்	84270	2185	86455	22157	21521	43678
23.	இராமநாதபுரம்	47885	665	48550	52800	24050	76850
24.	தேனி	..	..	..	4057	145	4202
25.	சிவகங்கை	40520	735	41255	23703	21674	45377
26.	விருதுநகர்	74290	1155	75445	23775	25050	48825
27.	திருநெல்வேலி	112765	2870	115635	52092	30632	82724
28.	தூத்துக்குடி	59635	1760	61395	19382	29823	49205
29.	கன்னியாகுமரி	22030	1540	23570	10650	1665	12315
	வருவாய்த் துறையால் 1977-78 முதல் 1989-90 வரை அளிக்கப்பட்ட பட்டாக்கள்	..	..	..	..	872736	872736
	மொத்தம்	**2515480**	**146805**	**2662285**	**1093944**	**1702658**	**2796602**

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

30-4-1998

உள்ளடக்கம்

பக்கங்கள்

1. வினாக்கள்-விடைகள்—
 (அ) உடுக்குறியிட்ட வினாக்கள் 173-216
 (ஆ) உடுக்குறியிடாத வினாக்கள் (ஒன்பதாம் பட்டியல்) 216-252
2. விதி 110-ன்கீழ் அறிக்கை—
 கைத்தறித் துணிகள் தேக்கத்தால் உருவான பிரச்சினைகளை ஆராய்ந்த குழுவின் அறிக்கை மீது எடுக்கப்பட்ட முடிவுகள் குறித்து முதலமைச்சரின் அறிக்கை 253-257
3. கவன ஈர்ப்பு—
 (அ) திருவண்ணாமலை — தண்டராம்பட்டு ஒன்றியப் பள்ளிகளில் ஆசிரியர்கள் வராமையால் தொடக்கப் பள்ளிகள் பூட்டிக் கிடக்கின்ற நிலை. 258-262
 (ஆ) தமிழ்நாடு தேர்வாணைக் குழு நடத்தும் உதவி மருத்துவர் பணியிடங்களுக்கான தேர்வில் 3-3-1998-க்கு முன் பதிவு செய்துகொண்ட மருத்துவர்கள் மட்டுமே கலந்துகொள்ள இயலும் என்ற நிலை. 262-264
4. அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்)—
 (அ) தமிழ்நாடு நிலச் சீர்திருத்தங்கள் (நிலத்தின் மீதான உச்சவரம்பினை நிர்ணயித்தல்) திருத்தச் சட்டமுன்வடிவு, 1998. 265
 (ஆ) தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் (தனி அலுவலர்கள் நியமனம்) திருத்தச் சட்டமுன்வடிவு, 1998. 266

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

	பக்கங்கள்
5. தகவல் கோரல்—	
மேட்டூர் அணையிலிருந்து தண்ணீர் திறந்து விடுவது	267-268
6. அறிவிப்பு—	
அலுவல் ஆய்வுக் குழுக் கூட்டம்	269
7. மானியக் கோரிக்கைகள், 1998-99, விவாதமும் வாக்கெடுப்பும்—தொடர்ச்சி	
(அ) கோரிக்கை எண் 25—கைத்தறியும் துணித் தொழிலும் (ஆ) கோரிக்கை எண் 37—சுற்றுச் சூழல்	269-352
மாண்புமிகு திரு. என்.கே.கே. பெரியசாமி	269, 272, 274, 275, 305-308, 320, 330-349
டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்	275-281
திரு. ஆர். சிவானந்தம்	281-288
திரு. கு.ர.கோ. தனபாலன்	288-294
திரு. எஸ். திருநாவுக்கரசு	295-298
திரு. வி.ஜி. தனபால்	298-301
*திரு. இரா. தாமரைக்கனி	302-310
திரு. எஸ்.எஸ். பொன்முடி	311-314
*திரு. நா. பெரியசாமி	273, 274, 314-318
திரு. அ.வ. அப்துல் நாசர்	274,319-323, 351
திரு. தி.ப. ஆறுமுகம்	323-326,
திரு. சோ. பாலகிருஷ்ணன்	326-330
8. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்	352